கழக வெளியீடு-சஉ

உ

திருச்சிற்றம்பலம்

திருக்குறள்

திருவள்ளுவர்

:: அருளியது ::

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்

திருநெல்வேலி :: & சென்னை

Published by

The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited,
Tinnevelly and Madras
July 1924

Printed by
Munusawmy Mudaliar & Sons, Madras.

பொருளடக்கம்

ஆசிரியரது திருவுருவப்படம்	
ஆசிரிய வணக்கம்	எ
நூற்பெருமை	அ
திருவள்ளுவர் வரலாறு	கூ
திருவள்ளுவரின் வேறு பெயர்கள்	ககூ
திருக்குறளின் வேறு பெயர்கள்	,,
அதிகார வகராதி	கஙூ
அறத்துப்பால்	ஙூ
க. பாயிரம்	,,
உ. இல்லறவியல்	டு
ங. துறவறவியல்	உடு
ச. ஊழ்	ஙஅ
பொருட்பால்	ஙூகூ
க. அரசியல்	,,
உ. அங்கவியல்	சுச
ங. ஒழிபியல்	கூசு
காமத்துப்பால்	ளகூ
க. களவியல்	,,
உ. கற்பியல்	ககள

பொருளடக்கம்

திருவள்ளுவமாலை	கஙரு
பாட்டு முதற்குறிப் பகராதி	—
திருக்குறள்	கசகூ
திருவள்ளுவமாலை	கஎங



திருச்சிற்றம்பலம்

ஆசிரிய வணக்கம்

திருமுடி மிசையார் மயிர்முடி யழகுந்
தீர்க்கபுண் டரதுத லழகுந்
திரண்மணி புயந்தை வருஞ்செவி யழகுந்
திசழ்நெடுந் தாடியி னழகும்
அருமுடி செபமா லிகைசின்முத் திரைசே
ரபயநேர் வலக்கையி னழகு
ம்மிழ்துறழ் தமிழ்மா மறைமுறை வரத்த
மைமைதரு மிடக்கையி னழகுஞ்
கருமுடி யோகப் பட்டையி னழகுங
கடிகொர்கீட் கோவண வழகுந்
கழல்களிற் றிகிரி வலாவரை யழருங்
கமலநல் லாதனத் தழகுந்
சருமுடி முகிழ்ரேய் மயிலேயி னிடைமா
தவர்கள்கண் டிறைஞ்சவீற் றிருக்குந்
தழைபுகழ்த் திருவள் ளுவரொரு நாம
சற்குரு சரணமே சரணம்.

நூற் பெருமை

வள்ளுவாசெய் திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள
உள்ளுவரோ மநுவாதி
யொருகுலத்துக் கொருநீதி.

மனோன்மணீயம்

திருவள்ளுவர் வரலாறு

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் கடைச்சங்க காலத்து உலகஞ் செய்த உயர் தவப்பயனாய்த் திருமயிலையில் ஆதிக்கும் பகவனுக்கும் பிறந்து, ஓர் சைவவேளாள மாபில் வளர்ந்து, கல்வி யறிவொழுக்கங்களிற் றலை நின்று, மார்க்க சகாயன் என்னும் சைவவேளாள் ரது அருமைத் திருமகள் வாசுகியம்மையை ம்ணஞ்து, நெய்தற் நெழிலே எத்தொழிலையும் விடக் குற்றமற்ற தொழிலெனக் கொண்டு, கற்புக்கரசி யாகிய அவவம்மையாருடன தமது இல்வாழ்க்கை யினைச் சிறக்க நடத்தினர் என்ப.

இவர், கடவுள் உயிர் உலகம் என்னும் மூப் பொருள் இலக்கணங்களையும் முற்றக்கற்று முழுது ணர்ந்த முனிவராகலின், பண்டைத் தண்டமிழ் மொழி வழக்கிற் கேற்பத் 'திருக்குறள்' என்னும் ஒப்புயர்வற்ற நூலை, அறம் பொருள் இன்பமென வகுத்து, குறட்பாவானியற்றி உலகுய்ய அருளினார். இந்நூலை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்று கையில், சங்கப்பலகை யேனைய நூற்களைப் புறத்தே தள்ளிவிட்டு இஃதொன்றையே ஏற்றுத் திகழ்ந்த தாம். ஆகவே, இது தனக்கொப்பாய நூல் வேறொன் றின்றி, தனிவளம் நிரம்பிய பெருநூல் என்பது

வெள்ளிடை மலைபோற் றெள்ளியதாகும். மேலும், பண்டுதொட்டு இதுகாறும் உலகவழக்கில நின்று நிலவும் அமிழ்தினுமினிய செந்தமிழ் மொழியின் முதற்கண் ஆக்கப்பெற்றுத் தமிழாதம் உயிர்க்குறுதி பயக்கும் பெருமறையாப் போற்றப் பெறுவதாய்; ஓதற்கெளிதாய்; சிந்தைக்குஞ் செவிக்கும இன்பம பயப்பதாய்; எச்சமயததினர்க்கும, எக்காலத்திற்கும் எந்நாட்டினர்ககும் பொதுவாய்; எலலாச் சமயத்தினர்க்கும் பொதுவாகிய சொற்றொடாகளினாலே கடவுளைச் சுட்டினும் நுணுகி யாராய்வார்க்கு அது சைவசமயப் பொதுததன்மையை விளக்குவதாய்; இதற்குப் பின்னெழுந்த நூற்களெல்லாம் இதன் மொழிபொருளைப் பொன்னேபோற் போற்றும் பெருமை வாய்ந்ததாய; மேலை நாடடில் வழங்கிவரும் ஆங்கில முதலிய பனனிரு மொழிகளிலும், ஆரியம் தெலுங்கு முதலிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளதாய்; நவிறொறும் நவிறொறும் நறுஞ்சுவை பயப்பதாய்; பயிறொறும பயிறொறும் பழைமையுடன் புதுமை காட்டுவதாய்; புறவிருள் நீக்கும் உலக ஞாயிறேபோன்று மககள் அகவிருள் நீக்கும் அரிய பெற்றிததாய் விளங்குவ திநநூல.

இத்தகைய பெருநூலியற்றிய ஆசிரியா, தமது உளமகிழ்விற்குரிய மனைவி தமக்கு முன் உயிர நீப்ப, சிலகாலமிருநது, பல அருஞ்செயலகளைச் செய்து, ஏலேல சிஙகர் முதலிய தமது மாணவர்களை அன்புடன் வாழ்த்தி, உலகத்தில் என்றும் அழியாப் புகழ் பரப்பி எல்லாம் வல்ல இறைவன் றிருவடி நீழ லெய்தினரென்று கூறுப.

திருவள்ளுவர் திருவடி வாழ்க.

திருவள்ளுவரின் வேறு பெயர்கள்

க. நீயனா
உ. தேவா
ங. முதற்பாவலா
ச. தெய்வப்புலவா
ஞ. நான்முகனார்
ரு. மாதானுபங்கி
எ. செந்நாப்போதார்
அ. பெருநாவலர்

திருக்குறளின் வேறு பெயர்கள்

க. முப்பாலூல்
உ. உத்தரவேதம்
ங. தெய்வநூல்
ச. திருவள்ளுவர்
ஞ. பொய்யாமொழி
ரு. வாயுறைவாழ்த்து
எ. தமிழ்மறை
அ. பொதுமறை

திருக்குறள்

அதிகார வகராதி

அதிகாரம்	பக்கம்	அதிகாரம்	பக்கம்
அடக்கமுடைமை	கந	இனியசைகூறல்	ம
அமைச்சு	ஙச	இன்னாசெய்யாமை	ந உ
அரண்	எந	ஈகை	உந
அருளுடைமை	உந	உட்பகை	அக
அலாறிவுறுத்தல்	ககந	உழவு	ஸச
ஆவர்வயின்விதும்பல்	கஉஎ	உறுப்புநலனழிதல்	கஉச
அவாவறுத்தல்	நஎ	ஊக்கமுடைமை	சும
அவையஞ்சாமை	எங	ஊடலுவகை	கநங
அவையறிதல்	எஉ	ஊழ்	ந அ
அழுக்காறுமை	கஎ	ஒப்புரவறிதல்	உஉ
அறன்வலியுறுத்தல்	ச	ஒழுக்கமுடைமை	கச
அறிவுடைமை	சந	ஒற்றுடல்	நிக
அன்புடைமை	அ	கடவுள்வாழ்த்து	க
ஆள்வினையுடைமை	கூஉ	கண்ணோட்டம்	நிஅ
இகல்	அசு	கண்விதுப்பழிதல்	ககஅ
இடனறிதல்	நிம	கயமை	ஸஅ
இடுக்கணழியாமை	சுந	கல்லாமை	சக
இரவச்சம்	ஸஎ	கல்வி	சம
இரவு	ஸசு	கள்ளாமை	உக
இல்வாழ்க்கை	நி	கள்ளுண்ணாமை	கூந
இறைமாட்சி	நக	கனவுநிலையுரைத்தல்	கஉஉ

காதற்சிறப்புரைத்தல் ககஙூ
காலமறிதல் சகூ
குடிசெயல்வகை ஊஙூ
குடிமை கூசூ
குறிப்பறிதல் எக
குறிப்பறிதல் ஊய
குறிப்பறிவுறுத்தல்கஉஅ
குற்றங்கடிதல் சசா
கூடாநட்பு அஙூ
கூடாவொழுக்கம் உஅ
கேள்வி சஉ
கொடுங்கோன்மை நிசூ
கோல்லாமை ஙஙூ
சான்ருண்மை கூக
சிற்றினஞ்சேராமை சசூ
சுற்றந்தழால் நிஙூ
சூது கூசா
செங்கோன்மை நிடு
செய்ங்நன்றியறிதல் கக
சொல்வன்மை சூடு
தகையணங்குறுத்தல்ஙகூ
தவம் உஎ
தனிப்படர்மிகுதி கஉய
தீநட்பு அஉ
தீவினையச்சம் உக
துறவு ஙடு
தூது கூக
தெரிந்துசெயல்வகை சஎ
தெரிந்துதெளிதல் நிக
தெரிந்துவினையாடல் நிஉ
நடுவுநிலைமை கஉ
நட்பாராய்தல் அய
நட்பு எகூ
நலமபுனைந்துரைத்தல் ககஉ
நல்குரவு ஊநி
நன்றியிலசெல்வம் ஊக
நாடு எச
நாணுடைமை ஊஉ
நாணுத்துறவுரைத்தல் ககச
நிலையாமை. ஙஞ
நிறையழிதல் கஉசூ
நினைந்தவர்புலம்பல் கஉக
நீத்தார்பெருமை ஙட
நெஞ்சொடுகிளத்தல் கஉநி
நெஞ்சொடுபுலத்தல் கஙய
பகைத்திறந்தெரிதல்அஅ
பகைமாட்சி அஎ
பசப்புறுபருவரல் ககக
படர்மெலிந்திரங்கல்ககஎ
படைச்செருக்கு எஅ
படைமாட்சி எஎ
பண்புடைமை ஊ

பயனிலசொல்லாமை உய
பழமை அக
பிரிவாற்றுமை ககசு
பிறனில்விழையாமை கரு
புகழ் உச
புணர்ச்சிமகிழ்தல் ககக
புணர்ச்சிவிதும்பல் கஉகூ
புலவி கஙக
புலவிதுணுக்கம் கஙஉ
புலான்மறுத்தல் உசு
புல்லறிவாண்மை அரு
புறங்கூறாமை கசூ
பெண்வழிச்சேறல் கூக
பெரியாரைத்துணைக கோடல் சரு
பெரியாரைப்பிழையாமை சுயி
பெருமை கூஅ
பேதைமை அச
பொச்சாவாமை நிச
பொருள்செயல்வகை எசு
பொழுதுகண்டிரங்கல் கஉங
பொறையுடைமை ககசு
மக்கட்பேறு எ
மடியின்மை சுக
மருந்து கூரு
மன்னரைச்சேர்ந்தொழுகல் எய
மானம் கூஎ
மெய்யுணர்தல் நகசு
வரைவின்மகளிர் கூஉ
வலியறிதல் சஅ
வாய்மை நூய
வாழ்க்கைத்துணைநலம் சு
வான்சிறப்பு கூ
விருந்தோம்பல் உ
வினைசெயல்வகை சுஅ
வினைத்திட்பம் சுஎ
வினைத்தூய்மை சுசு
வெகுளாமை நுக
வெஃகாமை கஅ
வெருவந்தசெய்யாமை நிஎ

திருச்சிற்றம்பலம்

திருக்குறள்

அறத்துப்பால்

கடவுள்வாழ்த்து

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. க

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின். உ

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். ங

வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில. ச

இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தா ரமட்டு. ஞ

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். ட

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது. ண

அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது. அ

கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை. கூ

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார். ம

வான்சிறப்பு

வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று. க

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை. உ

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி. ங

ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால். ச

கெடுப்ப தூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்ப தூஉ மெல்லா மழை. ஞ

விசும்பிற் றுளிவீழி னல்லாண்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது. ட

நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின். ண

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு. த

தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். ந

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமைய தொழுக்கு. ப

நீத்தார்பெருமை

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு. க

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று. உ

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. ங

உரனென்னுந தோட்டியா ஞைரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புகோ வித்து. ச

ஐந்தவித்தா ஞ்ற லகலவிசுமபு ளாாகோமா
னிந்திரனே சாலுங கரி. ஞ

செயற்கரிய செயவார் பெரியா சிறியா
செயற்கரிய செய்கலா தார. சு

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு. எ

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். அ

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது. கூ

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். ய

அறன்வலியுறுத்தல்

சிறப்பீனுஞ் செல்வமும் மீனு மறத்தினூஉங்
காக்க மெவனே வுயிர்க்கு. க

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. உ

ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லுஞ்வா யெல்லாஞ் செயல். ங

மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற. ச

அழுககா றவாவெகுளி யின்னுச்சொன் னான்கு
மிழுக்கா வியன்ற தறம். ஞ

அன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றுத் துணை. சு

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே தேர்ந்த னிடை. எ

வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். அ

அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில. கூ

செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி. ய

இல்வாழ்க்கை

இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை. க

துறந்தாாக்குந துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை. உ

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க ரூனென்றாங
கைம்புலத்தா ரோம்ப றலை. ௩

பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில். ௪

அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பணபும் பயனு மது. ௫

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போவாய்ப் பெறுவ தெவன். ௬

இயலபினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயலவாரு ளெல்லாந் தலை. ௭

ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து. ௮

அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று. ௯

வையத்துள் வாழ்வாஙகு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும். ௰

வாழ்க்கைத்துணைநலம்

மனைத்தக்க மாண்புடைய ளாகிதற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. க

மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில். உ

இல்லதெ னில்லவண் மாண்பாஎ லுள்ளதெ
னில்லவண் மாணக் கடை. ங

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுங்
திண்மையுண் டாகப் பெறின். ச

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை. ஞ

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காதற் சோர்விலாள் பெண். சு

சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. எ

பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு
புத்தேளிர் வாழு முலகு. அ

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை. கூ

மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
னன்கல நன்மக்கட் பேறு. ஐ

மக்கட்பேறு.

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றலல பிற. க

எழுபிறப்புந் தியவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடீ மக்கட் பெறின். உ

தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும். ங

அமிழ்தினு மாற்ற வினிதேதம் மகக்ள்
சிறுகை யளாவிய கூழ். ச

மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு. ஞ

குழலினிதி யாழினி தென்பதம மக்கண
மழலைச்சொற் கேளா தவர். ஙு

தாதை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல். எ

தம்மிற்றம் மக்க ளறிவுடைமை ஞாலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது. அ

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய். கூ

மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல். ஙு

அன்புடைமை

அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும். க

அன்பிலா ரெல்லாந் தமகுரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு. உ

அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு. ங

அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு. ச

அன்புற் றமர்ந்த வழகென்ப வையகத்
தின்புற்று ரெய்தஞ் சிறப்பு. ஞ

அறத்திற்கே யன்புசா பென்ப வறியா
மறத்திற்கு மஃதே துணை. ட

என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம். ண

அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. த

புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு. ந

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு. ப

விருந்தோம்பல்

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. க

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. உ

வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் லின்று. ங

அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில. ச

வித்தும் மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம். ஞ

செலவிருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு. ட

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைதுணை வேள்விப் பயன். ண

பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். த

உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு. ந

மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. ப

இனியவைகூறல்

இன்சொலா லீர மிலாஇப் படிறிலஞ்ஞாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். க

அகனமாந தீதலி னன்றே முகனமர்ந
தின்சொல னுகப் பெறின். உ

முகத்தா னமாந்தினிது நோககி யகத்தானு
மின்சொ லினதே யறம். ங

துன்புறூஉந துவ்வாமை யிலலாகும யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவாக்கு. ச

பணிவுடைய னின்சொல னுதலொருவற்
கணியலல மற்றுப் பிற. ஞ

அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின். ஃ

நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல். எ

சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும். அ

இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. கூ

இனிய வுளவாக வின்னுத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. ௰

செய்ந்நன்றியறிதல்

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது: ௧

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது. ௨

பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூககி
னன்மை கடலிற் பெரிது. ௩

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக
கொள்வா பயன்றெரி வார். ௪

உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சாலபின் வரைத்து. ௫

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு. ௬

எழுமை யெழுபிறப்பு முள்ளுவா தகைகண்
விழுமந் துடைத்தவர் நட்பு. ௭

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. ௮

கொன்றன்ன வின்னா செயினு மவாசெய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும். ௯

எநநன்றி கொனறார்ககு முய்வுண்டா முய்விலலை
செய்நநன்றி கொன்ற மகற்கு. ௰

நடுவுநிலைமை

தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின். க

செப்ப முடையவ ளுக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து. உ

நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல். ங

தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும். ச

கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. ஞ

கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின். சு

கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் ரூழ்வு. எ

சமன்செய்து சீர்தூக்குங் கோலபோ லமைஞதொருபாற
கோடாமை சான்றோர்க் கணி. அ

சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின். கூ

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின். ய

அடக்கமுடைமை

அீடக்க மமாரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும். க

காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதினீ ஞாஉங் கில்லை யுயிர்க்கு. உ

செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின். ஙஉ

நிலையிற் றிரியா தடங்கியான் ரூற்ற
மலையினு மாணப் பெரிது. ச

எல்லார்க்கு நன்ரும் பணிதா லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. ஞ

ஒருமையு ளாமைபோ லேந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து. ஃ

யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. எ

ஒன்ரு ளும் தீச்சொற் பொருட்பய ளுண்டாயி
னன்ரு கா தாகி விடும். அ

தீயினுற் சுட்டபு ணுள்ளாறு மாரூதே
நாவினுற் சுட்ட வடு. கூ

கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து. ல

ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பந் தரலா னெழுக்க
முயிரினு மோம்பப் படும். க

பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை. உ

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும். ங

மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். ச

அழுக்கா றுடையான்க ணுக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு. ஞ

ஒழுக்கத்தி னெல்கா ருரவோ ரிழுககத்தி
னேதம் படுபாக் கறிந்து. ரு

ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ செய்தாப் பழி. எ

நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந தீயொழுக்க
மென்று மிடும்பை தரும். அ

ஒழுக்க முடையவாக் கொலலாமே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். கூ

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார். ஙி

பிறனில்விழையாமை

பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில். க

அறன்கடை நின்றருரு செல்லாம் பிறன்கடை
நின்ரூரிற் பேதையா ரில். உ

விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
றீமை புரிந்தொழுகு வார். ங

எனைத்துணைய ராயினு மென்ஞ் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல். ச

எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி. ஞ

பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண். ஃ

அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன். எ

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்ரோர்க்
கறனெஞன்ரே வான்ற வொழுக்கு. அ

நலக்குரியார் யாரெனி ஞுமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தா. கூ

அறன்வரையா னல்ல செயினும பிறன்வரையாள
பெண்மை நயவாமை நன்று. ம

பொறையுடைமை

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை. க

பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறுத்த லதனினு நன்று. உ

இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. ந

நிறையுடைமை நீங்காமை வேண்டுற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும். ச

ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. ஞ

ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். ரு

திறனல்ல தற்பிறர் செய்யினு மோரொந்
தறனல்ல செய்யாமை நன்று. எ

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல். அ

துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னுச்சொ லேற்கிற் பவர். கூ

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு.
மின்னுச்சொ லேற்பாரிற் பின். ய

அழுக்காறாமை

ஒழுக்காறுக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு. க

விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின். உ

அறனுக்கம் வேண்டாதா னென்பான் பிறனுக்கம்
பேணு தழுக்கறுப் பான். ங

அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து. ச

அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னுர்
வழுக்கியுங் கேடீன் பது. ஞ

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும். ட

அவ்விச் சழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும். ண

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும். த

அவ்விய நெஞ்சத்தா ளுக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும். ந

அழுக்கற் றகன்ருரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில். ப

வெஃகாமை

நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும். க

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். உ

சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். ங

இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர். ச

அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். ஞ

அருள்வெஃகி யாற்றின்க ணின்முன பொருளவெஃகிப
பொல்லாத சூழக் கெடும். ட

வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன். ண

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். த

அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேரும்
திறனறிந் தாங்கே திரு. ந

இறலீனு மெண்ணுது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு. ப

புறங்கூறாமை

அறங்கூறா னல்ல செயினு மொருவன்
புறங்கூறா னென்ற லினிது. க

அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை. உ

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந் தரும். ௩

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல். ௪

அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும
புன்மையாற் காணப் படும். ௫

பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந
திறன்றெரிந்து கூறப் படும். ௬

பகச்சொல்லிக் கேளிரப் பிரிப்பர் நகச்சொலலி
நட்பாட றேற்றா தவர். ௭

துனனியார் குற்றமுந் தூற்று மரபினா
ரென்னைகொ லேதிலார மாட்டு. ௮

அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை. ௯

ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு. ௰

பயனிலசொல்லாமை

பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும். க

பயனில பல்லார்முற் சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது. உ

நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை. ங

நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாரார்ப்
பண்பில்சொற் பல்லா ரகத்து. ச

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின். ஞ

பயனில்சொற் பாராட்டு வானே மகனெனல்
மக்கட் பதடி யெனல். ட

நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. ண

அரும்பய னுயு மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல். த

பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர். ந

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். ப

தீவினையச்சம்

தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு. க

தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும். உ

அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல். ங

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு. ச

இல்லென்று தீயவை செய்யற்க செய்யி
னில்லனாகு மற்றும் பெயர்த்து. ஞ

தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான். ட

எனைப்பகை யுற்றாரு மூய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும். ண

தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று. த

தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால். ந

அருங்கேடன் என்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின். ப

ஒப்புரவறிதல்

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்ஞற்றுங் கொல்லோ வுலகு. க

தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. உ

புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற. ங

ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாரு ளர்வைக்கப் படும். ச

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு. ஞ

பயன்மர மூன்ளூர்ப் பழுத்தற்றூற் செல்வ
நயனுடை யான்கட் படின். கூ

மருந்தாகித் தப்பா மரத்தற்றூற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின். எ

இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். அ

நயனுடையா னல்கூர்ந்தா னுதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு. கூ

ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து. ல

ஈனக

வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங
குறியெதிர்ப்பை நீர துடைத்து. க

நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று. உ

இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள. ௩

இன்னா திரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங காணு மளவு. ச

ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின். ரு

அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. சு

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது. எ

ஈத்துவக்கு மின்ப மறியார்கொ ளூமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். அ

இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல். கூ

சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை. ய

புகழ்

ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு. க

உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ். உ

ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்ரு துநிற்பதொன் றில். ங

நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்ரு துபுத்தே ளுலகு. ச

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. ஞ

தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் ரோன்ரு மை நன்று. ட

புகழ்படா வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன். ண

வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெரு அ விடின். அ

வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம். கூ

வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர். ஙி

அருளுடைமை

அருட்செல்வஞ் செல்வததுட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள. க

நல்லாற்றா னாடி யருளாள்க பல்லாற்றாற்
றேரினு மஃதே துணை. உ

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்னா வுலகம் புகல். ௩

மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை. ௪

அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி. ௫

பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார். ௬

அருளில்லார்க் கவவுலக மில்லை பொருளில்லார்க்
கிவவுலக மில்லா கியாங்கு. ௭

பொருளற்றார் பூப்ப ரொருகா லருளற்றா
ரற்றார்மற் றாத லரிது. ௮

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேரி
னருளாதான் செய்யு மறம். ௯

வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து. ௰

புலான்மறுத்தல்

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள். க

பொருளாட்சி போற்றுதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு. உ

படைகொண்டார் நெஞ்சம்போ னன்றாகா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம். ங

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவனூன் றினல். ச

உண்ணுமை யுள்ள துயிர்நிலை யூனுணண
வண்ணுத்தல் செய்யா தளறு. ஞ

தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில். ட

உண்ணுமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணு துணர்வார்ப் பெறின். ண

செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணு
ருயிரிற் றலைப்பிரிந்த வூன். அ

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணுமை நன்று. கூ

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும். எ

தவம்

உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு. . க

தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது. உ

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்
மற்றை யவர்க டவம். ங

ஒன்னாதீ தெறலு முவந்தாரை யாக்கலு
மெணணிற் றவத்தான் வரும். ச

வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும். ஞ

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வாமற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு. சு

சுடச்சுடரும பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. எ

தன்னுயிர் தானறப் பெற்றானே யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும். அ

கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்ற றலைப்பட் டவர்க்கு. க

இலர்பல ராகிய காரண நோற்பா
சிலர்பலர் நோலா தவர். ல

கூடாவொழுக்கம்

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும். க

வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின். உ

வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று. ங

தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று. ச

பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றென்னை
றேதம் பலவுந் தரும். ஞ

நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணு ரில். ட

புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து. ண

மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். த

கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல். ந

மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்தது தொழித்து விடின். ப

கள்ளாமை

எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்று
கள்ளாமை காக்கதன் னெஞ்சு. க

உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல். உ

களவினு லாகிய வாக்க மளவிற்றந்
தாவது போலக் கெடும். ங

களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
ஊயா விழுமந் தரும். ச

அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில். ஞ

அளவின்க ணின்றொழுக லாற்றார் களவின்கட்
கன்றிய காத லவர். ட

களவெண்ணுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில். ண

அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு. த

அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர். ந

கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு. ப

வாய்மை

வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல். ௧

பொய்ம்மையும் வாய்மை யிடதத புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின். ௨

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும். ௩

உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன். ௪

மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை. ௫

பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும். ௬

பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. ௭

புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். ௮

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. ௯

யாமெய்யாக் கண்டவற்று ளில்லையெனைத் தொன்றும்
வாய்மையி னல்ல பிற. ௰

வெகுளாண்மை

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துச்
காக்கினென் காவாக்கா லென். க

செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து
மில்லதனிற் றீய பிற. உ

மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும். ங

நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற. ச

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம். ஞ

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும். ரு

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. எ

இணரொரி தோய்வன்ன வின்னு செய்யினும்
புணரின் வெகுளாமை நன்று. அ

உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின். கூ

இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. ம

இன்ஞசெய்யாமை

சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்ஞ்
செய்யாமை மாசற்றூர் கோள். க

கறுத்தின்ஞ செய்தவக் கண்ணு மறுத்தின்ஞ
செய்யாமை மாசற்றூர் கோள். உ

செய்யாமற் செற்றூர்க்கு மின்ஞத செய்தபி
ஞய்யா விழுமந் தரும். ங

இன்ஞசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல். ச

அறிவினு ஞகுவ துண்டோ பிறிதினெய்
தந்நோய்போற் போற்றூக் கடை. ஞ

இன்ஞ வெனத்தா னுணர்ந்தவை தன்ஞமை
வேண்டும் பிறன்கட் செயல். ட

எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானு
மாஞசெய் யாமை தலை. ண

தன்ஞயிர்க் கின்ஞமை தானறிவா னென்கொலோ
மன்ஞயிர்க் கின்ஞ செயல். அ

பிறர்க்கின்ஞ முற்பகற் செய்யிற் றமக்கின்ஞ
பிற்பகற் ரூமே வரும். க

நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். ன

கொல்லாமை

அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும். க

பகுத்துண்டு பல்லுயி ரோம்புத லூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை. உ

ஒன்றுக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. ங

நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி. ச

நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை. ஞ

கொல்லாமை மேற்கொண டொழுகுவான வாழ்நாணமேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று. ட

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. ண

நன்றுகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றுகு மாக்கங் கடை. அ

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து. கூ

உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். ய

நிலையாமை

நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை. க

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று. உ

அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்ற
லற்குப வாங்கே செயல். ங

நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாளா துணர்வார்ப் பெறின். ச

நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும். ஞ

நெருநல் லுளனெருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. ட

ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல. ண

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு. அ

உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. கூ

புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு. ய

துறவு

யாதனின் யாதனி னீங்கியா னோதல்
லதனி னதனி னிலன். க

வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல. உ

அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு. ங

இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து. ச

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை. ஞ

யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும். ட

பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. ண

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். த

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும். ந

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. ப

மெய்யுணர்தல்

பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளாஞ் மாணப் பிறப்பு. க

இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. உ

யத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து. ந

யுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. ச

எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. டு

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. சு

ஓர்த்துள்ள முள்ள துணரி னெருதலையாப்
பேர்த்துள்ள வேணடா பிறப்பு. எ

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு. அ

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரு சார்தரு நோய். கூ

காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னீமங் கெடக்கெடு நோய்.

அவாவறுத்தல்

அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து. க

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். உ

வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில். ங

தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். ச

அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையா
ரற்றாக வற்ற திலர். ஞ

அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா. ட

அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும். எ

அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ தண்டேற்
றவாஅது மேன்மேல் வரும். அ

இன்ப மிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின். கூ

ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும். ஐ

ஊழ்

ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி. க

பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை. உ

நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும். ங

இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. ச

நல்லவை யெல்லாஅந் தீயவாந் தியவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு. ஞ

பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம. ட

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது. ண

துறப்பர்மற் றுப்பூ வில்லா ருறற்பால
வூட்டா கழியு மெனின். அ

நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா
லல்லற் படுவ தெவன். க

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். ம

பொருட்பால்

இறைமாட்சி

படைகுடி கூழமைச்சு நட்பா ணரணு
முடையா னரசரு ளேறு. க

அஞ்சாமை மீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு. உ

தூங்காமை கல்வி தொணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவற்கு. ங

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு. ச

இயற்றலு மீட்டலுங் காத்தலுங காத்த
வகுத்தலும் வல்ல தரசு. ஞ

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம். ரு

இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலாற்
றுன்கண் டனைத்திவ் வுலகு. எ

முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். அ

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு. க

கொடையளி செங்கோல் குடியோம்ப நான்கு
முடையானும் வேந்தர்க் கொளி. ஔ

கல்வி

கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக. ௧

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவவிரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. ௨

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். ௩

உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில். ௪

உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர். ௫

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு. ௬

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. ௭

ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து. ௮

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். ௯

கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை. ௰

கல்லாமை

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். க

கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று. உ

கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின். ங

கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார். ச

கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். ஞ

உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர். ட

நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று. ண

நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு. த

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. ந

விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். ப

கேள்வி

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை. க

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும். உ

செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
னென்றுரோ டொப்பர் நிலத்து. ங

கற்றில னெயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றுந் துணை. ச

இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல். ஞ

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும். ட

பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணாந
தீண்டிய கேள்வி யவர். எ

கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி. அ

துணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது. கூ

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென். ல

அறிவுடைமை

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண். க

சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு. உ

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. ங

எண்பெரிரு ளாகச்செலச் சொலித் தான்பிறவாய்
நுண்பொருள் காண்ப தறிவு. ச

உலகந் தழீஇய தொட்ப மலாதலுங்
கூம்பலு மில்ல தறிவு. ஞ

எவவ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு. ட

அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர். ண

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில் த

எதிர்தாக் காக்கு மறிவினர்க் கில்லை
யதிர வருவதோர் நோய். ந

அறிவுடையீ ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர். ப

குற்றங்கடிதல்

செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. க

இவறலு மாண்பிறங்க மானமு மாணு
வுவகையு மேத மிறைக்கு. உ

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக
கொள்வர் பழிநா ணுவார். ங

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றந் தரூஉம் பகை. ச

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். ஞ

தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு. ட

செயற்பால செய்யா திவறியான் செலவ
முயற்பால தன்றிக் கெடும். ண

பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று. த

வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
னன்றி பயவா வினை. ந

காதல காத லறியாமை யுய்க்கிற்பி
னேதில வேதிலார் நூல். ப

பெரியாரைத் துணைக்கோடல்

அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல். ௧

உற்றநோய் நீக்கி யுறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். ௨

அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். ௩

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை. ௪

சூழ்வார்கண் ணாக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். ௫

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். ௬

இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர். ௭

இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும். ௮

முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை. ௯

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். ௰

சிற்றினஞ்சேராமை

சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். க

நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு. உ

மனத்தானா மாந்தர்க் குணர்ச்சி யினத்தானா
மின்ன னெனப்படுஞ் சொல். ங

மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு. ச

மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூய்மை தூவா வரும். ஞ

மனந்தூயார்க் கெச்சநன் றாகு மினந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை. ட

மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும். ண

மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து. த

மனநலத்தி னாக மறுமைமற் றஃதது
மினநலத்தி னேமாப் புடைத்து. ந

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயின்த்தி
னல்லற் படுப்ப தூஉ மில். ப

தெரிந்துசெயல்வகை

அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல். க

தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பெரிருள் யாதொன்று மில். உ

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார். ங

தெளிவி லீதனைத் தொடங்கா ரிளிவெண்ணு
மேதப்பா டஞ்சு பவர். ச

வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு. ஞ

செய்தக்க வல்ல செயகெகடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும். ட

எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு. ண

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். அ

நன்ரூற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றுக் கடை. க

எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா தலகு. ல

வலியறிதல்

வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயில். க

ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில். உ

உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர். ங

அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும். ச

பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின். ஞ

நுனிக்கொம்ப ரேறினு ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும். ட

ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி. ண

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. த

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோன்றுக் கெடும். ந

உளவரை தூக்காத வொப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும். ப

காலமறிதல்

பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. க

பருவத்தோ டொட்ட வொழுக நிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு. உ

அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின். ங

ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின். ச

காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர். ஞ

ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து. ட

பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப வொள்ளி யவர். ண

செறுநரைக் காணிற் சுமக்க விறுவ்வை
காணிற் கிழக்காந் தலை. அ

எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல். கூ

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. ய

இடனறிதல்

தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்று
மிடங்கண்ட பின்னல் லது. க

முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கு மரண்சேர்ந்தா
மாக்கம் பலவுந் தரும். உ

ஆற்றுரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றுர்கட் போற்றிச் செயின். ங

எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
தண்ணியார் தண்ணிச் செயின். ச

நெடும்புனலுள் வெல்லு முதலே யடும்புனலி
னீங்கி னதனைப் பிற. ஞ

கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து. ட

அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின். ண

சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா
னூக்க மழிந்து விடும். த

சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது. ந

காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு. ப

தெரிந்துதெளிதல்

அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
றிறந்தெரிந்து தேறப் படும். க

குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு. உ

அரியகற் றூசற்றூர் கண்ணுந் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு. ங

குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல். ச

பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல். ஞ

அற்றூரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணூர் பழி. ட

காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும். ண

தேரான் பிறனைத் தெளிதான் வழிமுறை
தீரா விடும்பை தரும். த

தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபிற்
றேறுக தேறும் பொருள். ந

தேரான் தெளிவுந் தெளிந்தான்க ணேயுறவுந்
தீரா விடும்பை தரும். ப

தெரிந்துவினையாடல்

நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மையா ளளப் படும். க

வாரி பெருக்கி வளம்படுத் தூற்றவை
யாராய்வான் செய்க வினை. உ

அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு. ங

எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேரூகு மாந்தர் பலர். ச

அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று. ஞ

செய்வானே நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல். ரு

இதனை யிதனா லிவன்முடிக்கு மென்ரூய்ந
ததனை யவன்கண் விடல். எ

வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னாகச் செயல். அ

வினைக்கண் வினையுடையான் கேண்மைவே ரூக
நினைப்பானை நீங்குந் திரு. க

நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு. ய

சுற்றந்தழால்

பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கணமே யுள. க

விருப்பருச் சுற்ற மியையி னருப்பரு
வாக்கம் பலவுந் தரும். உ

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. ங

சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். ச

கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும். ஞ

பெருங்கொடையான் பேணுன் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில். ட

காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னரீ ரார்க்கே யுள. ண

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர். அ

தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும். கூ

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்த
னிழைத்திருந் தெண்ணிக் கொளல். ய

பொச்சாவாமை

இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு. க

பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. உ

பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பாலா லோர்க்குந் துணிவு. ந

அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. ச

முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும். ஞ

இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னதுவொப்ப தில். ஈ

அரியவென் றாகாத வில்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின். எ

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில். அ

இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்சியின் மைந்துறும் போழ்து. கூ

உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின். ஙி

செங்கோன்மை

ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை. க

வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி. உ

அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல். ௩

குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு. ௪

இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந தொக்கு. ௫

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின். ௬

இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின். ௭

எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்
றண்பதத்தாற் றானே கெடும். ௮

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில். ௯

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ
களைகட் டதனொடு நேர் ௰

கொடுங்கோன்மை

கொலைமேற்கொண் டாரிற் கொடிதே யதனைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து. க

வேலொடு நின்ரு னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்ரு னிரவு. உ

நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னெடொறு நாடு கெடும். ங

கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு. ச

அல்லற்பட் டாற்ரு தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. ஞ

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னுவா மன்னர்க் கொளி. ட

துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த
னளியின்மை வாழு முயிர்க்கு. ண

இன்மையி னின்ன துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். த

முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல். ந

ஆ்பயன் குன்று மறிதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின். ப

வெருவந்தசெய்யாமை

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து. க

கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்க
நீங்காலம் வேண்டு பவர். உ

வெருவந்த செய்தொழுகும் வெங்கோல ஞயி
னெருவந்த மொல்லைக் கெடும். ங

இறைகடிய னென்றுரைக்கு மின்ஞச்சொல் வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும். ச

அருஞ்செவ்வி யின்ஞ முகத்தான் பெருஞ்செலவம்
பேஎய்கண் டன்ன துடைத்து. ஞ

கடுஞ்சொல்லன் கண்ணில ஞயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும். ஙு

கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த
னடுமுரண் டேய்க்கு மரம். எ

இனத்தாற்றி யெண்ணுத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு. அ

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும். கூ

கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை. ய

கண்ணோட்டம்

கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு. க

கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை. உ

பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணெனனுங
கண்ணோட்ட மில்லாத கண். ங

உளபோன் முகத்தெவன் செய்யு மளவிறற்
கண்ணோட்ட மில்லாத கண். ச

கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும். ஞ

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர். ட

கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்ட மின்மையு மில். ண

கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு. அ

ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. கூ

பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். ஙி

ஒற்றுடல்

ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண். க

எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில். உ

ஒற்றினு ஞெற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில். ங

வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்
கனைவரையு மாராய்வ தொற்று. ச

கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று. ஞ

துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று. ரு

மறைந்தவை கேட்கவற் றூகி யறிந்தவை
யையப்பா டில்லதே யொற்று. எ

ஒற்றொற்றித் தந்த பொருளேயு மற்றுமோ
ரொற்றினு லொற்றிக் கொளல். அ

ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும். கூ

சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னுகு மறை. ம

ஊக்கமுடைமை

உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லா
ருடைய துடையரோ மற்று. க

உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். உ

ஆக்க மிழந்தேமென் றல்லவா ரூக்க
மொருவந்தங் கைத்துடை யார். ங

ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை. ச

வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
மூள்ளத் தனைய துயாவு. ஞ

உள்ளுவ தெல்லா முயர்வுள்ளான் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து. ரு

சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டேன்றுங் களிறு. எ

உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு. அ

பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். கூ

உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு. ஙி

மடியின்மை

குடியென்னுங் குன்றா விளக்க மடியென்னு
மாசூர மாய்ந்து கெடும். க

மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு-பவர். உ

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து. ௩

குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு. ௪

நெடுநீர் மறவி மடிதுயி னான்குங்
கெடுநீரார் காமக் கலன். ௫

படியுடையாா பற்றமைநதக் கண்ணு மடியுடையார்
மாண்பய னெய்த லரிது. ௬

இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட வுஞற்றி லவர். ௭

மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னொன்னார்க்
கடிமை புகுத்தி விடும். ௮

குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும். ௯

மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
றாஅய தெல்லா மொருங்கு. ௰

ஆள்வினையுடைமை

அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். க

வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு. உ

தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு. ங

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக கெடும். ச

இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண். ஞ

முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும். ட

மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
றூணுளா டாமரையி னாள். ண

பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி. அ

தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். கூ

ஊழையு முப்பக்கங் காண்ப ருலவின்றித்
தாழா துஞற்று பவர். ய

இடுக்கணழியாமை

இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில். க

வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும். உ

இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக்
கிடும்பை படாஅ தவர். ௩

மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து. ௪

அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும். ௫

அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றோம்புத றேற்றா தவர். ௬

இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதா மேல். ௭

இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான்
றுன்ப முறுத லிலன். அ

இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன். ௯

இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
னொன்னார் விழையுஞ் சிறப்பு. ௰

அமைச்சு

கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு. க

வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு. உ

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு. ங

தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு. ச

அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை. ஞ

மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை. ஃ

செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல். எ

அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன். அ

பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ
ரெழுபது கோடி யுறும். க

முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர். ஒ

சொல்வன்மை

நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ள தூஉ மன்று. க

ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு. உ

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல். ந

திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளு மதனினூஉங் கில். ச

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து. ஞ

வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன்
மாட்சியின் மாசற்றார் கோள். ஙு

சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது. எ

விரைந்து தொழில்கேட்கு ஞால மிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். அ

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்றா தவர். கூ

இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற
துணரா விரித்துரையா தார். ஙி

வினைத்தூய்மை

துணைநல மாக்கந் தருஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும். க

என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. உ

ஒஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர். ங

இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். ச

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேன்
மற்றன்ன செய்யாமை நன்று. ஞ

சான்ரூள் பசிகாண்பா ஞயினுஞ் செய்யற்க
சான்ரோர் பழிக்கும் வினை. ட

பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்ரோர்
கழிநல் குரவே தலை. ண

கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதா
மூடிந்தாலும் மீழை தரும். அ

அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை. க

சலத்தாற் பொருன்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று. ய

வினைத்திட்பம்

வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற. க

ஊறெ்ரா லுற்றபி னெல்காமை யிவ்விரண்டி
னெறென்ப ராய்ந்தவர் கோள். உ

கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கி
னெற்ரு விழுமந் தரும். ங

சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல். ச

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க
ணூறெய்தி யுள்ளப் படும். ஞ

எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். சு

உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன ருடைத்து. எ

கலங்காது கண்ட வினைக்கட் டூங்காது
தூக்கங் கடிந்து செயல். அ

தன்ப முறவரினுஞ் செய்க தணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை. க

எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா தலகு. ஏ

வினைசெயல்வகை

சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு
தாழ்ச்சியுட் டங்குத லீது. க

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. உ

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்காற்
செல்லும்வாய் நோக்கிச் செயல். ங

வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்
றீயெச்சம் போலத் தெறும். சு

பொருள்கருவி காலம் வினையிடனை டைந்து
மிருடீர வெண்ணிச் செயல். ஞ

முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். கூ

செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல். எ

வினையான் வினையாக்கிக் கோட னனைகவுள்
யானையால் யானையாத் தற்று. அ

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
யொட்டாரை யொட்டிக் கொளல். கூ

உறைசிறியா ருண்ணுங்க லஞ்சிக் குறைபெறிற்
கொள்வர் பெரிமார்ப் பணிந்து. ஏ

தூது

அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு. க

அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று. உ

நூலாரு ணூல்வல்ல ஞகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு. ங

அறிவரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. ச

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது. ஞ

கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற
றக்க தறிவதாந் தூது. ட

கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை. ண

தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு. த

விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன். ந

இனிது பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது. ப

மன்னரைச்சேர்ந்தொழுகல்

அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். க

மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய வாக்கந் தரும். உ

போற்றி னரியவை போற்றல் கடித்தபின்
றேற்றுதல் யார்க்கு மரிது. ங

செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக
லான்ற பெரியா ரகத்து. ச

எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்காற் கேட்க மறை. ஞ

குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல். ட

வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல். ண

இனைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும். அ

கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
தளக்கற்ற காட்சி யவர். க

பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும். ய

குறிப்பறிதல்

கூர்மை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாரூநீர் வையக் கணி. க

ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். உ

குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல். ங

குறித்தது கூறுமைக் கொள்வாரோ டேனை
யுறுப்போ ரனையரால் வேறு. ச

குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு
ளென்ன பயத்தவோ கண். ஞ

அடித்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடித்தது காட்டு முகம். ட

முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும். ண

முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின். த

பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின். ந

நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற. ப

அவையறிதல்

அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
ரெகையறிந்த தூய்மை யவர். க

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி
னடைதெரிந்த நன்மை யவர். உ

அவையறியார் சொல்லன்மேற் கொளபவா சொல்லின்
வகையறியார் வல்ல தூஉ மில். ங

ஒளியார்முன் ஞெள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல். ச

நன்ரென்ற வற்றுள்ளு நன்றே முதுவருண்
முந்து கிளவாச் செறிவு. ஞ

ஆற்றி னிலேதளர்ந் தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு. ட

கற்றறிந்நார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து. ண

உணர்வ துடையரர்மூற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சொரிந் தற்று. த

புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு
ணன்கு செலச்சொல்லு வார். ந

அங்கணத்து ளுக்க வமிழ்தற்றூற் றங்கணத்த
ரல்லார்மூற் கோட்டி கொளல். ப

அவையஞ்சாமை

வஞ்கயறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
ரெுகையறிந்த தூய்மை யவர். க

கற்ரருட் கற்ரு ரெனப்படுவர் கற்ரர்மூற்
கற்ற செலச்சொல்லு வார். உ

பகையகத்துச் சாவா ரெளிய ராிய
ரவையகத் தஞ்சா தவர். ங

கற்ரர்மூற் கறற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொள்ல். ச

ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு. ஙி

வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடெ
ணுண்ணவை யஞ்சு பவர்க்கு. ஙு

பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல். எ

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு
ணன்கு செலச்சொல்லா தார். அ

கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார். க

உளரெனினு மில்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார். ஙி

நாடு

தள்ளா விளையுஞ்நந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு. க

பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டா
லாற்ற விளைவது நாடு. உ

பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி யிறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு. ங

உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு. ச

பல்குழுவும் பாழ்செய்யு மூட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு. ஞ

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டிற் றலை. ட

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லாணு நாட்டிற் குறுப்பு. எ

பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. அ

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு. கூ

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு. ய

அரண்

ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள். க

மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண். உ

உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி
னமைவர ணென்றுரைக்கு நூல். ங

சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண். ச

கொளற்கரிதாய்க் கொண்டூக்கத் தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண். ஞ

எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு
நல்லா ளுடைய தரண். ட

முற்றியு முற்ற தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண். ண

முற்ற றற்றி முற்றி யவரையும் பற்ற றுற்றிப்
பற்றியார் வெல்வ தரண். அ

முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண். கூ

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண். ம

பொருள்செயல்வகை

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். க

இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு. உ

பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று. ங

அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். ச

அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல். ஞ

உறுபொருளு மூல்கு பொருளுந்தன் ஞெண்ணர்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். சு

அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு. எ

குன்றேறி யானைப்போர் கண்டற்றூற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை. அ

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரிய தில். கூ

ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு. ஐ

படைமாட்சி

உறுப்பமைந் தூறஞ்சா வெல்படைட வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை. க

உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது. உ

ஒவித்தக்கா லென்னு முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும். ங

அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை. ச

கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை. ஞ

மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு. ட

தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை யறிந்து. எ

அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும். அ

சிறுமையுஞ் செல்லாத் தனியும் வலுமையு
மில்லாயின் வெல்லும் படை. கூ

நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில். ஔ

படைச்செருக்கு

என்னேமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னே
முன்னின்று கன்னின் றவர். க

தானை முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது. உ

பேராண்மை யென்ப தறுகணென் றுற்றக்கா
லூராண்மை மற்றத னெஃகு. ங

கைவேல் களிற்றெடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். ச

விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி
னேட்டன்றே வன்க ணவர்க்கு. ஞ

விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் ஞாள யெடுத்து. ட

சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து. ண

உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர். அ

இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர். க

புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து. ம

நட்பு •

செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு. க

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு. உ

நவிரொறு நூணயம் போலும் பயிரொறும்
பண்புடை யாளர் தொடர்பு. ங

நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு. ச

புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங கிழமை தரும். ஞ

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு. ட

அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு. ண

உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு. அ

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை. க

இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று
புனையிணும் புல்லென்னு நட்பு. ம

நட்பாராய்தல்

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு. க

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும். உ

குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்ரு
வினனு மறிந்தியாக்க நட்பு. ங

குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு. ச

அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல். ஞ

கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல். ட

ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல். ண

உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
வல்லற்க ணூற்றறுப்பார் நட்பு. அ

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும். கூ

மருவுக மாசற்ரூர் கேண்மையொன் நீத்து
மொருவுக வொப்பிலார் நட்பு. ஔ

பழைமை

பழைமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. க

நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதீல் சான்றோர் கடன். உ

பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை. ங

விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின். ச

பேதைமை யொன்றே பெருங்கிழமை யெனிறுணர்க
நோதக்க நட்டார் செயின். ஞ

எல்லைக்க ணின்றார் துறவார் தொலைவிடத்துந்
தொலலைக்க ணின்றார் தொடர்பு. ட

அழிவந்த செய்யினு மன்பரு ரன்பின்
வழிவந்த கேண்மை யவர். ண

கேளிழுக்கங கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்க நட்டார் செயின். அ

கெடாஅ வழிவநத கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு. க

விழையார் விழையப் படுப பழையார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார். ல

நீநட்பு

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது. க

உறினட் டறிவிலரூஉ மொப்பிலார் கேண்மை
பெறினு மிழப்பினு மென். உ

உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு நேர். ங

அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னுர்
தமரிற் றனிமை தலை. ச

செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தலி னெய்தாமை நன்று. ஞ

பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா
ரேதின்மை கோடி யுறும். ட

நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற்
பத்தடித்த கோடி யுறும். ண

ஒல்லுங் கரும முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். த

கனவினு மின்னுது மன்னே வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. ந

எனைத்துங் குறுகுத லோம்பன் மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு. ப

கூடாநட்பு

சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு. க

இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். உ

பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதன் மாணுர்க் கரிது. ங

முகத்தி னினிய நகாஅ வகத்தின்னு
வஞ்சரை யஞ்சப் படும். ச

மனத்தி னமையா தவரை யெனைத்தொன் றுஞ்
சொல்லினுற் றேறற்பாற் றன்று. ஞ

நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லொல்லை யுணரப் படும். ட

சொல்வணக்க மொனருர்கட் கொள்ளற்க வில்வணக்கந்
தீங்கு குறித்தமை யான். ண

தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னு
ழுதகண் ணீரு மினைத்து. அ

மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று. கூ

பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட்
டகநட்பொரீஇ விடல். ஐ

பேதைமை

பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண் டேதியம் போக விடல். க

பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை கையல்ல தன்கட் செயல். உ

நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும் பேணுமை பேதை தொழில். ங

ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப் பேதையிற் பேதையா ரில். ச

ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந் தான்புக் கழுந்து மளறு. ஞ

பொய்ப்படு மொன்றே புனைபூணுங் கையறியாப் பேதை வினைமேற் கொளின். ட

எதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை பெருஞ்செல்வ முற்றக் கடை. ண

மைய லொருவன் களித்தற்றுற் பேதைதன் கையொன் றுடைமை பெறின். அ

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட் பீழை தருவதொன் றில். கூ

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றுற் சான்றோர் குழாஅத்துப் பேதை புகல். ஙு

புல்லறிவாண்மை

அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
யின்மையா வையா துலகு. க

அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது
மில்லை பெறுவான் றவம். உ

அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது. ங

வெண்மை யெனப்படுவ தியாதெனி னெண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு. ச

கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்ல தூஉ மையந் தரும். ஞ

அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறையா வழி. ட

அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு. ண

எவவுஞ் செய்கலான் முன்றேறு னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய். த

காணுதாற் காட்டுவான் முன்காணுன் காணுதான்
கண்டானுந் தான்கண்ட வாறு. ந

உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தல்கையா வைக்கப் படும். ப

இகல்

இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய். க

பகல்கருதிப் பற்ரு செயினு மிகல்கருதி
யின்னுசெய் யாமை தலை. உ

இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத்
தாவில் விளக்கந் தரும். ங

இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின். ச

இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர். ஞ

இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து. ட

மிகன்மேவன் மெய்ப்பொருள் காணு ரிகன்மேவ
லின்னு வறிவி னவர். ண

இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை
மிகலூக்கி னூக்குமாங் கேடு. த

இக்கல்காணு னுக்கம் வருங்கா லதனை
மிக்கல்காணுங் கேடு தரற்கு. ந

இகலானு மின்னுத வெல்லா நகலானு
நன்னய மென்னுஞ் செருக்கு. ப

பகைமாட்சி

வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை. க

அன்பிலு ளுன்ற துணையிலன் ருன்றுவ்வா
னென்பரியு மேதிலான் றுப்பு. உ

அஞ்சு மறியா னமைவில னீகலான்
றஞ்ச மெளியன் பகைக்கு. ங

நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கு மெளிது. ச

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றூர்க் கினிது. ஞ

காணைச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணுமை பேணப் படும். ரு

கொடித்துங் கொளல்வேண்டு மன்ற வடித்திருந்து
மாணுத செய்வான் பகை. எ

குணனிலனுய்க் குற்றம் பலவாயின் மாற்றூர்க்
கினனிலனு மேமாப் புடைத்து. அ

செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா
வஞ்சும் பகைவர்ப் பெறின். கூ

கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்று
மொல்லாஅ யொல்லா தொளி. ஔ

பகைத்திறந்தெரிதல்

பகையென்னும் பண்பி லதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று. க

வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. உ

ஏமுற் றவரினு மேமுழை தமியனுய்ப்
பல்லார் பகைகொள் பவன். ங

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
றகைமைக்கட் டங்கிற் றுலகு. ச

தன்றுணை யின்றுற் பகையிரண்டாற் றுணெருவ
னின்றுணையாக் கொள்கவற்றி னொன்று. ஞ

தேறினுந் தேறு விடினு மழிவின்கட்
டேறுன் பகாஅன் விடல். சு

நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ராகத்து. எ

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு. அ

இளைதாக முண்மாங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து. கூ

உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார். ஓ

உட்பகை

நிழனீரு மின்னாத வின்னா தமர்நீரு
மின்னாவா மின்னா செயின். க

வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. உ

உட்பகை யஞ்சித்தற் காக்க வுலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும். ௩

மனமாணா வுட்பகை தோன்றி னினமாணா
வேதம் பலவுந் தரும். ௪

உறன்முறையா னுட்பகை தோன்றி னிறனமுறையா
னேதம் பலவுந் தரும். ௫

ஒன்றாமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும்
பொன்றாமை யொன்ற லரிது. ௬

செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி. ௭

அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு
துட்பகை யுற்ற குடி. ௮

எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
முட்பகை யுள்ளதாங் கேடு. ௯

உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று. ௰

பெரியாரைப்பிழையாமை

ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை. க

பெரியாரைப் பேணு தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தரும். உ

கெடல்வேண்டிற் கேளாது செய்க வடல்வேண்டி
னுற்று பவர்க ணிழுக்கு. ங

கூற்றத்தைக் கையால் விளித்தற்ரு லாற்றுவார்க்
காற்ரு தா ரின்னு செயல். ச

யாண்டுச்சென் றியாண்டு முளரார்கார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர். ஞ

எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். சு

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னும்
தகைமாண்ட தக்கார் செறின். எ

குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து. அ

எந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். கூ

இறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின். ஏ

பெண்வழிச்சேறல்

மனைவிழைவார் மாண்பய னெய்தார் விரைவிழைவார்
வேண்டாப் பொருளு மது. க

பேணுது பெண்விழைவா னுக்கம் பெரியதோர்
நாணுக நாணுத் தரும். உ

இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று
நல்லாரு ணுணுத் தரும். ங

மனையாளே யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று. ச

இல்லாளே யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல். ஞ

இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா
ளமையார்தா ளஞ்சு பவர். ட

பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னுணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து. எ

நட்டார் குறைமுடியார் நன்றூற்றார் நன்னுதலான்
பெட்டாங் கொழுகு பவர். அ

அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில். கூ

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில். ய

வரைவின்மகளிர்

அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா
ரின்சொ லிழுக்குத் தரும். க

பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல். உ

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று. ங

பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு
ளாயு மறிவி னவர். ச

பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட வறிவி னவர். ஞ

தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள். ட

நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள். ண

ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு. அ

வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்க ளாழு மளறு. க

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுங்
திருசீக்கப் பட்டார்ச் தொடர்பு. ஙி

கள்ளுண்ணாமை

உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார். க

உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரா
னெண்ணப் படவேண்டா தார். உ

சான்றுண் மூகத்தேயு மின்னுதா லென்மற்றுச்
சான்றோர் மூகத்துக் களி. ங

நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் களினெனும்
பேணப் பெருங்குற்றத் தார்க்கு. ச

கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். ஞ

துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். ட

உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர். ண

களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும். அ

களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. கூ

கள்ளுண்ணுப் போழ்தின் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு. ஔ

சூது

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. க

ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
னன்றெய்தி வாழ்வதோ ராறு. உ

உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும். ங

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில். ச

கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
யிவறியா ரில்லாகி யார். ஞ

அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப்பட் டார். ட

பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின். எ

பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கெடுத்
தல்ல லுழப்பிக்குஞ் சூது. அ

உடைசெல்வ மூண்ணெளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின். கூ

இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்ப
முழத்தொறூஉங் காதற் றுயிர். ஐ

மருந்து

மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று. க

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின். உ

அற்ற லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்ற னெடிதுய்க்கு மாறு. ங

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவர்ப் பசித்து. ச

மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு. ஞ

இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய். ட

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி
னோயள வின்றிப் படும். ண

நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். த

உற்ற னளவும் பிணியளவுங் காலமுங்
கற்றன் கருதிச் செயல். ந

உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பாலற் கூற்றே மருந்து. ப

குடிமை

இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு. க

ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று
மிழுக்கார் குடிப்பிறந் தார். உ

நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு. ங

அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர். ச

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரி தலின்று. ஞ

சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார். ட

குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து. ண

நலத்தின்க ணுரின்மை தோன்றி னவனைக்
குலத்தின்க ணையப் படும். அ

நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல். க

நலம்வேண்டி ஞணுடைமை வேண்டுங் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. ங

மானம்

இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல். க

சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர். உ

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு. ங

தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை. ச

குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யன்ன செயின். ஞ

புகழின்றூற் புத்தேளுட் டெய்யாதா லெண்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை. ஙு

ஒட்டரர்பின் சென்றொருவன் வாழ்தலி னங்நிலையே
கெட்டா னெனப்படுத னன்று. எ

மருந்தோமற் றூணேம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து. அ

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்ன
ருயிர்நீப்பர் மானம் வரின். கூ

இளிவரின் வாழாத மான முடையா
ரொளிதொழு தேத்து முலகு. ஏ

பெருமை

ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
கஃதிறந்து வாழ்த்து மெனல். க

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். உ

மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர். ங

ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு. ச

பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி
னருமை யுடைய செயல். ஞ

சிறியா ருணர்ச்சியு ளில்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு. ட

இறப்பே புரிந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின். ண

பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து. த

பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல். ந

அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். ப

சான்றாண்மை

கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. க

குணநலஞ் சான்றோர் நலனே பிறநல
மெந்நலத் துள்ள தூஉ மன்று. உ

அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண். ங

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. ச

ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. ஞ

சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
தலையல்லார் கண்ணுங் கொளல். ட

இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு. ண

இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். த

ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார். ந

சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தான்
றாங்காது மன்னோ பொறை. ப

பண்புடைமை

எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு. க

அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு. உ

உறுப்பொத்தன் மக்களொப் பன்றுல் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு.. ங

நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு. ச

நகையுள்ளு மின்னு திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. ஞ

பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன். ட

அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். ண

நண்பாற்று ராஇ நயமில செய்வார்க்கும்
பண்பாற்று ராதல் கடை. த

நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள். ந

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலத்தீமை யாற்றிரிந் தற்று. ப

நன்றியில்செல்வம்

வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில். ௧

பொருளானா மெல்லாமென் றீயா திவறு
மருளானா மாணாப் பிறப்பு. ௨

ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை. ௩

எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவரா
னச்சப் படாஅ தவன். ௪

கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில். ௫

ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவவான் றக்காரக்கொன
றீத லியல்பிலா தான். ௬

அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம்
பெற்றா டமியண்மூத் தற்று. ௭

நச்சப் படாதவன் செல்வ நடுவூரு
ணச்சு மரம்பழுத் தற்று. ௮

அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
வொண்பொருள் கொள்வார் பிறர். ௯

சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து. ௰

நாணுடைமை

கருமத்தா னணுத னணுத் திருநுத
னல்லவர் நாணுப் பிற. க

ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு. உ

ஊனைக் குறித்த வுயிரெல்லா நாணென்னு
நன்மை குறித்தது சால்பு. ங

அணியன்றே நாணுடைமை சான்றோர்க ணஃதின்றேற்
பிணியன்றே பீடு நடை. ச

பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு. ஞ

நாண்வேலி கொள்ளாது மன்னே வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர். ட

நாண வுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
ணெண்டிறவார் நாணின் பவர். ண

பிறர்நாணத் தக்கது தானணு னுயி
னறநாணத் தக்க துடைத்து. அ

குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடு
நாணிஞ்மை நின்றக் கடை. க

நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாண வுயிர்ம்ருட்டி யற்று. ம

குடிசெயல்வகை

கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில். க

ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டி
னீள்வினையா னீளுங் குடி. உ

குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்மூந் துறும். ங

சூழாமற் ரூனே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துளுற்று பவர்க்கு. ச

குற்ற மிலனுய்க் குடிசெய்து வாழ்வானைச்.
சுற்றமாச் சுற்று முலகு. ஞ

நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
வில்லாண்மை யாக்கிக் கொளல். ட

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து
மாற்றுவார் மேற்றே பொறை. ண

குடிசெய்வார்க் கில்லே பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும். த

இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைத்
குற்ற மறைப்பா னுடம்பு. ந

இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று
நல்லா ளிலாத குடி. ப

உழவு

சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனை
யுழந்து முழவே தலை. க

உழவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து. உ

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர். ங

பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர். ச

இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். ஞ

உழவினர் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை. ட

தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும். ண

வரினு நன்று லெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு. அ

செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும். க

இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும். ம

நல்குரவு

இன்மையி னின்னுத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னு சது. க

இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும். உ

தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குரா வென்னு நசை. ங

இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும். ச

நல்குரா வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும். ஞ

நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். ட

அறஞ்சாரா நல்குரா வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். ண

இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு. அ

நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது. க

துப்புர விில்லார் துவராத் துறவாமை
யுப்பிற்குங் காடிக்குங் கூற்று. ல

இரவு

இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி
னவர்பழி தம்பழி யன்று. க

இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முறுஅ வரின். உ

கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரேஎ ருடைத்து. ங

இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு. ச

கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது. ஞ

கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை
யெல்லா மொருங்கு கெடும். ட

இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள
முள்ளு ளுவப்ப தடைத்து. ண

இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால
மரப்பாவை சென்றுவந் தற்று. த

ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோண்
மேவா ரிலாஅக் கடை. ந

இரப்பான் வெகுளாமை வேண்டு நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி. ப

இரவச்சம்

கரவா துவந்தீயுங் கண்ணன்னூர் கண்ணு
மிரவாமை கோடி யுறும். க

இரந்து மூயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான். உ

இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில். ங

இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலு மிரவொல்லாச் சால்பு. ச

தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
தண்ணலி னூங்கினிய தில். ஞ

ஆவிற்கு நீரொன் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில். ட

இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று. ண

இரவென்னு மேமாப்பி ரேணி னரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும். த

இரவுள்ள வுள்ள முருகுங் காவுள்ள
வுள்ளதூ உமின்றிக் கெடும். ந

காய்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ விரப்பவர்
சொல்லாடப் போஒ மூயிர். ப

கயமை

மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில். க

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர். உ

தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான். ங

அகப்பட்டி யாவாரைக் காணி னவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ். ச

அச்சமே கீழ்கள தாசார மெச்ச
மவாவுண்டே லுண்டாஞ் சிறிது. ஞ

அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். ஙு

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு. எ

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ். அ

உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ். கூ

எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து. ஙி

காமத்துப்பால்

தகையணங்குறுத்தல்

அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு. க

நோக்கினு ணோக்கெதிர் நோக்குத றுக்கணங்கு
தானேக்கொண் டன்ன துடைத்து. உ

பண்டறியேன் கூறறென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு. ங

கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தார் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண். ச

கூற்றமோ கண்ணே பிணையோ மடவர
னோக்கமிம் மூன்று முடைத்து. ஞ

கொடும்புருவங் கோடா மறைப்பி னடுங்களுர்
செய்யல மன்னிவள் கண். ட

கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில். ண

ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினு
ணண்ணுரு முட்குமென் பீடு. அ

பிணையேர் மடநோக்கு நாணு முடையாட்
கணியெவனோ வேறில தந்து. க

உண்டார்க ணல்ல தடுநறுக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று. ல

குறிப்பறிதல்

இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து. க

கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பெரிது. உ

நோக்கினு ணோக்கி யிறைஞ்சினு ளீந்தவள்
யாப்பினு ளட்டிய நீர். ங

யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற்
றானோக்கி மெல்ல நகும். ச

குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும். ஞ

உரூஉ தவர்போற் சொலினுஞ் செறூஉர்சொ
லொல்லை யுணரப் படும். ட

செறூஉச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னோக்கு
முறூஉர்போன் றுற்றார் குறிப்பு. ண

அசையியற் குண்டாண்டோ ரேளர்யா னோக்கப்
பசையினள் பைய நகும். த

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள. ந

கண்ணெறி கண்ணினை நோக்கொக்கின வாய்ச்சொற்க
ளொன்ன பயனு மில. ப

புணர்ச்சிமகிழ்தல்

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கணமே யுள. க

பிணிக்கு மருந்து பிறமன் ணியிழை
தன்னெஞ்சுக் தானே மருந்து. உ

தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
ருமைக் கண்ணு னுலகு. ங

நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுங்
தீயாண்டுப் பெற்ற ளிவள். ச

வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பிலு டோள். ஞ

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள். ட

தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்று
லம்மா வரிவை முயக்கு. ண

வீழு மிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு. அ

ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன். கூ

அறிதோ றறியாமை கண்டற்றுற் காமஞ்
செறிதோ றுஞ் சேயிழை மாட்டு. எ

நலம்புனைந்துரைத்தல்

நன்னீரை வாழி யனிச்சமே நின்னினு
மென்னீரள் யாம்வீழ் பவள். க

மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று. உ

முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு. ங

காணிற் குவளை கவிழ்ந்து நிலனேக்கு
மாணிழை கண்ணெவ்வே மென்று. ச

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா னுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. ஞ

மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன். ட

அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து. ண

மாதர் முகம்போ லொளிவிட வல்லேயேற்
காதலே வாழி மதி. அ

மலரன்ன கண்ணுண் முகமொத்தி மீயிற்
பலர்காணத் தோன்றன் மதி. கூ

அனிச்சமு மன்னத்தின் றூவியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம். ஙி

காதற்சிறப்புரைத்தல்

பாலொடு தேன்கலந் தற்றே;பணிமொழி
வாலெயி றூறிய நீர். க

உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு. உ

கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருதுதற் கில்லை யிடம். ங

வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து. ச

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே
னெஞ்ஞான்க் கண்ணுள் குணம். ஞ

கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவார்
தண்ணியரெங் காத லவர். ட

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு
மெழுதேங் காப்பாக் கறிந்து. ண

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்ட
லஞ்சுதும் வேபாக் கறிந்து. அ

இமைப்பிற் காப்பாக் கறிவ லினைத்திற்கே,
யேதில ரென்னுமிவ் வூர். க

உவந்துறைவ ருள்ளத்து ளொன்று மிகந்துறைவ
ரேதில ரென்னுமிவ் வூர். ய்

நாணுத்துறவுரைத்தல்

காம முழந்து வருந்தினர்க் கேம
மடலல்ல தில்லை வலி. ௧

நோனு வடம்பு முயிரு மடலேறு
நாணினை நீக்கி நிறுத்து. ௨

நாணெடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்ரு ரேறு மடல். ௩

காமக் கடும்புன லுய்க்குமே நாணெடு
நல்லாண்மை யென்னும் புணை. ௪

தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு
மாலை யுழக்குந் துயர். ௫

மடலூர்தல் யாமத்து மூள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண். ௬

கடலன்ன காம முழந்து மடலேறுப்
பெண்ணிற் பெருந்தக்க தில். ௭

நிறையரியர் மன்னளிய ரென்னது காம
மறையிறந்து மன்று படும். ௮

அறிகிலா ரெல்லாரு மென்றேயென் காம
மறுகின் மறுகு மருண்டு. ௯

யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு. ௰

அலரறிவுறுத்தல்

அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் பாக்கியத் தால். க

மலரன்ன கண்ணு ளருமை யறியா
தலரெமக் கீந்ததிவ் வூர். உ

உரு அதோ வூரறிந்த கௌவை யதனைப்
பெரு அது பெற்றன்ன நீர்த்து. ங

கவ்வையாற் கவ்வித காம மதுவின்றேற்
றவவென்னுந் தன்மை யிழந்து. ச

களித்தொறுங கள்ளுண்டல் வேட்டற்றுற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது. ஞ

கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று. ட

ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொன்
னீராக நீளுமிந் நோய். ண

நெய்யா லெரிதுதுப்பே மென்றற்றுற் கௌவையாற்
காம முதுப்பே மெனல். அ

அலர்நாண வொல்வதோ வஞ்சலோம் பென்றூர்
பலர்நாண நீத்தக் கடை. கூ

தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டுங்
கௌவை யெடுக்கு மிவ்வூர் ஙி

பிரிவாற்றுமை

செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வர வாழ்வார்க் குரை. க

இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு. உ

அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான். ங

அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ தவறு. ச

ஒம்பி னமைந்தார் பிரிவோம்பன் மற்றவர்
நீங்கி னரிதாற் புணர்வு. ஞ

பிரிவுரைக்கும் வன்கண்ண ராயி னரிதவர்
நல்குவ ரென்னு நசை. ஙு

துறைவன் றுறந்தமை தூற்றுகொன் முன்கை
யிறையிறவா நின்ற வளை. எ

இன்ன தினனில்லூர் வாழ்த லதனினு
மின்ன தினியார்ப் பிரிவு. அ

தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ. கூ

அரிதாற்றி யல்லலெய் நீக்கிப் பிரிவாற்றீப்
பின்னிருந்து வாழ்வார் பலர். ஙி

படர்மெலித்திரங்கல்

மறைப்பேன்மன் யானிஃதோ நோயை, யிறைபபயர்க்
கூற்றுநீர் போல மிகும். க

கரத்தலு மாற்றேனிந் நோயைநோய் செய்தார்க்
குரைத்தலு நாணுத் தரும். உ

காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்
னேனு வுடம்பி னகத்து. ங

காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்து
மேமப் புணைமன்னு மில். ச

துப்பி னெவனுவர் மற்கொ றுயர்வரவு
நட்பினு ளாற்று பவர். ஞ

இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற்
றுன்ப மதனிற் பெரிது. ஃ

காமக் கடும்புன னீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன். எ

மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா
வென்னல்ல தில்லே துணை. அ

கொடியார் கொடுமையிற் றூங்கொடிய விந்நா
ணெடிய கழியு மிரா. க

உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னேவென் கண். ங

கண்விதுப்பழிதல்

கண்டாங் கழுழ்வதெவன் கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது. க

தெரிந்துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணரப்
பைத லுழப்ப தெவன். உ

கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழு
மிதுநகத் தக்க துடைத்து. ங

பெயலாற்று நீருலந்த வுண்க ணுயலாற்று
வுய்விலே யென்க ணிறுத்து. ச

படலாற்றீ பைத லுழக்குங் கடலாற்றுக்
காமநோய் செய்தவென் கண். ஞ

ஒஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டாஅ மிதற்பட் டது. ட

உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண். ண

பேணாது பெட்டா ருளர்மன்னே மற்றவர்க்
காணு தமைவில கண். அ

வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண். கூ

மறைபெற வூரார்க் கரிதன்று லெம்போ
லறைபறை கண்ணு ரகத்து. ம

பசப்புறுபருவரல்

நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற. க

அவர்தந்தா ரென்னுந் தகையா லிவர்தந்தென்
மேனிமே லூரும் பசப்பு. உ

சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையுந் தந்து. ங

உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு. ச

உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென்
மேனி பசப்பூர் வது. ஞ

விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு. ட

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி
லள்ளிக்கொள் வற்றே பசப்பு. ண

பசந்தா ளிவளென்ப தல்லா லிவணீத்
துறந்தா ரவரென்பா ரில். த

பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலைய ராவ ரெனின். ந

பசப்பெனப் பேர்பெறுத னன்றே நயப்பித்தார்
நல்கூர்மை தூற்று ரெனின். ப

தனிப்படர்மிகுதி

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரோ
காமத்துக் காழில் கனி. க

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வா ரினிக்கு மளி. உ

வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுந மென்னுஞ் செருக்கு. ங

வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின். ச

நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை. ஞ

ஒருதலையா னின்னது காமங்காப் போல
விருதலை யானு மினிது. ட

பருவரலும் பைதலுங் காணுங்கொல் காம
னெருவர்க ணின்றெழுகு வான். ண

வீழ்வாரி னின்சொற் பெறாஅ துலகத்து
வாழ்வாரின் வன்கண ரில். த

நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செவிக்கு. ந

உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅய் வாழிய நெஞ்சு. ப

நினைத்தவர்புலம்பல்

உள்ளினுங் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது. க

எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில். உ

நினைப்பவர் போன்று நினையார்கொ றும்மல்
சினைப்பது போன்று கெடும். ங

யாமு முளேங்கொ லவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோஒ வுளரே யவர். ச

தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணர்கொ
லெந்நெஞ்சத் தோவா வரல். ஞ

மற்றியா னெண்ணுளேன் மன்னே வவரொடியா
னுற்றநா ளுள்ள வுளேன். ட

மறப்பி னெவனுவண் மற்கொன் மறப்பறியேன்
உள்ளினு முள்ளஞ் சுடும். ண

எனைத்து நினைப்பினுங் காயா ரினைத்தன்றே
காதலர் செய்யுஞ் சிறப்பு. அ

விளியுமெ னின்னுயிர் வேறல்ல மென்பா
ளளியின்மை யாற்ற நினைந்து. கூ

விடாஅது சென்றூரைக் கண்ணினுற் காணப்
படாஅஆ வாழி மதி. ஐ

கனவுநிலையுரைத்தல்

காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாதுசெய் வேன்கொல் விருந்து. க

கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன். உ

நனவினு னல்கா தவரைக் கனவினுற்
காண்டலி னுண்டென் னுயிர். ங

கனவினு னுண்டாகுங் காம நனவினு
னல்காரை நாடித் தாற்கு. ச

நனவினுற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது. ஞ

நனவென வொன்றில்லை யாயிற் கனவினுற்
காதலர் நீங்கலர் மன். ட

நனவினு னல்காக் கொடியார் கனவினு
னென்னெம்மைப் பீழிப் பது. ண

துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கா
னெஞ்சத்த ராவர் விரைந்து. த

நனவினு னல்காரை நோவர் கனவினுற்
காதலர்க் காணு தவர். ந

நனவினு னன்னீத்தா ரென்பர் கனவினுற்
காணர்கொ லீவ்வூ ரவர். ப

பொழுதுகண்டிரங்கல்

மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலனீ வாழி பொழுது. க

புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள்போல்
வன்கண்ணர் தோழின் றுணை. உ

பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும். ங

காதல ரில்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும். ச

காலைக்குச் செய்தநன் றென்கொ லெனவன்கொலையான்
மாலைக்குச் செய்த பகை. ஞ

மாலைநோய் செய்தன் மணந்தா ரகலாத
காலை யறிந்த திலேன். ட

காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய். ண

அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன்
குழல்போலுங் கொல்லும் படை. த

பதிமருண்டு பைத லுழக்கு மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து. ந

பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை
மாயமென் மாயா வுயிர். ப

உறுப்புநலனழிதல்

சிறுமை நமக்கொழியச் சேட்சென்ற ருள்ளி
நறுமலர் நாணின கண். க

நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாருங் கண். உ

தணந்தமை சால வறிவிப்ப போலு
மணந்தநாள் வீங்கிய தோள். ங

பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள். ச

கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள். ஞ

தொடியொடு தோணெகிழ நோவ லவரைக்
கொடிய ரெனக்கூற ஞெந்து. ட

பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோட் பூச லுரைத்தி. ண

முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல். த

முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண். ந

கண்ணின் பசப்பே பருவ லெய்தின்றே
யொண்ணுதல் செய்தது கண்டு. ப

நெஞ்சொடுகிளத்தல்

நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்தானறு
மெவ்வநோய் தீர்க்கு மருந்து. க

காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு. உ

இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பரிந்துள்ளல்
பைதலெஞ் செய்தார் கணில். ங

கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று. ச

செற்ரு ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா
முற்ரு லுரு அ தவர். ஞ

கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்தியென் னெஞ்சு. ட

காமம் விடுவொன்ரே நாண்விடு நன்னெஞ்சே
யாமெ பொறேனிவ விரண்டு. ண

பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தீவர்
பின்செல்வாய் பேதையென் னெஞ்சு. த

உள்ளத்தார் காத லவரேக வுள்ளிநீ
யாருழைச் சேறியென் னெஞ்சு. ந

தின்னுத் துஞ்தாரை நெஞ்சத் துடையேமா
வின்னு முழைத்துங் கவின். ப

நிறையழிதல்

காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு
நாணுத்தாழ் வீழ்த்த கதவு. க

காம மெனவொன்றே கண்ணின்றென் னெஞ்சத்தை
யாமத்து மாளுந் தொழில். உ

மறைப்பேன்மற் காமத்தை யாரே குறிப்பின்றித்
தும்மல்போற் றோன்றி விடும். ங

நிறையுடையே னென்பேன்மன் யாரேவென் காம
மறையிறந்து மன்று படும். ச

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ
யுற்றார றிவதொன் றன்று. ஞ

செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ
வெற்றென்னே யுற்ற துயர். ட

நாணென வொன்றோ வறியலங் காமத்தாற்
பேணியார் பெட்ப செயின். ண

பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை. த

புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சங்
கலத்த லுறுவது கண்டு. ந

நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல். ப

அவ்வயின்விதும்பல்

வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல். க

இலங்கிழா யின்று மறப்பினென் றேண்மேற்
கலங்கழியுங் காரிகை நீத்து. உ

ஊனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றூர்
வானசைஇ யின்னு முளேன். ங

கூடிய காமம் பிரிந்தார வுரவுர்ளிக்
கோடுகொ டேறுமென் னெஞ்சு. ச

காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபி
னீங்குமென் மென்றோட் பசப்பு. ஞ

வருகமற் கொண்க னொருநாட் பருகுவன்
பைதனீ யெல்லாங் கெட. ட

புலப்பேன்கொல புலவேன கொலலோ கலபேன்கொல
கண்ணன்ன கேளிர் வரின். ண

வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை யயர்கம் விருந்து. அ

ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றூர்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு. கூ

பெறினென்னும் பெற்றக்கா லென்னு முறினென்னு
முள்ள முடைந்துக்கக் கால். ய

குறிப்பறிவுறுத்தல்

கரப்பினுங் கையிகந் தொல்லாநின் னுண்க
ணுரைக்க லுறுவதொன் றுண்டு. க

கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைகுப
பெண்ணிறைந்த நீர்மை பெரிது. உ

மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியிற் றிகழ்வதொன் றுண்டு. ங

முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு. ச

செறிதொடி செய்திறந்த கள்ள முறுதுயர்
தீர்க்கு மருந்தொன் றுடைத்து. ஞ

பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து. ட

தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினு
முன்ன முணர்ந்த வளை. ண

நெருநற்றுச் சென்றா ரெனாதலர் யாமு
மெழுநாளே மேனி பசந்து. அ

தொடிநோக்கி மென்றோளு நோக்கி யடிநோக்கி
யஃதாண் டவன்செய் தது. க

பெண்ணினுட் பெண்மை யுடைத்தென்ப கண்ணினுட்
காமநோய் சொல்லி யிரவு. ய

புணர்ச்சிவிதும்பல்

உளைக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு. க

தினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணைய
காம நிறைய வரின். உ

பேணாது பெட்பவே செய்யினுங் கொண்கனைக்
காணு தமையல கண். ங

ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு. ச

எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து. ஞ

காணுங்காற் காணேன் றவறாய காணக்காற்
காணேன் றவறல் லவை. ட

உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற்
பொய்த்த லறிந்தென் புலந்து. ண

இளித்தக்க வின்ன செயினுங் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு. அ

மலரினு மெல்லிதாங்காமஞ் சிலாதன்
செல்வி தலைப்படு வார். கூ

கண்ணிற் றுனித்தே கலங்கினாள் புல்லுதல்
லென்னினுந் தான்வி துப்புற்று. கூ

நெஞ்சொடுபுலத்தல்

அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது. க

உரூஅ தவர்க்கண்ட கண்ணு மவரைச்
செரூஅரெனச் சேறியென் னெஞ்சு. உ

கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல். ங

இனியன்ன நின்னெஞ் சுழ்வார்யார் நெஞ்சே
தனிசெய்து துவ்வாய்காண் மற்று. ச

பெரூஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சு
மரூஅ விடும்பைத்தென் னெஞ்சு. ஞ

தனியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்
தினிய விருந்ததென் னெஞ்சு. ட

நாணு மறந்தே னவர்மறக் கல்லாவென்
மாணு மடநெஞ்சிற் பட்டு. ண

எள்ளி னிளிவாழ்மன் றெண்ணி யவர்திற
முள்ளு முயிர்க்காத னெஞ்சு. த

துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி. ந

தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய
நெஞ்சந் தமரல் வழி. ப

புலவி

புல்லா திராஅப் புலத்தை யவருறு
மல்லலெஞ் காண்கஞ் சிறிது. க

உப்பமைந் தற்றுற் புலவி யதுசிறிது
மிக்கற்றுள் ளீள விடல். உ

அலந்தாரை யல்லலெய் செய்தற்றுற் றம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல். ங

ஊடி யவரை யுணராமை வாடிய
வளளி முதலரிந் தற்று. ச

நலத்தகை நல்லவர்க் கேளர் புலத்தகை
பூவ்வன்ன கண்ணு ரகத்து. ஞ

துனியும் புலவியு மில்லாயிற் காமங்
கனியுங் கருக்காயு மற்று. ட

ஊடலி னுண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடெ தன்றுகொ லென்று. ண

நோத லெவன்மற்று நொந்தாரொண் றஃதறியுங்
காதல ரில்லா வழி. அ

நீரு நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே யினிது. கூ

ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சங்
கூடுவே மென்ப தவா. ய

புலவி நுணுக்கம்

பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பா
நண்ணேன் பரத்தநின் மார்பு. க

ஊடி யிருந்தேமாத் தும்மினீர் யாந்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து. உ

கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக்
காட்டிய சூடினீ ரென்று. ங

யாரினுங் காதல மென்றேனு வூடினாள்
யாரினும் யாரினு மென்று. ச

இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனுக்
கண்ணிறை நீர்கொண்ட னள். ஞ

உள்ளினே னென்றேன்மற றெனமறுத் தென்னென்னை
புல்லாள் புலத்தக் கனள். ட

வழுத்தினு மெம்மினே னுக வழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று. ண

தும்முச் செறுப்ப வழுதா னுமருள்ள
லெம்மை மறைத்திரோ வென்று. அ

தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
நின்னீர ராகுதி யென்று. க

நினைத்திருந்து நோக்கினுங் காயு மினைத்துநீர்
யாருள்ளி நோக்கினீ ரென்று. ல

ஊடலுவகை

இல்லை தவறவர்க் காயினு மூடுதல்
வல்ல தவரளிக்கு மாறு. க

ஊடலிற் றோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும். உ

புலத்தலிற் புத்தேளி ரண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்ன ராகத்து. ங

புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
னுள்ள முடைக்கும் படை. ச

தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோ
ளகறலி னுங்கொன் றுடைத்து. ஞ

உணலினு முண்ட தறலினிது காமம்
புணர்தலி னூட லினிது. ட

ஊடலிற் றோற்றவர் வென்ற தறுமன்னுங்
கூடலிற் காணப் படும். ண

ஊடிப் பெறுகுவங் கொல்லோ துதல்வெயர்ப்பக்
கூடலிற் றோன்றிய வுப்பு. அ

ஊடுக மன்னோ வொளியிழை ... பிரப்ப
நீடுக மன்னோ விரா. ங

ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின். ஆ

திருவள்ளுவமாலை

திருச்சிற்றம்பலம்

சிறப்புப்பாயிரமாகிய

திருவள்ளுவமாலை

அசரீரி

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டருத்தரு நற்பலகை யொக்க-விருக்க
வருத்திர சன்ம ரெனவுரைத்து வானி
லொருக்கவோ வென்றதோ சொல்.

நாமகள்

நாடா முதலுன் மறைநான் முகனுவிற்
பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன்-கூடாரை
யெள்ளிய வென்றி யிலங்கிலவேன் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு. உ

இறையனார்

என்றும் புலரா தியாணர்நாட் செல்லுனு
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க்-குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் றெய்வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.. ங

உக்கிரப்பெருவழுதியார்

நான்மறையின் மெய்ப்பொருளே மூப்பொருளா
[நான்முகத்தோன்
மூன்மறைந்து வள்ளுவனுய்த தந்துரைத்தி - நூன்
[முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி. ச

கபிலர்

தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தான்-மனையள்கு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனூர்
வெள்ளைக் குறட்பா விரி. ஞ

பரணர்

மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுது நயந்தளந்தான்-வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தா
ருள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து. ண

நக்கீரர்

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
லானு வறமுதலா வந்நான்கு-மேனூருக்
கூழி னுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னுற்று மற்று. எ

மாமூலனார்

அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
நிறந்தெரிந்து செப்பிய தேவை-மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார். அ

கல்லாடர்

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார்-நன்றென
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனூர்
மூப்பான் மொழிந்த மொழி. கூ

சீத்தலைச்சாத்தனார்

மும்மலையு மூன்நாடு மூன்நதியு மூப்பதியு
மும்முரசு மூத்தமிழு முக்கொடியு-மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றூரன்றே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால். ம

மருத்துவன்றாமோதரனார்

சிந்திநீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்-காந்தி
மலைக்குத்தீ மால்யானை வள்ளுவர்முப் பாலாற்
றலைக்குத்துத் தீர்வுசாத் தற்று. ங

திருவள்ளுவமாலை

நாகன்மேறவனூர்

தாளார் மலர்ப்பொய்கை தாங்குடைவார் தண்ணீரை
வேளா தொழிதல் வியப்பன்று-வாளாதா
மப்பா லொருபாவை யாய்ப்பவோ வள்ளுவனூர்
முப்பான் மொழிமூழ்கு வா. கஉ

அரிசில்கிழார்

பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து நிறநெறிறுஞ் சேரச்-சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொலலுதல
வல்லாரீர் வள்ளுவரல் லால். கங

பொன்முடியார்

கானின்ற தொங்கலாய் காசிபனூர் தந்ததுமுன்
கூனின் றளந்த குறளென்ப-நூன்முறையான்
வானின்று மண்ணின் றளந்தசே வள்ளுவனூர்
தானின் றளந்த குறள். கச

கோதமனூர்

ஆற்ற லழியுமென் றந்தணர்க ணூன்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா-ரேட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனூர் முப்பாலைச்
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று. கஎ

நத்தத்தனார்

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்-போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம. கசு

முகையலூர்ச் சிறுகருந்துமபியார்

உள்ளுத லுள்ளி யுரைத்த லுரைத்ததனைத்
தெள்ளுத லன்றே செயற்பால-வள்ளுவனார்
முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகாவா
ரெப்பா வலரினு மில். கஎ

ஆசிரியர் நலலந்துவனார

சாற்றிய பல்கலையுந் தப்பா வருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாந்-தோற்றவே
முப்பான் மொழிந்த முதற்பா வலரொப்பா
ரெப்பா வலரினு மில். கஅ

கீரந்தையார்

தப்பா முதற்பாவாற் றாமாண்ட பாடலினான்
முப்பாலி னாற்பான் மொழிந்தவ-ரெப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர். கக

சிறுமேதாவியார்

வீடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய மூப்பத்து மூன்றொன்றாழ்-கூடுபொரு
ளின்ப மெழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை. ௨௩

நல்கூர்வேள்வியார்

உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தா
னுத்தர மாமதுரைக் கச்சென்ப-விப்பக்க
மாதானு பங்கி மறுவில் புலச்சென்றாப்
போதாரீ புனற்கூடற் கச்சு. ௨௪

தொடித்தலைவிழுத்தண்டினார்

அறனான் கறிபொரு ளோழொன்று காமத்
திறமூன் றெனப்பகுதி செய்து-பெறலரிய
நாலு மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்
போலு மொழிந்த பொருள். ௨௫

வெள்ளிவீதியார்

செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே-செய்யா
வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில். ௨௬

திருவள்ளுவமாலை

மாங்குடிமருதனார்

ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்-தீதற்றே
ருள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவீர் வாய்மொழி மாண்பு. உச

எறிசசலூர் மலாடனார்

பாயிர நான்கில் லறமிருபான் பண்மூன்றே
தூய துறவறமொன் றூழாக-வாய
வறத்துப்பா லெல்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து. உஇ

போக்கியார

அரசிய லமைந் தமைச்சிய லீரைந்
தருவல் லாணிரண்டொன் றெண்கூ-ழிருவிய
றிண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொரு ளேழா மிவை. உக

மோசி கீரனார்

ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராறுக-மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றுகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு. உஎ

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்

ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்-பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள ளுவனெனி
யந்தா மரைமே லயன். உஅ

மதுரைத் தமிழ்நாகனார்

எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பா
லில்லாத வெப்பொருளு மில்லையாற்-சொல்லாற்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா 'வையத் தணை. உக

பாரதம்பாடிய பெருந்தேவனார்

எப்பொருளும் யாரு மியல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரு-முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர். உ௩

உருத்திரசன்மகண்ணனார்

மணற்கிளக்க நீரூறு மைந்தர்கள் வாய்வைத்
தணைச்சுரக்குந் தாய்மூலை யொண்பால்-பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் மூப்பான் மதிப்புலவோர்க்
காய்தொறு மூறு மறிவு. உக

திருவள்ளுவமாலை

பெருஞ்சித்திரனார்

தமிழ்
எழுத்தால் வள்ளுவ ரின்குறள்வெண் பாவினை
லோதிய வொண்பொரு ளெல்லா-முரைத்ததனைற்
ரூதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன. ந.உ

நரிவெரூஉதலையார்

இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
மூன்பறியச் சொன்ன முதுமொழி நூன-மனபண்தகட்
குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள். ந.ங

மதுரைத்தமிழாசிரியர் செங்குனற்கிழார்

புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்ப-னிலவு
பிறங்கிகாளிமா லேக்கும் பெயர்மாலே மற்றுங்
கறங்கிருண்மா லேக்கும் பெயர். ந.ச

மதுரையறுவைவாணிகன் இளவேட்டனார்

இன்பமும் துன்பமுமென்னு மிவையிரண்டு
மன்பதைக் கெல்லா மனமகிழ-வன்பொழியா
துள்ளி யுணர் வுரைத்தாரே யோதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து. ந.ஞ

கவிசாரப் பெருந்தேவனார்

பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனதம்
மாவிற் கருமுனியா யானைக்-கமரரும்ப
றேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா. -சு

மதுரைப பெருமருதனார்

அறமூப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்
திறமிருபத் தைந்தாற் றெளிய-முறைமையால்
வேத விழுப்பொருளே வெண்குறளால் வள்ளுவனு
சோதவ்ழுக் கற்ற தலகு. நஎ

கோவூர்கிழார்

அறமுத லொன்கு மகலிடத்தோ ரெல்லாங்
திறமுறத் தேர்ந்து தெளியக்-குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனுர் பான்முறைநே ரோவவாதே
முன்னே முதுவோர் மொழி. நஅ

உறையூர் முதுகூற்றனார்

தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள்வெண்
பாவிற் சிறந்திடுமெப் பாற்பகரார்-நாவிற்
குயலில்லே சொற்சுவை யோர்வில்லே மற்றுஞ்
செயலில்லே யென்னுந் திரு. நக

இழிகட்பெருங்கண்ணனார்

இம்மை மறுமை யிரண்டு மெழுமைக்குஞ்
இன்பம் விழையான் வினை விழைவான்-தனக்கு இன்பத்தை விரும்பானாகி வினைமுடிததலையே விருமபுவான், தன் கேளிர் துன்பம துடைதது ஊன்றும் தூண் - தன் கேளிராகிய பாரததின் துன்பததினை நீக்கி அதனைத தாஙகும தூணாம்.

இஃது ஏகதேச உருவகம. 'ஊன்றும்' என்றது அப்பொருட்டாதல 'மதலையாய மறறதன் வீழூன்றி யாங்கு'' (நாலடி. 297) என்பதனானும் அறிக. சுறறததார நட்டாரது வறுமையும் தீரதது அவாக்கு ஏமம செயயும் ஆறறலை உடையனாம எனவே, தன்னைக கூறவேண்டாவாயிறறு. காரியததை விழையாது காரணத்தை விழைவான் எலலாப் பயனும எய்தும என்றதனால், காரணததை விழையாது காரியததை விழைவான் யாதும் எய்தான் என்பது பெறறாம.

இதனான் அஃது உடையானது நன்மை கூறப்பட்டது. (5)

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 616

முயற்சி திருவினை ஆக்கும் - அரசர்மாட்டு உளதாய முயற்சி அவரது செல்வததினை வளர்க்கும, முயறறு இன்மை இன்மை புகுததிவிடும் அஃதில்லாமை வறுமையை அடைவிததுவிடும்.

செலவம அறுவகை அங்கஙகள. வறுமை அவறறான் வறியராதல். அதனை அடைவிக்கவே, பகைவரான் அழுவா என்பது கருதது. (6)

மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள். 617

மா முகடி மடி உளாள - கரியசேட்டை ஒருவன் மடியின் கண்ணே உறையும், தாமரையினாள மடி இலான் தாள உளாள என்ப - திருமகள மடியிலாதானது முயறசிக்கணணே உறையும் என்று சொல்லுவா அறிநதோா.

பாவததின் கருமை அதன் பயனாய முகடிமேல் ஏற்றப்பட்டது. மடியும் முயற்சியும உடையாாமாட்டு நிலையை அவை தம்மேல் வைததுக் கூறினாா.

இவை இரண்டு பாட்டானும் அவ் இருமைக்கும் ஏது கூறப்பட்டது. (7)

பொறிஇன்மை யார்க்கும் பழிஅன்று அறிவுஅறிந்து
ஆள்வினை இன்மை பழி. 618

பொறி இன்மை யார்க்கும் பழியன்று - பயனீத்தருவதாய விதியில்லாமை ஒருவற்கும் பழியாகாது, அறிவு அறிந்து ஆளவினை இன்மை பழி - அறிய வேண்டும் அவற்றை அறிந்து வினை செய்யாமையே பழியாவது.

அறிய வேண்டுவன வலி முதலாயின. 'தெய்வம் இயையா வழி ஆளவினை உடைமையால் பயன் இல்லை' என்பாரை நோக்கி, 'உலகம் பழவினைபற்றிப் பழியாது, எண்ணுடைக் குற்றமுடைமை பற்றியே பழிப்பது, என்றார். அதனால் விடாது முயல்க என்பது நுண்பொருள். (8)

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 619

தெய்வத்தான் ஆகாது எனினும் - முயன்ற வினை பால்வகை பால கருதிய பயனைத் தாராதாயினும், முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும் - முயற்சி தனக்கு இடமாய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலி அளவு தரும், பாழாகாது.

தெய்வத்தான் ஆயவழித் தன் அளவின் மிக்க பயனைத் தரும் என்பது உமையால் பெறாரும. இருவழியும் பாழாகல் இன்மையின் தெய்வம் நோக்கியிராது முயலுக என்பது கருத்து. (9)

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர். 620

ஊழையும் உப்பக்கம காண்பர் - பயனை விலக்குவதாய ஊழினையும் புறங்காண்பர், உலைவு இன்றித் தாழாது உருமறு பவர் - அவ்விலக்கிறகு இடையாது வினையைத் தாழவற முயல்வார்.

தாழவற தல் சூழ்சசியினும, வலி முதலிய அற்தலினும, செயலினும் குறறம்அறுதல. ஊழ ஒருகாலாக இருகாலாக அலது விலக்கலாகாமையின், பலகால் முயல்வார் பயன் எயதுவர் என்பார, 'உப்பக்கம காண்பர' என்றார.

தெடவதத்தான் இடுக்கண் வரினும முயற்சி விடற்பாலதன்று என்பது, இலவ மூன்றுபாட்டாலும கூறப்பட்டது. (10)

63. இடுக்கண் அழியாமை

அஃதாவது வினையின்கண முயல்வான் தெய்வத்தானுக, பொருளின்மையானுக, மெய வருதத்தாலுகத் தனக்கு இடுக்கண் வருதுழி, அதறகு மனங் கலஙகாமை. அதிகார முறைமையும் இதனுளே விளங்கும்.

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல். 621

இடுக்கண் வருங்கால் நகுக-ஒருவன் வினையால் தனக்கு இடுக்கண் வருமிடதது அதறகு அழியாது உள மகிழுக, அதனை அடுகது

ஊர்வது அஃது ஒப்பது இல் - அவ் இடுக்கணே மேன்மேல் அட ரவல்லது அம்மகிழ்ச்சி போல்வது பிறிதில்லையாகலான்.

வீணை இனிது முடிந்துழி நிகழற்பாலதாய மகிழ்சசியை அதற்கு இடையே இடுக்கண் வருவழிச் செய்யவே, அவன் அழிவின்றி மன ஏழுச்சியான் 'அதனைத் தள்ளி அக்குறை முடிக்கும் ஆற்றலுடை யனும் ஆகலின், 'அதனை அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல்' என்றார். (1)

வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக் கெடும். 622

வெள்ளதது அனைய இடும்பை - வெள்ளம்போலக் கரையில வாய இடும்பைகள எல்லாம், அறிவுடையான் உளளத்தின் உள ளக் கெடும் - அறிவுடையவன் தன் உளளததான் ஒன்றனை நீனைக்க, அத்துணையானே கெடும்.

இடும்பையாவது உள்ளதது ஒரு கோட்பாடேயன்றிப் பிறி தில்லை என்பதூஉம் அது மாறுபடக்கொளள நீங்கும் என்பதூஉம் அறிதல் வேண்டுதலின் 'அறிவுடையான்' என்றும, அவ் உபா யத்தது எண்ணமதோன்ற 'உளளதின் உளள' என்றும் கூறினர்.

இவ்வ இரண்டு பாட்டாலும் ஊழ்வலன் ஆய இடுக்கணால் அழி யாமைக்கு உபாயம் கூறப்பட்டது. (2)

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு இடுமபை படாஅ தவர். 623

இடும்பைக்கு இடும்பை படாதவர்-வினைசெய்யுங்கால் அதற்கு இடையே வந்த துன்பத்திற்கு வருந்தாதவர், இடும்பைக்கு இடும்பை படுப்பர்-அத்துன்பம் தனக்குத் தாம் துன்பம் விளைப்பர.

வருந்துதல் இனைத்து விட நிகழ்வதல. மனத்திட்பமுடைய ராய் விடாது முயலவே வினை முற்றுப்பெற்றுப் பயன்படும். படவே, எல்லா இடும்பையும் இலவாம் ஆகலின், 'இடும்பைக்கு இடும்பை படுப்பர்' என்றார். வருகின்ற பாட்டு இரண்டினும இதற்கும் இவ்வாறே கொளக. சொற்பொருட் பின் வருநிலை. (3)

மடுத்தவாய் எல்லாம் பகடுஅன்னன் உற்ற இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து. 624

மடுத்த வாய் எல்லாம் பகடு அன்னன் - விலங்கிய இடங்கள எல்லாவற்றினும் சகடம் ஈர்க்கும் பகடுபோல வினையை எடுதது க் கொண்டு உய்க்கவல்லானை, உற்ற இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து - வந்துற்ற இடுக்கண் தானே இடர்ப்படுதலை உடைதது.

'மடுத்தவாய எல்லாம்' என்பது பொதுப்பட நின்றமையின், சகடதற்கு அளற்று நிலம் முதலியவாகவும், வினைக்கு இடையூறு களாகவும் கொளக. "பகடு மருங்கு ஒற்றியும் மூக்கு ஊன்றியும் தாள தவழ்ந்தும்" (சீவக. முத்தி. 180) அரிதின் உய்க்குமாறு

போலத் தன் மெய்வருத்தம் நோக்காது முயன்று உய்ப்பான் என்பார் 'பகடு அன்னான்' என்றார். (4)

அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும். 625

அடுக்கி வரினும் - இடைவிடாது மேன்மேல் வந்தனவாயினும், அழிவிலான் உற்ற இடுக்கண் இடுக்கண் படும் - தனனுளளக் கோட்பாடு விடாதான் உற்ற இடுக்கண் தாம் இடுக்கணிலே பட்டுப்போம்.

ஒன்றே பலகால் வருதலும் வேறுபட்டன விராய்வருதலும் அடங்க 'அடுக்கிவரினும்' என்றார். 'அழிவு' என்னும் காரணப் பெயர் காரியதனிமேல் நின்றது.

இவை மூன்று பாட்டானும் தெய்வத்தான் ஆயதற்கு அழியாமை கூறப்பட்டது. (5)

அற்றேம்என்று அல்லற் படுபவோ பெற்றேம்என்று
ஓம்புதல் தேற்றா தவர். 626

அற்றேம் என்று அல்லற்படுபவோ - வறுமைக்காலத்து யாம் வறியமாயினேம் என்று மனத்தால் துயருழப்போ, பெற்றேம் என்று ஓம்புதல் தேற்றாதவர் - செல்வக்காலத்து இது பெற்றேம் என்று இவறாதலே யறியாதார்.

பெற்றவழி இவறாமை நோக்கி அற்ற வழியும் அப்பகுதி விடாது ஆகலின், அல்லற்பாடு இல்லையாயிற்று.

இதனுள் பொருளின்மையான் ஆயதற்கு அழியாமையும் அதற்கு உபாயமும் கூறப்பட்டன. (6)

இலக்கம் உடம்புஇடும்பைக்கு என்று கலக்கத்தைக்
கையாறாக கொள்ளாதாம் மேல். 627

உடம்பு இடும்பைக்கு இலக்கம் என்று-நாற்கதியிலும் உளள உடம்புகள இடும்பை என்னும் வாளுக்கு இலக்கு என்று தெளிந்து, கலக்கதனதைக் கையாறாக் கொளளாதாம் மேல் - தம்மேல் வந்த இடும்பையை இடும்பையாகக் கொளளார் அறிவுடையார்.

ஏகதேச உருவகம். 'உடம்பு' சாதிப்பெயர். 'கலக்கம்' என்னும் காரியப்பெயர காரணத்தின்மேல நின்றது. 'கையாறு' என்பது ஒருசொல் இதற்கு ஒழுக்கநெறி என்று உரைப்பாரும் உளர். இயல்பாகக் கொளவர் என்பது குறிப்பெசசம். (7)

இன்பம் விழையான் இடும்பை இயல்புஎன்பான்
துன்பம் உறுதல் இலன். 628

இன்பம் விழையான் இடும்பை இயல்பு என்பான் - தன் உடம்பிற்கு இன்பமாயவற்றை விரும்பாதே வீணையால் இடும்பை

எய்துதல் இயல்பு என்று தெளிக்கிருப்பான், துன்பம் உறுதல இலன் - தம் முயற்சியால் துன்பமுறுன்.

இன்பததை விழையிஞும், இடும்பையை இயல்பு என்னை காக்கக் கருதினும், துன்பம் வினைதலின், இவ் இரண்டுஞ் செய்யா தானே, 'துன்பம் உறுதல் இலன்' என்றார். (8)

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள் துன்பம் உறுதல் இலன். 629

இன்பததுள இன்பம் விழையாதான் - வினையால் தனக்கு இன்பம் வருதுழி அதனை அனுபவியாநின்றே மனததான் விரும் பாதான், துன்பததுள துன்பம் உறுதல் இலன் - துன்பம வந்துழி யும அதனை அனுபவியாநின்றே மனததான் வருநதான்.

துன்பம் - முயற்சியான் வரும் இடுக்கண். இரண்டையும் ஒருதன்மையாகக் கோடலின், பயன்களும இலவாயின. (9)

இன்னுமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன் ஒன்னுர் விழையும் சிறப்பு. 630

இன்னுமை இன்பம் எனக் கொளின்-ஒருவன் வினை செய்யும் இடதது முயற்சியான் வரும் துன்பதன்னையே தனக்கு இன்ப மாகக் கற்பிததுக்கொளவையின், தன் ஒன்னை விழையும சிறப்பு ஆகும் அதனல் தன் பகைவர் நன்கு மதிததற்கு ஏதுவாய உயர்சசி உண்டாம்.

துன்பம்தானும் உயிர்க்கு இயல்பன்றிக் கணிகமாய் மனத திடை நிகழுவதோர் கோட்பாடு ஆகலின், அதனை மாறுபடக் கொள்ளவே, அதறகு அழிவு இன்றி மனமநிழசசி உடையனுய் அதனல தொடங்கியவினை முடிததேவிடும ஆறறலுமஉடையனும் என்பது கருதது.

இவை நான்கு பாட்டானும் மெய்வருத்தததான் ஆயதற்கு அழியாமையும் அதறகு உபாயமும் கூறப்பட்டன, (10)

அரசியல முற்றும்

—: o :—

அங்க இயல்

—· o :—

இனி முறையானே அரசியல் நடாததுதற்கண் ஒன்றற்கு ஒன்று துணையாய அங்கங்கள் ஆறனது இயல்பு முப்பதநிரண்டு அதிகாரததால கூறுவான் எடுததுக்கொண்டு, அவை ஆறனுள ளும "காவற்சாகாடு உகததற" (புறநா. 186) கண் அவ் அரசற்கு இனையாய அமைச்சனது இயல்பு பதது அதிகாரததால் கூறு வான் தொடங்கி, முதற்கண் அமைச்சுக் கூறுகின்றார்.

64. அமைச்சு

அஃதாவது அமைச்சனது தன்மை, என்றது அவன் தன் குணங்களையும் செயல்களையும.

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு. 631

கருவியும் - வினைசெய்யுங்கால் அதற்கு வேண்டும் கருவிகளும், காலமும் - அதற்கு ஏற்ற காலமும, செயகையும் - அது செயயுமாறும், செயயும அருவினையும் - அவ்வாற்றில் செயயப்படும் அவ் அரிய வினைதானும், மாண்டது அமைச்சு - வாய்ப்ப எண்ண வல்லவனே அமைச்சனாவான்.

கருவிகள - தானையும் பொருளும. காலம் - அது தொடங்கும் காலம். செய்கை எனவே, அது தொடங்கும உபாயமும், இடையூறு நீக்கி முடிவுபோக்குமாறும அடஙகின. சிறிய முயற்சியால் பெரிய பயன் தருவது என்பார், 'அருவினை' என்றார்.

இவை ஐந்தனையும் வடநூலார் மநதிரததிற்கு அங்கம என்ப. (1)

வன்கண் குடிகாத்தல் கற்றுஅறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு. 632

வன்கண் - வினைசெய்தறகண் அசைவின்மையும், குடி காததல் குடிகளைக் காததலும, கறறு அறிதல் நீதிநூல்களைக் கறறுச செயவன தவிரவன அறிதலும, ஆளவினையொடு - முயறசியும, ஐநதுடன் மாண்டது அமைசசு - மேறசொலலிய அவ் அங்கஙகள ஐநதுடனே திருநத உடையானே அமைசசனாவான்.

எண்ணொடு நீண்டது. 'அவ் ஐநது' எனச சுட்டு வருவிக்க. இநநானகனையும மேற கூறியவறறோடு தொகுததுக் கூறியது அவையும இவறறோடு கூடியே மாடசிமைப்பட வேண்டுதலானும, அவறறிற்கு ஐநது என்னும தொகை பெறுதறகும. இனி இதனை ஈணடு எண்ணியவறறிற்கே தொகையாக்கிக குடிகாததல் என்பதனைக் குடிப்பிறபபும, அதனை ஒழுக்கததால் காததலும எனப் பகுப்பாரும, 'கற்று அறிதல' என்பதனைக் கறறலும அறிதலும எனப் பகுப்பாரும் உளர. அவர 'உடன்' என்பதனை முற்று உமமைப் பொருட்டாக்கியும, 'குடி' என்பதனை ஆகுபெயராக்கியும் இடர்ப்படுப. (2)

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு. 633

பிரித்தலும் - வினை வந்துழிப் பகைவர்க்குத துணையாயினாரை அவரிற் பிரிக்கவேண்டின் பிரிததலும், பேணிக்கொளலும் - தம்

பாலாரை அவர் பிரியாமல் கொடை இன்சொற்களால் பேணிக் கொள்ளுதலும், பிரிந்தார்ப் பொருத்தலும் - முன்னே தம்மினும் தம்பாலாரினும் பிரிந்தாரை மீண்டும் பொருத்த வேண்டின் பொருத்தலும், வல்லது அமைச்சு-வல்லவனே அமைச்சனுவான்.

இவற்றுள அப்பொழுதை நிலைக்கு ஏற்ற செயலறிதலும் அதனை அவர் அறியாமல் ஏற்ற உபாயத்தால் கடைப்பிடித்தலும் அரியவாதல் நோக்கி 'வல்லது' என்றார். வடநூலார் இவற்றுள பொருத்தலை 'சந்தி' என்றும், பிரித்தலை 'விக்கிரகம்' என்றும் கூறுப. (3)

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச் சொல்லலும் வல்லது அமைச்சு. 634

தெரிதலும் - ஒருகாரியச்செய்கை பலவாற்றுல் தோன்றின் அவற்றுள ஆவது ஆராய்ந்தறிதலும், தேர்ந்து செயலும் - அது செய்யுங்கால் வாய்க்கும் நிறன் நாடிச் செய்தலும், ஒருதலையாச் சொல்லலும்-சிலரைப் பிரிதலால் பொருதலால் செயற்கண் அவர்க்கு இதுவே செயற்பாலது என்று துணிவு பிறக்கும்வகை சொல்லுதலும், வல்லது அமைச்சு - வல்லவனே அமைச்சனுவான்.

தெரிதல் செயல்மேலதாயிற்று, வருகின்றது அதுவாகலின்.()

அறன்அறிந்து ஆன்றுஅமைந்த சொல்லான்எஞ் ஞான்றும் திறன்அறிந்தான் தேர்ச்சித் துணை. 635

அறன் அறிந்து ஆன்று அமைந்த சொல்லான் - அரசனுல் செய்யப்படும் அறங்களை அறிந்து தனக்கு ஏற்ற கலவியான் நிறைந்து அமைந்த சொல்லை உடையனுய், எஞ்ஞான்றும் நிறன் அறிந்தான் - எக்காலத்தும் வினை செய்யும் நிறங்களை அறிந்தான், தேர்ச்சித துணை - அவர்க்குச் சூழ்ச்சித துணையாம்.

தன் அரசன் சுருங்கிய காலத்தும் பெருகிய காலத்தும் இடைநிகராய காலத்தும் என்பார், 'எஞ்ஞான்றும்' என்றார். 'சொலலான்' என்பதனை 'ஒடு' உருபின் பொருட்டாய ஆனுருபாக்கி உரைப்பாரும் உளர்.

இவை ஐந்து பாட்டானும் அமைச்சரது குணத் தன்மை கூறப்பட்டது. (5)

மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம் யாவுள முன்நிற் பவை. 636

மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு - இயற்கையாகிய நுண்ணறிவைச் செயற்கை ஆகிய நூலறிவோடு உடையராய அமைச்சர்க்கு, அதி நுட்பம் முன் நிற்பவை யா உள - மிக்க நுட்பத்தை யுடைய சூழ்ச்சிகளாய் முன் நிற்பன யாவை யுள?

'மதிநுட்பம்' என்பது பின்மொழிநிலையல். அது தெய்வம்தர வேண்டுதலின் முற் கூறப்பட்டது. 'நூல்' என்பதூடம் 'அதி

துட்பம்' என்பதாலும் ஆகுபெயர். 'அதி' என்பது வடசொல்லுள மிகுதிப்பொருள தருவதோர் இடைச்சொல், அது நிரிக்து துட்பம் என்பதனோடு தொக்கது. முன் நிற்றல் - மாற்றார் சூழ்ச்சியாயின் தம் சூழச்சியால் அறியாதும நிற்றல. இனி, 'அதிதுட்பம்' என்று பாடம ஓதி, அதனின் துட்பம் யா என்று உரைப்பாரும் உளர். அவர் சூழச்சிக்கு இனமாய் முன் சுட்டப்படுவது ஒன்றில்லாமை யும், சுட்டுப் பெயர் ஐக்தாம் உருபு ஏற்றவழி அவ்வாறு நில்லாமை யும் அறிகிலர். பகைவர் சூழ்வனவற்றைத தாம் அறிக்து அழித்து அவர் அறிக்து அழியாதன தாம் சூழவர் என்பது கருத்து.

இதனால் அவரது சிறப்புக் கூறப்பட்டது. (6)

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து இயற்கை அறிந்து செயல். 637

செயற்கை அறிந்தக் கடைத்தும் - நூல் நெறியான் விதீன செய்யும் நிறங்களை அறிந்த இடத்தும், உலகது இயற்கை அறிந்து செயல் - அப்பொழுது நடக்கின்ற உலக இயற்கையை அறிந்து அதனோடு பொருந்தச் செய்க.

'கடைத்தும்' என்புழி, து, பகுதிப்பொருள விகுதி. நூல நெறியே ஆயினும் உலக நெறியோடு பொருநதாதன செய்யற்க, செய்யின் அது பழிக்கும் என, இயற்கை அறிவால் பயன் கூறிய வாறு. (7)

அறிகொன்று அறியான் எனினும் உறுதி உழையிருந்தான் கூறல் கடன். 638

அறி கொன்று அறியான் எனினும் - அறிதது சொல்லியாரது அறிவையும் அழித்து அரசன் தானும் அறியானே ஆயினும், உறுதி கூறல் உழையிருந்தான் கடன் - அக்குற்றம் நோக்கி ஒழி யாது அவனுக்கு உறுதியாயின கூறுதல் அமைச்சனுக்கு முறைமை.

'அறி' என்பது முதனிலைத தொழிற்பெயர். கோறல் - தான் கொளலாறைம மேலும் இகழாது கூறுதல். 'உழையிருந்தான்' எனப் பெயர்கொடுத்தார், 'அமாத்தியர்' என்னும் வடமொழிப் பெயர்க்கும் பொருண்மை அதுவாகலின். உறுதி கூறுக்கால் அவனது இறுதி எய்தல் குறறத்தை உலகம் தன்மேல் ஏற்கும் என்பார், 'கூறல் கடன்' என்றார்.

இவை இரண்டு பாட்டானும் அவர் செயல் கூறப்பட்டது. (8)

பழுதுஎண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்ஓர் எழுபது கோடி யுறும். 639

பக்கத்துள் பழுது எண்ணும் மந்திரியின் - பக்கத்திருந்து பிழைப்ப எண்ணும் அமைச்சன் ஒருவனில், ஓரெழுபது கோடி

தெவ் உறும் - அரசனுக்கு எதிர் நிற்பார் ஒரெழுபதுகோடி பகைவர் உறுவர்.

'எழுபது கோடி' என்றது மிகப்பலவாய எண்ணிற்கு ஒன்று காட்டியவாறு. வெளிப்பட நிற்றலான் அவர் காக்கப்படுவர், இவன் உட்பகையாய் நிற்றலான் காக்கப்படான் என்பது பற்றி இவ்வாறு கூறினர். 'எழுபதுகோடி மடங்கு நல்லர்' என்று உரைப்பாரும், 'எழுபதுகூறு நல்' என்று பாடம் ஓதுவாரும் உளர். (9)

முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர். 640

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர் - செய்யப்படும் வினைகளை முன் அடைவுபட எண்ணிவைத்தும், செய்யுங்கால் அவை முடிவிலவாகவே செய்யாநிறபர், திறப்பாடு இலாதவர் - முடித்தற்கு ஏற்ற கூறுபாடு இல்லாதார்.

அக்கூறுபாடாவன: வந்த வந்த இடையூறுகட்கு ஏற்ற ஏற்ற பரிகாரம் அறிந்து செய்தலும், தாம் நிண்ணிய ராதலுமாம். பிழையாமல் எண்ண வல்லராய் வைததும் செய்து முடிக்க மாட்டாரும் உளர் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் அமைச்சருள விடப்படுவாரது குற்றம் கூறப்பட்டது. (10)

65. சொல் வன்மை

அஃதாவது தான் கருதிய வினை முடியுமாற்றால் அமைச்சியல் நடத்தற்கு ஏதுவாய சொற்களைச் சொல்ல வல்லனதல். மேல் "ஒருதலையாச் சொல்லலும் வல்லது" (குறள். 634) என்றதனையே சிறப்புப் பற்றி விரித்துரைக் கின்றமையின், இது அமைச்சின் பின் வைக்கப்பட்டது.

நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று. 641

நாநலம் என்னும் நலன் உடைமை - அமைச்சர்க்கு இன்றியமையாக் குணமாவது சான்றோரான் நாநலம் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் நலத்தினை உடையராதல், அந்நலம் யாநலத்து உளதாதலும் அன்று - அந்நலம் பிறர்க்கும் பிறநலம் எல்லாவற் றுளளும் அடங்குவதன்றி மிக்கது ஆகலான்.

நாவால் உளதாய நலம் என விரியும். 'இந்நலம் உலகத்தைத் தம் வயத்ததாக்கும் அமைச்சர்க்கு வேறுக வேண்டும்' என்னும் நீதிநூல் வழக்குப்பற்றி 'நாநலம் என்னும் நலன்' என்றும், பிறர்க்கும் இதுபோல் சிறந்தது பிறிது இன்மையான், 'அந்நலம் யாநலத்துளதாதலும் அன்று' என்றும் கூறினர். பிரித்தல்

பொருத்தல் முதலிய தொழில் இல்லாதார்க்கும் இஃது இன்றியமையாததாயபின் அததொழிலாக்குக் கூறவேண்டுமோ என்பதுகருதது. (1)

ஆக்கமும் கேடும் அதனால் வருதலான்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு. 642

ஆக்கமும் கேடும் அதனால் வருதலால் - தம அரசர்க்கும அங்கங்கடகும ஆக்க அழிவுகள தம சொல்லான் வரும் ஆகலான், சொல்லின்கண் சோரவு காதது ஓம்பல-அப்பெற்றிததாய சொல்லின்கண் சோாதலை அமைசசா தம்கண் நிகழாமல் போற்றிக் காக்க.

ஆக்கத்திற்கு ஏதுவாய நற்சொல்லையும், கேட்டிற்கு ஏதுவாய தீச்சொல்லையும், சொலலாதல் ஒப்புமை பற்றி 'அதனால்' என்றார் செய்யுள ஆகலின், சுட்டுபபெயர் முன்வநதது. பிறர் சோர்வு போலாது உயிாகட்கு எல்லாம் ஒருஙகுவருதலால், 'காதது ஓமபல்' என்றார்.

இவை இரணடு பாட்டானும் இஃது இவாக்கு இன்றியமையாது என்பது கூறப்பட்டது. (2)

கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல். 643

கேட்டாாப் பிணிக்கும தகை அவாய் - நட்பாய் ஏற்றுக் கொண்டாரைப் பின் வேறுபடாமல பிணிக்கும குணஙகளை அவாவி, கேளாரும வேடப மொழிவது - மறறைப் பகையாய் ஏறறுக்கொளளாதாரும் பின் அப பகைமை ஒழிநது நட்பினை விருமபும் வண்ணம சொலலப்படுவதே, சொலலாம - அமைச்சர்க்குச சொலலாவது.

அக் குணஙகளாவன வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல, இனிதாதல, விழுப்பயன் தருதல் என்றிவை முதலாயின. அவறறை அவாவுதலாவது சொலலுவான் குறிததனவேயன்றி வேறு நுண்ணுணாவுடையோர் கொளபவறறின் மேலும் நோக்குடைததாதல. 'அவாய்' என்னும செயதென் எச்சம் 'மொழிவது' என்னும் செயப்பாட்டு வினை கொண்டது. இனி 'கேடடார் கேளார்' என்பதறகு 'நூல கேட்டாா கேளாதார்' எனவும், 'வினவியாா வினவாதாா' எனவும் உரைப்பாரும உளர். 'தகையவாய்' என்பதறகு எலலாரும், 'தகுதியையுடையவாய' என்று உரைத்தார், அவர் அப்பனமை, மொழிவது என்னும் ஒருமையோடு இயையாமை நோக்கிறறிலா.

இதனான் சொல்லினது இலக்கணம கூறப்பட்டது. (3)

திறன்அறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனின்ஊங்கு இல். 644

சொல்லைத் திறன் அறிந்து சொல்லுக - அப் பெற்றித்தாய சொல்லை அமைச்சர் தம்முடையவும் கேட்பாருடையவுமாய திறன் களை அறிந்து சொல்லுக, அதனின் ஊங்கு அறனும் பொருளும் இல் - அங்ஙனம் சொல்லுதற்கு மேற்பட்ட அறனும் பொருளும் இல்லை யாதலான்.

அறத்திறங்களாவன: குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல் வம், உருவம், பருவம் என்பனவற்றுள் வரும் தகுதி வேறு பாடுகள். அவற்றை அறிந்து சொல்லுதலாவது அவரருள் தமக் கும் அவர்க்கும் உளவாய ஏற்றதாழ்வுகளை அறிந்து அவ்வம் மரபாற சொல்லுதல். அஃது உலகதோடு ஒட்ட ஒழுகலிலும் இனிமையையும் பயத்தலின் அறனுமிற்று, தம் காரியம் முடித்த லின் பொருளாயிற்று. அறனும் பொருளும் எனக் காரணததைக் காரியமாக்கிக் கூறினார். (4)

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து. 645

சொல்லைப் பிறிது ஓர்சொல் வெல்லும் சொல் இன்மை அறிந்து - தாம் சொல்லக்கருதிய சொல்லைப் பிறிதோர்சொலலாய் வெல்லவலலதொரு சொல இலலாமை அறிந்து, அச்சொலலைச் சொலலுக - பின் அச்சொலலைச் சொலலுக.

பிறிதோர்சொல மாறறரது மறுதலைசசொல். வெல்லுதல் குணங்களான் மிகுதல். அதுவே வெலலச் சொலலுக என்பதாம். இனிப் பிறிதோர்சொல வெலலும் சொல எனச் செவ்வெண்ணாக்கி, ஒததசொல்லும் மிக்க சொலலும்ம உளவாகாமல சொல்லுக என்று உரைப்பாரும் உளர். இது சொறபொருட் பின் வரும நிலை. (5)

வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள. 646

வேட்பத் தாம் சொலலிப் பிறர் சொற்பயன் கோடல்-பிறர்க் குத தாம் சொல்லுங்கால் அவர் பின்னும் கேட்டலை விரும்புமாறு சொல்லி, அவர தமக்குச் சொல்லுங்கால் அசசொல்லின் பயனைக் கொண்டொழிதல, மாட்சியின் மாசு அறறார் கோள - அமைசசிய லுள குறறமும் அறறரது துணிபு.

பிறர்சொற்களுள குறறமுளவாயினும் அவை நோக்கி இக ழார் என்பதாம். வல்லாரை இகழுதல் வல்லுநர்க்குத தகுதி இன்மையின், இதுவும் உடன் கூறறினார்.

இவை மூன்று பாட்டானும் அதனைச் சொல்லுமாறு கூறறப் பட்டது. (6)

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. 647

சொலல் வல்லன் - தான் எண்ணிய காரியங்களைப் பிறர்க்கு ஏற்பச் சொல்லுதல் வல்லனாய், சோவு இலன் - அவை மிகப்பல

வாயவழி ஒன்றினும் சோர்விலனாய், அஞ்சான் அவைக்கு அஞ்சானாயினான் யாவன், அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது அவனை மாறுபாட்டின்கண் வெல்லுதல் யாவர்க்கும் அரிது.

ஏற்பச்சொல்லுதல் அவர்க்கு அவை காரியமல்லவாயினும் ஆம் எனத் துணியும்வகை சொல்லுதல். சோர்வு - சொல்ல வேண்டுவதனை மறப்பான் ஒழிதல்.

இம் மூன்று குணமும் உடையானை மாற்றாராய்ப் பிரித்தல் பொருத்தல் செய்து வெல்வாரில்லை என்பதாம். (7)

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது சொல்லுதல் வல்லார்ப் பெறின். 648

தொழில் நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப்பெறின் - சொல்லப்படும் காரியங்களை நிரல்படக் கோத்து இனிதாகச் சொல்லுதல் வல்லாரைப் பெறின், ஞாலம் விரைந்து கேட்கும் - உலகம் அவற்றை விரைந்து ஏற்றுக்கொள்ளும்.

'தொழில்' சாதியொருமை. நிரல்படக் கோத்தல்: முன் சொல்வனவும் பின்சொல்வனவும் அறிந்து அம்முறையே வைத்தல். இனிதாதல் கேட்டார்க்கு இன்பம் பயத்தல். "சொல்லுதல் வல்லான் நூறாயிரவருள் ஒருவன்" என்ற வடமொழி பற்றி, 'பெறின்' என்றார். ஈண்டும் கேட்டல், ஏற்றுக்கோடல்.

இவை இரண்டு பாட்டானும் அவ்வாற்றால் சொல்லுதல் வல்லாரது சிறப்புக் கூறப்பட்டது. (8)

பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற சிலசொல்லல் தேற்றா தவர். 649

மாசு அற்ற சில சொல்லல் தேற்றாதவர் - குற்றமற்றன வாய்ச் சிலவாய வார்த்தைகளை அவ்வாற்றால் சொல்லுதலை அறியாதார், பல சொல்லக் காமுறுவர் - பலவாய வார்த்தைகளைத் தொடுத்துச் சொல்ல விரும்புவர்.

குற்றம் மேற்சொல்லிய குணங்கட்கு மறுதலையாயின. இடைவிடாது பல சொல்லுதலையும் சொல்வன்மை என்று விரும்புவாரும் உளர் அவர் அவ்வாறு சொல்ல மாட்டாதாரே, வல்லார் அது செய்யாரென யாப்புறுப்பார், 'மன்ற' என்றார். (9)

இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர் கற்றது உணர விரித்துரையா தார். 650

கற்றது உணர விரித்து உரையாதார் - கற்றுவைத்த நூலைப் பிறரறியும் வண்ணம் விரித்துரைக்கமாட்டாதவர், இணர் ஊழத்தும் நாறா மலர் அனையர் - கொத்தின்கண்ணே மலர்ந்துவைத்தும் நாறாத பூவையொப்பர்.

செவ்விபெற மலர்ந்துவைத்தும் நாற்றம் இல்லாத பூச் சூடப் படாதவாறுபோல தூலிக் கறுவுவைத்தும் சொல்லமாட்டாதார் நன்கு மதிக்கப்படார் என்றமையின், இது தொழில் உவமம ஆயிற்று.

இவை இரண்டு பாட்டானும் அது மாட்டாதாரது இழிபு கூறபபட்டது. (10)

66. வினைத் தூய்மை

அஃதாவது செய்யப்படும் வினைகள பொருளேயன்றி அறமும் புகழும் பயாது நல்ல ஆதல். சொல்லேயன்றிச் செயலும் நன்ருக வேண்டும் என்கின்றமையின், இது சொல் வன்மையின் பின் வைக்கபபட்டது.

துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும். 651

துணை நலம் ஆக்கம் தரூஉம - ஒருவனுக்குத் துணையது நன்மை செல்வம் ஒன்றனையும் கொடுக்கும், வினை நலம் வேண்டிய எல்லாம் தரும - அவ்வளவன்றி வினையது நன்மை அவன் வேண்டியன யாவற்றையும் கொடுக்கும்.

'வேண்டிய எல்லாம்' என்றது இம்மைக்கண் அறம், பொருள, இன்பம் முதலாயவற்றையும், மறுமைக்கண் தான் விரும்பிய பதங்களையும.

இதனுள் காணப்படும் துணை நன்மையினும், கருதப்படும வினைநன்மை சிறந்தது என வினைத் தூய்மையது சிறப்புக் கூறப் பட்டது. (1)

என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. 652

புகழொடு நன்றி பயவா வினை - தம அரசனுக்கு இம்மைக் கண் புகழும் மறுமைக்கண் அறமும் பயவாத வினைகளை, என்றும ஒருவுதல் வேண்டும் - அமைசசாக்கு எக்காலத்தும் ஒழிதல வேண்டும்.

பெருகல், சுருங்கல், இடைநிற்றல் என்னும் நிலைவேறுபாடு காலத்தான் வருதலின் 'என்றும்' என்றார். வேண்டும் என்பது ஈண்டு இன்றியமையாது என்னும் பொருட்டு. (2)

ஒஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆகுதும் என்னும் அவர். 653

ஆகுதும் என்னும் அவர் - மேலாகக்கடவேம் என்று கருதுவார், ஒளிமாழகும் வினை செய் ஒதல்வேண்டும் - தம் ஒளிகெடுதற்குக் காரணமாய வினையைச் செயதலைத் தவிர்க.

'ஓஓதல் வேண்டும்' என்பது ஒரு சொல் நீர்மைத்து. ஓவுதல் என்பது குறைந்து நின்றது. ஒளி: தாம் உளகாலத்து எல்லாரானும் நன்கு மதிக்கப்படுதல். 'செய்' என்னும் முதனிலைத் தொழில் பெயர் மாற்றப்பட்டது. அன்றிச் செய்வினை என வினைத்தொகை யாக்கியவழிப் பொருளின்மை அறிக. ஒளி கெடவருவது ஆக்கம் அன்று என்பதாம். (3)

இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்குஅற்ற காட்சி யவர். 654

இடுக்கண்படினும் இளிவந்த செய்யார் - தாம் இடுக்கணிலே படவரினும், அது தீர்தற்பொருட்டு முன் செய்தார்க்கு இளிவந்த வினைகளைச் செய்யார், நடுக்கு அற்ற காட்சியவர்-துளக்கம் அற்ற தெளிவினை உடையார்.

சிறிதுபோழ்தில் கழிவதாய இடுக்கண் நோக்கி, எஞ்ஞான்றும் கழியாத இழிவு எய்தற்பாலது அன்று என்பதூஉம் அஃது எய்தினாலும் வருவது வரும் என்பதூஉம் தெளிவர் ஆகலான், 'செய்யார்' என்றார். (4)

எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்று அன்ன செய்யாமை நன்று. 655

எற்று என்று இரங்குவ செய்யற்க - யான் செய்தது எத்தன்மைத்து என்று பின் தானே இரங்கும் வினைகளை ஒருகாலும் செய்யாதொழிக, செய்வானேல் மற்று அன்ன செய்யாமை நன்று - அன்றி ஒருகால் மயங்கி அவற்றைச் செய்யுந்தன்மையினான் ஆயின், பின் இருந்து அவ் இரங்கலைகளைச் செய்யாதொழிதல் நன்று.

'இரங்குவ' என முன்வந்தமையின் பின் 'அன்ன'வெனச் சுட்டி ஒழிந்தார். அவ்வினைகளது பன்மையான், இரக்கமும் பலவாயின. அச்செயற்குப் பின்னிருந்து இரங்குவனாயின், அது தீரும் வாயில் அறிந்திலன் எனவும், திடபமிலன் எனவும், பயனல்லன செய்கின்றான் எனவும் தன்பழியைத் தானே தூற்றுகின்றான் எனவும், எல்லாரும் இகழ்தலின் 'பின் இரங்காமை நன்று' என்றார். இதுவும், வினைத்தூயார் செயலாகலின் உடன் கூறப்பட்டது. 'பின் தொடர்தற்குச் செய்வானாயின் அவ்வப்பாலவனவும் செய்யாமை நன்று' எனப் பிறரெல்லாம் இயைபுஅற உரைத்தார். (5)

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 656

ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் - தன்னைப் பயந்தாளது பசியை வறுமையால் கண்டு இரங்கும் தன்மையனாயினான் எனினும், சான்றோர் பழிக்கும் வினை செய்யற்க - அது சுட்டி அறிவுடையார் பழிக்கும் வினைகளை ஒருவன் செய்யாதொழிக.

'இறந்த மூப்பினராய இருமுதுகுரவரும் கற்புடை மனைவியும் குழவியும் பசியான் வருந்தும் எல்லிக்கண் தீயன பலவுஞ் செய் தாயினும் புறந்தருக' என்னும் அறநூற் பொதுவிதி பொருள நூல் வழி ஒழுகுதலும், அரசர் தொழிற்கு உரியராதலும், நன்கு மதிக் கற்பாடும் உடைய அமைச்சர்க்கு எய்தாமைபற்றி, இவ்வாறு கூறினர்.

இவை ஐந்து பாட்டானும் 'பாவமும் பழியும் பயக்கும் வினை செய்யற்க' என்பது கூறப்பட்டது. (6)

பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர் கழிநல் குரவே தலை. 657

பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் - சாலாதார் தீய வினைகளைச் செய்து அதனால் பழியைத் தம்மேற்கொண்டு பெற்ற செல்வதைவிட, சான்றோர் கழி நல்குரவே தலை - அதுமேற்கொளளாத சான்றோர் அனுபவிக்கும் மிக்க நல்குரவே உயர்ந்தது.

நிலையாத செல்வத்தின் பொருட்டு நிலையின பழியை மேற் கோடல் சாலபோடு இயையாமையின், 'சான்றோர் கழி நல்குரவே தலை' என்றார். (7)

கடிந்த கடிந்துஓரார் செய்தார்க்கு அவைதாம் முடிந்தாலும் பீழை தரும். 658

கடிந்த கடிந்து ஓரார் செய்தார்க்கு - நூலோர் கடிந்த வினை களைத் தாமும் கடிந்தொழியாது பொருள கோக்கிச் செய்த அமைச்சர்க்கு, அவைதாம் முடிந்தாலும் பீழை தரும் - அவை தூய அன்மையின் முடியா, ஒருவாற்றான் முடியினும் பின் துன்பத்தையே கொடுக்கும்.

முடிதல: கருதிய பொருள தருதல். பீழை தருதலாகிய பொருளின் தொழில அதற்குக் காரணமாய வினைகள மேல் ஏற்றப்பட்டது, (8)

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும் பிற்பயக்கும் நற்பா லவை. 659

அழக் கொண்ட எல்லாம் அழப் போம் - ஒருவன் தீவினை களைச் செய்து பிறர் இரங்கக் கொண்ட பொருளெல்லாம் இம்மை யிலே அவன் தான் இரங்கப் போகாநிற்கும், நற்பாலவை இழப் பினும் பிற்பயக்கும் - மற்றைத தூய வினையான் வந்த பொருள கள் முன் இழந்தானையினும் அவனுக்குப் பின்னர் வந்து பயன் கொடுக்கும்.

'பின்' எனவே, மறுமையும் அடங்கிற்று. பொருள்களான் அவற்றிற்குக் காரணமாய வினைகளது இயல்பு கூறியவாறு. (9)

**சலத்தால் பொருள்செய்தே மாக்கல் பசுமட்
கலத்துள்நீர் பெய்துஇரீஇ யற்று. 660**

சலத்தால் பொருள செய்து ஏமாக்கல் - அமைச்சை நீய வினைகளாற் பொருளபடைத்து அதனை அரசனுக்கு ஏமஞ் செய்தல், பசுமட்கலத்துள நீர பெய்து இரீஇயற்று பசுமட்கலத் துளளே நீரைப் பெய்து அதற்கு ஏமஞசெய்தற்றொழிலுவமை.

முன் ஆக்கம பயப்பனபோல நோன்றிப் பின் அழிவே பயத்தலால், அவை 'சலம்' எனப்பட்டன. 'ஏமமாக்கல்' என்பது ஏமாக்கல் என்று ஆயிற்று. ஏமஞ்சுத அடையப் பணறுதல் என்றவாறு. இரந்துதல் - நெடுங்காலம் இரப்பச் செய்தல். அரசனும பொருளும் சேரப்பெறாம் என்பதாம். பிற ரெலலாம், 'ஏமாந்தல்' என்று பாடமோதி, அதற்கு மகிழ்தல் எனறும், 'இரீஇயற்று' என்பதற்கு வலுத்தாற்போல்வ எனறும், உலகத்தார், அவர, அவை தன்னினும் பிறிதின் வினபுமாய் உவமையிலக்கணத்தோடு மாறுகோடல் நோக்கிறறிலர.

இவை நான்கு பாட்டானும் அதற்குக் காரணம கூறப் பட்டது. (10)

67. வினைத் திட்பம்

அஃதாவது அந்த நான வினைமுடிப்பான வரும் வேலனவ ஞரா மனததிண்மை. அதிகார முயறசமபும இதனை வினைபகரும்.

**வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திடபம
மற்றைய எல்லாம் பிற. 661**

வினைதிடபம் என்பது ஒருவன் மனததிடபம - வினைசெயபதற கண் திணணமை என்று சொலலப்படுவது அதனை முடிதத்தறியா ஒருவன் மனததினது திணணமை, மறறையவெலலாம பிற - அஃது ஒழிதத எலலாம அதற்குத திணணமை என்று சொலலப்படா.

ஒழிதத தனவாவன பணம, அரண், நட்பு முதலியவறறின திணணமைகள. அவையும அதற்கு வேணடுவனவாய் இணடாக லின், 'மறறையவ' என்றும, வேணடினும அஃது இவையிற் பலவிலவாகலின் 'பிற' என்றும கூறினார.

இதனால் வினைதிடபமாவது இனனது என்பது கூறப் பட்டது. (1)

**ஊறுஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள். 662**

ஆய்ந்தவர் கோள - முன் நீதிநூல ஆராய்ந்த அமைசசரது துணிபு, ஊறு ஒரால் உற்றபின் ஒல்காமை இவ இரணடின ஆறு

என்பர் - பழுதுபடும் வினைகளைச் செய்யாமையும் செய்யும் வினை தெய்வத்தான் பழுதுபட்ட வழி அதற்குத் தளராமையும் ஆகிய இவ் இரண்டன் வழி என்பர் நூலோர்.

தேவர்க்கும் அசுராக்கும் அமைச்சுப் பூண்ட வியாழ, வெள்ளி களது துணிபு தொருததுப் பின் நீதி நூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின், ஈண்டு வினைத தூய்மையும் உடன் கூறினார். உறுதலுடையதனை முன் 'ஊறு' என்றமையின், 'உற்றபின்' என்றும், இவ் இரண்டின்கண்ணே பட்டது என்பார் 'இரண்டின் ஆறு' என்றும் கூறினார். 'ஊறு ஓரார்' என்று பாடம ஓதுவாரும் உளர், அஃது 'ஒல்கானம' என்னும் எண்ணோடும் 'இரண்டு' என்னும் தொகையோடும் இயையானம அவர் அறிந்திலர். (2)

கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக்கொட்கின்
எற்றா விழுமம் தரும். 663

கடைக் கொட்கச் செய்தக்கது ஆண்மை - செயப்படும் வினையை முடிவின்கண் புலப்படும் வகை முன்னெல்லாம் மறைததுச் செய்வதே திட்பமாவது, இடைக் கொட்கின் எறறா விழுமம் தரும் - அங்ஙனமன்றி இடையே புலப்படுமாயின் அப் புலப்பாடு செயவானுக்கு நீங்காத இடும்பையைக் கொடுக்கும்.

மறைததுச் செயவதாவது அங்கம் ஐந்தும எண்ணியவாறு, பிறரறியாமலும், தான் அறிநததூஉம, தன் இங்கிதம், வடிவு, செயல, சொறகளான் அவர் உய்ததுணராமலும் அடக்கிச் செய்தல். அத திட்பம், ஆண் தன்மையான் வருதலின் 'ஆணமை' எனப்பட்டது. எற்றா விழுமமாவன' பகைவர் முன் அறிநது அவ் வினையை விலக்குதல, செய்வானை விலக்குதல் செயவா ஆகலின், அவற்றான் வருவன. விழுமம் - சாதிப் பெயர்.

இவை இரண்டு பாட்டானும் அதனது பகுதி கூறப்பட்டது.(3)

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம செயல். 664

சொல்லுதல் யார்க்கும் எளிய - யாம இவ்வினையை இவ வாற்றால செய்தும் என நிரல்படச் சொல்லுதல் யாவர்க்கும எளிய, சொல்லியவண்ணம் செயல அரியவாம் - அதனை அவ வாற்றானே செய்தல் யாவாக்கும அரியவாம.

சொல்லுதல, செயல என்பன சாதிப்பெயா. அரியவற்றை எண்ணிச் சொலலுதல் திட்பமில்லாதாாக்கும் இயறலின், 'எளிய' என்றார்.

இதனான் அதனது அருமை கூறப்பட்டது. (4)

வீறுஎய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறுஎய்தி உள்ளப் படும். 665

வீறு எய்தி மாண்டார் வினைத்திட்பம் - எண்ணத்தால் சிறப்பெய்திப் பிற இலக்கணங்களானும் மாட்சிமைப்பட்ட அமைச்சரது வினைத்திட்பம், வேந்தன்கண் ஊறு எய்தி உளளப்படும் - வேந்தன் கண்ணே உறுதலை எய்தலான், எல்லாரானும் நன்கு மதிக்கப்படும்.

வேந்தன்கண் ஊறு எய்தல் - எடுத்த வினை அதனான் முற்றுப் பெற்றுச் செலவரும் புகழும் அவன் கண்ண ஆதல். 'எய்தலான்' என்பது திரிந்து நின்றது. உளளல் - மதிப்பான் மறவாமை.

இதனான் அதன் சிறப்புக் கூறப்பட்டது. (5)

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். 666

எண்ணிய எண்ணியாங்கு எய்துப - தாம் எய்த எண்ணிய பொருளகள் எல்லாவற்றையும் அவ்வெண்ணியவாறே எய்துவர், எண்ணியார் திண்ணியராகப் பெறின் - எண்ணியவர் அவற்றிற்கு வாய்ப்பாகிய வினைக்கண் திண்மையுடையராகப் பெறின்.

எளிதின் எய்துப என்பார், 'எண்ணியாங்கு எய்துப' என்றார். அவர் அவ்வாறல்லது எண்ணாமையின் திண்ணிய ராகவே வினை முடியும், அது முடிய, அவையாவையும் கைகூடும் என்பது கருத்து.

இதனான் அஃதுடையார் எய்தும் பயன் கூறப்பட்டது. (6)

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி யன்னார் உடைத்து 667

உருள் பெருந்தேர்க்கு அச்சு ஆணி அன்னார் உடைத்து - உருளா நின்ற பெரிய தேர்க்கு அச்சின் கண் ஆணிபோல வினைக்கண் திண்ணியாரையுடைத்து உலகம், உருவு கண்டு எள்ளாமை வேண்டும் - அதனால் அவரை வடிவின் சிறுமை நோக்கி இகழ்தலை யொழிக.

சிறுமை 'எள்ளாமை வேண்டும்' என்பதனாலும், உவமையானும் பெற்றாம். அச்சு - உருள் கோத்த மரம். ஆணி, உருள் கழலாது அதன் கடைக்கண் செருகுமது. அது வடிவாற் சிறிதாயிருந்தே பெரிய பாரத்தைக் கொண்டுயக்கும் திட்பம் உடைத்து, அதுபோல, வடிவாற் சிறியராயிருந்தே பெரிய வினைகளைக் கொண்டுயக்கும் திட்பம் உடைய அமைச்சரும் உளர்; அவரை அத்திட்பம் நோக்கி அறிந்துகொளக என்பதாம்.

இதனான் அவரை அறியுமாறு கூறப்பட்டது. (7)

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல். 668

கலங்காது கண்ட வினைக்கண் - மனந்தெளிந்து செய்வதாகத் துணிந்த வினையின்கண், துளங்காது தூக்கம் கடிந்து செயல் - பின் அசைதலின்றி நீட்டித்தலையொழிந்து செய்க.

கலங்கியவழி ஒழிவதும் செய்வதுபோல் தோன்றுமாகலின், தெளிந்து பலகால் ஆராயந்து தாம் செய்வதாக ஓர்த்த வினையை, 'கலங்காது கண்டவினை' என்றார். துளங்காமை - திட்பம் உடைமை. (8)

துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை. 669

துன்பம் உற வரினும் - முதற்கண் மெய்ம்முயற்சியால் தமக்குத் துன்பம் மிக வருமாயினும், இன்பம் பயக்கும் வினை துணிவு ஆற்றிச் செய்க - அது நோக்கித் தளராது முடிவின்கண் இன்பம் பயக்கும் வினையைத் திட்பமுடையராயச் செய்க.

துணிவு - கலங்காமை. அஃதுடையாராக்கல்லது கணிகமாய முயற்சித் துன்பம்நோக்காது நிலையுதலுடைய பரிணாம இன்பத்தை நோக்கிச் செய்தல் கூடாமையின், 'துணிவாற்றிச் செய்க' என்றார்.

இவை இரண்டு பாட்டானும் அவர் வினைசெய்யுமாறு கூறப்பட்டது. (9)

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு. 670

வினைத்திட்பம் வேண்டாரை - வினைத்திட்பத்தை இது நமக்குச் சிறந்ததென்று கொள்ளாத அமைச்சரை, எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் - ஒழிந்த திட்பங்கள் எல்லாமுடையராய விடத்தும், வேண்டாது உலகு - ஈன்கு மதியார் உயர்ந்தோர்.

மனத்தின்கண் திட்பமில்லாதாரைக்குப் பட்ட, அரண், நட்பு முதலியவற்றின் திட்பங்களெல்லாம் உளவாயினும், வினை முடியாதாம், ஆகவே, அவையெல்லாம் கெடும் என்பதுபற்றி 'உலகு வேண்டாது' என்றார்

இதனான் வினைத்திட்பமில்லாதாரது இழிபு கூறப்பட்டது.(10)

68. வினை செயல் வகை

அஃதாவது அத்திட்பமுடைய அமைச்சன் அவ் வினையைச் செய்யும் திறம். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது. 671

சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல் - விசாரத்திற்கு எல்லையாவது விசாரிக்கின்றான் இனி இது தப்பாது என்னும் துணிவினைப் பெறுதல், அத் துணிவு தாழ்ச்சியுள் தங்குதல் தீது - அங்ஙனம் துணிவுபெற்ற வினை பின் நீட்டிப்பின் கண் தங்குமாயின், அது குற்றமுடைத்து.

சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல்' எனவே, துணிவு எய்தும் அளவும் சூழவேண்டும் என்பது பெற்றாம். பின்னர், 'துணிவு' ஆகுபெயர். நீட்டிப்பு செய்யுங் காலததுச் செய்யாமை. அஃதுள் வழிக் காலக்கழிவாகலானும், பகைவர் அறிநது அழிததலானும் முடியாமையின், அதனை 'தீது' என்றார். (1)

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க தூங்காது செய்யும் வினை. 672

தூங்கிச் செயற்பால தூங்குக - நீட்டித்துச் செய்யும் பகுதிய வாய வினைகளுள நீட்டிக்க, தூங்காது செய்யும் வினை தூங்கற்க-நீட்டியாது செய்யும் வினைகளுள நீட்டியாது ஒழிக. இரு வழியும் இறுதிக்கண் தொக்க ஏழாவது விரிக்கப் பட்டது.

இருவகை வினைகளும வலியானும காலத்தானும் அறியப படும். மாறிச செயின், அவை வாயா எனபது கருதது. மேல் 'தூங்காமை' என்றார் (குறள 383) ஈண்டதனைப் பகுததுக் கூறினார்.

இவை இரணடு பாட்டானும பொதுவகையால வினை செய்யுங் கிறம் கூறபபட்டது. (2)

ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்காற் செல்லும்வாய் நோக்கிச் செயல். 673

ஒல்லும வாய் எல்லாம வினை நன்று - வினை செய்யுங்கால இயலுமிடததெல்லாம போராற செயதல நனறு, ஒல்லாக்கால் செல்லும வாய நோக்கிச செயல-அஃது இயலாவிடதது ஏனை மூன்று உபாயததுளளும அது முடிவதோர உபாயம நோக்கிச செய்க.

இயலுமிடம - பகையின் தான வலியனாய காலம். அச் காலததுத தணடமே நனறு என்றார, அஞசுவது அதறகே யாகலின். இயலா இடம ஒதத காலமும மெலிய காலமும. அவ் இரணடு காலததும சாமபேத தானங்களுள அது முடியும உபாயததாற் செயக என்றார, அவை ஒன்றறகொன்று வேறுபாடுடைய வேனும் உடமபடுததறபயததான் தமமுள ஒக்கும ஆகலின்.

இதனான் வலியான், ஒப்பான், மெலியான் என நிலை மூவகைதது என்பதூஉம், அவற்றுள வலியது சிறப்பும் கூறப் பட்டன. (3)

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால் தீயெச்சம் போலத தெறும். 674

வினை பகை என்ற இரண்டின் எச்சம் - செய்யத் தொடங்கிய வினையும் களையத தொடங்கிய பகையும் என்று சொல்லப்பட்ட இரண்டனது ஒழிவும், நினையுங்கால தீயெச்சம்போலத தெறும்-ஆராயுங்கால தீயினது ஒழிவுபோலப் பின் வளர்ந்து கெடுக்கும்.

'இனி இக்குறை என் செய்வது?' என்று இகழ்ந்தொழியற்க, முடியச் செய்க என்பதாம். பின் வளர்தல் ஒப்புமை பற்றிப் பகையெச்சமும் உடன் கூறினர்.

இதனுள் வலியான் செய்யுந் திறம் கூறப்பட்டது. (4)

பொருள் கருவி காலம் வினை இடனோடு ஐந்தும் இருள் தீர எண்ணிச் செயல். 675

பொருள் கருவி காலம் வினை இடனோடு ஐந்தும் - வினை செய்யுமிடத்துப் பொருளும் கருவியும் காலமும வினையும் இடனுமாகிய இவ் ஐந்தினையும், இருள் தீர எண்ணிச் செயல - மயக்கம் அற எண்ணிச் செய்க.

எண்ணொடு, பிற வழியும் கூட்டப்பட்டது. பொருள்-அழியும் பொருளும் ஆகும் பொருளும். கருவி - தன் தானையும் மாற்றார் தானையும். காலம் - தனக்கு ஆகுங் காலமும் அவர்க்கு ஆகுங் காலமும். வினை-தான் வல்ல வினையும் அவர் வல்ல வினையும். இடம்-தான் வெல்லும் இடமும் அவர் வெலலும் இடமும். இவற்றைத் தான் வென்றியெய்தும் திறதகில் பிழையாமல் எண்ணிச் செய்க என்பதாம். (5)

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும் படுபயனும் பார்த்துச் செயல். 676

முடிவும் - வினை செய்யுங்கால் அது முடிதற்குளதாம் முயற்சியும், இடையூறும் - அதற்கு வரும் இடையூறும், முற்றியாங்கு எய்தும் படுபயனும் - அது நீங்கி முடிந்தால் தான் எய்தும் பெரும் பயனும், பார்த்துச் செயல் - சீர் தூக்கிச் செய்க.

முடிவு: ஆகுபெயர். முயற்சி இடையூறுகளது அளவின் பயனது அளவு பெரிதாயின் செய்க என்பதாம். (6)

செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை உள்ளறிவான் உள்ளங் கொளல். 677

செய்வினை செய்வான் செயல்முறை - அவ்வாற்றால் செய்யப்படும் வினையைத் தொடங்கினன் செய்யும் முறைமையாவது, அவ்வினை உள அறிவான் உள்ளம் கொளல் - அதனது உளப் பாட்டினை அறிவான் கருத்தினைத தான் அறிதல.

'அவ்வாறு' என்றது பொருள முதலிய, எண்ணலியும் முடிவு முதலிய தூக்கலியும். உள் அறிவான் - முன்செய்து போந்தவன். அவன் கருத்து - அவன் செய்து போந்த உபாயம். அதனை யறியவே, தானும் அதனால் செய்து பயன் எய்தும் என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் ஒப்பான் செய்யுந் திறம் கூறப்பட்டது. (7)

வினையான் வினை ஆக்கிக் கோடல் நனைகவுள் யானையால் யானையாத் தற்று. 678

வினையான் வினை ஆக்கிக்கோடல் - செய்கின்றவினையாலே அன்னது பிறிதும் ஓர்வினையை முடித்துக்கொளக, நனை கவுள யானையால யானை யாத்தற்று - அது மதத்தான் நனைந்த கபோலத்தினையுடைய யானையாலே அன்னது பிறிதுமோர் யானையைப் பிணித்ததற்கு ஒக்கும்.

பிணித்ததற்கு அருமை தோன்ற 'நனைகவுள' என்பது பின்னும் கூட்டப்பட்டது. தொடங்கிய வினையானே பிறிதும் ஓர் வினையை முடித்ததற்கு உபாயம் ஆமாறு எண்ணிச் செய்க; செய்யாவே, அமமுறையான் எலலா வினையும் எளிதில முடியும் என்பதாம். (8)

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே ஒட்டாரை ஒட்டிக் கொளல். 679

நட்டார்க்கு நலல செயலின் விரைந்ததே - வினை செய்வானலை தன்நட்டாராக்கு இலியவற்றைச் செய்தலினும் விரைந்து செய்யப்படும், ஒட்டாரை ஒட்டிக் கொளல - தன் பகைவரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாக்கிக் கோடல.

அவ் வினை வாயத்தற்பயனதவாய இவ இரண்டும் பகைவாக்குத தன் மெலிவு புலஞவதன்முன்னே செயக என்பார், 'விரைநதது' என்றார். விரைநது செய்யப்படுவது என்றவாறு. வினைசெய்யும திறமாகலின் பகைவரோடு ஒட்டாயிற்று. தன் ஒட்டார் பிறருட் கூடாமல மாற்றிலவதல எனினும் அமையும். (9)

உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின் கொள்வர் பெரியார்ப் பணிந்து. 680

உறை சிறியார - ஆளும் இடஞ் சிறியராய அமைச்சர், உள் நடுஙகல் அஞசி - தமமின் வலியரால எதிரநதவழித் தம் பகுதி நடுங்கலை அஞசி, குறை பெறின் பெரியார் பணிநதுகொளவார் - அக்நிலைக்கு வேண்டுவதாய சகது கூடுமாயின், அவரைத தாழ்ந்து அதனை ஏற்றுக்கொளவர்.

இடம் - நாடும அரணும். அவற்றது சிறுமை ஆள்வார் மேல ஏற்றப்பட்டது. மெலியாரோடு சகைக்கு வலியார் இயைதல அரிதாகலின் 'பெற்ன்' என்றார். அடியிலே மெலியாராயினுஞ் சகும பகுதியும் அஞசி நீங்கின் முதலொடும் கெடுவராகலின், அது வாராமல சிறிது கொடுதலும் சகதியை ஏற்றுக்கொளக என்பதாம். பணிதல் மானமுடையாக்குக் கருதது அன்மையின் 'கொளவர்' என உலகியலால கூறினார.

இவை மூன்று பாட்டானும் மெலியான்-செய்யும் திறம் கூறப் பட்டது. (10)

69. தூது

அஃதாவது சந்தி விக்கிரகங்கட்கு வேற்று வேந்த ரிடைச் செல்வாரது தன்மை. அவ் இரண்டனையும் மேல் 'வினைசெயல் வகை' என்றமையின், இஃது அதன்பின் வைக் கப்பட்டது. தான் வருகதுக் கூறுவான், கூறியது கூறு வான் எனத தூது இரு வகைப்படும். அவருள் முன்னோன் அமைச்சனெடு ஒப்பான் ஆகலானும, பின்னோன் அவனில் காற்கூறு குணம் குறைந்தோன் ஆகலானும் இஃது அமைச் சியலாயிற்று.

அன்புஉடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்துஅவாம்
பண்புஉடைமை தூதுஉரைப்பான் பண்பு 681

அன்பு உடமை தன் சுற்றத்தாமாட்டு அன்புடையனுதலும், ஆன்ற குடிப்பிறத்தல் - அமைச்சுப் பூணற்கு அமைந்த குடியின் கண் பிறத்தலும், வேந்து அவாம் பண்பு உடைமை - அரசர்சாதி விரும்பும் பண்புடையன் ஆதலும், தூது உரைப்பான் பண்பு-தூது வார்த்தை சொல்வானுக்கு இலக்கணம்.

முன்னைய இரண்டனுலும், முறையே சுற்றத்தார்க்கும் தீங்கு வராமல் தான் பேணியொழுகலும், தன் முன்னோ தூதியல கேட்டறிதலும் பெற்றும். வேந்து அவாம்பண்பு உடைமை முன்னா மன்னரைச் சேர்ந்தொழுகற்கண் பெறப்படும். அதனுல் வேற்றரச ரும் அவன் வயத்த ராதல் பெறுதும். (1)

அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுஉரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று 682

அன்பு - தம் அரசன் மாட்டு அன்புடைமையும், அறிவு-அவ னுக்கு ஆவன அறியும் அறிவுடைமையும், ஆராய்ந்த சொலவன்மை - அவற்றை வேற்றரசரிடைச் சொல்லுங்கால் ஆராய்ந்து சொல்லு தல் வன்மையும் என, தூது உரைப்பார்க்கு இன்றியமையாத மூன்று - தூதுரைக்க உரியார்க்கு இன்றியமையாத குணங்கள மூன்று.

ஆராய்தல் அவற்றிற்கு உடமபடுஞ் சொற்களைத் தெரிதல். 'இன்றியமையாத மூன்று' எனவே, அமைச்சர்க்குச் சொலலிய பிறகுணங்களும் வேண்டும் என்பது பெற்றும்.

இவை இரண்டுபாட்டானும் இருவகையார்க்கும் பொதுஇலக் கணம் கூறப்பட்டது. (2)

நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி விளையுரைப்பான் பண்பு. 683

வேலாருள் வென்றி வினை உரைப்பான் பண்பு - வேலையுடைய வேற்றரசரிடைச் சென்று தன் அரசனுக்கு வென்றிதரும் வினையைச் சொலலுவானுக்கு இலக்கணமாவது, நூலாருள் நூல் வல்லன் ஆருதல் - நீதிநூலிலுணர்ந்த அமைச்சரிடைத் தான் அந்நூலில் வலலதை.

கோறல் மாலியர் என்பது தோன்ற 'வேலார்' என்றும், நூதுவினை இரண்டும் அடங்க 'வென்றிவினை' என்றும் கூறினர். வல்லதை-உணர்வு மாதகிர முடையராய அவர் முன் வருக்கும் ஆறறல் உடையனதல். (3)

அறிவுஉரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன் செறிவுடையான் செல்க வினைக்கு 684

அறிவு - இயற்கையாகிய அறிவும், உரு - கண்டார் விரும்பும் தோற்றப் பொலிவும், ஆராய்ந்த கல்வி - பலரோடு பலகாலும் ஆராயப்பட்ட கலவியும் என, இம்மூன்றன் செறிவு உடையான்-நன்கு மதிதகதற்கு ஏதுவாய இம் மூன்றனது கூட்டத்தை உடையான், வினைக்குச் செலக - வேறறு வேந்தரிடைத் தூது வினைக்குச் செலக.

இம் மூன்றும் ஒருவன்பாற் கூடுதல் அரிது அகலின் 'செறிவுடையான்' என்றார். இவற்றுள் நன்கு மதிப்புடையனவே, வினை இனிது முடியும் என்பது கருத்து. (4)

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி நன்றி பயப்பதாம் தூது. 685

தொகச் சொலலி - வேற்றரசாக்குப் பல காரியங்களைச் சொச்சலும் வழிக் காரணவகையால தொகுகதுச் சொல்லிடம். தூவாத நீக்கி நகச் சொலலி இன்னுத காரியங்களைச் சொல் லுமவழி வெப்ய சொற்களை நீக்கி இனிய சொறகளான் மனமகிழச் சொல்லியும், கன்றி பயப்பது நூதாம் - நன்னரசனுக்கு நன்மையைப் பயப் பவனே தூதலவான்.

பலகாரியங்கட்கு உடம்படாதார் பரம்பரையான் அவற்றிற் குக் காரணமாயது ஒன்றைச்சொல்ல, அதலால அவை வினாயு மாறு உய்ததுணர அருமையானும் சுருக்கத் தானும் உடம்படுவர்; இன்னுதவறிற்கு உடம்படாதார் தம் மனம் மகிழச்சொல்ல, அவ் இன்னுமை காணது உடம்படுவ ராதலின், அவ் இருவாற்றானும் தன் காரியம் தவருமல முடிக்கவல்லான் என்பதாம். எண்ணும் மைகள, விகாரதகால் தொக்கன. (5)

கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால் தக்கது அறிவதாம் தூது 686

கற்று - நீதி நூல்களைக் கற்று, செலச் சொல்லி - தான் சென்ற கருமத்தைப் பகைவேந்தர் மனங்கொளச் சொலலி, கண்

அஞ்சான் - அவர் செயிர்த்து நோக்கின் அந்நோக்கிற்கு அஞ்சாது, காலத்தால் தக்கது அறிவது தூதாம் - காலததோடு பொருந்த அது முடிக்கத் தக்க உபாயம் அறிவானே தூதனாவான்.

அவ் உபாயம் அறிதற்பொருட்டு நீதி நூற்கலவியும், அதனானன்றிப் பிறிதொன்றான் முடியுங்காலம் வரின் அவ்வாறு முடிக்க வேண்டுதலின் காலததால தக்கது அறிதலும், இலக்கணமாயின( )

கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை 687

கடன் அறிந்து - வேற்றரசரிடத்துத்தான் செய்யும் முறைமையறிந்து, காலம் கருதி - அவர் செவ்வி பார்த்து, இடன் அறிந்து - சென்ற காமஞ் சொல்லுதற்கு ஏற்ற இடம் அறிந்து, எண்ணி - சொல்லு மாற்றை முன்னே விசாரித்து, உரைப்பான் தலை - அவ்வாறு சொல்லுவான் தூதரின் மிக்கான்.

செய்யும் முறைமையாவது: அவர் நிலையும் தன் அரசன் நிலையும் தன் நிலையும் தூக்கி அவற்றிற்கு ஏற்பக் காணும் முறைமையும் சொல்லும் முறைமையும் முதலாயின. செவ்வி - தன் சொல்லை ஏற்றுக்கொள்ளும் மன நிகழ்ச்சி. அது காலவயத்ததாகலின் காலம் என்றார். இடம்—தனக்குத் துணையாவார் உடனாய இடம். எண்ணுதல் - தான் அது சொல்லுமாறும், அதற்கு அவர் சொல்லும் உத்தரமும், அதற்குப் பின் தான் சொல்லுவனவுமாக இவ்வாற்றான் மேன்மேல் தானே கற்பித்தல். வடநூலார் இவ் இரு வகையாருடன் ஓலை கொடுத்து நிற்பாரையும் கூட்டித் தூதரைத் தலை, இடை, கடை என்று வகுத்துக் கூறினாராகலின், அவர் மதமும் தோன்றத் தலை' என்றார். தூது என்பது அதிகாரத்தான் வந்தது.

இவை ஐந்து பாட்டானும் தான் வகுத்துக் கூறுவானது இலக்கணம் கூறப்பட்டது. (7)

தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு. 688

வழி உரைப்பான் பண்பு - தன் அரசன் வார்த்தையை அவன் சொல்லியவாறே வேற்றரசர்க்குச் சென்று சொல்லுவானது இலக்கணமாவன, தூய்மை - பொருள் காமங்களால் தூயனாதலும், துணைமை - தமக்கு அவரமைச்சர் துணையாந்தன்மையும், துணிவுடைமை - துணிதலுடைமையும், இம் மூன்றின் வாய்மை - இம் மூன்றோடு கூடிய மெய்ம்மையும் என இவை.

பொருள் காமங்கள் பற்றி வேறுபடக் கூறாமைப்பொருட்டுத் தூய்மையும், தன் அரசனுக்கு உயர்ச்சிகூறியவழி எம்மனோர்க்கு அஃது இயல்பு எனக்கூறி அவர் வெகுளி நீக்குதற்பொருட்டுத் துணைமையும், இது சொல்லின் இவர் ஏதஞ்செய்வர் என்று ஒழியாமைப்பொருட்டுத் துணிவுடைமையும், யாவரானும் தேறப்

படுதற்பொருட்டு மெய்ம்மையும் வேண்டப்பட்டன. 'இன்' ஒடு வின்பொருட்கண் வந்தது. (8)

விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம் வாய்சோரா வன்க ணவன். 689

விடு மாற்றம் வேந்தர்க்கு உரைப்பான்-தன்னரசன் சொல்லி விட்ட வார்தையை வேற்றரசர்க்குச் சென்று சொலல உரியான், வடுமாறறம வாயசோரா வன்கணவன் - தனக்கு வரும ஏதத்திற் கஞ்சி அவனுக்குத தாழ்வான வார்த்தையை வாய்சோர்ந்தும் சொல்லாத திண்மையை யுடையான்.

தாழுவு சாதிதருமமன்மையின், 'வடு' என்றார். 'வாய்சோரா' எனக் காரியம காரணதது ள அடக்கப்பட்டது. (9)

இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு உறுதி பயப்பதாம் தூது. 690

இறுதி பயப்பினும் எஞ்சாது - அவ்வார்த்தை தன் உயிர்க்கு இறுதி தருமாயினும் அதறகு அஞ்சி யொழியாது, இறைவற்கு உறுதி பயபபது தூதாம - தன் அரசன் சொல்லியவாறற அவனுக்கு மிருதியை வேற்றரசரிடைச் சொல்லுவானே தூதனவான்.

இறுதிபயப்பினும என்றதனால, ஏனைய பயததல் சொல்ல வேண்டாவாயிறறு.

இவை மூனறுபாட்டானும் கூறியது கூறுவானது இலக் கணம் கூறப்பட்டது. (10)

70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல்

அஃதாவது அமைச்சர் அரசரைப்பொருந்தி ஒழுகு மாறு. இது, 'வேந்து அவாம் பண்பு உடைமை' என மேலே (குறள. 618) வேண்டப்பட்டமையின், தூதின்பின் வைக்கப் பட்டது.

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க இகல்வேந்தர்ச சேர்ந்தொழுகு வார். 691

இகல் வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவா - மாறுபடதலேயுடைய அரசரைச் சோகதொழுகும் அமைச்சர், அகலாது அணுகாது தீக் காய்வார் போல்க அவரை மிக நீங்குவதும் மிகச் செறிவதும் செய்யாது தீக்காய்வார்போல இடைநிலத்திலே நிற்க.

கடிதின் வெகுளும் தன்மையர் என்பது தோன்ற, 'இகல் வேந்தர்' என்றார். மிக அகலின் பயன் கொடாது, மிக அணுகின் அவமதிபற்றித் தெறும் வேநதர்க்கு, மிகஅகலின் குளிர் நீக்காது, மிக அணுகின் சுடுவதாய தீயோடு உளதாய தொழில்உவமம் பெறப்பட்டது. (1)

**மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய ஆக்கம் தரும் 692**

மன்னர் விழைப விழையாமை - தம்மால் சேரப்பட்ட மன்னர் விரும்புவனவற்றைத் தாம் விரும்பாதொழிதல், மன்னரான் மன்னிய ஆக்கம் தரும் - அமைச்சர்க்கு அவராகின கிலேபெற்ற செல்வதைக் கொடுக்கும்.

ஈண்டு 'விழைப' என்றது அவர்க்குச் சிறப்பாக உரிய வற்றை. அவை நுகரப்படுவன, ஒப்பன, மேன்மை என்றிவை முதலாயின. இவற்றை ஒப்பிற்கு அஞ்சித் தாம விழையா தொழியவே, அவ் அச்சம் நோக்கி உவந்து அவாதாமே எல்லாச செலவுமம கலகுவர் என்பது கருதது. எனவே, அவற்றை விரும்பின் கேடுதரும் என்பதாம். (2)

**போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது. 693**

போற்றின் அறியவை போற்றல - அமைச்சர் தம்மைக் காக்கக் கருதின் அரிய பிழைகள தங்கணவாமமல காக்க, கடுத்தபின் தேற்றுதல் யார்க்கும் அரிது - அவமமற வருதன வாகக் கேடடு அவ் அரசர் ஐயுற்றால அவரைப பின் தெளி வித்தல் யாவர்க்கும் அரிது ஆகலான்.

அரிய பிழைகளாவன: அவரால பொறுததற்கு அரிய அறைபோதல உரிமையொடு மருவல், அரும்பொருள வெளவல் என்றிவை முதலாயின. அவற்றைக் காத்தலாவது ஒருவன் சொல்லியக்கால, தகுமோ என்று ஐயுறது தகாது என்றே அவர் துணிய ஒடடல். ஒருவாற்றால் தெளிவித்தாலும கடன்கொண் டான் தோன்றப் பொருள தோன்றுமாறுபோலக் கண்டிழியெல லாம் அவை நீக்கப்படுதலின் யார்க்கும் அரிதென்றார்.

இவை மூன்று பாட்டானும் அது பொதுவகையால கூறப் பட்டது. (3)

**செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து 694**

ஆன்ற பெரியா ரகத்து - அமைந்த அரசர் அருகு இருந் தால், செவிச்சொலலும் சேர்ந்த நகையும் அவித்து ஒழுகல் - அவர்காண ஒருவன் செவிக்கண் சொலலுதலேயும ஒருவன் முகம் நோக்கி நகுதலேயும் தவிர்ந்து ஒழுகுக.

சேர்தல - பிறரெடு சேர்தல். செய்தொழுகின், தம் குற்றம் கண்டு செய்தனவாகக் கொள்வர் என்பது கருதது. (4)

**எப்பொருளும் ஓரார் தொடரார்மற்று அப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை. 695**

மறை - அரசனுக்குப் பிறரோடு மறை நிகழ்வுழி, எப்பொருளும் ஓரார் - யாதொரு பொருளையும் செவிகொடுத்துக் கேளாது, தொடரார்—அவனை முடுகி வினவுவதும் செய்யாது, அப்பொருளை விட்டக்கால் கேட்க - அம் மறைப்பொருளை அவன் தானே அடக்காது சொல்லியக்கால கேட்க.

ஓர்தறகு ஏற்கும் பொருளாயினும் என்பார், 'எப்பொருளும்' என்றார். 'மறறு' வினைமாற்றின்கண் வந்தது. (5)

குறிப்பு அறிந்து காலம் கருதி வெறுப்பில வேண்டுப வேட்பச் சொலல். 696

குறிப்பு அறிந்து - அரசனுக்குக் காரியஞ் சொல்லுங்கால அப்பொழுது நிகழ்கின்ற அவன் குறிப்பினை அறிந்து, காலம கருதி - சொல்லுதற்கு ஏற்ற காலத்தையும நோக்கி, வெறுப்புஇல வேணடுப வேட்பச் சொலல - வெறுப்பிலவுமாய் வேண்டுவனவுமாய காரியங்களை அவன் மனம் விரும்பும்வகை சொலலுக.

குறிப்புக் காரியத்தின்கண் இன்றிக் காமவெகுளியுளளிட்டவறறில் நிகழவுழியும் அதற்கு ஏலாக்காலததும் சொல்லுதல் பயனின்றாகலின் 'குறிப்பு அறிந்து காலம் கருதி' என்றும், அவன் உடம்படாதன முடிவுபோகாமையின் 'வெறுப்பில' என்றும், பயனிலலவும பயன் சுருங்கியவும் செய்தல் வேண்டாமையின் 'வேண்டுப' என்றும், அவற்றை இனியவாய்ச் சுருங்கி விளங்கிய பொருள அவாய சொற்களால சொலலுக என்பார. 'வேட்பச்சொலல' என்றும் கூறினார. (6)

வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும் கேட்பினும் சொல்லா விடல். 697

வேட்பன சொல்லி-பயன் பெரியனவுமாய் அரசன் விரும்புவனவுமாய காரியங்களை அவன் கேட்டிலனாயினும் சொல்லி, எஞ்ஞான்றும வினை இல கேட்பினும் சொல்லாவிடல - எஞ்ஞான்றும் பயனிலவாயவற்றைத தானே கேட்டாலும் சொலலாது விடுக.

'வினையில' எனவும, 'கேட்பினும' எனவும வந்த சொற்களான் அவறறின் மறுதலைச் சொறகள வருவிக்கப்பட்டன. வினையான் வருதலின் 'வினை' என்றும, வறுமைக் காலமும் அடங்க 'எஞ்ஞான்றும' என்றும் கூறினார. சொல்லுவனவும சொலலாதனவும வகுததுக் கூறியவாறு.

இவை நான்கு பாட்டானும சிறப்புவகையால் கூறப்பட்டது. (7)

இளையர் இனமுறையர் என்றுஇகழார் நின்ற ஒளியோடு ஒழுகப் படும் 698

இளையர் இன முறையர் என்று இகழார - இவர் எம்மின் இளையர் என்றும் எமக்கு இன்ன முறையினையுடையர் என்றும

அரசரை அவமதியாது, நின்ற ஒளியோடு ஒழுகப்படும் - அவர் மாட்டு நின்ற ஒளியோடு பொருந்த ஒழுகுதல் செய்யப்படும்.

ஒளி - உறங்காநிற்கவும் தாம் உலகம் காக்கின்ற அவர் கடவுள் தன்மை. அதனோடு பொருந்த ஒழுகலாவது அவர் கடவுளரும் தாம் மக்களுமாய் ஒழுகுதல். அவ் ஒளியால் போக்கப்பட்ட இளமையும் முறைமையும் பற்றி இகழ்வராயின், தாமும் போக்கப்படுவர் என்பது கருத்து. (8)

கொளப்பட்டேம் என்றுஎண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கு அற்ற காட்சியவர் 699

கொளப்பட்டேம் என்று எண்ணிக் கொளளாத செய்யார் - அரசனுல் யாம் கன்கு மதிக்கப்பட்டேம் என்று கருதி அவன் விரும்பாதவற்றைச் செய்யார், துளக்கு அற்ற காட்சியவர் - நிலே பெற்ற அறிவினையுடையார்.

கொள்ளாதன செய்துஅழிவு எய்துவார் கொளப்பாட்டிற்குப் பின் தம்மை வேறொருவராகக் கருதுவர் ஆகலின், முன்னைய ராகவே கருதி அஞ்சியொழுகுவாரைத 'துளக்கு அற்ற காட்சியவர்' என்றார். (9)

பழையம் எனக்கருதிப் பண்புஅல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும் 700

பழையம் எனக் கருதிப் பண்பு அல்ல செய்யும் கெழுதகைமை-அரசனுக்கு யாம் பழையம் எனக் கருதித் தமக்கு இயல்பு அல்லாதவற்றைச் செய்யும் உரிமை, கேடு தரும் - அமைச்சர்க்குக் கேட்டினைப் பயக்கும்.

அவன் பொருது செறும்பொழுதின் அப் பழமைநோக்கிக் கண்ணோடாது உயிரை வௌவுதலான், அவன் வேண்டாதன செய்தற்கு ஏதுவாய கெழுதகைமை கேடுதரும் என்றார்.

இவை மூன்று பாட்டானும், பொறுப்பர் என்று அரசர் வெறுப்பன செய்யாற்க என்பது கூறப்பட்டது.

71. குறிப்பு அறிதல்

அஃதாவது அரசர் கருதிய அதனை அவர் கூறுமல் அறிதல். இது மன்னரைச் சேர்ந்தொழுகற்கு இன்றியமை யாதாகலின், அதன் பின் வைக்கப்பட்டது.

கூறுமை நோக்கிக் குறிப்புஅறிவான் எஞ்ஞான்றும்
மாறுநீர் வையக்கு அணி 701

குறிப்பு கூறுமை நோக்கி அறிவான் - அரசனுல் குறிக்கத கருமத்தை அவன் கூறவேண்டாவகை அவன் முகத்தானும் கண்ணனும் நோக்கி அறியும் அமைச்சன், - எஞ்ஞான்றும் மாறு

நீர் வையக்கு அணி - எஞ்ஞான்றும் வற்றுத நீரால் சூழப்பட்ட வையத்துளளார்க்கு ஓர் ஆபரணமாம்.

ஒட்பமுடையனைய் எலலார்க்கும் அழகு செய்தலான், 'வையக்கு அணி' என்றார். குறிப்பும் வையமும் ஆகுபெயர். வையத்திற்கு என்பது விகாரப்பட்டு நின்றது. (1)

ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத் தெய்வத்தோடு ஒப்பக் கொளல். 702

அகத்தது ஐயப்படாது உணர்வானை-ஒருவன் மனத்தின்கண் நிகழ்வதனை ஐயப்படாது ஒருதலையாக உணரவலலானை, தெய்வததோடு ஒப்பக் கொளல - மகனேயாயினும், தெய்வத்தோடு ஒப்ப நன்கு மதிக்க.

உடம்பு முதலியவற்றுள் ஒவ்வாமையினும் பிறர் நினைத்தது உணரும் தெய்வத தன்மையுடைமையின் 'தெய்வததோடு ஒப்ப' என்றார். (2)

குறிப்பின் குறிப்புஉணர் வாரை உறுப்பினுள் யாது கொடுத்தும் கொளல். 703

குறிப்பின் குறிப்பு உணர்வாரை - தம்குறிப்பு நிகழுமாறு அறிந்து அதனைப் பிறாகுறிப்பறிம் தன்மையாரை, உறுப்பினுள யாது கொடுதததும் கொளல - அரசர் தம் உறுப்புக்களுள அவர் வேண்டுவதொ றறலைக் கொடுததாயினும் தமக்குத துணையாகக் கொள்க.

உளநிகழும் நெறியாவர்க்கும் ஒத்தலின், பிறர்குறிப் பறிதற்குத தம் குறிப்புக் கருவியாயிற்று. உறுப்புக்களாவன: பொருளும், நாடும், யானை குதிரைகளும முதலிய பறதது உறுப்புக்கள. இதனகு 'பிறா முகக் குறிப்பானே அவர் மனக்குறிப்பு உணர்வானை' என்று உரைப்பாரும் உளர்.

இவை மூன்று பாட்டானும் குறிப்பு அறிவாரது சிறப்புக் கூறப்பட்டது. (3)

குறித்தது கூருமைக் கொள்வாரோடு ஏனை உறுப்புஒ ரனையரால் வேறு 704

குறிததது கூருமைக் கொளவாரோடு - ஒருவன் மனததுக் கருதிய அதனை அவன் கூறவேண்டாமல அறியவலலாரோடு, ஏனை உறுப்பு ஓரனையர் - மற்றை மாட்டாதார். உறுப்பால் ஒரு தன்மையராக ஒப்பாராயினும், வேறு - அறிவான் வேறு.

'கொளளாதார்' என்பதூஉம், அறிவான் என்பதூஉம் அவாய்நிலையான் வந்தன. சிறந்த அறிவின்மையின், விலங்கு என்னும் கருததான் 'வேறு' என்றார். (4)

குறிப்பின் குறிப்புஉணரா ஆயின் உறுப்பினுள் என்ன பயத்தவோ கண் 705

குறிப்பின் குறிப்பு உணரா ஆயின் - குறித்தது காணவல்ல தம் காட்சியால பிறர்குறிப்பினஉணரமாட்டாவாயின், உறுப்பினுள கண் என்ன பயததவோ - ஒருவன் உறுப்புக்களுள சிறந்த கண்களை வேறு என்ன பயனைச் செய்வன.

நூதற்கண் 'குறிப்பு' ஆகுபெயர். குறிப்பு அறிதற்கண் துணையாதல சிறப்புப்பற்றி உயிரது உணாவு கண்மேல் ஏற்றப்பட்டது. அக்கணகளால பயன் இலலை என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் குறிப்பு அறியாரது இழிபு கூறப்பட்டது. (5)

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம். 706

அடுத்தது காட்டும் பளிங்குபோல - தன்னை அடுதத பொருளது நிறத்தைத தானே கொண்டு காட்டும் பளிங்கு போல, நெஞ்சம கடுதததது முகம காட்டும் - ஒருவன் நெஞ்சதது மிக்கதனை அவன் முகம் தானே கொணடு காட்டும்.

'அடுதததது' என்பது ஆகுபெயர. கடுதததது என்பது 'கடி' என்னும் உரிச்சொல அடியாய வந்த தொழிறபெயர. உவமை ஒரு பொருளை பிறிதொருபொருளின் பண்பைக் கொண்டு தோற்றுதலாகிய தொழிலப்பற்றி வந்தது. (6)

முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும் காயினும் தான்முந் துறும் 707

உவப்பினும் காயினும் தான் முந்துறும் - உயிர் ஒருவனை உவததலானும் காய்தலானும் உறின், தான் அறிந்து அவறறின் கண் அதலின்முற்பட்டு நிற்கும் ஆகலான், முகததின் முதுக்குறைந்ததை உண்டோ-முகம்போல அறிவுமிக்கது பிறிதுஉண்டோ? இலலை.

'உயிர்க்கே அறிவுளளது ஐம்பூதங்களான் இயன்ற முகத்திறகு இல்லை' என்பாரை நோக்கி, 'உயிரது கருததறிநது அஃது உவக்குறின் மலரதும், காய்வுறின் கருஞ்சுர வலலர், உண்டி' எனமுப்பார் போன்று, குறிப்பு அறிதறகுக் கருவி கூறியவாறு.

முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி உற்றது உணர்வார்ப் பெறின். 708

அகம் நோக்கி உற்றது உணர்வார்ப்பெறின்-ஒருவரைப்புறுவானும் தன் மனத்தைக் குறிப்பான் அறிந்து தானுற்ற அதனைத தீர்ப்பாரைப் பெறின், முகம் நோக்கி நிற்க அமையும் - அவா தன் முகம் நோக்கும் வகை தானும் அவா முகம் நோக்கி அவ எல்லைக்கண் நிற்க அமையும்.

'உணர்வார்' எனக் காரியத்தைக் காரணமாக்கிக் கூறினர். அவ் எல்லையைக் கடந்து சொல்லுமாயின் இருவர்க்குஞ் சிறுமையா மாதலின், அது வேண்டா என்பதாம். குறையுறுவர் இயல்பு கூறுவார்போன்று கருவி கூறியவாறு.

இவை மூன்று பாட்டானும் குறிப்பறிதற்கருவி முகமென்பது கூறப்பட்டது. (8)

பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின் வகைமை உணர்வார்ப் பெறின். 709

கண்ணின் வகைமை உணர்வாரைப் பெறின் - வேந்தர்தம் நோக்கு வேறுபாட்டின் தன்மையை அறியவல்ல அமைச்சரைப் பெறின், பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும் - அவர்க்கு மனத்துக் கிடந்த பகைமையையும் ஏனைக்கேண்மையையும் வேற்று வேந்தர் சொல்லிற்கில் ராயினும் அவர் கண்களே சொல்லும்.

இறுதிக் கண் 'கண்' ஆகுபெயர். நோக்கு வேறுபாடாவன: வெறுத்த நோக்கமும் உவந்த நோக்கமும். உணர்தல் அவற்றை அவ்வக் குறிகளான் அறிதல். (9)

நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால் கண்அல்லது இல்லை பிற. 710

நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் - யாம் நுண்ணறிவு உடையேம் என்றிருக்கும் அமைச்சர் அரசர் கருதினை அளக்குங் கோலாவது, காணுங்கால் கண் அல்லது பிற இல்லை - ஆராயுங்கால் அவர்கண்ணல்லது பிற இல்லை.

அறிவின் உண்மை அத்துடையாரேயாற்றப்பட்டது. இங்கிதம், வடிவு, தொழில், சொல என்பன முதலாகப் பிறர்கருத்தளக்கும் அளவைகள் பல, அவையெல்லாம் முன் அறிந்த வழி அவரான் மறைக்கப்படும். நோக்கம் மனத்தொடு கலந்தவான் ஆண்டு மறைக்கப்படாது என்பதுபற்றி, அதனையே பிரித்துக் கூறினார். இனி 'அளக்குங்கோல்' என்று பாடமோதி, 'நுண்ணியம்பம்' என்று இருக்கும் அமைச்சரை அரசர் ஏனைக்குங் கோலாவது கண்' என உரைத்து, தன் வெகுளி நோக்கால் அவர் வெருட்டுக் குறிப்பு அறிக என்பது கருத்தாக்குவாருமுளர்.

இவை இரண்டு பாட்டானும் நுணுகருவி நோக்கு என்பது கூறப்பட்டது. (10)

72. அவை அறிதல்

அஃதாவது அரசனேடிருந்த அவையினது இயல்பை அறிதல். காரியஞ் சொலலுங்கால் அவன் குறிப்பறிதலே யன்றி இதுவும் வேண்டுதலின், இஃது அதன்பின் வைக்கப் பட்டது.

அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின் தொகைஅறிந்த தூய்மை யவர். 711

சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர் - சொல்லின் குழுவினை அறிந்த தூய்மையினையுடையார், அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக - தாமொன்று சொல்லுங்கால் அப் பொழுதை அவையினை அறிந்து ஆராய்ந்து சொலலுக.

சொலலின் குழுவெனவே: செஞ்சொல், இலக்கணச்சொல், குறிப்புச்சொல் என்னும் மூவகைச் சொலலும் அடங்கின. தூய்மை அவற்றுள தமக்காகாதன ஒழித்து ஆவன கோடல. அவை என்றது ஈண்டு அதன் அளவை. அது மிகுதி, ஒப்பு, தாழ்வு என மூவகைத்து. அறிதல் தம்மொடு தூக்கி அறிதல. ஆராய்தல் - இவ் அவைக்கண் சொல்லும் காரியம் இது, சொலலுமாறு இது, சொன்னால் அதன் முடிவு இது என்று இவை உளளிட்டன ஆராய்தல். (1)

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின் நடைதெரிந்த நன்மை யவர். 712

சொலலின் நடைதெரிந்த நன்மையவர் - சொற்களின் நடையினை ஆராய்ந்தறிந்த நன்மையினையுடையார், இடை தெரிந்து நன்கு உணர்ந்து சொலலுக - அவைக்கண் ஒன்று சொல்லுங்கால் அதன் செவ்வியை ஆராய்ந்து அறிந்து வழுப்படாமல மிகவும தெளிந்து சொல்லுக.

சொற்களின் நடையாவது: அம் மூவகைச் சொலலும் செம பொருள, இலக்கணப் பொருள, குறிப்புப் பொருள என்னும பொருளகளைப் பயக்குமாறு, செவ்வி: கேட்டறகண் விருப்புடைமை. வழு: சொல வழுவும் பொருள வழுவும.

இவை இரண்டு பாட்டானும் ஒன்று சொல்லுங்கால் அவை யறிந்தே சொலல வேண்டும் என்பது கூறப்பட்டது. (2)

அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின் வகையறியார் வல்லதூஉம் இல். 713

அவை அறியார் சொல்லல் மேற்கொளபவர் சொல்லின் வகை அறியார் - அவையினது அளவையறியாது ஒன்று சொலலத் தலைத் தம்மேற்கொளவார் அச் சொல்லுதலின் கூறுபாடும் அறியார், வலலதூஉம் இல் - கற்றுவல்ல கலியும் அவர்க்கு இலலை.

அம் மூவகைச் சொற்களால் வரும் சொலலுதல் வகைமை, கேட்பாரது உணர்வு வகைமை பற்றி வருதலால் 'சொலலின் வகையறியார்' என்றும், அஃது அறியார் யாதும் அறியாரென்று எல்லாராலும் இகழப்படுதலின் 'வல்லதூஉம் இல்' என்றும் கூறினார்.

இதனுன் அவை யறியாக்கால் வரும் குற்றம் கூறப்பட்டது.(3)

ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன் வான்சுதை வண்ணம் கொளல். 714

ஒளியார்முன் ஒளியர் ஆதல் - அறிவால் ஒள்ளியாரவைக் கண் தாமும் ஒள்ளியராக, வெளியார்முன் வான்சுதை வண்ணம் கொளல் - ஏனை வெளிஞகள் அவைக்கண் தாமும் வாலிய சுதை யின் நிறத்தைக் கொளக.

'ஒளியியார' என்றது மிக்காரையும் ஒத்தாரையும். அது விகாரத்தால் 'ஒளியார்' என்று நின்றது. ஒளியியராதல்: தம் நூலறிவுஞ் சொல் வன்மையும் தோன்ற விரிதல். அவை அறி யாத புலலரை 'வெளியார்' என்றது, வயிரம் இல் மரத்தை 'வெளிறு' என்னும் வழக்குப் பற்றி. அவர் மகிக்கும வகை அவரி னும் வெண்மையுடையராக என்பார, 'வான் சுதை வண்ணம் கொளல்' என்றார்.

அவையளவு அறிதகார் செய்யும் திறம் இதனுன் தொகுத்துக் கூறப்பட்டது. பின்னர் விரிதலுக் கூறுப. (4)

நன்றுஎன்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள் முந்து கிளவாச் செறிவு. 715

நன்று என்றவற்றுளளும் நன்றே - ஒருவற்கு இது நன்று என்று சிறப்பிதது சொலலப்பட்ட குணங்கள எல்லாவற்றுள ளும் நன்றே, முதுவருள முநது கிளவாச் செறிவு-தமமின் மிக்கார் அவைக்கண் அவரின் முற்பட்டு ஒன்றனைச் சொலலாத அடக்கம்.

தம குறைவும், அவர் மிகுதியும், முநதுகிளநதார்படும் இழுக்கும், கிளவாக்கால எய்தும் நன்மையும் அறிநதே அடங்கினமையின், அவ் அடக்கத்தினை 'நன்று என்றவறறுளளும நன்று' என்றார். முன்கிளததலிலேயே விலக்கினமையின், உடன் கிளததலும் பின் கிளததலும் ஆம என்பது பெறறும்.

இதனுன் மிக்கா அவைக்கண் செய்யும் திறம் கூறப்பட்டது.

ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம் ஏற்றுஉணர்வார் முன்னர் இழுக்கு. 716

ஆற்றின் நிலை தளர்ந்தற்று - பிடி எய்தற்பொருட்டு நன் நெறிக்கண் நின்றுஞெருவன் அநநெறியினும் நிலை தளர்ந்து வீழ்ந்தாலொக்கும, வியன் புலம் ஏற்று உணாவார் முன்னர் இழுக்கு - அகன்ற நூற்பொருளகளை உட்கொண்டு அவற்றின் மெயயை மையை உணரவல்லார் அவைக்கண் வல்லாஞெருவன் சொல் இழுக்குப்படுதலை.

நிலைதளர்ந்து வீழ்தல் "உரன் என்னும் தோட்டியான் ஓரைந் தும்" (குறள, 24) காததொழுகியான் பின் இழுக்கிக் கூடா ஒழுக் கதனுதல், பயன் இழத்தலே அன்றி இகழவும் படும் என்பதாம்

இதனால் அதன்கண் இழுக்கியவழிப்படும் குற்றம் கூறப் பட்டது. (6)

கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடுஅறச் சொல்தெரிதல் வல்லா ரகத்து. 717

கசடு அறச் சொல் தெரிதல் வல்லாரகத்து - வழுப்படாமல் சொற்கணை ஆராய்தல் வல்லார் அவைக்கண் சொல்லின், கற்று அறிந்தார் கல்வி விளங்கும் - பல நூல்களையும் கற்று அவற்றின் ஆய பயனை அறிந்தாரது கல்வி யாவர்க்கும் விளங்குதல் தோன்றும.

'சொல்லின்' என்பது அவாய்நிலையான் வந்தது. ஆண்டே சொலலுக என்பதாம்.

உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன் பாத்தியுள் நீர்சொரிந் தற்று 718

உணர்வது உடையார்முன் சொல்லல் - பிறர உணர்தலின்றிப் பொருளகளை தாமே உணரவல்ல அறிவினையுடையார அவைக்கண் கற்றுர் ஒன்றனை சொலலுதல், வளாவதன் பாத்தியுள நீரசொரிந்தற்று - தானே வளாவதொரு பயிர நின்ற பாத்திக்கண் நீரனைச் சொரிநதாற்போலும்.

தானையும் வளர்தற்குரிய கல்வி மிக வளரும் என்பதாம்.

இவ்வ இரண்டு பாட்டாலும் ஒததா அவைக்கண எவ்வழியும் சொல்லுக என்பது கூறப்பட்டது. (8)

புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள் நன்கு செலச்சொல்லு வார். 719

நல்லவையுள நன்கு செலச் சொல்லுவார நல்லார் இருந்த அவைக்கண் நல்ல பொருளகளை அவர் மனங்கொளளச சொல்லுதற்குரியார், புல்லவையுள பொச்சாநதும சொலலறக - அவையறியாத புல்லர் இருந்த அவைக்கண் அவற்றை மறநதும் சொலலற தொழுக.

சொல்லின், தம் அவையறியாமையை நோக்கி நலலனவும, பொருளறியாமையால் புல்லவை தானும் இகழுதலின், இரண்டு அவைக்கும் ஆகார் என்பது கருதி 'பொச்சாநதும் சொலலறந்' என்றார். (9)

அங்கணத்துள் உக்க அமிழ்தற்றுல் தம்கணத்தர் அல்லார்முன் கோட்டி கொளல். 720

தம் கணத்தார் அல்லார்முன் கோட்டி கொளல் - நல்லார் தம்மினத்த ரல்லாதார் அவைக்கண் ஒன்றனையும் சொல்லற்க அங்கணத்துள் உக்க அமிழ்தற்று - சொல்லின் அது தூய்தலலாத மூற்றத்தின்கண் அமிழ்தினை ஒக்கும்.

'கொள்' என்னும் முதனிலைத் தொழிற் பெயர் முன்னின்று பின் எதிர்மறை அல விகுதியோடு கூடி "மகன் எனல" (குறள 196) என்பது போல் நின்றது. 'சொல்லின்', 'அது' என்பன அவாய் நிலையான் வந்தன. பிறரெல்லாம் 'கொளல' என்பதனைத் தொழிற் பெயராக்கி உரைத்தார், அவர் அத தொழில் அமிழ்து என்னும் பொருள உவமையோடு இயையாமை நோக்கிற்றலர். சாவாமருந்தால் அறிந்து, நுகர்வார் கையினும் படாது அவ் அங்கணத்துக்கும் இயையு இன்றிக் கெட்டவாறு தோன்ற, 'உக்க அமிழது' என்றார். அச்சொல்பயனில் சொல்லாம் என்பதாயிற்று.

இவை இரண்டு பாட்டானும் தாழ்ந்தார் அவைக்கண் ஒருவழியும் சொல்லற்க என்பது கூறப்பட்டது. (10)

73. அவை அஞ்சாமை.

அஃதாவது சொல்லுதற்குரிய அவையினையறிந்து சொல்லுங்கால் அதற்கு அஞ்சாமை. அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

வகைஅறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். 721

வகை அறிந்து வல்லவை வாய்சோரார் - கற்று வல்ல அவை, அல்லா அவை என்னும் அவை வகையினை அறிந்து வல்ல அவைக்கண் ஒன்று சொல்லுங்கால் அச்சத்தான் வழுப்படச் சொல்லார், சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர் - சொல்லின் தொகையெல்லாம் அறிந்த தூய்மையினையுடையார்.

இருந்தாரது வன்மை அவைமேல் ஏற்றப்பட்டது. 'வல்லவை' என்பதற்கு, 'தாம் கற்றுவல்ல நூற்பொருள்களை' என்று உரைப்பாரும் உளர். 'அச்சத்தான்' என்பது அதிகாரத்தான் வந்தது. 'சொல்லின்தொகை', 'தூய்மை' என்பனவற்றிற்கு (குறள 711) மேல் உரைத்தாங்கு உரைக்க. (1)

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார். 722

கற்றாருள் கற்றார் எனப்படுவர் - கற்றார் எல்லாரினும் இவர் நன்கு கற்றார் என்று உலகத்தாரால் சொல்லப்படுவார், கற்றார்முன் கற்ற செலச் சொல்லுவார் - கற்றாரவைக்கண் அஞ்சாதே தாம் கற்றவற்றை அவர் மனம் கொள்ளும்வகை சொல்ல வல்லார்.

உலகம் அறிவது அவரையே ஆகலின், அதனாற் புகழப்படுவாரும் அவர் என்பதாம். (2)

பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர். 723

பகையகத்துச் சாவார் எளியர் - பகையிடை அஞ்சாது புக்குச் சாவ வல்லார் உலகத்துப் பலர், அவையகத்து அஞ்சாதவர் அரியர் - அவையிடை அஞ்சாது புக்குச் சொல்லவல்லார் சிலர்.

அஞ்சாமை 'சாவார்; என்பதனோடும் கூட்டி, அதனால 'சொல்ல வல்லார்' என்பது வருவித்து உரைக்கப்பட்டது.

இவை மூன்று பாட்டானும் அவை அஞ்சாது சிறப்புக் கூறப்பட்டது. (3)

கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல். 724

கற்றார்முன் கற்ற செலச் சொல்லி - பல நூல்களையும் கற்றார் அவைக்கண் தாம் கற்றவற்றை அவர்மனம கொளளுமாற்றுற் சொல்லி, தாம் கற்ற மிக்க மிக்காருள கொளல - அவற்றின் மிக்க பொருளகளை அம் மிகக் கற்றாரிடதது அறிந்து கொளக.

எல்லாம் ஒருவற்குக் கற்றல் கூடாமையின், வேறுவேறுய கல்வியுடையார் பலர் இருதத அவைக்கண் தாம் கற்றவற்றை அவர்க்கு ஏற்பச் சொலலுக; சொலலவே, அவரும் அவை யெல்லாஞ் சொல்லுவர் ஆகலான், ஏனைக் கற்கப்பெருதன கேட்டறியலாம் என்பதாயிற்று.

இதனுள் அதனது ஒருசார் பயன் கூறப்பட்டது. (4)

ஆற்றின் அளவுஅறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு. 725

ஆற்றின் அளவு அறிந்து கற்க–சொல்லிலக்கண நெறியானே அளவை நூலை அமைச்சர் உட்பட்டுக் கற்க, அவை அஞ்சா மாற்றம் கொடுத்தற்பொருட்டு–வேற்றுவேந்தர் அவையிடை அஞ்சாது அவர் சொலலிய சொற்கு உத்தரஞ் சொலலுதற் பொருட்டு.

அளவைநூல் சொலநூல் கற்றே கற்கவேண்டுதலின், அதற்கு அஃது ஆறு எனப்பட்டது. அளக்கும் கருவியை 'அளவு' என்றார், ஆகுபெயரான். அவர் சொலலே வெல்வதொரு சொல சொல்லலாவது நியாயத்து வாத சொற்ப விதண்டைகளும் சல சாதிகளும் முதலிய கற்றார்க்கே ஆகலின், அவற்றைப் பிழையாமல் கற்க என்பதாம்.

இதனுள் அதன் காரணம் கூறப்பட்டது. (5)

வாளொடுஎன் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடுஎன்
நுண்அவை அஞ்சு பவர்க்கு 726

வன்கண்ணர் அலலார்க்கு வாளொடு என் - வன்கண்மை யுடையர் அல்லாதார்க்கு வாளோடு என்ன இயைபு உண்டு, நுண் அவை அஞ்சுபவர்க்கு நூலொடு என் - அதுபோல நுண்ணி யாரது அவையை அஞ்சுவார்க்கு நூலோடு என்ன இயைபு உண்டு.

இருந்தாரது துண்மை அவை மேல் ஏற்றப்பட்டது. நூற்கு உரியர் அலலர் என்பதாம் (6)

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து அஞ்சு மவன்கற்ற நூல். 727

பகையகத்துப் பேடி கை ஒளவாள - எறியப்படும் பகைநடுவண் அதன்கண் அஞ்சும் பேடி பிடித்த கூர்வாளோ ஒக்கும், அவையகத்து அஞ்சுமவன் கற்ற நூல்-சொல்லப்படும் அவை நடுவண் அதனை அஞ்சுமவன் கற்ற நூல்.

பேடி: பெண் இயல்பு மிக்கு ஆண் இயல்பும் உடையவள. கள மூம் வாயுத்தத்தை தானும் கன்ருய இருந்ததேயாயிறும பிடித்தவள குற்றதனால வாள் சிறப்பின்ருயிறபோல, அவையும் வாயத்துத் தானும் கன்ருய இருந்தவராயிறும் கற்றவன் குற்றத்தால நூல் சிறப்பின் ருயிறது. (7)

பல்லவை கற்றும் பயனிலரே நல்லவையுள் நன்கு செலச்சொல்லா தார். 728

நலலவையுள நன்கு செலச் சொலலாதார் - நல்லார் இருந்த அவைக்கண் நலலசொற் பொருளகளோத தம அச்சததான் அவர்க்கு ஏறுஙர் சொலலமாட்டாதார, பல்லவை கறறும பயம் இலரே - பல நூலகளைக் கறறுராயினும் உலகிற்குப் பயன் படுதல் இலர்.

அறிவாரதன் சொலலாமையின் கல்வியின உண்மை அறிவாரில்லை எனபதாம். இனிப் 'பயமிலர்' எனபதறகு, 'கல்விப் பயனுடையரலர' என்று உரைப்பாரும் உளர். (8)

கல்லா தவரின் கடனென்ப கற்றறிந்தும் நல்லா ரவையஞ்சு வார். 729

கற்று அறிநதும் நல்லார் அவை அஞ்சுவார் - நூலகளைக் கற்றுவைதததும அவற்றுல பயன் அறிநது வைதததும நலலார் இருநத அவையிலை அஞ்சி ஆண்டுச் சொலலாதாரை, கல்லாத வரின் கடை என்ப - உலகததார் கலலாதவரினும் கடையர் என்று சொலலுவர்.

அக்கலவியறிவுகளால் பயன் தாமும் எய்தாது பிறரை எய்து விப்பதும் செய்யாது கலவிதனபமே எய்திகிற்றலின், 'கலலாத வரின் கடை' என உலகம் பழிக்கும் என்பதாம். (9)

உளர்எனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக் கற்ற செலச்சொல்லா தார். 730

களன் அஞ்சிக் கற்ற செலச் சொல்லாதார்-அவைக்களத்தை அஞ்சித் தாம் கற்றவற்றை அதற்கு ஏற்கச் சொல்லமாட்டாதார்,

உளர் எனினும் இல்லாரொடு ஒப்பர் - உயிர் வாழ்கின்றாராயினும் உலகத்தாரால் எண்ணப்படாமையின் இறந்தாரோடு ஒப்பர்.

ஈண்டு, 'களன்' என்றது ஆண்டிருந்தாரை.

இவை ஐந்து பாட்டானும் அவை அஞ்சுவாரது இழிபு கூறப் பட்டது. (10)

74. நாடு

இனி, அவ் அரசனுலும் அமைச்சனுலும் கொண்டு உய்க்கப்படுவதாய ஏனை அரண் முதலிய அங்கங்கட்கு இன்றி யமையாச் சிறப்பிற்றாய நாடு பூ அதிகாரத்தாற கூறு கின்றார்.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வுஇலாச் செல்வரும் சேர்வது நாடு. 731

தளளா விளையுளும் - குன்றுத விளையுளைச் செய்வோரும், தக்காரும் - அறவோரும், தாழ்வு இலாச் செலவரும் - கேடு இல லாத செல்வமுடையோரும், சேர்வது நாடு - ஒருங்கு வாழ்வதே நாடாவது.

மற்றை உயர்திணைப் பொருளகளோடும் சேர்தல தொழி லோடும் இயையாமையின், 'விளையுள' என்பது உழுவர்மேல நின்றது. குன்றுமை - எலலா உணவுகளும் நிறைய உளவாதல். இதனன் வாழ்வார்க்கு வறுமையின்மை பெறப்பட்டது. அற வோர் - துறவுடோர, அந்தணர் முதலாயினர். "நற்றவஞ்செய் வார்க்கு இடம் தவம் செய்வோர்க்கும் அஃது இடம்" (சீவக. நாமக. 48) என்றார் பிறரும். இதனன் அழிவின்மை பெறப் பட்டது. கேடு இல்லாமை - வழங்கத் தொலையாமை. செல்வர் - கலத்தினும் காலினும் அரும்பொருள தரும் வணிகர். இதனன் அரசனுக்கும் வாழ்வார்க்கும் பொருள வாய்ததல் பெறப்பட்டது.

பெரும்பொருளால் பெள்ளக்கது ஆகி அருங்கேட்டான் ஆற்ற விளைவது நாடு. 732

பெரும்பொருளால் பெள்ளக்கது ஆகி - அளவிறந்த பொரு ளுடைமையால் பிற தேயத்தாரானும் விரும்பத் தக்கதாய், அருங் கேட்டால் ஆற்ற விளைவது நாடு-கேடின்மையோடு கூடி மிக விளை வதே நாடாவது.

அளவிறப்பு - பொருள்களது பன்மைமேலும் தனித்தனி அவற்றின் மிகுதிமேலும் நின்றது. கேடாவது. மிக்கபெயல், பெயலின்மை, வலி, விட்டில், கிளி, அரசண்மை என்றிவற்றன் வருவது. "மிக்கபெய லோடுபெய லின்மை எலிவிட்டில்கிளி - அக்கண் அரசண்மையோடு ஆறு." இவற்றை வடநூலார் ஈதிகள் என்ப. இவற்றுள் முன்னையவற்றது இன்மை அரசன் அறத தானும், பின்னையது இன்மை அவன் மறத்தானும் வரும். இவ் இன்மைகளான் மிக விளைவதாயிற்று. (2)

பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு இறைஒருங்கு நேர்வது நாடு. 733

பொறை ஒருங்கு மேல்வருங்கால தாங்கி - பிறநாடுகள பொறுத்த பாரமெல்லாம ஒருங்கே தன்கண் வருங்கால அவற றைத் தாங்கி, இறைவற்கு இறை ஒருங்கு நேர்வது நாடு - அதன் மேல் தன் அரசனுக்கு இறைப்பொருள முழுவதையும் உடம்பட்டுக் கொடுப்பதே நாடாவது.

பாரங்கள - மக்கள தொகுதியும் ஆன் எருமை முதலிய விலங் குத் தொகுதியும. தாங்குதல் அவை தத்தம தேயத்துப் பகை வந்து இறுதததாக, அரசு கோலகோடியதாக, உணவின்மை யானாகத தன்கண் வந்தால அவ்வததேயங்களைப்போல இனிதிருப் பச் செய்தல. அசசெயலால இறையைக் குறைபடுத்தாது தானே கொடுப்பதென்பார், 'இறை ஒருங்கு நேர்வது' என்றார். (3)

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராது இயல்வது நாடு. 734

உறு பசியும் - மிக்க பசியும், ஓவாப் பிணியும - நீங்காத நோயும், செறுபகையும சேராது - புறதது நின்றுவந்து அழிவு செய்யும் பகையும் இன்றி, இயலவது நாடு - இனிது நடப்பதே நாடாவது.

உறுபசி உழவருடைமையானும் ஆறற விளைதலானும சேரா தாயிற்று. ஓவாப்பிணி தீக் காற்று மிக்க குளிர வெப்பங்களும் நுகரப்படுமவற்றது தீமையும் இன்மையின் சேராதாயிற்று. செறு பகை அரசனாற்றலும நிலைப்படையும அடவியும அரணும உடை மையின் சேராதாயிற்று. (4)

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்துஅலைக்கும் கொல்குறும்பும் இல்லது நாடு. 735

பல் குழுவும் - சங்கேத வயததான் மாறுபட்டுக் கூடும் பல கூட்டமும், பாழ செய்யும் உட்பகையும - உடனுறையாநின்றே பாழாகச் செய்யும் உட்பகையும், வேநது அலைக்கும் கொல குறும பும் இல்லது நாடு - அளவு வந்தால் வேநதனை அலைக்கும கொல் வினைக்குறும்பரும் இலலாததே நாடாவது.

சங்கேதம் - சாதிபற்றியும கடவுள பற்றியும் பலர்க்கு உள தாம் ஒருமை. உட்பகை - ஆறலைப்பார். களவர், குறளைகூறுவார் முதலிய மக்களும், பன்றி, புலி, கரடி முதலிய விலங்குகளும். உட்பகை, குறும்பு என்பன ஆகுபெயர. இம் மூன்றும் அரசனா லும் வாழ்வாராலும் கடியப்பட்டு நடப்பதே நாடு என்பதாம. (5)

கேடுஅறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா நாடுஎன்ப நாட்டின் தலை. 736

கேடு அறியா - பகைவரால் கெடுதலறியாததாய், கெட்ட விடத்தும் வளம் குன்று நாடு - அரிதின் கெட்டதாயினும் அப் பொருதும் தன் வளங்குன்றுத நாட்டினை, நாடதன் தலை என்ப - எல்லாநாட்டினும் தலை என்று சொல்லுவர் நூலோர்.

அறியாத, குன்றுத என்னும் பெயரெச்சங்களின் இறுதிகிலே கள் விகாரத்தால் தொக்கன. கேடு அறியாமை அரசனுற்றலா னும் கடவூடபூசை அறங்கள என்றிவறறது செயலானும் வரும். வளம் - ஆகுபங்களிற் படுவனவும், வயலினும் தண்டலையினும வீனை வனவுமாம். குன்றுமை - அவை செயயவேண்டாமல இயல பாகவே உளவாயும் முன் ஈட்டப் பட்டும குறைவபடுதல.

இவை ஆறு பாட்டானும் நாடடது இலக்கணம் கூறப் பட்டது. (6)

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் வலஅரணும் நாட்டிற்கு உறுப்பு. 737

இருபுனலும் - கீழ்நீர் மேல் நீர் எனப்பட்ட தன்கண் நீரும், வாய்நதமலையும் - வாய்ப்புடைததாய மலையும், வருபுனலும் - அதனினின்றும் வருவதாய நீரும், வல்லரணம - அழியாத ஙகரியும், நாட்டிறகு உறுப்பு - நாட்டிற்கு அவயவமாம.

ஈண்டு 'புனல்' என்றது துறவு கேணிகளும் ஏரிகளும் ஆறு களுமாகிய ஆதாரங்களை, அவயவமாதற்குரியன அவையே ஆக லின். அவற்றுன் வானம் வறப்பினும வளனுடைமை பெறப பட்டது. இடையதன்றி ஒருபுடையதாகலும, தன்வளம் தருதலும மாரிக்கண் உண்டகீர கோடைக்கண் உபு பூதலும் உடைமைபற்றி 'வாயநத மலை' என்றார். அரண் - ஆகுபெயர்.

இதனுள் அதன் அவயவம் கூறப்பட்டது. (7)

பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம் அணிஎன்ப நாட்டிற்குஇவ் ஐந்து. 738

பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம் இவ் ஐந்து - நோயின்மையும் செல்வம் விளைதல் இன்பம் காவல என்றிவை உடைமையுமாகிய இவ் ஐந்தினையும, நாட்டிறகு அணி என்ப - நாட்டிற்கு அழகு என்று சொல்லுவர நூலோர.

பிணியின்மை - நிலநலததான் வருவது. செல்வம் - மேற சொல்லியன. இன்பம்-விழுவும் வேளவியுமசான்றோரும் உடைமை யானும், நுகவன உடைமையானும், நிலநீர்களது தன்மை யானும், வாழ்வார்க்கு உள நிகழுவது. 'காவல்' எனவே அரசன் காவலும் வாழ்வோர் காவலும் அரண் காவலும் அடங்கின.

பிற தேயங்களினுள்ளாரும் விழைந்து பின் அவையுடை ளாமைக்கு ஏதுவாய அதன் அழகு இதனைன் கூறப்பட்டது. (8)

நாடுஎன்ப நாடா வளத்தன நாடுஅல்ல
நாட வளந்தரும் நாடு. 739

நாடா வளத்தன நாடு என்ப - நம்கண் வாழ்வார் தேடி வருக் தாமல் அவர்பால் தானே அடையும் செல்வததை உடையவற்மற நூலோர் நாடு எனறு சொல்லுவர், நாட வளம் தரும் நாடு நாடு அல்ல - ஆதலால் தேடி வருந்தச் செல்வம் அடைவீக்கும் நாடுகள் நாடாகா.

நாடுதல் - இருவழியும் வருத்தத்தின் மேல் நின்றது. "பொருள செய்வார்க்கும் அஃது இடம்" என்றார் பிறரும். நூலோர் விதிபற்றி எதிர்மறை முகத்தால் குற்றம் கூறியவாறு. இவ்வாறன்றி 'என்ப' என்பதனைப் பின்னும் கூட்டி இருபொருள பட உரைப்பின், அனுவாதமாம். (9)

ஆங்குஅமைவு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
வேந்துஅமைவு இல்லாத நாடு. 740

வேந்து அமைவு இல்லாத நாடு - வேந்தனைடு மேவுதல் இல் லாத நாடு, ஆங்கு அமைவு எய்தியக் கண்ணும் பயம் இன்றே - மேற்சொல்லிய குணங்கள எல்லா வற்றினும் நிறைந்திருந்ததாயி னும் அவற்றால் பயனுடைத்தன்று.

'வேந்து அமைவு' எனவே, குடிகள அவன் மாட்டு அன்புடைய ராதலும் அவன்தான் இவர் மாட்டு அருளுடையனதலும அடங் கின. அவை இலவழி வாழுவோர் இன்மையின், அவற்றால் பயனின்றாயிற்று.

இவை இரண்டு பாட்டானும் அகன் நூற்றம் கூறப்பட்டது. ()

75. அரண்

இனி அந் நாட்டிற்கும் உறுப்பாய் அடங்குமாயினும், பகைவரால் தொலைவு வந்துழி அது தனக்கும் அரசன் தனக் கும் ஏம மாதற் சிறப்புப் பற்றிப் பிறிதோர் அங்கமாக ஓதப் பட்ட அரண் இவ் அதிகாரத்தால் கூறுகின்றார்.

ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள். 741

ஆற்றுபவர்க்கும் அரண் பொருள - மூவகை ஆற்றலுமுடை யராய்ப் பிறர்மேற் செல்வார்க்கும் அரண் சிறந்தது; அஞ்சித் தற்போற்றுபவர்க்கும் அரண் பொருள - அவையன்றித் தம்மேல் வருவார்க்கு அஞ்சித் தன்னையே அடைவார்க்கும் அரண் சிறந்தது.

பிறர்மேல் செல்லுங்கால் உரிமை பொருள முதலியவற்றைப் பிறனொருவன் வௌவாமல் வைத்துச் செல்லவேண்டுமாகலா னும், அப் பெருமை தொலைந்து இறுதி வந்துழிக் கடல் நடுவண்

உடைகலத்தார் போன்று ஏமங்காணாது இறுவராகலானும், ஆற்றுபவர்க்கும் போற்றுபவர்க்கும் அரண் பொருளாயிற்று. ஆற்ற உடையராயினும் அரண் இலவழி அழியும பாலராகலின், அவரை முற்கூறினார்.

இதனான் அரணினது சிறப்புக் கூறப்பட்டது. (1)

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடையது அரண். 742

மணி நீரும் மண்ணும் மலையும் அணி நிழற்காடும் உடையது அரண - மணிபோலும நிறததினையுடைய நீரும வெளளிடை நிலமும மலையும குளிரநத நிழலையுடைய காடும உடையதே அரணாவது.

எஞ்ஞான்றும் வற்றாத நீர் என்பார் 'மணி நீர்' என்றும, நீரும நிழலும் இலலா மருநிலம் என்பார் 'மண' என்றும, செறிநத காடு என்பார். 'அணி நிழற்காடு' என்றும் கூறினார். மதிற புறதது மருநிலம் பகைவர் அரண பற்றாமைப் பொருட்டு. நீரரண, நிலவரண, மலையரண, காடடரண என இயற்கையும செயற்கையுமாய இந நான்கு அரணும சூழப்படுவது அரண் என்பதாம. (2)

உயர்வு அகலம் திண்மை அருமை இந்நான்கின் அமைவுஅரண் என்றுஉரைககும் நூல. 743

உயாவு, அகலம், திண்மை, அருமை இந நான்கின் அமைவு - உயாசசியும, அகலமும், திண்மையும, அருமையும என்று சொல்லப்பட்ட இந நான்கின் மிகுதியையுடைய மதிலை, அரண என்று உரைக்கும நூல - அரண என்று சொலலுவாா நூலோா.

'அமைவு', 'நூல' என்பன ஆகுபெயா. உயாவு - ஏணியெய்தாதது. அகலம - புறததோாககு அகழலாகா அடியகலமும், அகததோாக்கு நின்று வினை செயயலாம தலையகலமும. திண்மை - கல இட்டிகைகளாற் செய்தலின் குததப்படாமை. அருமை - பொறிகளான் அணுகற்கு அருமை. பொறிகளாவன "வளைவிற் பொறியும் மயிற்செறி நிலையும், கருவிரலூகமும் கலலுமிழ கவணும, பரிவுறு வெந் நெயும் பாகடு குழிசியும், காய் பொன உலையும் கலலிடு கூடையும், தூண்டிலும் துடக்கும ஆண்டலையடுப்பும், கவையும் கழுவும் புதையும் புழையும், ஐயவிததுலாமும கைபெயரூசியும சென்றெறி சிரலும் பன்றியும் பணையும், எழுவும் சீப்பும் முழுவிறற் கணையமும், கோலும குந்தமும வேலும சீலமும்" (சிலப். அடைக். 207-216) என்றிவை முதலாயின. (3)

சிறுகாப்பின் பேர்இடத்தது ஆகி உறுபகை ஊக்கம் அழிப்பது அரண். 744

சிறு காப்பின் பேர் இடத்தது ஆகி - காக்க வேண்டும் இடம் சிறிதாய் அகன்ற இடத்தை உடைத்தாய், உறு பகை ஊக்கம் அழிப்பது அரண் - தன்னை வந்து முற்றிய பகைவரது மன எழுச்சியைக் கெடுப்பதே அரணாவது.

வாயிலும் வழியும் ஒழிந்த இடங்கள மலை, காடு, நீர்நிலை என்றிவற்றுள ஏற்பன உடைத்தாதல் பற்றி 'சிறுகாப்பின்' என்றும், அகத்தோர் நலிவின்றியிருத்தல பற்றி 'பேரிடத்து ஆகி' என்றும், தம் வலி நோக்கி இதுபொழுதே அழிததும் என்று வரும் பகைவர் வந்து கண்டால அவ்வூக்கமொழிதல பற்றி, 'ஊக்கம் அழிப்பது' என்றும் கூறினார் (4)

கொளற்கு அரிதாய்க் கொண்டகூழ்த்து ஆகி அகத்தார்
நிலைக்கு எளிதாம நீரது அரண். 745

கொளறகு அரிதாய் -புறத்தாரால கோடற்கு அரிதாய், கொண்டது கூழதது ஆகி - உட்கொண்ட பலவகை உணவிறறாய், அகத்தார் நிலைக்கு எளிதாம் நீரது அரண் - அகததாரது போர் நிலைக்கு எளிதாய நீர்மையையுடையதே அரணாவது.

கோடறகு அருமை இளை கிடங்குகளானும, பொறிகளானும், இடங்கொளளுதற்கு அருமை. உணவு தலைமைபறறிக் கூறினமையின், மற்றுளள நுகரப்படுவனவும் அடங்கின. நிலைக்கு எளிதாம் நீர்மையாவது அகததார் விட்ட ஆயுதம் முதலிய புறததார்மேல் எளிதிற் சேறலும், அவர்விட்டன அகததாரமேல் செலலாமையும், பதணப் பரபபும முதலாயின. (5)

எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துஉதவும்
நல்லாள் உடையது அரண். 746

எலலாப் பொருளும உடைத்தாய - அகததோர்க்கு வேண்டும் பொருளகள எலலாவற்றையும் உளளே உடைததாய, இடத்து உதவும் நலலாள உடையது அரண் - புறததோரால அழிவெயதும எலலைக்கண் அஃது எய்தாவகை உதவிக் காக்கும நலல வீரரையும் உடையதே அரணாவது.

அரசன்மாடடு அன்பும் மானமும மறமும் சோர்வின்மையும முதலிய நற்குணஙகள உடைமைபற்றி, 'நல்லாள' எனறார். (6)

முற்றியும் முற்றாது எறிந்தும் மறைப்படுததும்
பற்றற்கு அரியது அரண். 747

முற்றியும – புகலொடு போக்கு ஒழியும் வகை நெருங்கிச் சூழந்தும், முற்றாது எறிநதும் - அங்ஙனம் சூழாது நெகிழந்த இடன் நோக்கி ஒருமுகமாகப் பொருதும், அறைப்படுததும் - அகததோரை அவர் தெளிநதோரைவிட்டுக் கீழறுததுத் திறப்பிததும், பற்றற்கு அரியது அரண் - புறத்தோராற் கொளளுதறகு அரியதே அரணாவது.

இம் மூன்று உபாயத்துள்ளும் முதலாவது எல்லாப் பொருளும் உடைமையானும், ஏனைய நல்லாளுடைமையானும், வாயாவாயின. (7)

முற்றுஆற்றி முற்றி யவரையும்பற்று ஆற்றிப் பற்றியார் வெல்வது அரண். 748

முற்று ஆற்றி முற்றியவரையும் - தானைப் பெருமையாற் சூழுதல் வல்லராய் வந்து சூழ்ந்த புறத்தோரையும், பற்றியார் பற்று ஆற்றி வெலவது அரண்-தன்னைப்பற்றிய அகதோர்தாம் பற்றிய இடம் விடாதே நின்று பொருது வெலவதே அரணவன.

உம்மை - சிறப்பும்மை. பற்றின்கண்ணே ஆற்றி என விரியும். பற்று – ஆகு பெயர். 'வெல்வது' என உடையார் தொழில அரண்மேல் நின்றது. பெரும்படையானைச் சிறுபடையான் பொறுத்து நிற்கும் துணையேயன்றி வெலலும் இயல்பினது என் பதாம். இதற்குப் பிறிது உரைப்பாரும் உளர்.

இவை ஏழுபாட்டானும் அதனது இலக்கணம் கூறப்பட்டது.(8)

முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து வீறுஎய்தி மாண்டது அரண். 749

முனைமுகதது மாற்றலர் சாய வினைமுகத்து வீறு எய்தி - போர் தொடங்கின அளவிலே பகைவர் கெடும்வண்ணம் அகதோர் செய்யும் வினை வேறுபாடுகளான் வீறுபெற்று, மாண்டது அரண் – மற்றும் வேண்டும் ஆட்சியையுடையதே அரணவது.

தொடக்கத்திற் கெட்டார் பின்னுங் கூடிப் பொருதல கூடாமையின், 'முனைமுகததுச சாய' என்றார். வினை வேறுபாடுகளாவன பகைவர் தொடங்கிய போரினை அறிந்து எய்தல, எறிதல், குதது தல், வெட்டுதல் என்றிவை முதலாய வினைகளுள அதனைச் சாய்ப் பனசெய்தல். மற்றும் வேண்டும் ஆட்சியென்றது புறத்தோர் அறியாமற் புகுதல் போதல் செய்தற்குக் கண்ட சுருங்கை வழி முதலாயின உடைமை. (9)

எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் வினைமாட்சி இல்லார்கண் இல்லது அரண். 750

அரண் - அரண், எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் - மேற் சொல்லப்பட்ட மாட்சியெலலாம் உடைத்தாய விடததும், வினை மாட்சி இல்லார்கண் இல்லது – வினைசெய்தற்கண் மாட்சி இல்லாதார்மாட்டு அவையிலதாம்.

வாளாவிருத்தலும், அளவறியாது செய்தலும், தீலாதது செய்தலும் எல்லாம் அடங்க 'வினைமாட்சியில்லார்' என்றும் ஏற்ற வினையை அளவறிந்து செய்து காவாக்கால் அம்மாட்சிகளால் பயனின்றி அழியும் என்பார். 'அவையுடைத்தன்று' என்றும் கூறி

னார். இவை இரண்டு பாட்டானும் காப்பாரை இன்றியமையா தென்பது கூறப்பட்டது. (10)

76. பொருள் செயல் வகை

இவிப் பெரும்பான்மையும் நாட்டானும் அரணனும் ஆக்கவும் காக்கவும் படுவதாய பொருளைச் செய்தலின் திறம் இவ அதிகாரத்தாற் கூறுகின்றார்.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் பொருள்அல்லது இல்லை பொருள். 751

பொருள அலலவரைப் பொருளாகக் செய்யும் பொருளல் லது - ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் படுவாராகச் செய்ய வலல பொருளையொழிய, பொருள் இல்லை - ஒருவனுக்குப் பொருளாவதிலலை.

மதிக்கப்படாதார் - அறிவிலாதார், இழி குலததார். இழிவு சிறப்பு உம்மை விகாரததால் தொக்கது. மதிக்கப்படுவாராகச் செய்தல அறிவுடையாரும உயா குலததாரும் அவர்பாறசென்று நிற்கப் பண்ணுதல. அதனால ஈட்டப்படுவது அதுவே, பிறிதில்லை என்பதாம். (1)

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு 752

இல்லாரை எலலாரும் எளளுவர் - எலலா நன்மையும் உடைய ராயினும் பொருளிலலாரை யாவரும இகழவா, செல்வரை எல் லாரும சிறப்புச் செய்வா - எலலாத தீமையும் உடையராயினும அஃது உடையாரை யாவரும உயரச் செயவா.

உயரச் செய தல் தாம தாழாது நிற்றல. இகழ்தற்கண்ணும் தாழதற்கணணும் பகைவா, நட்டார, நொதுமலா என்னும மூவகையாரும ஒததலின், யாவரும என்றா. பின்னும் கூறியது அதனை வலியுறுதததற்பொருட்டு. (2)

பொருள்என்னும் பொய்யா விளக்கம் இருள்அறுக்கும் எண்ணிய தேயத்துச் சென்று. 753

பொருள என்னும பொய்யா விளக்கம - பொருள் என்று எல்லாராலும சிறப்பிக்கப்படும நநதா விளக்கு, எண்ணிய தேயதத்துச் சென்று இருள அறுக்கும் – தன்னை செய்தவர்க்கு அவர் நினைதத தேயததுச் சென்று பகை என்னும் இருளைக் கெடுக்கும்.

எலலார்க்கும் எஞ்ஞான்றும் இன்றியமையாததாய் வருதல் பற்றி, 'பொய்யா விளக்கம்' என்றும், ஏனைய [illegible]ளக்கோடு இத

னிடை வேற்றுமை தோன்ற 'எண்ணிய தேயத்துச் சென்று' என்றும் கூறினார். ஏகதேச உருவகம்.

இவை மூன்று பாட்டானும் பொருளது சிறப்புக் கூறப்பட்டது. (3)

அறன்ஈனும் இன்பமும்ஈனும் திறன் அறிந்து தீது இன்றி வந்த பொருள். 754

திறன் அறிந்து தீது இன்றி வந்த பொருள் - செய்யும் திறத்தினை அறிந்து அரசன் கொடுங்கோன்மையிலனாக உளதாய பொருள், அறன் ஈனும் இன்பமும் ஈனும் - அவனுக்கு அறத்தையும் கொடுக்கும், இன்பத்தையும் கொடுக்கும்.

செய்யுந்திறம் தான் பொருள் செய்தற்கு உரிய நெறி. 'இலனாக' என்பது 'இன்றி' எனத் திரிந்து நின்றது. செங்கோல் என்று புகழப்படுதலானும், கடவுட் பூசை தானங்களாற் பயனெய்தலானும், 'அறன் ஈனும்' என்றும், நெடுங்காலம் நின்று துய்க்கப்படுதலான், 'இன்பமும் ஈனும்' என்றும் கூறினார். அதனான் அத்திறத்தான் ஈட்டுக என்பதாம். (4)

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம் புல்லார் புரள விடல் 755

அருளொடும் அன்பொடும் வாராப் பொருள் ஆக்கம் - தாம் குடிகளமாட்டுச் செய்யும் அருளோடும் அவர் தம்மாட்டுச் செய்யும் அன்போடும் கூடி வாராத பொருளீட்டத்தை, புல்லார் புரள விடல் - அரசர் பொருந்தாது கழியவிடுக.

அவற்றோடு கூடி வருதலாவது ஆறிலொன்றாய் வருதல். அவ்வாறு வாராத பொருளீட்டம் பசுமட்கலத்து நீர்போலச் செய்தானையும் கொண்டு இறத்தலின், அதனைப் 'புல்லார்' என்று ஒழியாது 'புரளவிடல்' என்றும் கூறினார். (5)

உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த் தெறுபொருளும் வேந்தன் பொருள். 756

உறு பொருளும் - உடையாரின்மையின் தானே வந்துற்ற பொருளும், உல்கு பொருளும் - சுங்கமாகிய பொருளும், தன் ஒன்னார்த் தெறுபொருளும் - தன் பகைவரைத் திறையாகக் கொள்ளும் பொருளும், வேந்தன் பொருள் - அரசனுக்கு உரிய பொருள்கள்.

உறுபொருள் வைத்தார் இறந்துபோக நெடுங்காலம் நிலத்தின்கண் கிடந்து பின் கண்டெடுத்ததூஉம், தாயத்தார் பெறாததூஉமாம். சுங்கம் - கலத்தினும் காலினும் வரும் பண்டங்கட்கு இறையாயது. தெறு பொருள் தெறுதலான் வரும் பொருள் என விரியும். ஆறில் ஒன்று ஒழியவும் உரியன கூறியவாறு.

இவை மூன்று பாட்டானும் அஃது ஈட்டும் நெறி கூறப் பட்டது. (6)

அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள்என்னும் செல்வச் செவிலியால் உண்டு. 757

அன்பு ஈன் அருள் என்னும் குழவி - அன்பிலுல் ஈனப்பட்ட அருள என்னும் குழவி, பொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு - பொருள என்று உயர்த்துச் சொல்லப்படும் செல்வத்தை யுடைய செவிலியான் வளரும்.

தொடர்பு பற்றுதே வருத்தமுற்றார்மேல் செல்வதாய அருள் தொடர்பு பற்றிச் செல்லும் அன்பு முதிர்ந்துழி உளதாவதாகலின் அதனை 'அன்புஈன் குழவி' என்றும், அது வறியார் மேற்செல்வது அவ் வறுமை கனையவல்லார்க்காதலின் பொருளை அதற்கு 'செவிலி' என்றும், அஃது உலகிற் செவிலியர் போலாது தானே எல்லாப் பொருளும் உதவி வளர்த்தலின் 'செல்வச் செவிலி' என் றும் கூறினர். (7)

குன்றுஏறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்துஒன்று உண்டாகச் செய்வான் வினை. 758

தன் கைத்து உண்டாக ஒன்று செய்வான் வினை - தன் கைய தாகிய பொருளுண்டாக ஒரு வினையை எடுத்துக்கொண்டான் அதனைச் செய்தல், குன்று ஏறி யானைப்போர் கண்டற்று - ஒருவன் மலைமேல் ஏறி நின்று யானைப்போரைக் கண்டால் ஒக்கும்.

கைத்து உண்டாக ஒன்று செய்வான் எனக் கூட்டுக. 'ஒன்று' என்பது வினையாதல் 'செய்வான்' என்றதனாற் பெற் றும். குன்றேறியான் அச்சமும் வருத்தமும் இன்றி நிலத்திடை யானையும் யானையும் பொரு போரைத தான் இனிதிருந்து காணு மதுபோலக் கைத்து உண்டாக வினையை மேற்கொண்டானும் அச்சமும் வருத்தமும் இன்றி வல்லாரை ஏவித் தான் இனிதிருந்து முடிக்கும் என்பதாம். (8)

செய்க பொருளைச் செறுநர் செருக்குஅறுக்கும் எஃகு அதனிற் கூரியது இல் 759

பொருளைச் செய்க - தமக்கொன்றுண்டாகக் கருதுவார் பொருளை உண்டாக்குக; செறுநர் செருக்கு அறுக்கும் எஃகு - தம் பகைவர் தருக்கினை அறுக்கும் படைக்கலம் அதுவாம்; அதனிற் கூரியது இல் - அதற்கு அதுபோலக் கூரிய படைக்கலம் பிறிது இல்லை.

'அதுவாம்' 'அதற்கு' என்பன அவாய்நிலையான் வந்தன. பொருளைச் செய்யவே பெரும் படையும் நட்பும் உடையராவர்; ஆகவே, பகைவர் தருக்கு ஒழித்து தாமே அடங்குவர் என்பர்;

'செறுகர் செருக்கு அறுக்கும் எஃகு' என்றும், 'ஏஎ எஃகுகள் அதுபோல அருவப்பொருளை அறுக்கமாட்டாமையின் 'அதனிற் கூரியது இல்' என்றும் கூறினர். (9)

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள் ஏனை இரண்டும் ஒருங்கு 760

ஒண் பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு - நெறியான்வரும் பொருளை இறப்ப மிகப் படைத்தார்க்கு, ஏனை இரண்டும் ஒருங்கு எண்பொருள் - மற்றை அறனும் இன்பமும் ஒருங்கே எளிய பொருள்களாம்.

காழ்த்தல் : மூகிர்த்தல். பயன்கொடுத்தல்லது போகாமையின் ஒண்பொருள் என்றும், ஏனை இரண்டும் அதன் விளைவாகலின் தாமே ஒருகாலத்திலேஉளவாம் என்பார் 'எண்பொருள்' என்றும் கூறினர்.

இவை நான்கு பாட்டானும் அதனால் வரும் பயன் கூறப் பட்டது. (10)

77. படை மாட்சி

இனி அப்பொருளினால் ஆவதாய் வெல்வதாய படை இரண்டு அதிகாரத்தாற் கூறுவான் தொடங்கி, முதற்கண 'படை மாட்சி' கூறுகின்றார். அஃதாவது படையினது நன்மை.

உறுப்பு அமைந்து ஊறு அஞ்சா வெல்படை வேந்தன் வெறுக்கையுள் எல்லாம் தலை. 761

உறுப்பு அமைந்து ஊறு அஞ்சா வெல்படை - யானை முதலிய நான்கு உறுப்பானும் நிறைந்து போரின்கண் ஊறு படுதற்கு அஞ்சாது நின்று பகையை வெல்வதாய படை, வேந்தன் வெறுக்கையுள் எல்லாம் தலை - அரசன் செல்வங்களை எல்லா வற்றுள்ளும் தலையாய செல்வம்.

ஈண்டு 'படை' என்றது அங்நான்கன் தொகுதியை. ஊறு அஞ் சியவழி வேறல் கூடாமையின், 'ஊறு அஞ்சா' என்றும் ஒழித்த அங்கங்கட்கும் அரசன் தனக்கும் காவலாகலின் 'வெறுக் கையுள் எல்லாம் தலை' என்றும் கூறினர். (1)

உலைவிடத்து ஊறு அஞ்சா வன்கண் தொலைவிடத்துத் தொல்படைக்கு அல்லால் அரிது. 762

தொலைவிடத்து உலைவிடத்து ஊறு அஞ்சா வன்கண் - தான் சிறியதாய வழியும் அரசர்க்குப் போரின்கண் உலைவு வந்தால் தன் மேலுறுவதற்கஞ்சாது நின்று தாங்கும் வன்கண்மை, தொல் படைக்கல்லால் அரிது - அவன் முன்னோரைத் தொடங்கிவரும் படைக்கல்லது உளதாகாது.

இழிவு சிறப்பு உம்மை விகாரத்தால் தொக்கது. மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப் புடை என்னும் அறுவகைப்படையுள்ளும் சிறப்புடையது மூலப் படையாகலான், அதனை அரசன் "வெல்பொறியும் நாடும் விழுப் பொருளும் தண்ணடையும் — கொல்களிறும் மாவும் கொடித் தளிக்க" (பு. வெ. மா. தும்பை. 2) என்பது குறிப்பெச்சம். இப் படையை வடநூலார் மௌலம் என்ப. (2)

ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும். 763

எலிப்பகை உவரி ஒலித்தக்கால் என்னும் - எலியாய பகை நிரண்டு கடல் போல ஒலித்தால் நாகத்திற்கு என்ன ஏதம் வரும், நாகம் உயிர்ப்பக் கெடும் – அந் நாகம் உயிர்த்த துணையானே அதுதானே கெடும்.

உவமைச் சொல் தொக்கு நின்றது. இத்தொழில் உவமத் தால் நிரட்சி பெற்றும். வீரரலலாதார் பலர் நிரண்டு ஆர்த்தால் அதற்கு வீரன் அஞ்சான் அவன் கிளர்ந்த துணையானே அவர் தாம் கெடுவர் என்பது தோன்ற நின்றமையின், இது 'பிறிது மொழிதல்' என்னும் அலங்காரம். வீரரல்லாதார் பலரினும் வீரரொருவனே ஆளதல் நன்று என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் முறையே அரசனுக்குப் படை ஏணையங்களுள ளை சிறந்தது என்பதூஉம், அது தன்னுள்ளும் மூலப்படை சிறந்தது என்பதூஉம், அது தன்னுளளும் வீரன் சிறந்தான் என்பதூஉம் கூறப்பட்டன. (3)

அழிவின்று அறைபோகாது ஆகி வழிவந்த
வன்க ணது வே படை. 764

அழிவு இன்று - போரின்கண் கெடுதல் இன்றி, அறைபோகா தாகி - பகைவரால கிழறுக்கப்படாததாய், வழிவந்த வன்கணதுவே படை - தொன்றுதொட்டு வந்த தறுகண்மையை உடையதே அரசனுக்குப் படையாவது.

அழிவின்மையான் மற மானங்கள உடைமையும், அறை போகாமையான் அரசன் மாட்டு அன்புடைமையும் பெறப்பட்டன. வழிவந்த வன்கண்மை "கல்நின்றான் எந்தை கணவன் களப்பட் டான், முன்னின்று மொய்யவிந்தார் என் ஐயர் - பின்னின்று, கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி, எய்போற் கிடந்தான் என் ஏறு." (பு. வெ. மா. வாகை. 22) என்பதனால் அறிக. குறியலுகரத்தின் முன்னர் உடம்படுமெய் விகாரத் தான் வந்தது. இது வருகின்றபாட்டுள்ளும் ஒக்கும். (4)

கூற்றுஉடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை. 765

கூற்று உடன்று மேல்வரினும்-கூற்றுவன்தானே வெகுண்டு மேல் வந்தாலும், கூடி எதிர் நிற்கும் ஆற்றலுடையதே படை-சென்று ஒத்து எதிர்நின்று தாக்கும் ஆற்றலையுடையதே படையாவது 'மருக்கில் கூற்று' ஆகலின்,(புற.கா. 3) உம்மை சிறப்பும்மை. மிகப்பலர் நெஞ்சொத்தற்குக் காரணம் அரசன்மேல் அன்பு. ஆற்றல் - மனவலி. (5)

மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு. 766

மறம் மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம் என நான்கே - தறுகண்மையும், மானமும், முன் வீரராயினர் சென்ற நன்னெறிக் கண் சேறலும், அரசனல் தேறப்படுதலும் என இந் நான்கு குணமுமே, படைக்கு ஏமம் - படைக்கு அரணவது.

இவற்றுள் முறையே பகைவரைக் கடிதிறகொன்று நிற்றலும், அரசனுக்குத் தாழ்வு வராமற் காத்தலும், "அழியுநர்புறக் கொடை அயில்வாளோச்சா" (பு.வெ.மா. வஞ்சி. 20) மை முதலியவும், அறைபோகாமையும் ஆகிய செய்கைகள பெறப்பட்டன. இச் செய்கையார்க்குப் பகைவர் நணுகாராகலின், வேறு அரண் வேண்டா என்பதாம். (6)

தார்தாங்கிச் செல்வது தாணை தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து 767

தலைவந்த போர் தாங்கும் தன்மை அறிந்து - மாற்றரால் வருக்கப்பட்டுத் தன் மேல் வந்த படையின்போரை விலக்கும் வகுப்பு அறிந்து வகுத்துக்கொண்டு, தார தாங்கிச் செல்வது தாணை அவர் தாரிசையைத் தன்மேல் வராமல தடுத்துத தான் அதன்மேற் செல்வதே படையாவது.

படைவகுப்பாவது:- வியூகம். அஃது எழுவகை உறுப்பிற்றாய், வகையான் நான்காய், விரியான் முப்பதாம். உறுப்பு ஏழாவன: உரம் முதல் கோடி ஈறுயின. வகை நான்காவன தண்டம், மண்டலம், அசங்கதம், போகம் என இவை. விரி முப்பதாவன. தண்டவிரி பதினேழும், மண்டல விரி இரண்டும், அசங்கத விரி ஆறும் போக விரி ஐந்தும் என இவை. இவற்றின் பெயர்களும் இலக்கணமும் ஈண்டு உரைப்பின் பெருகும், அவை எல்லாம் வடநூல்களுள கண்டு கொள்க.

இவை நான்கு பாட்டானும் படையினது இலக்கணம் கூறப்பட்டது. (7)

அடல்தகையும் ஆற்றலும் இல்எனினும் தாணை
படைத்தகையால் பாடு பெறும். 768

தாணை - தாணை, அடல்தகையும் ஆற்றலும் இல் எனினும் யானை மேல் தான் சென்று அடும் தறுகண்மையும் அது தன்

மேல் வந்தால் பொறுக்கும் ஆற்றலும் இல்லையாயினும், படைத் தகைமையால் பாடு பெறும் - தன் தோற்றப்பொலிவானே பெருமை எய்தும்.

'இல்லெனினும்' எனவே, அவற்றது இன்றியமையாமை பெறப்பட்டது. 'படைத் தகை' என்றது ஒரு பெயர் மாத்திரமாய் நின்றது. தோற்றப் பொலிவாவது அலங்கரிக்கப்பட்ட தேர், யானை, குதிரைகளுடனும் பதாகை, கொடி, குடை, பல்லியம், காகளம் முதலிய வற்றுடனும் அணிந்து தோன்றும் அழகு. பாடு: கண்ட அளவிலே பகைவர் அஞ்சும் பெருமை. (8)

சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும் இல்லாயின் வெல்லும் படை. 769

சிறுமையும் செலலாத துனியும் வறுமையும் இல்லாயின்– தான் தேய்ந்து சிறிதாகலும் மனதினின்று நீங்காத வெறுப்பும் கல்குரவும் தனக்கு இலலையாயின், படை வெல்லும் - படை பகையை வெல்லும.

விட்டுப்போதலும் நின்றது நலகூர்தலும அரசன் பொருள் கொடாமையான் வருவன. செலலாத துனியாவது மகளிரை வெளவல், இளிவபவாயினசெய்தல முதலியவற்றுன் வருவது. இவையுளவழி அவன் மாட்டு அன்பு இன்றி உற்றுப்பொரா மையின், 'இல்லாயின் வெலலும்' என்ருர். (9)

நிலேமக்கள் சால உடைத்துஎனினும் தாணே தலேமக்கள் இல்வழி இல் 770

நிலே மக்கள சால உடைத்து எனினும - போரின் கண் நிலே புடைய வீரரை மிகஉடைததேயாயினும, தலேமக்கள இல்வழித் தாணே இல - தனக்குத் தலேவராகிய வீரர் இலலாத வழித தாணே நில்லாது.

படைததலேவர் நிலேயுடையரன்றிப் போவாராயின் காண் போர் இல்லெனப் பொராது தானும போம் என்பார், 'தலேமக் கள் இல் வழி இல்' என்ருர்.

இவை மூன்று பாட்டானும் முறையே படைத்தகையின்மை யானும் அரசன் கொடைத தாழுவுகளானும, தலேவர் இன்மை யானும் தாழ்வு கூறப்பட்டது. (10)

78. படைச் செருக்கு

அஃதாவது அப்படையது மறமிகுதி. அதிகார முறை மையும் இதனனே விளங்கும்.

என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்ஐ முன்நின்று கல்நின் றவர். 771

தெவ்விர் என் ஐ முன் நின்று கல் நின்றவர் பலர்-பகைவீர்! இன்று இங்கு என் தலைவன் எதிர் போரேற்று நின்று அவன் வேல்வாய் வீழ்ந்து பின் கல்லின் கண்ணே நின்ற வீரர் பலர்; என் ஐ முன் நில்லன்மின் – நீவிர் அதன் கண் இன்றி நும் உடற் கண் நிற்றல் வேண்டின், என் தலைவனெதிர் போரேற்று நிற்றலை ஒழிமின்.

'என்ஐ' யெனத் தன்னொடு தொடர்புபடுத்துக் கூறினமை யின் அவன் வேல்வாய் வீழ்தல் பெற்றும். கல் - நடுகல். "கம்பன் சிலைவாய் நடக்குங்கணை மிச்சில் அல்லால - அம்பொன் முடிப்பூண் அரசுமிலை" (சீவக. காந்தருவ. 317) எனப் பதுமுகன் கூறினாற்போல, ஒருவீரன் தன் மறம் அரசன்மேல்வைத்துக் கூறியவாறு. இப்பாட்டு 'நெடுமொழிவஞ்சி' (1)

கான முயல்எய்த அம்பினில் யாஅ
பிழைத்தவேல் ஏந்தல் இனிது. 772

கான முயல் எய்த அம்பினில - கானகத்தின்கண் ஓடும் முயலைப் பிழையாமல் எய்த அம்பை ஏந்தலினும், யாஅ பிழைத்த வேல் ஏந்தல் இனிது - வெளளிடை நின்ற யானையை எறிந்து பிழைத்த வேலை ஏநதுதல் நன்று.

'கானமுயல்' என்றதனால் வெளளிடைநின்ற என்பதும், 'பிழைத்த' என்றதனால் பிழையாமல என்பதும், முயற்குத் தக 'எய்த' என்றதனால் யானைக்குதக்க எறிதலும வருவிக்கப்பட்டன. இது மாற்றரசன் படையொடு பொருதாலோ வீரன் அது புறங் கொடுத்ததாக நாணிப் பின் அவன் தன்மேற செலலலுற்றனது கூற்று. (2)

பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றுஅதன் எஃகு. 773

தறுகண் பேராண்மை என்ப - பகைவர்மேற் கண்ணோடாது செய்யும் மறத்தை நூலோர் மிக்கஆணதன்மையென்று சொல லுவர், ஒன்று உற்றக்கால் ஊராண்மை அதன் எஃகு (என்ப) - அவர்க்கு ஒருதாழ்வு வநததாயின் கண்ணோடி அது தீர்த்துக் கோடற்பொருடடு ஊராணமை செய்தலை நூலோர் அதற்குக் கூர்மை என்று சொல்லுவர்.

'என்ப'என்பது பின்னும் இயைநதது. ஊராண்மை - உப காரியாரம்தன்மை. அஃதாவது இலங்கையர்வேநதன் போரிடைத் தன் தாணை மூழுதும்படத் தமியனாய் அகப்பட்டனது நிலமை நோக்கி, அயோத்தியர் இறை மேற்செல்லாது, 'இன்றுபோய் நாளை நின் தாணையோடு வா'என விட்டாற்போல்வது. இவை இரண்டு பாட்டும் தழிஞ்சி. (3)

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். 774

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன் - கைப் படையாய வேலைத் தன்மேல்வந்த களிற்றோடு போக்கி வருகின்ற களிற்றுக்கு வேல் நாடித்திரிவான், மெய் வேல் பறியா நகும் - தன் மார்பின்கண் நின்ற வேலைக் கண்டு பறித்து மகிழும்.

களிற்றொடு போக்கல் - களிற்றினது உயிரைக் கொடுபோமாறுவிடுதல். மகிழ்ச்சி, தேடியதெய்தலான். இதனுள் களிற்றையல்லது எறியான் என்பதூஉம், சினமிகுதியான் வேலிடைபோழ்ந்தது அறிந்திலன் என்பதூஉம், பின்னும் போர்மேல் விருப்பினன் என்பதூஉம் பெறப்பட்டன. நூழிலாட்டு. (4)

விழித்தகண் வேல்கொண்டு எறிய அழித்துஇமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு 775

விழித்த கண் - பகைவரை வெகுண்டு நோக்கிய கண், வேல் கொண்டு எறிய அழிதது இமைப்பின் - அவர் வேலைக்கொண்டு எறிய அஃது ஆற்றாது அந் நோக்கை அழித்து இமைக்குமாயின், வன்கணவர்க்கு ஓட்டு அன்றோ - அது வீரர்க்குப் புறங்கொடுத்தலாம்.

அவ் வெகுளிநோக்கம் மீட்டலும் போரின்கண் மீட்சி எனக் கருதி அதுவும் செய்யார் என்பதாம். (5)

விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து. 776

தன் நாளை எடுதது - தனக்குச் சென்ற நாளகளையெடுத்து எண்ணி, விழுப்புண் படாத நாளெலலாம் வழுக்கினுளவைக்கும- அவற்றுள விழுப்புண்படாத நாளகளையெலலாம் பயன்படாது கழிந்தநாளுளளே வைக்கும வீரன்.

விழுபபுண் முகததினும் மாரபினும பட்டபுண். போரபெறறிருக்கவும, அது பெறாத நாளகளோடும கூட்டும என்பதாம.

இவை மூன்று பாடடானும ஊறஞசாமை கூறபபடடது. (6)

சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து. 777

சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார் - துறக்கத்துத் தம்மொடு செல்லாது வையத்தைச் சூழந்து நிறகும் புகழை வேண்டி உயிர்வாழ்தலை வேண்டாத வீரா, கழல் யாப்புக் காரிகை நீர்த்து - கழல்கட்டுதல் அலங்கார நீர்மையை உடைத்து.

'வையத்தைச் சூழும்' எனவே, அதன் பெருமை பெற்றாம். செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. சூழல் - அகத்திடல்.

துறக்கமும் புகழும் எளிதின் எய்துவராகலின், ஆபரணமாவது அதுவே என்பதாம். (7)

உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர். 778

உறின் உயிர் அஞ்சா மறவர் - போர்பெறின் தம்முயிர்ப் பொருட்டு அஞ்சாது அதன் மேற்செல்லும் வீரர், இறைவன் செறினும் சீர் குன்றல் இலர் - தம் இறைவன் அதுவேண்டா என்று முனியினும் அவ் வீரமிகுதி குன்றார்.

போர்பெற்று அறியாமையின், அது பெற்றால் அரசன்தடுப் பினும் நில்லார் என்பதாம். பிறரும் "போரெனிற் புகலும் புதிய கழல் மறவர்" (புறநா. 31) என்றும் "புட்பகைக்கு ஏவா னாகலின் சாவேம் யாம் என - நீங்கா மறவர் வீங்குதோள புடைப்ப" (புறநா. 68) என்றும் கூறினர். (8)

இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே
பிழைத்தது ஒறுக்கிற் பவர். 779

இழைத்தது இகவாமைச் சாவாரை-தாம் கூறின வஞ்சினம் தப்பாமற் பொருட்டுச் சென்று சாவ வல்ல வீரரை, பிழைத்தது ஒறுக்கிற்பவர் யார் - அது தப்பியவாறு சொல்லி எளிஞற்குரியர் யார் யாவர்?

இழைததல் - இன்னது செய்யேனியின் இன்னனுகுக எனத் தான் வகுத்தல். 'சொல்லி' என்பது அவாய்நிலையான் வந்தது. வஞ்சினமுடிப்பான் புக்கு முன்னே சாவினும்தொலைவன்மையின், அதுமுடித்தாராவா எனச் சாதற்சிறப்புக் கூறியவாறு. (9)

புரந்தார்கண் நீர்மல்கச் சாகற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து. 780

புரந்தார் கண் நீர் மல்கச் சாகற்பின் - தமக்குச் செய்த கன்றிலீன நினைந்து ஆண்டஅரசர் கண்கள் நீர் மல்கும்வகை போரிடைச் சாவப்பெறின், சாக்காடு இரந்துகோள் தக்கது உடைதது - அச் சாக்காடு இரந்தாயினும் கொள்ளுந்தகுதியை உடைத்து.

மல்குதலாகிய இடத்து நிகழ்பொருளின் தெளிவில் இடத்தின் மேல் நின்றது. கிளைஅழ இலலிடை நோயால் விளிவார் பழ வினைப் பயனேயெய்தலின், அடுத்தவினையால் துறக்கமெய்தும் சாதலே 'இரந்துகோள் தக்கது உடைத்து' என்றார்.

இவை நான்கு பாட்டானும் உயிர் ஓம்பாமை கூறப்பட்டது.

79. நட்பு

இனி அப் படைபோல அரசனுக்கு வினையிடத்து உதவுவதாய நட்பினை ஓத்து அதிகாரம் விதிமுகத்தானும், பன்னிரண்டு அதிகாரம் எதிர்மறைமுகத்தானும் கூறுவான் தொடங்கி, விதிமுக அதிகாரம் ஐந்தனுள்ளும் முதற்கண் நட்புக் கூறுகின்றார். அஃதாவது இன்னதுஎன்பதூஉம் அதிகார முறைமையும் இதனுள் விளங்கும்.

செயற்குஅரிய யாவுள நட்பின் அதுபோல் வினைக்குஅரிய யாவுள காப்பு. 781

நட்பின் செயற்கு அரிய யா உள - நட்புப்போலச் செய்து கோடற்கு அரிய பொருளுகள யாவை உள?, அதுபோல் வினைக்கு அரிய காப்பு யா உள - செய்து கொண்டாலீ அதுபோலப் பகைவர் செய்யும் வினைக்குப் புகற்கு அரிய காவலாவன யாவை உன?

நட்புச்செய்தற்கு ஆவாரைப் பெறுதலும், பெற்றால் செய்யும் உபாயமும், செய்தால் நிரிபின்றி நிற்றலும் முதலிய அரிய ஆகலின், நட்பின் செயற்கு அரியன 'இலவீ'என்றும், செய்தால் பகைவரஞ்சி வினைதொடங்காராகலின், 'அதுபோல வினைவாராமைக்கு அரிய காவல் இல்லீ'என்றும் கூறினர். நட்புத்தான்இயற்கைசெயற்கைஎனஇருவகைப்படும். அவற்றுள, இயற்கை பிறப்பு முறையானையூஉம, தேயமுறையானையூஉம் என இருவகைப் படும். அவற்றுள முன்னியது சுற்றமாகலின், அது 'சுற்றத்தழா'வின் அடங்கிற்று, ஏனையது பகையிடைவிட்ட தேயத்ததாகலின், அது துணைவலி என 'வலியறிதலுள' அடங்கிற்று.

இனி, ஈண்டுச் சொலலப்படுவது முன்செய்த உதவிபற்றி வருஞ் செயற்கையேயாகலின், அதன் சிறப்பு இதனுள் கூறப் பட்டது. (1)

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்நீர பேதையார் நட்பு. 782

நீரவர் கேண்மை பிறை நிறை நீர - அறிவுடையார் நட்புக்களை பிறை நிறையுந்தன்மைபோல நாளதோறும் நிறையுநதன்மை யவாம்; பேதையூஆ நட்பு மதிப் பின் நீர - மற்றைப் பேதைமை யுடையார் நட்புக்களை நிறைந்தமதி பின் குறையுந்தன்மைபோல நாள்தோறும் குறையுந தன்மையனவாம்.

'நீரவர்' எனினும், இனிமைபற்றி. கேண்மை, நட்பு என்பன ஒருபொருட்கிளவி. செய்தாரது பன்மையான் நட்பும் பலவாயின. அறிவுடையாரும் அறிவுடையாரும் செய்தன முன்சுருங்கிப் பின் பெருகற்கும், பேதையாரும் பேதையாரும் செய்தன முன்

பெருஇப் பின் சுருங்கற்கும் காரணம் தம்முள் முன் அறியாமையும் பின் அறிதலும்ஆம். (2)

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடை யாளர் தொடர்பு. 783

பண்பு உடையாளர் தொடர்பு பயில்தொறும்-நற்குணமுடைய மக்கள் தம்முள செய்த நட்புப் பயிலுந்தோறும அவாக்கு இன் பஞ்செய்தல, *நூல நவிலதொறும் நயம்போலும்* - நூற்பொருள கற்குந்தோறும் கற்றார்க்கு இன்பஞ்செய்தலே ஒக்கும்.

நயத்தினைச் செய்தலான் 'நயம்'எனப்பட்டது. இருமையினும் ஒருகாலைக் கொருகால் மிகும் என்பதாம்.

இவை இரண்டு பாட்டாலும் அச்சிறப்பிற்கு ஏது கூறப்பட்டது. (3)

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு. 784

நட்டல் நகுதற்பொருட்டன்று - ஒருவனேடு, ஒருவன் நட்புச் செய்தல் தம்மை நகுதற்கு இயைந்தன சொல்லி நகையாடற் பொருட்டன்று; *மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற்பொருட்டு* - அவர்க்கு வேண்டாதசெய்கைகளதாயவழி முற்பட்டுக் கழுதற் பொருட்டு.

பழியும் பாவமும் தரும்செய்கை தன்பமே பயத்தலான் வேண்டப்படுவதன்மையின், அதனை 'மிகுதி'என்றும், அதுசெய்தற்கு முன்னே மீட்டலவேண்டுதலின், 'மேற்சென்று'என்றும், இன்சொற்கு மேலாமையின், 'இடித்தற்பொருட்டு' என்றும் கூறினர்.

இதனால் நட்பின் பயன் கூறப்பட்டது. (4)

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும். 785

புணர்ச்சி பழகுதல் வேண்டா - ஒருவனேடு ஒருவன் நட்பாதற்குப் புணர்ச்சியும் பழகுதலுமாகிய காரணங்கள வேண்டுவதில்லை, *உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்* - இருவர்க்கும ஒத்தஉணர்ச்சிதானே நட்பாம் உரிமையைக் கொடுக்கும்.

புணர்ச்சி - ஒருதேயத்தாராதல, "இன்னே போல்க நும் புணர்ச்சி" (புறநா. 58) என்றதும் அதனை. பழகுதல் - பலகால கண்டும் சொல்லாடியும் மருவுதல். இவ் இரண்டும் இன்றிக் கோப் பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும்போல உணர்ச்சியொப்பின், அதுவே உடன் உயிர்நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும் என்பதாம் (புறநா. 217).

நட்பிறகுப் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சியொத்தல் என்னும் காரணம் மூன்றனுள்ளும் பின்னது சிறப்புடைத்து என்பது இதனுள் கூறப்பட்டது. (5)

முகம்நக நட்பது நட்புஅன்று நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு. 786

முகம் நக நட்பது நட்பு அன்று - கண்டவழி அகமொழிய முக மாத்திரமே மலரும்வகை நட்புமது நட்பாகாது, நெஞ்சத்து அகம் நக நட்பது நட்பு - அன்பால அகமும் மலர நட்புமதே நட்பாவது.

நெஞ்சின்கண் நிகழ்வதனை 'நெஞ்சு'என்றார். இறந்தது தழீஇய எச்ச உம்மை விகாரத்தால் தொக்கது. இதனுள் இரண்டும் ஒருங்கே மலரவேண்டும் என்பது பெற்றும். (6)

அழிவி னவைநீக்கி ஆறுஉய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு. 787

அழிவினவை நீக்கி ஆறு உய்த்தது - கேட்டினைததரும் தீநெறிகளைச் செலலுங்கால விலக்கி, ஏனை நன்னெறிகளைச் செல்லாக் காற் செலுதகி, அழிவின்கண் அலலல உழப்பது நட்பாம் - தெய்வததால கேடுவநதுழி அது விலக்கப்படாமையின் அத துன்பத்தை உடன் அனுபவிப்பதே ஒருவனுக்கு நட்பாவது.

'ஆறு'என வருகின்றமையின், 'அழிவினைததரும்வை' என்றெழிந்தார். "தெருண்ட அறிவினவா" (நாலடி 307) என்புழிப் போல இன்சாரியை நிறக இரண்டனுருபு தொக்கது. இனி, வவை என்று பாடமுதி, அதற்குப் போா அழிவினும செலவ அழிவினும் வநத துன்பங்கள என்றும, 'அழிவின்கண்' என்பதற்கு 'யாக்கை அழிவின்கண்'என்றும் உரைப்பாரும் உளர. (7)

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 788

உடுக்கை இழந்தவன் கைபோல - அவையிடை ஆடைகுலைக் தவனுக்கு அப்பொழுதே கைசென்று உதவி அவ்விளிவரல் களையு மாறுபோல, ஆங்கே இடுக்கண் களைவது நட்பாம் - நட்டவனுக்கு இடுக்கண் வநதுழி அப்பொழுதே சென்று உதவி அதனைக் களை வதே நட்பாவது.

அற்றம்காக்கதற்கண் கை தன் மனத்தினும் முற்படுதலின், அவ்விரைவு இடுக்கண் களைவுழியும அதற்கு ஒதத தொழிலுவமை யினும் வருவிக்க. உடையவன்தொழில் நட்பின் மேல ஏற்றப் பட்டது. (8)

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்புஇன்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை. 789

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் - நட்பினுக்கு அரசிருக்கை யாதெனின், கொட்பு இன்றி ஒல்லும் வாய் ஊன்றும் கீலி - அஃது எஞ்ஞான்றும் திரிபின்றி இயலும் எல்லி யெல்லாம் அறம் பொருள்களில் தளராமைத் தாங்கும் திண்மை.

ஒருஞான்றும் வேறுபடாது மறுமை இம்மைகட்கு உறுதியாய அறம்பொருளகளில் தளர்ந்துழி அத் தளாச்சி நீக்கி அவற்றின் கண் நிறுத்துதற்குமேல ஒருசெயலும் இன்மையின், அதனை நட்பிற்கு முடிந்த எல்லை என்றார். (9)

இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று புனையினும் புல்லென்னும் நட்பு. 790

இவர் எமக்கு இனையர் யாம் இன்னம் என்று புனையினும் - இவர் நமக்கு இதனையரன்பினர் யாம்இவர்க்கு இத்தன்மையம் என்று ஒருவரையொருவர் புனைந்து சொல்லினும், நட்புப் புல்லென்னும் - நட்புப் புலலிதாய்த் தோன்றும.

இவர்க்கு என்பது வருவிக்கப்பட்டது. தாம் அவர் என்னும் வேற்றுமையின்றி வைததுப் புனைந்துரைப்பினும் வேற்றுமையுண்டாம் ஆகலின், 'நட்புப் புலலென்னும்' என்றார.

இவை ஐந்து பாட்டானும் நட்பினது இலக்கணம் கூறப்பட்டது. (10)

80. நட்பு ஆராய்தல்.

அஃதாவது மேற்சொல்லிய இலக்கணததாரை ஆராய்ந்தறிந்தே நட்கவேண்டுதலின், அவரை ஆராயும்கிறம். அதிகார முறைமையும் இதனனே விளங்கும்.

நாடாது நட்டலின் கேடுஇல்லை நட்டபின் வீடுஇல்லை நட்புஆள் பவர்க்கு. 791

நட்பு ஆள்பவர்க்கு நட்டபின் வீடு இல்லை–நட்பினைவிரும்பி அதன் கண்ணே நிற்பார்க்கு ஒருவனேடு நட்புச்செய்தபின் அவனை விடுதலுண்டாகாது; நாடாது நட்டலின் கேடு இலலை–ஆகலான் ஆராயாது நட்புச்செய்தல்போலக் கேடு தருவது பிறிதில்லை.

ஆராய்தல் - குணம்செய்கைகளது நன்மையை ஆராய்தல். கேடு–ஆகுபெயர். நட்கின் தாம் அவர் என்னும் வேற்றுமையின்மையின் 'வீடு இல்லை' என்றும், அவ் வேற்றுமைஇன்மையான் அவன்கண் பழி பாவங்கள தம ஆமாகலின். இருமையும் கெடுவர் என்பது நோக்கி, 'நாடாது நட்டலின் கேடு இல்லை' என்றும் கூறினர். (1)

ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை தான்சாம் துயரும் தரும். 792

ஆய்ந்து ஆய்ந்து கேண்மை கொள்ளாதான்–குணமும் செய்கையும் நல்லன் என்பது பலகாலும் பலவற்றினும் ஆராய்ந்து ஒருவனேடு நட்புக்கொள்ளாதவன், கடைமுறை தான் சாம் துயரம் தரும்–முடிவில் தான் சாதற்கு ஏதுவாய துன்பத்தினைத் தன் மாற்றார் விளைக்கவேண்டாமல் தானே விளைக்கும்.

'கடைமுறைக்கண்'என இறுதிக்கண் தொக்க ஏழாவது விரிக்க. குணமும் செய்தலும் தீயானெடு கொளலின் அவற்கு வரும் பகைமை யெலலாம் தன் மேலவாய்ப் பின் அவற்றின் இறந்துவிடும் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் ஆராயாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது. (2)

குணனும் குடிமையும் குற்றமும் குன்ரு இனனும் அறிந்துயாக்க நட்பு. 793

குணனும் குடிமையும் குற்றமும் குன்ரு இனனும் அறிந்து–ஒருவன குணதினையும குடிப்பிறப்பினையும் குற்றத்தினையும் குறைவற்ற சுறறதினையும்ஆராய்ந்தறிந்து, நடபுயாக்க-அவனேடு நட்புச்செயக.

குறறமிலலாதார உலகதது இன்மையின் உள்ளது பொறுக்கப்படுவதாயின் அவர நட்பு விடறபாற்றன்று என்பார, 'குற்றமும்'என்றும், சுறறப் பிணிப்படையார நட்டாரோடும் பிணிக் புணடு வருதலின் 'குன்ரு இனனும'என்றும், விடப்படின் தம் குறையாம் என்பார 'அறிநதுயாக்க'என்றும் கூறினர். (3)

குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக் கொடுத்துங் கொளல்வேண்டுமை நட்பு. 794

குடிப்பிறந்து தன்கண் பழி நாணுவானை–உயர்ந்த குடியின் கண்பிறநது தன்மாடடு உலகாசொலலும் பழிக்கு அஞ்சுவானை, கொடுதது மை நடபுக்கொளல வேண்டும்–சில கொடுத்தாயினும் நட்புக்கோடல சிறநதது.

குடிப்பிறப்பால தான் பிழைசெய்யாமையும், பழியை அஞ்சலான் பிழைததன பொறுத்தலும் பெற்றும். இவை இரண்டும் உடையானைப் பெறுதல அருமையின், அவன் நட்பை விலை கொடுதது மை கொளக என்பதாம். (4)

அழச்சொல்லி அல்லது இடித்து வழக்குஅறிய வல்லார்நீட்பு ஆய்ந்து கொளல். 795

அல்லது அழச் சொல்லி–தாம் உலகவழக்கல்லது செய்யக் கருதின் சோகம்பிறக்கும்வகை சொல்லி விலக்கியும், இடித்து–செய்தக்கால் பின்னும் செய்யாவகை நெருக்கியும், வழக்கு அறிய வல்லார்–அவ் வழக்குச் செய்யாவழிச் செய்விக்கவும் வல்லாரை, ஆய்ந்து நட்புக் கொளல்–ஆராய்ந்து நட்புக் கொளக.

'அழச்சொல்லி' 'இடித்து'எனவந்த பரிகாரவிணைகளான் அவற்றிற்கு ஏற்ற குற்ற வினைகள் வருவிக்கப்பட்டன. வழக்கு–உலகத்தார் அடிப்படச் செய்துபோந்த செயல். தம்மொடு நட்டாரும் அறியும்வகை அறிவித்தல் அரிதாகலின் 'அறியவல்லார்' என்றார். இரண்டாவது இறுதிக்கண் தொக்கது. (5)

கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல். 796

கிளைஞரை நீட்டி அளப்பது ஓர்கோல்–ஒருவனுக்குக் கேடு என்பது தன் நட்டாராகிய புலங்களை எஞ்சாமல் அளப்ப தோர் கோல்; கேட்டினும் ஓர்உறுதி உண்டு–ஆகலின் அதன்கண்ணும் அவனுல் பெறப்படுவதோர் நல்லறிவு உண்டு.

தத்தம் நட்பெல்லைகள் சுருங்கியிருக்கவும் செல்வக்காலத்துப் புறத்துத் தோன்றுமல்போக்தார் பின் கேடுவந்துழிச் செயல்வேறு படுதலின், அக்கேட்டால் அவை வரையறுக்கப்படும் என்பது பற்றிக் கேட்டினைக் 'கோலா'க்கியும், அதனால அவரை அளந்தறிந் தால் ஆவாரையே கோடலின் அவ்வறிவை 'உறுதி'என்றும் கூறினர். கிளைஞர்–ஆகுபெயர். இஃது ஏகதேச உருவகம்.

இவை நான்கு பாட்டானும் ஆராயுமாறும், ஆராய்ந்தால் நட்கப்படுவார் இவர் என்பதூஉம் கூறப்பட்டன. (6)

ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார் கேண்மை ஒரீஇ விடல். 797

ஒருவற்கு ஊதியம் என்பது–ஒருவனுக்குப் பேறு என்று சொலலப்படுவது, பேதையார் கேண்மை ஒரீ இ விடல–அறிவிலா ரோடு நட்புக்கொண்டானுயின் அதனை ஒழிந்து அவரின் நீங்குதல. நட்பு ஒழிந்தாலும் நீங்காக்கால "வெறிகமழ சுகதனமும் வேங்கையும் வேரு" (நாலடி. 180) மாறுபோலத நீங்கு வருதலின் 'விடல்' என்றும், நீங்கியவழித தீங்கொழிதலேயன்றி இருமை யின் பத்திற்கு உரிமை எய்தலும் உடைமையின், அதனை 'ஊதியம்' என்றும் கூறினர். (7)

உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க அல்லற்கண் ஆற்றுஅறுப்பார் நட்பு. 798

உள்ளம் சிறுகுவ உள்ளற்க–தம் ஊக்கஞ் சுருங்குவதற்குக் காரணமாய வினைகளைச் செய்யநினையாதொழிக, அலலற்கண் ஆற்று அறுப்பார் நட்புக் கொளளற்க–அதுபோலத் தமக்கு ஒரு துன்பம் வந்துழிக் கைவிடுவார் நட்பினைக் கொளளாதொழிக.

உள்ளம் சிறுகுவஆவன: தம்மின் வலியாரோடு தொடங்கி யனவும் பயனில்லனவும் ஆம். 'ஆற்று'என்பது முதனிலைத் தொழிற்பெயர். முன்னெல்லாம் வலியராவார் போன்று ஒழி

தலின், 'ஆற்றுஅறுப்பார்' என்றார். எடுத்துக்காட்டு உவமை. கொள்ளின் அழிந்தே விடும் என்பதாம். (8)

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும். 799

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை—ஒருவன் கெடுங்காலத்து அவனை விட்டு நீங்குவார முன் அவனோடு செய்தநட்பு, அடுங்காலை உள்ளினும் உள்ளம சுடும்—தன்னைக் கூற்று அடுங்காலத்து ஒருவன் நினைப்பினும, அந நினைத்த உள்ளததைச் சுடும்.

நினைதத துணையானே இயைபிலலாத பிறனுக்கும் கூற்றினுங் கொடிதாம எனக் கைவீடு எண்ணிச் செய்த நட்பின் கொடுமை கூறியவாறு. இனி, அவன்தானே ஆக்கியகேடு தன்னை அடுங்காலை உள்ளினும, அக்கேட்டினும 'சுடும்'என்று உரைப்பாரும உளர.

இவை மூன்று பாடடானும ஆராய்நதால் நட்கப்படாதார் இவர என்பது கூறப்பட்டது. (9)

மருவுக மாசற்றார் கேண்மைஒன்று ஈத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. 800

மாசு அறறார கேணமை மருவுக—உலகோடு ஒததுக் குற்ற மற்றார நட்பினையே பயிலக, ஒப்பு இலார நட்பு ஒன்று ஈத்தும் ஒருவுக—உலகோடு ஒததலிலலார நட்பினை அறியாது கொண்டாராயின், அவாவேண்டிய தொன்றனைக் கொடுததாயினும் விடுக.

உலகோடு ஒததார் நடபு இருமை இன்பமும பயத்தலின் 'மருவுக' என்றும, அதனோடு மாறாயினார நடபுத துன்பமே பயத்தலின், அதன ஒழிவை 'விலைகொடுததும கொளக' என்றும் கூறினார்.

இதனான் அவ இருமையும தொகுததுக் கூறப்பட்டன. (10)

81. பழமை

அஃதாவது நட்டாரது பழையராநதன்மை பற்றி அவர் பிழைததன பொறுததல. காரணப்பெயர் காரியத்திற்கு ஆயிறறு. ஆராய்நது நடகப்பட்டார் எனினும் பொறுக்கப்படும் குறறமுடையராகலானும ஊழவகையானும் நட்டார் மாட்டுப் பிழை உளதாம என்பது அறிவிததற்கு, இது நட்பு ஆராயதலின் பின் வைக்கப்பட்டது.

பழமை எனப்படுவது யாதுஎனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. 801

பழமை எனப்படுவது யாது எனின்—பழமை என்று சொல்லப்படுவது யாது என்று வினவின், கிழமையை யாதும் கீழ்ந்திடா நட்பு—அது பழைமையோர் உரிமையால செய்வனவற்றைச் சிறிதும் சிதையாது அவற்றிற்கு உடம்படும் நட்பு.

'பிழைமை' ஆகுபெயர். 'கெழுதகைமை' என வருவனவும் அது. உரிமையாற் செய்வனவாவன 'கருமமாயினை செய்யுங்கால் கேளாது செய்தல், கெடும்வகை செய்தல், தமக்கு வேண்டியன தாமே கோடல், பணிவு அச்சங்கள் இன்மை என்றிவை முதலா யின. சிதைத்தல்–விலக்கல்.

இதனுள் 'பழைமையாவது காலஞ்சென்றதன்று; இப்பெற் றித்தாய கட்பு' என்பது கூறப்பட்டது. (1)

நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்றுஅதற்கு உப்பாதல் சான்றோர் கடன் 802

நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை–நட்பிற்கு அவயவமாவன கட்டார் உரிமையால் செய்வன; அதற்கு உப்பாதல் சான்றோர் கடன்–அதனால் அவ் உரிமைக்கு இனியராதல் அமைந்தார்க்கு முறைமை.

வேறன்மை தோன்ற 'உறுப்பு' என்றார். உறுப்பு என்பது ஈண்டு இலக்கணையடியாக வந்த குறிப்புச்சொல். அவயவமாதல் அறிந்தே இனியவராவர் என்பது தோன்றச் சான்றோர்மேல் வைத்தார். (2)

பழகிய நட்பு எவன் செய்யும் கெழுதகைமை செய்தாங்கு அமையாக் கடை. 803

கெழுதகைமை செய்தாங்கு அமையாக்கடை–தாம் உடம் படாதனவேனும் நட்டார் உரிமையாற் செய்தனவற்றிற்குத தாம் செய்தாற்போல உடம்படாராயின், பழகிய நட்பு எவன்செய்யும்– அவரோடு பழையதாய் வந்த நட்பு என்ன பயனைச் செய்யும்?

செய்தாற்போல உடம்படுதலாவது தாமும் அவரிடத்து உரிமையால் உடம்படுதல்.

இவை இரண்டு பாட்டானும் பழைமையான் வரும் உரிமை யது சிறப்புக் கூறப்பட்டது. (3)

விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையான் கேளாது நட்டார் செயின். 804

நட்டார் கெழுதகையான் கேளாது செயின்–தம் கருமத்தை நட்டார் உரிமையாற்கேளாது செய்தாராயின், விழைதகையான் வேண்டி இருப்பர்–அச் செயலது விழையப்படுந் தன்மைபற்றி அதனை விரும்புவர் அறிவுடையார்.

ஒருவர்க்குத் தம்கருமம் தாம் அறியாமல் முடிந்திருத்தலின் ஊங்கு நன்மையின்மையின், அச்செயல் விழையத்தக்கதாயிற்று. அதனை அவ்வாறு அறிந்து விரும்புதல் அறிவுடையார்க்கல்லது இன்மையின், அவர்மேல் வைத்துக் கூறினர். வேண்டியிருப்பர் வேண்டுதல் மூன்றிருப்பர் என்பதுபோல ஒரு சொல் நீர்மைத்து.

இதனுள் கேளாது செய்துழி [அதனை விரும்புக என்பது கூறப்பட்டது. (4)

பேதைமை ஒன்றே பெருங்கிழமை என்றுஉணர்க
நோதக்க நட்டார் செயின். 805

நோதக்க நட்டார் செயின்–தாம் வெறுக்கத் தக்கனவற்றை நட்டார் செய்தாராயின், பேதைமை ஒன்றே பெருங்கிழமை என்று உணர்க-அதற்குக் காரணம் ஒன்றில் பேதைமை என்றுதல் ஒன்றில் மிக்க உரிமை என்றுதல் கொளக.

'ஒன்றே' என்பது எண்ணிடைச்சொல். 'செயின்' எனவே, தம் இயல்பால் செய்யாமை பெற்றும். இது வருகின்றவற்றுள்ளும் ஒக்கும். இழவுழான் வரும் பேதைமை யாவர்க்கும் உண்மையின் தமக்கு ஏதங்கொண்டாரென்றுதல், ஊழவகையான் எம்மின் வரற்பாலது ஒற்றுமை நிகுபிபற்றி அவரின்வந்ததென்றுதல், கொளவதலலது அன்பின்மை யென்று கொளளப்படாது என்ப தாம்.

கெடும்வகை செய்யின் அதற்குக் காரணம் இதனுள் கூறப் பட்டது. (5)

எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு. 806

எல்லைக்கண் நின்றார்–நட்பு வரம்பு இகவாது அதன்கண்ணே நின்றவர், தொலலைக்கண் நின்றார் தொடாபு தொலைவிடத்தும் துற வார்–தம்மொடு பழைமையின் திரியாது நின்றாரது நட்பினை அவரால் தொலைவு வந்தவிடத்தும் விடார்.

பழைமையின் திரியாமை–உரிமையொழியாமை. தொலைவு–பொருட்கேடும் போர்க்கேடும். (6)

அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர். 807

அழிவந்த செய்யினும் அன்பு அறார்–நட்டார் தமக்கு அழிவு வந்தவற்றைச் செய்தாராயினும் அவாமாட்டு அன்பு ஒழியார், அன்பின் வழி வந்த கேண்மையவர்–அன்புடனே பழையதாய் வந்த நட்பினை உடையார்.

'அழி' என்பது முதனிலைத தொழிற்பெயர். அழிவு–மேற் சொல்லிய கேடுகள.

இவை இரண்டு பாட்டானும் கேடு செய்தக் கண்ணும் நட்பு விடம் பாற்றன்று என்பது கூறப்பட்டது. (7)

கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாள்இழுக்கம் நட்டார் செயின். 808

கேள் இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு–நட்டார் செய்த பிழையைத் தாமாகவேயன்றிப் பிறர் சொன்னலும்

கொள்ளாத உரிமை அறியவல்லார்க்கு, நட்டார் இழுக்கம் செயின் நாள்–அவர் பிழை செய்வாராயின் அது பயன்பட்ட காளாம்.

பிழையாவன. சொல்லாது நற்பொருள வெளவல், பணி யாமை–அஞ்சாமை முதலாயின. கேட்டல்–உட்கோடல். 'கெழு தகைமை வலவார்' என்பது ஒரு பெயராய 'கேளாத' என்னும் எச்சத்திற்கு முடிபாயிற்று. செய்து போந்துழியல்லது அவ் உரிமை வெளிப்படாமையின், செய்யாதன நாளல்லவாயின.

இதனுன் பிழைபொறுத்தற் சிறப்புக் கூறப்பட்டது. (8)

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை விடாஅர் விழையும் உலகு. 809

கெடா வழி வந்த கேண்மையார் கேண்மை–உரிமை அருது பழையதாய் வந்த நட்பினை உடையாரது நட்பினை, விடார் உலகு விழையும்–அவர் பிழைநோக்கி விடுதல செய்யாதாரை உலகம் நட்புக்குறிதது விரும்பும.

'கெடாது' என்பதன் இறுதிநிலை விகாரததால தொக்கது. விடாதாரை எனவே, விடுதற்காரணம் கூறப்பட்டது. நம்மாட்டும் இவர் இத்தன்மையராவர் என்று யாவரும் தாமே வந்து நட் பாவர் என்பதாம். 'கெடா' என்று பாடம் ஒதி 'நட்புதன்மை யில் கெடாராகி' என்று உரைப்பாரும் உளர். (9)

விழையார் விழையப் படுப பழையார்கண் பண்பின் தலைப்பிரியா தார். 810

பழையார்கண் பண்பின் தலைப்பிரியாதார்–பழைய நட்டார் பிழை செய்தாராயினும அவர்மாட்டுத தம் பண்பின் நீங்காதார், விழையார விழையப்படுப–பகைவரானும விரும்பப்படுவர்.

தம் பண்பாவது செய்யாத முன்போல அன்புடையாதல். மூன்றன் உருபும் சிறப்பு உமமையும் விகாரததால் தொக்கன. அத் திரிபின்மை நோக்கிப் பகைவரும் நட்டாராவா என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும பழமையறிவா எய்தும் பயன் கூறப்பட்டது. (10)

82. தீ நட்பு

இனிப் பொறுக்கப்படாத குறறமடமையின் விடற பாலதாய நட்பு, நட்பாராய்தறகண சுருங்கச சொல்லியதனை யான் அடங்காமையின், அதனை இரண்டாகப் பகுதது இரண்டு அதிகாரததால கூறுவான் தொடங்கி, முதற்கண் தீ நட்புக் கூறுகின்றார். அஃதாவது தீக்குணததாரோடு உளதாய நட்பு. குணத்தின் தீமை ஒற்றுமைபற்றி உடையார் மேற் ரூய், அது பின் அவரோடுசெய்த நட்பின்மேற்ருயிற்று. அதி காரமுறைமை கூறுமையே விளங்கும்.

பருகுவார் போலினும் பண்புஇலார் கேண்மை பெருகலின் குன்றல் இனிது. 811

பருகுவார் போலினும் பண்பு இலார் கேண்மை–காதல் மிகுதியால் பருகுவார் போன்றாராயினும் தீக்குணமுடையார் நட்பு, பெருகலின் குன்றல் இனிது–வளர்தலின் தேய்தல் நன்று.

"பருகுவ அன்ன அருகா நோக்கமொடு" (பொருந 78) என்றார் பிறரும். நற்குணமில்லார் எனவே, தீக்குணமுடையார் என்பது அருத்தாபத்தியான் வந்தது. பெருகுதல் வரும் கேடு குன்றினால வாராமையின் 'குன்றல் இனிது' என்றார்.

இதனுள் தீநட்பினது ஆகாமை பொதுவகையால் கூறப் பட்டது. இனிச் சிறப்புவகையால் கூறுப. (1)

உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்புஇலார் கேண்மை பெறினும் இழப்பினும் என். 812

உறின் நட்டு அறின் ஒரூஉம் ஒப்பு இலார் கேண்மை–தமக்குப் பயனுளவழி நட்புச் செயது அஃது இலவழி ஒழியும் ஒப்பிலாரது நட்பினை, பெறினும் இழப்பினும் என்–பெற்றால் ஆக்கம் யாது? இழுகதால் கேடு யாது?

தமதரு உறறன பாராப்பா பிறரோடு பொருததமிலராகலின் அவரை 'ஒப்பிலார்' என்றார். அவாமாட்டு தொதுமல தன்மையே அமையும் என்பதாம. (2)

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது கொள்வாரும் கள்வரும் நேர். 813

உறுவது சீர்தூக்கும் நட்பும்–நட்புஅளவு பாராது அதனால் வரும் பயனளவு பாராக்கும் நட்டாரும், பெறுவது கொளவாரும்–கொடுப்பாரைக் கொளளாது விலையைக் கொளளும் பொதுமக ளிரும், களவரும்–பிறாகேடு நோக்காது அவா சோவு நோக்கும் களவரும், நேர்–தம்முள ஒப்பா.

நட்பு–ஆகு பெயர். பொருளையே குறிதது வஞ்சித்து ஒழுகலின், கணிகையா களவா என்றிவரோடு ஒப்பா என்பதாயிற்று.

இவை இரண்டு பாட்டானும் தமக்கு உறுவது பாராப்பார் நட்பின் தீமை கூறப்பட்டது. (3)

அமரகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னர் தமரின் தகுமை தலை. 814

அமரகத்து ஆற்றுஅறுக்கும கலலா மா அன்னா தமரின்–அமர் வாராத முன்னெலலாம தாஙகுவதுபோன்று வந்துழிக் களத்திடை வீழ்ததுப்போம் கலவி இலலாத புரவி போல்வாரது தமர்மையின், தனிமை தலை–தனிமை சிறப்பு உடைத்து.

கல்லா மா–கதி ஐந்தும், சாரி பதினெட்டும், பொருமுரணும்,ற்றும் அறியாமை. துன்பம் வாராத முன்னெல்லாம் துணையாவார் போன்று, வந்துழி விட்டு நீங்குவர் என்பது உவமையாற் பெற்றும். அவர் தமராலும் வரும் இறுதி தனியாலும் வாராமையின், தனிமையை 'தலை' என்றார். எனவே, அதுவும் நீதாதல் பெறுதும் (4)

செய்துஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை எய்தலின் எய்தாமை நன்று. 815

செய்து ஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை - செய்து வைத்தாலும் அரணுகாத கீழ மக்களது நீ நட்பு, எய்தலின் எய்தாமை நன்று - ஒருவர்க்கு உண்டாதலின் இல்லையாதல் நன்று.

சிறப்பு உம்மை விகாரத்தால் தொக்கது. அரணுகாமை-தொலிவின்கண் விட்டு நீங்குதல். 'எய்தலின் எய்தாமை நன்று' என்பதற்கு மேல உரைத்தாங்கு உரைக்க. 'சாராத' என்னும் பெயரெச்சம் 'கேண்மை' என்னும் பெயரா கொண்டது, 'சிறியவர்' என்பதனைக் கொளவின், 'செயது' என்பது நின்று வற்றும்.

இவை இரண்டு பாட்டானும் தொலிவில துணையாகாத நட்பின் தீமை கூறப்பட்டது. (5)

பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார் ஏதின்மை கோடி உறும். 816

பேதை பெருங்கெழீஇ நட்பின் - அறிவிலானது மிகச் செறிந்த நட்பின், அறிவுடையார் ஏதின்மை கோடி உறும் - அறிவுடையானது பகைமை கோடிமடங்கு நன்று.

'கெழீஇய' என்பதன் இறுதிநிலை விகாரத்தால தொக்கது. பன்மை உயர்ததற்கண் வகதது. அறிவுடையான் பகைமை ஒரு தீங்கும் பயவாமையானும், பேதை நட்பு எல்லாத் தீங்கும பயதத லானும், 'கோடி உறும' என்றார். 'பெருங்கழி நட்பு' என்று பாடம் ஓதுவாரும் உளர். (6)

நகைவகைய ராகிய நட்பின் பகைவரான் பத்துஅடுத்த கோடி உறும். 817

நகை வகையர் ஆகிய நட்பின் - தாம் அறிதல் வகையராகாது நகுதல் வகையராதற்கு ஏதுவாகிய நட்பான் வருவனவற்றின், பகைவரால் பத்து அடுத்த கோடி உறும் - பகைவரின் வருவன பத்துக் கோடி மடங்கு நல்ல.

நட்பு - ஆகுபெயர். அந் நட்பாவது விடமரும், தூர்த்தரும், வேழம்பரும் போன்று பலவகையான் நகுவித்துத் தாம் பயன் கொண்டு ஒழிவாரோடு உளதாயது. 'பகைவரான்' என்பது அவாய் நிற்றலின், 'வருவன' என்பது வருவிக்கப்பட்டது. பத்துஅடுத்த

கோடி - பத்தாகத் தொகுத்த கோடி. அந் நட்பான் வரும் இன் பங்களின் அப் பகைவரான் வரும் துன்பங்கள் இறப்பு நல்ல என் பதாம். இதற்குப் பிறரெல்லாம் சொல்லிலக்கணத்தோடு மாறு கொள உரைத்ததார். (7)

ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை சொல்லாடார் சோர விடல். 818

ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை - தம்மான் முடியும் கருமத்தை முடியாதாக்கிச செய்யாதாரோடு கொண்ட நட்பினை, சொல்லாடாசோரவிடல - அது கண்டால அவரறியச் சொல் லாதே சோர விடுக.

முடியாதாக்குதல் முடியாதாக நடித்தல். சோரவிடல் விடு கின்றவாறு தோன்றுமல ஒரு காலிக்கு ஒருகால் ஓயவிடுதல். அறி யச் சொல்லினும விடுகின்றவாறு தோன்றினும் அதுபொழுது பரி கரித்துப் பின்னும் நடபாயொழுகக் கருதுவா ஆகலின், 'சொல்லா டார்' என்றும 'சோரவிடல்' என்றும கூறினார.

இவை ஆன்று பாடடாலும முறையே பேதையர், நகுவிப் பார், இயல்வது செய்யாதார என்பவாகள நட்பின் தீமை கூறப் பட்டது. (8)

கனவினும் இன்னாது மன்னே வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு. 819

வினை வேறு சொல்வேறு பட்டார் தொடர்பு - வினையும் சொலலும ஒவவாது வேறுவேறுயிருப்பா நட்பு, கனவிலும் இன் னாது - நனவின் கண்ணே அன்றிக் கனவின் கண்ணும் இன்னாது.

வினை சொற்களது ஒவ்வாமை முதலமேல ஏற்றப்பட்டது. அஃதாவது வினையிற பகைவராய்ச் சொல்லின் நட்டாராயிருத் தல. நிகழுவின்கண் உளதாயிருததலால 'கனவினும் இன்னாது' என்றார. உமமை எச்ச உம்மை, இழிவு சிறப்பு உம்மையும் ஆம். மன்னும், ஓவுமை அசை நிலை. (9)

எணேத்தும் குறுகுதல் ஓம்பல் மணைக்கெழீஇ மன்றின் பழிப்பார் தொடர்பு. 820

மணைக்கெழீஇ மன்றின் பழிப்பா தொடர்பு - தனியே மனைக் கண் இருதது பழி நட்பாடிப் பலரோடு மன்றின்கண் இருந்து பழி கூறுவார் நட்பு, எணேதததும குறுகுதல் ஓம்பல் - சிறிதாயினும் தம்மை நணுகுதலைப் பரிகரிக்க.

மனைக்கண் கெழுமலும் மன்றின்கண் பழித்தலும் நீது ஆக வின், அவர் ஒருகாலும் தம்மை நணுகா வகை குறிக்கொண்டு காக்க என்பார், அவர் நட்பின்மேல் வைத்துக் கூறினர்.

இவை இரண்டு பாட்டானும் வஞ்சர் நட்பின் தீமை கூறப் பட்டது. (10)

83. கூடா நட்பு

இனி ஏனைக் கூடா நட்புக் கூறுகின்றார். அஃதாவது பகைமையான் அகத்தாற் கூடாதிருந்தே தமக்கு வாய்க்கு மிடம் பெறுத்துணையும் புறத்தாற் கூடியொழுகுவார் நட்பு.

சீர்இடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு. 821

நேரா நிரந்தவர் நட்பு - கூடாதிருந்தே தமக்கு வாய்க்கும் இடம் பெறுத்துணையும் கூடியொழுகுவார் நட்பு, சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை-அது பெற்றால் அறவெறிதற்குத் துணையாய பட்டடையாம்.

எறியும் எல்லே வாராமுன் எல்லாம தாங்குவது போன் றிருந்து வந்துழி அற எறிவிப்பதாய பட்டடைக்கும அதன்மைத தாய நட்பிற்கும் தொழிலொப்புமை உண்மையான், அது பற்றி அச் சட்பினை பட்டடையாக உபசரித்தார். 'சீரிடம்' என்று பாடம் ஓதி 'முடிவிடம்' என்று உரைப்பாரும் உளர். (1)

இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். 822

இனம்போன்று இனமல்லார் கேண்மை - தமக்கு உற்றார் போன்று உருதாரோடு உளதாய நட்பு, மகளிர் மனமபோல வேறுபடும்–இடம் பெற்றால் பெண் பாலார் மனமபோல வேறு படும்.

அவர் மனம் வேறுபடுதல "பெண் மனம போகின்று ஒருப் படுப்பேன் என்னும் எண்ணில் ஒருவன்" என்பதனாலுமறிக. நட்பு வேறுபடுதலாவது - பழைய பகையேயாதல்.

இவை இரண்டு பாட்டானும் கூடா நட்பினது குற்றம கூறப் பட்டது. (2)

பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது. 823

நலல பல கற்றக்கடைததும - நலலன பல நூலகளைக் கற்ற விடத்தும், மனம் நல்லா ஆகுதல் மாணாக்கு அரிது - அதனன் மனம் திருந்தி நட்பாதல் பகைவர்க்கு இலலை.

நல்லன - மனக் குற்றம் கெடுப்பன. 'மனம் நலல[illegible]' எனச் சினைவினை முதல் மேல நின்றது. நல்லர் ஆகுதல - செற்றம் விடுதல். உளளே செற்றமுடையாரைக் கலவியுடனனே பற்றி நட்பு என்று கருதற்க என்பதாம். (3)

முகத்தின் இனிய நகாஅ அகத்துஇன்னா
வஞ்சரை அஞ்சப் படும். 824

முகத்தின் இனிய நகாஅ அகத்து இன்ன வஞ்சரை - கண்ட பொழுது முகத்தால் இனியவாகச் சிரித்து எப்பொழுதும் மனத்தால் இன்னாராய வஞ்சரை, அஞ்சப்படும் - அஞ்சல் வேண்டும்.

நகையது வகைபற்றி 'இனிய' என்றும், அகத்துச் செற்றம், நிகழவும் அதற்கு மறுதலையாய நகையைப் புறத்து விளைத்தலின் 'வஞ்சர்' என்றும், அச் செற்றம் குறிப்பறிதற்கருவியாய முகத்தானும் தோன்றுமையின் 'அஞ்சுதல் செய்யப்படும்' என்றும் கூறினார்.

இவை இரண்டு பாட்டானும் குற்றத்திற்கு ஏதுவாய அவர் கொடுமை கூறப்பட்டது. (4)

மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும் சொல்லினுல் தேறல்பாற் றன்று. 825

மனத்தின் அமையாதவரை - மனத்தால் தம்மொடு மேவாதாரை, எனைத்து ஒன்றும் சொல்லினுல் தேறல்பாற்று அன்று - யாதொரு கருமத்தினும் சொல்லால தெளிதல முறைமைத்தன்று நீதி நூல.

'நீதி நூல' என்பது அவாய் நிலையான் வந்தது. பகைமை மறைத்தற்பொருட்டுச் சொலலுகின்ற வஞ்சனைச சொலலினைச் செவ்விய சொல எனக் கருதி, அவற்றைக் கருமங்களில் தெளிதல நீதி நூல முறைமை அன்று என்பதாம. (5)

நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல் ஒல்லை உணரப் படும். 826

நடடாரபோல நலலவை சொல்லினும் - நட்டார் போன்று நன்மை பயக்கும சொறகளைச சொன்னாயினும, ஒட்டார் சொல் ஒல்லை உணரபபடும் - பகைவர் சொறகள அது பயவாமை அச் சொலலிய பொழுதே அறியப்படும.

சொலலினும எனறவே, சொலலாமையே பெற்றும். ஒட்டாரால தலால தீமை பயத்தல ஒருதலை என்பார, 'ஒல்லை உணரப்படும்' என்றார். (6)

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம் தீங்கு குறித்தமை யான். 827

வில்வணக்கம் தீங்கு குறிததமையான் - வில்லினது வணக்கம் ஏற்றவர்க்குத தீமை செயதலைக் குறிதத்தமையால், ஒன்னார்கண் சொல வணக்கம் கொளளற்க - பகைவர் மாட்டுப் பிறக்கும் சொலலினது வணக்கததையும தமக்கு நன்மை செய்தலைக் குறித்தது என்று கருதற்க.

தம் வணக்கம் அன்று என்பது தோன்ற 'சொல் வணக்கம்' என்றும், வில் வணக்கம் வேருயினும் வணங்குதல ஒப்புமைபறறி

அவன் குறிப்பை ஏதுவாக்கியும்கூறினர். வில்லியதுகுறிப்பு அவனி ஆய வில்வணக்கத்தின்மேல் நிற்றலான், ஒன்னாரது குறிப்பும் அவ ரிறைய சொல் வணக்கத்தின் மேலதாயிற்று. இதுவும் இங்கு குறித்த வணக்கம் என்றே கொண்டு அஞ்சிக் காக்க என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் அவரைச் சொல்லால் தெளியக்க என்பது கூறப்பட்டது. (7)

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார் அழுதகண் ணீரும் அனைத்து. 828

ஒன்னார் தொழுத கையுளளும் படை ஒடுங்கும் - ஒன்னார் குறிப்பை உணரவல்லார்க்கு அவர் தொழுத கையகத்தும் படைக் கலம் மறைத்திருக்கும்; அழுத கண்ணீரும் அனைத்து - அவர் அழுத கண்ணீரும் அவ்வாறே அது மறைந்திருத்தற்கு இடனும்.

தாம் நட்பு என்பதனைத் தம்கையானும் கண்ணானும் தேற்றிப் பின் கோறற்கு வாங்க இருக்கின்ற படைக்கலம் உய்த்தலுணாவுழித் தேற்றுகின்றபொழுதே அவற்றுளளே தோன்றும் என்பார், ஒடுங்கும் என்றார். பகைவர்தம் மென்மை காட்டித தொழினும் அழினும், அவர் குறிப்பையே நோக்கிக் காக்க என்பதாம்.

இதனான் அவரைச் செயலால் தெளியக்க என்பது கூறப் பட்டது. (8)

மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து நட்பினுள் சாப்புல்லற் பாற்று. 829

மிகச் செய்து தம் எளளுவாரை - பகைமை தோன்றுமல் புறத்தின்கண் நட்பினை மிகச் செய்து அகத்தின்கண் தம்மை இக ழும் பகைவரை, நட்பினுள நகச் செய்து சாப் புல்லறபாற்று – தாமும் அந் நட்பின்கண்ணே நின்று புறதகின்கண் அவர் மகிழும் வண்ணம் செய்து அகத்தின்கண் அதுசாம்வண்ணம் பொருக்தற் பான்மை உடைதது அரசநீதி.

'நின்று' என்பதனாலும் 'அரச நீதி' என்பதாலும் அவாய் நிலை யான் வந்தன. அகனென்று புறனென்றுதல ஒருவற்குத தகாது எனினும் பகைவர்மாட்டாயின் தரும் என்பது நீதி நூல் துணிபு என்பார், அதன்மேல் வைத்துக் கூறினர். 'சாவ' என்பதன் இறுதிநிலை விகாரததால் தொக்கது. "கோட்டின்வாய்ச் சாக் குத்தி" (கலித: முல்லை. 5) என்புழிப்போல. எளளுவாரைப் புல் லல் எனக் கூட்டுக. (9)

பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு அகநட்பு ஒரீஇ விடல். 830

பகை நட்பாம் காலம் வருங்கால் - தம் பகைவர் தமக்கு நட்டாராயொழுகுங்காலம் வந்தால், முகம் நட்பு அகம் கட்டு ஒரீ இ

விடல்-தாமும் அவரோடு முகத்தால் நட்புச் செய்து அகத்தால் அதனைவிட்டுப் பின் அதுவும் தவிர்க.

அக் காலமாவது தம்மானும் பகையென்று வெளிப்பட நீக்கலாகாத அளவு. இதனானே, ஆமனவெல்லாம் நீக்குக என்பது பெற்றும்.

இவை இரண்டு பாட்டானும் அந் நட்பிடை ஒழுகுமாறு கூறப்பட்டது. (10)

84. பேதைமை

இனி, அந் நட்பினை எதிர்மறுத்துப் பகை முகத்தாற் கூறிய தொடங்கினார். அப் பகைதான் முற்றக்கடியுங் குற்ற மன்மையின் உளவாய வெகுளியானும் காமத்தானும் வருவ தாம். அவற்றுள் வெகுளியான் வருவன ஐந்து அதிகாரத் தானும் காமத்தான் வருவன ஐந்து அதிகாரத்தானும் கூறுவார், அவ் இரண்டற்கும் அடியாய மயக்கத்தை இரு வகைப்படுதது, இரண்டு அதிகாரத்தால் கூறுவான்தொடங்கி, முதற்கண் பேதைமை கூறுகின்றார். அஃதாவது யாதும் அறியாமை.

பேதைமை என்பதுஒன்று யாதெனின் ஏதங்கொண்டு ஊதியம் போக விடல். 831

பேதைமை என்பது ஒன்று-பேதைமை என்று சொல்லப்படு வது ஒருவனுக்கு ஏனைக் குற்றங்கள எல்லாவற்றினும் மிக்க தொன்று, யாது எனின் ஏதம் கொண்டு ஊதியம் போகவிடல் - அதுதான் யாதென்று வினவின், தனக்குக் கேடு பயப்பன வற்றைக் கைக் கொண்டு ஆக்கம் பயப்பனவற்றைக் கைவிடுதல்.

கேடு - வறுமை, பழி பாவங்கள. ஆக்கம் - செல்வம், புகழ் அறங்கள. தானே தன் இருமையும் கெடுதத்கோடல் என்ப தாம். (1)

பேதைமை யுள்எல்லாம் பேதைமை காதன்மை கையல்ல தன்கண் செயல். 832

பேதைமையுள எல்லாம் பேதமை-ஒருவனுக்குப் பேதைமை எல்லாவற்றுளளும் மிக்க பேதைமையாவது, கையல்லதன்கண் காதன்மை செயல் - தனக்காகாத ஒழுக்கத்தின் கண் காதன்மை செய்தல்.

இருமைக்கும் ஆகாவென்று நூலோர் கடிந்த செயல்களை விரும்பிச் செய்தல் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் பேதைமையது இலக்கணம் கூறப்பட்டது. (2)

**நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில். 833**

நாணுமை - நாணவேண்டுமவற்றுக்கு நாணுமையும், நாடாமை - நாட வேண்டுமவற்றை நாடாமையும், நார் இன்மை - யாவர்மாட்டும் முறிக்த சொல்செயலுடைமையும், யாதொன்றும் பேணுமை - பேணவேண்டுமவற்றுள யாதொன்றனையும் பேணுமையும், பேதை தொழில் - பேதையது தொழில்.

நாணவேண்டுமவை - பழி பாவங்கள. நாடவேண்டுமவை - கருமங்களில் செய்வன தவிர்வன. முறிதல் - கண்ணறுதல். பேண வேண்டுமவை - குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம் முதலாயின. இவை பேதைமைக்கு எஞ்ஞான்றும் இயல்பாய் வருதலின் 'தொழில்' என்ருர். (3)

**ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல். 834**

ஓதி - மனமொழி மெய்கள அடங்குதற்கு ஏதுவாய நூல் களை ஓதியும், உணர்ந்தும் - அவ்வடக்கத்தான் வரும் பயனை உணர்ந்தும், பிறர்க்கு உரைததும் - அதனை அறியலுறப் பிறர்க்கு உரைத்தும், தான் அடங்காப் பேதையின் - தான் அவையடங்கி ஒழுகாத பேதைபோல, பேதையார் இல் - பேதையார் உலகத்து இல்லை.

உம்மை முன்னும் கூட்டப்பட்டது. இப் பேதைமை தனக்கு மருந்தாய இவற்றுல் தீராமையானும், வேற்று மருந்து இன்மையானும், 'பேதையின் பேதையார் இல்' என்ருர்.

இவை இரண்டுபாட்டானும்பேதையது தொழில் பொதுவகையான் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையால் கூறுப. (4)

**ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு. 835**

பேதை-பேதையாயினன், எழுமையும் தான் புக்கு அழுந்தும் அளறு - உம்மை பிறவிகள எல்லாம் தான் புக்கு அழுந்தும நிரயத னினை, ஒருமைச் செயல் ஆற்றும் - இவ ஒரு பிறப்புளளே செயது கொளள வல்லனும்.

எல்லாப் பிறப்பும் ஏழாய் அடங்குதல அறியப்பட்டமையின், முற்று உம்மை கொடுத்தார். அழுந்துதறகு இடனுய நிரயம். எண்டைப் பிறப்புக்களினும் கொடுவினை வயத்தால் அந் 'நிரயத்' தின்பமே உழந்து வருதலின், 'எழுமையும் தான் புக்கு அழுந்தும் அளறு' என்ருர். முடிவில் காலமெல்லாம் தான் நிரயத் தின்பம் உழத்தற்கு ஏதுவாங் கொடுவினைகளளேயே அறிந்து சில காலத் துள்ளே செய்துகோடல் பிறர்க்கு அரிதாகலின், 'ஆற்றும்' என்ருர்.

இதனன் அவன் மறுமைச் செயல் கூறப்பட்டது. (5)

பொய்படும் ஒன்ரே புனீபூணும் கையறியாப் பேதை வினீமேற் கொளின். 836

கை அறியாப் பேதை வினீமேற்கொளின் - செய்யும் முறைமை அறியாத பேதை ஒரு கருமத்தை மேற்கொள்வானு யின், பொய்படும் ஒன்ரே புனீபூணும் - அதுவும் புரைபடும், தானும் தனீ பூணும்.

'புரைபடுதல்' - பின் ஆகாவகை உள்ளழிதல். 'ஒன்ரே' என்பது எண்ணிடைச் சொல். அதனீயும் கெடுத்துத் தானும் கெடும் என்பதாம்.

இதனன் அவன் செல்வம் படைக்குமாறு கூறப்பட்டது. (6)

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை பெருஞ்செல்வம் உற்றக் கடை. 837

பேதை பெருஞ் செல்வம் உற்றக்கடை - பேதையாயினன் பெரிய செலவத்தைத் தெய்வததான் எய்திய வழி, ஏதிலார் ஆரத் தமா பசிப்பா - தன்னேடு ஓர் இயைபும் இல்லாதார் நிறைய, எல்லா இயைபும உடையா தமராயினர் பசியா நிற்பர்.

எலலா நன்மையுஞசெய்து கோடறகருவி என்பது தோன்ற 'பெருஞசெல்வம்' என்றும, அதனீப் படைக்கும் ஆற்றல் இலலாமை தோன்ற 'உறறக்கடை' என்றும், எல்லாம் பெறுதல் தோன்ற 'ஆர' என்றும, உணவும பொருமை தோன்ற, 'பசிப்பர்' என்றும் கூறினர. (7)

மையல் ஒருவன் களித்தற்ரல் பேதைதன் கைஒன்று உடைமை பெறின். 838

பேதை தன் கை ஒன்று உடைமை பெறின் - பேதையாயினன் தன் கைக் கண்ணே ஒன்றனீ உடைமையாகப் பெற்ரு ஞயின், மையல ஒருவன் களித்தற்று - அவன் மயங்குதல் முன்னே பிதற்றினீஉடையாஞெருவன் அம் மயக்கத்தின் மேலே மதுவுண்டு மயஙகினீற்போலும்.

'பெறின்' எனவே, தெய்வத்தான் அன்றித் தன்னைற் பெருமை பெற்ரும. பேதைமையும் செலவக் களிப்பும் ஒருங்கு உடைமையால அவன் செய்வன, மையலும் மதுக்களிப்பும் ஒருங்குடையான் செய்வனபோல தனீ தடுமாறும் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் அவன் செல்வம் எய்திய வழிப் பயன்கொள்ளுமாறு கூறப்பட்டது. (8)

பெரிதுஇனிது பேதையார் கேண்மை பிரிவின்கண் பீழை தருவதுஒன்று இல். 839

பிரிவின்கண் தருவது பிழை ஒன்று இல் - பிரிவு வக்துழி அஃது இருவர்க்கும் தருவதொரு துன்பம் இல்லை; பேதையார் கேண்மை பெரிது இனிது - ஆகலான் பேதையாயினர் தம்மூட் கொண்ட நட்பு மிக இனிது.

நாள்தொறும் தேய்க்து வருதலின் துன்பம்தாராதாயிற்று. புகழ்வார் போன்று பழித்தவாறு.

இதனுன் அவரது நட்பின் குற்றம் கூறப்பட்டது. (9)

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்ரோர்
குழாஅத்துப் பேதை புகல். 840

சான்ரோர் குழாதத்துப் பேதை புகல் – சான்ரோர் அவையின் கண் பேதையாயினுன் புகுதல், கழாக்கால் பளளியுள வைத் தற்று – தூய அல்ல மிதித்தகாலே இன்பகரும் அமளிக் கண்ணே வைத்தாற் போலும்.

கழுவாக்கால என்பது இடக்கரடக்கு. இதனுல் அவ் அமளியும் இழிக்கப்படுமாறு போல இவனுல அவ அவையும் இழிக்கப்படும் என்பதாம்.

இதனுன் அவன் அவையிடம் இருக்குமாறு கூறப்பட்டது.(10

85. புல்லறிவாண்மை

இனி ஏனைப் புலலறிவாண்மை கூறுகின்ரூர். அது புல்லிய அறிவினை ஆள்தலதன்மை என விரியும். அஃதாவது தான் சிற்றறிவினனுயிருந்தே தன்னைப் பேரறிவினரைக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிச் சொற் கொளளாமை.

அறிவுஇன்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை
இன்மையா வையாது உலகு. 841

இன்மையுள் இன்மை அறிவின்மை – ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுளளுஞ்ரும் மிக்க இலலாமையாவது அறிவிலலாமை, பிறிது இன்மை இன்மையா வையாது உலகு – மற்றைப் பொருள இல்லாமையோவெனின், அதனை அப்பெற்றிதாய இலலாமை யாகக் கொளளார் உலகத்தார்.

அறிவு என்பது எண்ணித் தலைமைபற்றி நலலறிவின் மேல் கின்றது. புல்லறிவாளர் செல்வம் எய்திய வழியும் இம்மை மறுமைப் பயன் எய்தாமையின் அதனை 'இன்மையுள இன்மை' என்றும், நல்லறிவாளர் வறுமையெய்திய வழியும் அஃது இழவா மையின் அதனை 'இன்மையா வையாது' என்றுங் கூறினர்.

இதனுன் புல்லறிவினது குற்றம் கூறப்பட்டது. (1)

அறிவிலான் நெஞ்சுஉவந்து ஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம். 842

அறிவிலான் நெஞ்சு உவக்கு ஈதல் – புல்லறிவுடையான் ஒரு வனுக்கு மனம் உவக்கு ஒன்று கொடுத்தல் கூடிற்றாயின், பெறு வான் தவம் பிறிது யாதும் இல்லை – அதற்குக் காரணம் பெறு கின்றவன் நல்லினையே, வேறென்றும் இலனே.

ஒரோ வழி நெஞ்சு உவக்கு ஈதல கூடலின் 'புல்லறிவாளரும் நல்வினை செய்ப' என்பாக்குப் 'பெறுவான் வீழ்பொருளெய்தி யான் போலவதல்லது, இம்மை நோக்கியாக மறுமை நோக்கி யாக ஈகின்றார் அலலா' எனக் கூறியவாறு. கூடிற்றாயின், அதற் குக் காரணம் என்னும் சொற்கள அவாய்நிலையான வந்தன.

இதனுன் அஃதுடையார தமமாட்டு நலலன செய்தலறி யாமை கூறப்பட்டது. (2)

அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை செறுவார்க்கும் செய்தல் அரிது. 843

அறிவிலார தாம் தமமைப் பிழிக்கும் பீழை–புலலறிவுடையார் தாமே தமமை வருதறும வருதறம், செறுவாராக்கும் செய்தல் அரிது – அது செயதறரியராய தம் பகைவராக்கும் செய்தல் அரிது.

பகைவர் தாம் அறிந்த தொன்றனைக் காலம் பார்த்திருந்து செய்வதலலது வறுமை, பழி, பாவம முதலிய பலவற்றையும் எக்காலததும செய்யமாட்டாமையின், அவாக்கும் செய்தல அரி தென்றார.

இதனுன் அவா தம்மாட்டும் தீயன செய்தல அறிவர் என்பது கூறப்பட்டது. (3)

வெண்மை எனப்படுவது யாதுஎனின் ஒண்மை உடையம்யாம் என்னும் செருக்கு. 844

வெண்மை எனப்படுவது யாது எனின் – புல்லறிவுடைமை என்று சொலலப்படுவது யாது என்று வினவின், யாம் ஒண்மை உடையம் என்னும் செருக்கு–அது தம்மைததாமே யாம் நல்லறி வுடையம் என்று நன்கு மதிக்கும் மயக்கம்.

'வெண்மை, இளமை' அதாவது அறிவுமுதிராமை. ஒண்மை எனக்காரியப் பெயர காரணததிற்காயிற்று. உலகத்தார் இகழ்தல் அறிந்துவைததும் அவ்வாறு மதித்தலான், 'மயக்கம்' என்றார். (4)

கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடுஅற வல்லதூஉம் ஐயம் தரும். 845

கல்லாத மேற்கொண்டு ஒழுகல் – புல்லறிவாளர் தாம் கல்லாத நூல்களையும் கற்றாராகத தாம் மேலிட்டுக் கொண்டு ஒழுகுதல், கசடு அற வல்லதூஉம் ஐயம் தரும் – கசடறக் கற்ற தொரு நூலுண்டாயின், அதன் கண்ணும் பிறர்க்கு ஐயத்தை வினைக்கும்.

வல்லது என ஏழாவது இறுதிக்கண் தொக்கது. 'உண்டாயின்' என்பது அவாய்நிலையான் வந்தது. ஐயம் அது வல்லர் என்பதனோடும் இவ்வாறு கொல்லோ என்பது. (5)

அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி. 846

தம் வயின் குற்றம் மறையாவழி–புல்லறிவாளர் தம்கண் நிகழும் குற்றங்களை அறிந்து கடியாராயின், அற்றம் மறைத்தலோ புல்லறிவு–ஆடையால் அற்றம் மறைத்தாராகத் தம்மைக் கருதுதலும் புல்லறிவாம்.

குற்றம்மறைத்தலாவது-அவற்றை இலவாக்குதல. மறைக்கப்படுவன பலவற்றுளளும் உயர்ந்தவற்றை எல்லாம் மறையாது தாழ்ந்தொன்றனையே மறைத்து, அவ்வளவால் தம்மையும் உலக ஒழுக்கினராக மதித்தலும் புல்லறிவென்பதாம்.

இவை மூன்று பாட்டானும் அவர் தம்மை வியத்தற்குற்றம் கூறப்பட்டது. (6)

அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு. 847

அருமறை சோரும் அறிவிலான்–பெறுதற்கு அரிய உபதேசப் பொருளைப் பெற்றாலும் உட்கொளளாது போக்கும புலலறிவாளன், தானே தனக்குப் பெருமிறை செய்யும்–அவ் உறுதி அறியாமையால் தானே தனக்கு மிக்க வருதததைச் செய்து கொளளும்.

'சோரும்' என இடத்து நிகழ்பொருளின் தொழில் இடதனின் மேல் நின்றது. மிக்க வருதம்–பொறுதறகு அரிய துன்பங்கள். இனி 'அருமறை சோரும்' என்பதறகுப் பிறரெல்லாம், 'உள்ளத்து அடக்கப்படும் எண்ணததை வாய்சோாக்து பிறர்க்கு உரைக்கும்' என்று உரைத்தார். அது பேணுமை என்னும் பேதைமையாவதன்றிப் புல்லறிவாண்மை யன்மை அறிக. (7)

ஏவவும் செய்கலான் தான்தேருன் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய். 848

ஏவவும் செய்கலான்–புல்லறிவாளன் தனக்கு உறுதியாய வற்றை அறிவுடையார் சொலலா நிற்கவும் செய்யான், தான் தேருன்–அதுவன்றித் தானகவும் இவை செய்வன என்று அறியான், அவ் உயிர் போமளவும் ஓர் நோய்–அவ் உயிர் யாக்கையின் நீங்குமளவும் நிலத்திற்குப் பொறுதறகு அரியதொரு நோயாம்.

உயிர் தன் உணர்தல்தன்மைத்தாயிருக்தும் நின்ற யாக்கையத்தான் மருளல்தன்மைத்தாய வேறுபடுதலின், 'அவ் உயிர்'

என்றும், அதன் நீங்கியபொழுதே அதற்கு இரண்டனுள் ஒன்று கூடுதலில் 'போமளவும்' என்றும், குலமலி முதலிய பொறுக் கின்ற கிலத்திற்குப் பாவயாக்கை பெரும்பொறையாய்த் தன்பம் செய்தலின் 'ஓர்நோய்' என்றும் கூறினர்.

காணுதாற் காட்டுவான் தான்காணுன் காணுதான்
கண்டானும் தான்கண்ட வாறு. 849

காணுதாற் காட்டுவான் தான் காணுன் - தன்னை எல்லாம் அறிந்தானுகமதித்தலான்பிறரால் ஒன்றறியும் தன்மையிலாதானை அறிவிக்கப்புகுவான் அவனும் பழிக்கப்பட்டுத தான் அறியானைப் முடியும், காணுதான் தான் கண்டவாறு கண்டானும் - இனி அவ் அறிபுந்தன்மையில்லாதான் கொண்டது விடாமையான் தான் அறிந்தவாற்றல் அதனை அறிந்தானைப் முடியும்.

புல்லறிவாளர்க்கு நல்லறிவு கொளுவுதல் ஒருவாற்றனும் இயைவதன்று என்பதாம். (9)

உலகத்தார் உண்டுஎன்பது இல்என்பான் வையத்து
அலகையா வைக்கப் படும். 850

உலகததாா உண்டு என்பது இல் என்பான்-உயர்ந்தோர் பலரும் உண்டு என்பதோா பொருளைத தன் புல்லறிவான் இலலை என்று சொல்லுவான், வையதது அலகையா வைக்கப்படும்-மகன் என்று கருதப்படான், வையததுக் காணப்படுவதோர் பேய் என்று கருதப்படும்.

கடவுளும், மறு பிறப்பும், இருவினைப்பயனும் முதலாக அவர் உள என்பன பலவேனும் சாதிப்றி 'உண்டு என்பது' என்றுர், தானே வேண்டிய கூறலால ஒப்பும் வடிவால் ஒவ்வாமையும் உடைமையின் தன்யாக்கை கரந்து மக்களையாக்கையுள தோன்று தல்வல்ல 'அலகை' என்றும் கூறினர்.

இவை நான்கு பாட்டானும் உறுதிச்சொற் கொள்ளாமையது குற்றம் கூறப்பட்டது. (10)

86. இகல்

இனி, அவற்றுன் வரும் வெகுளி காமங்களுள் அர சர்க்கு வெகுளி பெருமபான்மைதாகலின், அதனுன் வருவன கூறுவான் தொடங்கி, முதற்கண இகல கூறு கின்றார். அஃதாவது இருவா தமமுள பொருது வலி தொலைதற்கு ஏதுவாய மாறுபாடு.

இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்
பண்புஇன்மை பாரிக்கும் நோய். 851

எல்லா உயிர்க்கும் பகல் என்னும் பண்பு இன்மை பாரிக்கும் நோய் - எல்லா உயிர்கட்கும் பிறஉயிர்களோடு கூடாமை என்

னும் நீக்குணத்தை வளர்க்கும் குற்றம், இகல் என்ப - இகல் என்று சொல்லுவர் நூலோர்.

மக்களையும் விலங்குகளோடு ஒப்பிப்பது என்பது தோன்ற 'எல்லா உயிர்க்கும்' என்றும், பகுதிக்குணத்தை இடைநின்று விளைத்தலின் 'பகல்என்னும் பண்பு இன்மை' என்றும் கூறினர். கற்குணம் இன்மை அருத்தாபத்தியால் நீக்குணமாயிற்று.

இதனுள் இகலது குற்றம் கூறப்பட்டது. (1)

பகல்கருதிப் பற்று செயினும் இகல்கருதி இன்னுசெய் யாமை தலை. 852

பகல் கருதிப் பற்று செயினும் - தம்மொடு கூடாமையைக் கருதி ஒருவன் வெறுப்பன செய்தானையினும், இகல் கருதி இன்னு செய்யாமை தலை - அவனெடு மாறுபடுதலைக் குறித்துத் தாம் அவனுக்கு இன்னுதவற்றைச் செய்யாமை உயர்ந்தது.

செய்யின் பகைமை வளரத் தாம் தாழ்ந்துவரலானும், ஒழியின் அப் பற்றுதன தாமே ஒய்ந்துபோகத் தாம் ஓங்கிவரலானும், 'செய்யாமை தலை' என்றார். 'பற்றுத' என்பது விகாரமாயிற்று.()

இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத் தாவில் விளக்கம் தரும். 853

இகல் என்னும் எவ்வ நோய் நீக்கின்-மாறுபாடு என்று சொல்லப்படுகின்ற துன்பத்தைச் செய்யும் நோயை ஒருவன்தன் மனத்தினின்று நீக்குமாயின், தவல் இல்லாத் தா இல் விளக்கம் தரும் - அவனுக்கு அந நீக்குதல் எஞ்ஞான்றும் உளதாதற்கு ஏதுவாய புகழைக் கொடுக்கும்.

தவல் இல்லாமை அருத்தாபத்தியான் அப்பொருட்டாயிற்று. தா இல் விளக்கம் - வெளிப்படை. யாவரும் நண்பராவர், ஆகவே எல்லாச்செல்வமும் எய்திக் கொடை முதலிய காரணங்களால் புகழ்பெறும் என்பதாம். (3)

இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும் துன்பத்துள் துன்பம் கெடின். 854

. . இகல் என்னும் துன்பத்துள் துன்பம் கெடின் - மாறுபாடு என்று சொல்லப்படுகின்ற துன்பங்கள எல்லாவற்றினும் மிக்க துன்பம் ஒருவனுக்கு இல்லையாயின், இன்பத்துள இன்பம் பயக்கும்-அவ் இன்மை அவனுக்கு இன்பங்கள் எல்லாவற்றினும் மிக்க இன்பத்தினைக் கொடுக்கும்.

துன்பத்துள் துன்பம் பலரொடு பொருது வலிதொலைதலான் யாவர்க்கும் எளியனு யுறுவது. அதனை இடையின்றியே பயத்தலின், 'இகல் என்னும்' என்றார். இன்பத்துள் இன்பம் - யாவரும் கட்பாகவின் எல்லாப்பயனும் எய்தியுறுவது. (4)

இகல்எதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகல்ஊக்கும் தன்மை யவர். 855

இகல் எதிர் சாய்ந்து ஒழுக வல்லாரை - தம் உள்ளத்து மாறு பாடு தோன்றியவழி அதனை ஏற்றுக்கொள்ளாது சாய்ந்தொழுக வல்லாரை, மிகல் ஊக்கும் தன்மையவர் யார் - வெல்லக்கருதும் தன்மையுடையார் யாவர்.

இகலை ஒழிந்தொழுகல் வேந்தர்க்கு எவ்வாற்றானும் அரிதாகலின், 'வல்லாரை' என்றும், யாவர்க்கும் நண்பாகலின் அவரை வெல்லக் கருதுவார் யாவரும் இல்லை என்றும் கூறினார்.

இவை மான்கு பாட்டானும் இகலாதாரக்கு வரும் நன்மை கூறப்பட்டது. (5)

இகலின் மிகல்இனிது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து. 856

இகலின் மிகல் இனிது என்பவன் வாழ்க்கை - பிறரொடு மாறுபடுதற்கண் மிகுதல் எனக்கு இனிது என்று அதனைச் செய்வானது உயிர்வாழ்க்கை, தவலும் கெடலும் நணித்து - பிழைத்தலும் முற்றக்கெடுதலும் சிறிதுபொழுதுள் உளவாம.

மிகுதல் மேன்மேல் ஊக்குதல். 'இனிது' என்பது தான் வேறல் குறித்தல். பிழைத்தல் வறுமையான் இன்னாதாதல். முற்றக்கெடுதல் - இறத்தல். இவற்றோடு 'நணித்து' என்பதனைத் தலித்தகவி கூட்டி, உமமைகளை எதிரதும் இறந்ததும் தழீஇய எச்சஉமமைகளாக உரைக்க. பொருட்கேடும் உயிர்க்கேடும் அப்பொழுதே உளவாம என்பதாம். (6)

மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர். 857

இகல் மேவல் இன்னா அறிவினவர் - இகலோடு மேவுதலையுடைய இன்னாத அறிவினையுடையார், மிகல் மேவல் மெய்ப்பொருள் காணார் - வெற்றி பொருந்துதலையுடைய நீதி நூற்பொருளை அறியமாட்டார்.

இன்னா அறிவு தமக்கும் பிறர்க்கும் தீங்கு பயக்கும் அறிவு. வெற்றி: வழிநின்றார்க்கு உளதாவது. காணப்படும்பயத்ததாகலின் 'மெய்ந்நூல்' எனப்பட்டது. இகலால் அறிவு கலங்குதலின் 'காணார்' என்றார்.

இவை இரண்டு பாட்டானும் இகலினார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது. (7)

இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு. 858

இகலிற்கு எதிர் சாய்தல் ஆக்கம் - தன் உள்ளத்து மாறுபாடு தோன்றியவழி அதனை எதிர்தலையொழிதல் ஒருவனுக்கு ஆக்கம் ஆம், அதனை மிகல் ஊக்கின் கேடு ஊக்குமாம் - அது செய்யாது அதன்கண் மிகுதலே மேற்கொளவானையின் கேடும் தன்கண் வருதலே மேற்கொள்ளும்.

எதிர்தல் - ஏற்றுக்கோடல். சாய்க்தபொழுதே வருதலின், 'சாய்தல் ஆக்கம் என்றார். 'இகலிற்கு' எனவும், 'அதனை' எனவும் வந்தன வேற்றுமைமயக்கம். (8)

இகல்காணுன் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு. 859

ஆக்கம் வருங்கால் இகல் காணுன் - ஒருவன் தன்கண் ஆக்கம் வரும்வழிக் காரணமாய் உண்டாயினும் இகலை நினையான், கேடு தரற்கு அதனை மிகல் காணும் - தனக்குக் கேடுசெய்து கோடற்கண் காரணம் இன்றியும் அதன்கண் மிகுதலை நினைக்கும்.

இகலான் வருங்கேடு பிறரான் அன்றென்பது தோன்ற 'தரற்கு' என்றார். நான்காவதும் இரண்டாவதும் ஏழாவதன்கண் வந்தன. ஆக்கக்கேடுகட்கு முன் நடப்பன, இகலினது இன்மை உண்மைகள என்பதாம். (9)

இகலான் ஆம் இன்னுதை எல்லாம் நகலான் ஆம்
நன்னயம் என்னும் செருக்கு. 860

இகலான் இன்னுதை எல்லாம் ஆம் - ஒருவனுக்கு மாறுபாடு ஒன்றனே இன்னுதன எல்லாம் உளவாம், நகலான் நன்னயம் என்னும் செருக்கு ஆம் - நட்பு ஒன்றனே நல்ல நீதி என்னும் பெருஞ்செல்வம் உளதாம்.

இன்னுதன - வறுமை, பழி, பாவம்முதலாயின. நகல் - மகிழ்தல். 'நகல்'என்பதனுடம் 'செருக்கு'என்பதனுடம் தததம் காரணங்கட்கு ஆயின. 'நயம் என்னும் செருக்கு'எனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார்.

இவை மூன்று பாட்டானும் அவ் இருமையும் கூறப்பட்டன.()

87. பகை மாட்சி

அஃதாவது அறிவின்மை முதலிய குற்றங்களுடைமையாற் பகையை மாட்சிப் படுத்தல். அரசர்க்கு எவ்வாற்றானும் பகையின்மை கூடாமையின் மேற் பொதுவகையான் விலக்கப்பட்ட இகலை ஈண்டுச் சிறப்புவகையான் விதிக்கின்றார். ஆகலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

வலியார்க்கு மாறுஏற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை. 861

வலியார்க்கு மாறு ஏற்றல் ஓம்புக - தம்மின் வலியார்க்குப் பகையாய் எதிர்தலை ஒழிக, மெலியார்மேல் பகை ஓம்பா மேக - ஏண் : மெலியார்க்குப் பகையாதலை ஒழியாது விரும்புக.

'வலியார்' என்புழித் துணைவலியும் அடங்கலின் 'மெலியார்' என்புழித் துணைவலியின்மையும் கொளளப்படும். அத் துணை தான் படை பொருள முதலிய வேற்றுமைத்துணையும், நல்லழி வுடைமை நீதிநூல்வழி ஒழுகல முதலிய ஒற்றுமைத துணையும் என இரண்டாம். அவ் விரண்டும் இல்லாரை வெல்வார்க்கு வலி தொலையாமையின் அவரோடு பகைததல் விதிக்கப்பட்டது.

சிங்கநோக் காகிய இதனுள பகைமாட்சி பொதுவகையால் கூறப்பட்டது. (1)

அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான் என்பரியும் ஏதிலான் துப்பு. 862

அன்பு இலன் - ஒருவன் தன் சுற்றததின்மேல் அன்பிலன், ஆன்ற துணை இலன் - அதுவேயன்றி வலிய துணையிலன், தான் துவ்வான் - அதன்மேல தான்வலியிலன், ஏதிலான் துப்பு என் பரியும் - அப் பெற்றியான் மேலவந்த பகைவன் வலியினை யாஙஙனம தொலைக்கும்

சுற்றமும் இருவகைத துணையும் தன் வலியும் இலனுகலின், அவன்மேற் செல்வார்க்கு வலி வளாவதன்றித தொலையாது என் பதாம. துவ்வான் - துவவினைச் செய்யான். (2)

அஞ்சும் அறியான் அமைவுஇலன் ஈகலான் தஞ்சம் எளியன் பகைக்கு. 863

அஞ்சும - ஒருவன் அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சாகிற் கும், அறியான் - அறியவேண்டுமவற்றை அறியான், அமைவு இலன் - பிறரோடு பொருதகம் இலன், ஈகலான் - இவற்றின் மேலும் யாவாமட்டும இவறன்மாலையன், பகைக்குத தஞ்சம் எளி யன் - இப்பெறறியான் பகைவாக்கு மிக எளியன்.

'தஞ்சம்' 'எளிய' என்பன ஒருபொருட்பன்மொழி.

இஙஙனான்கு குற்றமும் உடையான் பகையின்றியும் அழியுமாக லின் 'தஞ்சம் எளியன்' என்றார். (3)

நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும் யாங்கணும் யார்க்கும் எளிது. 864

வெகுளி நீங்கான் - ஒருவன் வெகுளியின் நீங்கான், நிறை இலன் - அதுவேயன்றித் தான் நிறையுடையன் அல்லன், எஞ் ஞான்றும் யாங்கணும் யார்க்கும் எளிது - அவன்மேற்சேறல் எக் காலத்தும் எவ்விடதது யார்க்கும் எளிது.

நினைத்த மனைவியாதியாமை. வெகுண்டால் மாலியன் ஆகலானும், மனைவெளிப்படுத்தலானும், மேற்செல்வார்க்குக் காலமும் இடனும் வலியும் அறிந்து சேறல்வேண்டுதலானும். இனி, 'இனிது' என்று பாடம் ஓதி 'அவன் பகைமை இனிது' என்று கூறப்படினும் உளர். (4)

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான் பண்பிலன் பற்றார்க்கு இனிது. 865

வழி நோக்கான் - ஒருவன் நீதிநூலில் ஓதான், வாய்ப்பன செய்யான் - அது விதித்த தொழில்களைச் செய்யான், பழி நோக்கான் - தனக்கு வரும் பழியைப் பாரான், பண்புஇலன் - தான் பண்புடையன் அல்லன், பற்றார்க்கு இனிது - அவன் பகைவர்க்கு அப் பகைமைஇனிது.

தொல்லோர் அடிப்பட வழங்கிவந்ததாகலான் 'வழி' என்றும் தப்பாது பயன்படுதலின் 'வாய்ப்பன'என்றும், இக் குற்றங்களுடையான் தானே அழிதலின் 'பற்றார்க்கு இனிது' என்றும், கூறினார். (5)

காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான் பேணாமை பேணப் படும். 866

காணாச் சினத்தான் - தன்னையும பிறரையும் தான் அறியாமைக்கு ஏதுவாகிய வெகுளியையுடையான் யாவன், கழி பெருங் காமத்தான்- மேன்மேல வளராநின்ற மிக்க காமத்தையுடையான் யாவன், பேணாமை பேணப்படும் - அவனது பகைமை விரும்பிக் கொளளப்படும்.

காணாசினம் என்பது விகாரமாயிற்று. முன்னையனுக்கு யாவரும் பகையாகலானும், ஏனையனுக்குக் காரியம் தோன்றுமையானும், தாமே அழிவர் என்பது பற்றி, இவர் 'பேணாமை பேணப்படும்' என்றார். (6)

கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்துஇருந்து மாணாத செய்வான் பகை. 867

அடுத்து இருந்து மாணாத செய்வான் பகை - வினையைத் தொடங்கியிருந்து அதற்கு, ஏலாதன செய்வான் பகைமையை, கொடுத்தும் கொளல் வேண்டும் - சிலபொருள் அழியக் கொடுத்தாயினும் கோடல் ஒருதலைபாகவேண்டும்.

ஏலாதன மெலியனாய்வதனுத் துணிதலும், வலியனாய்வைத்துத் தணிதலும் முதலாயின. அப்பொழுது அதனல் சிலபொருள் அழியினும் பின் பலபொருள் எய்தற்கு ஐயம் இன்மையின், 'கொளல் வேண்டும் மன்ற'என்றார்.

இவை ஆறு பாட்டானும் அது சிறப்புவகையாற் கூறப்பட்டது. (7)

குணன் இலனெனிக் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு இனன் இலனும் ஏமாப்பு உடைத்து. 868

குணம் இலனெனிக் குற்றம் பலவாயின் இனம் இலனும் - ஒருவன் குணன் ஒன்றும் இலனெனில் உடைய குற்றம் பலவாயவழி அவன் துணையிலனும், மாற்றார்க்கு ஏமாப்பு உடைத்து - அவ் இலனதன்தானே அவன் பகைவர்க்குத் துணையாதலையுடைத்து.

குணம்-இறைமாட்சியுட் சொல்லியன. குற்றம்-இவ்வதிகாரத்துச் சொல்லியனயும் மற்றும் அத்தன்மையனவும். துணை-சுற்றம், நட்பு, பொருள், படை முதலாயின. பகைவர்க்கு இவற்றுன் உளதாம் பயன்தானே உளதாமாகலின் 'ஏமாப்புமைத்து' என்றார். 'இலனெனில்'என்னும் செய்தெனெச்சம் 'உடைய'என வந்த பெயரெச்சக் குறிப்புக் கொண்டது. (8)

செறுவார்க்குச் சேண் இகவா இன்பம் அறிவு இலா அஞ்சும் பகைவர்ப் பெறின். 869

அறிவு இலா அஞ்சும பகைவரப் பெறின்-நீதியை அறிதல் இல்லாத அஞ்சும் பகைவரைப் பெற்றால, செறுவார்க்குச் சேண் இன்பம் இகவா-அவரைச் செறுவார்க்கு உயர்ந்த இன்பங்கள நீங்கா.

உபாயம் அறிதலும் அறிதால செயதமுடிக்கும் திண்மையும் இலலாதாரே பகைவராதல கூடாமையின் 'பெறின்'என்றும். அவரை அறிதது மேறசென்றபொழுதே பகையின்மையும் செல்வமும் ஒருங்கேஎய்தலின், 'சேறலுடை இன்பங்கள இகவா' என்றும கூறினார். (9)

கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும் ஒல்லாஅ ஒல்லாது ஒளி. 870

கலலான் வெகுளும் சிறுபொருள ஒல்லாஅ-நீதிநூலைக் கல்லாதாரேடு பகைததலான் வரும் எளியபொருளை மேவாதாஅ, எஞ்ஞானறும ஒளி ஒல்லாது-எஞ்ஞான்றும புகழ மேவாது.

சிறுபொருள-முயறசி சிறிதாய பொருள. நீதி அறியாதாஅ வேறல எளிதாயிருக்கவும், அது மாட்டாதாஅ வெற்றியான் வரும் புகழ் கூடாது என்பதாம், ஆகவே, இச்சிறிய முயற்சியாற் பெரிய பயன் எய்துக என்றவாருயிற்று. இதற்குப் பிறசெல்லாம் அதிகாரத்தோடு மாறுதன் மேலும் ஒரு பொருள் தொடர்பு படாமல் உரைத்தார்.

இவை மூன்று பாட்டானும் அதனினைய பயன் கூறப்பட்டது.()

88. பகைத்திறம் தெரிதல்.

அஃதாவது மாணுத பகையை ஆக்குதற்குற்றமும், முன் ஆகின்ற பகையுள நட்பாக்கறபாலதும், நொதுமலாக்கற்பாலதும், அவற்றின்கண்செய்வதும், ஏனைக் கீளுதற்பாலதன்கண் செய்வனவும், கீளையும் பருவமும், கீளையாக்காதும் படும் இழுக்கும் என்று இத் திறங்களை ஆராய்தல். 'இரட்டுற மொழிதல்' என்பதனும் பகையது திறமும் பகையிடத்து ஆக்குந் திறமும் என விரிக்கப்பட்டது. இவையெல்லாம் மாணுப் பகைய ஆகலின், இது பகைமாட்சியின் பின் வைக்கப்பட்டது.

பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று. 871

பகை என்னும் பண்பு இல்லதனை–பகை என்று சொலலப்படும் தீமை பயப்பதனை, ஒருவன் நகையேயும் வேண்டற்பாற்று அன்று–ஒருவன் விளையாட்டின் கண் ணையாயினும விரும்புதல் இயற்கைத்தன்று நீதி நூல்.

மாணுத பகையை ஆக்கிக் கோடல எவ்வாறருளும் தீமையே பயத்தலின் 'பண்பிலது' என்றும, அதனை விளையாட்டின்கண் வேண்டினும் செற்றமே விளைத்து மெய்யாம் ஆகலின் 'நகையேயும்' என்றும், வேண்டாமை தொல்லோர்தது துணிவு என்பார் நீதி நூல்மேல வைத்தும் கூறினர். அப் பெயர் அவாய்நிலையான் வந்தது. (1)

வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை. 872

வில் ஏர் உழவர் பகை கொளினும்–ஒருவன் வில்லே ஏராக வுடைய உழவரோடு பகைகொண்டானையினும், சொல ஏர உழவர் பகை கொளளற்க–சொலலே ஏராகவுடைய உழவரோடு பகை கொளளாதொழிக.

சொல்–ஆகுபெயராய் நீதி நூலமேல நின்றது. வீரம் சூழச்சி என்னும் ஆற்றல்களுள வீரமேஉடையாரோடு பகை கொண்டால் கேடுவருதல ஒருதலையன்று, வந்ததாயினும் தனக்கே யாம். ஏனைச் சூழ்ச்சி உடையாரோடாயின் தன்வழியினுளளார்க்குந் தப்பாது வருதலின், அது கொளளினும் இது கொளளற்க என்றார். உம்மையான் அதுவும் ஆகாமை பெறுதும். இரண்டும் உடையாரோடு கொளளலாகாமை சொல்ல வேண்டாவாகிற்று. உருவக விசேடம். (2)

ஏமுற் றவரினும் ஏழை தமியனைப்
பலலார் பகைகொள் பவன். 873

தமியனுய்ப் பல்லார் பகைகொள்பவன்–தான் தனியனுய் வைத்துப் பலரோடு பகைகொள்வான், ஏமுற்றவரினும் ஏழை–பித்தும்மரினும் அறிவிலன்.

தனிமை–சுற்றம் நட்பு படை முதலிய இன்மை. மயக்கத் தால் ஒப்பாராயினும் ஏமுற்றவர் அதனல் தீங்கு எய்தாமையின் தீங்கெய்ததலுமுடைய இவனே, 'அவரினும் ஏழை'என்ருர். நீங் காவது–துணேயுள் வழியும் வேறல் ஐயமாயிருக்க, அஃது இன்றி யும் பலரோடு பகைகொண்டு அவரால் வேறுவேறு பொருதற் கண்ணும் ஒருங்கு பொருதற்கண்ணும் அழிந்தே விடுதல்.

இவை மூன்று பாட்டானும் பகைகோடற்குரிமை பொது வினுஞ் சிறப்பினும் கூறப்பட்டது. (3)

பகைநட்பாக் கொண்டுஒழுகும் பண்புடை யாளன் தகைமைக்கண் தங்கிற்று உலகு. 874

பகை நட்பாக் கொண்டு ஒழுகும் பண்புடையாளன் தகை மைக்கண்–வேண்டியவழிப் பகையை வேறுபடுத்துத் தனக்கு நட்பாகச்செய்துகொணடொழுகும இயல்பினேயுடைய அரசனது பெருமைபுளளே, தங்கிற்று உலகு–அடங்கிறறு இவ்வுலகு.

வேண்டியவழி என்பது ஆக்கத்தான் வந்தது. வேறுபடுத் தல் : பகைகிலேமையின் நீக்குதல். ஒழுகல்–நிகழியொழுகல். பெருமை–பொருள, படைஎன இருவகைத்தாய ஆற்றல். அதன் வழிததாதறகு எஞ்ஞான்றும் திரிபின்மையின், அத் துணிவு பற்றித 'தங்கிற்று'என்ருர். (4)

தன்துணே இன்ருல் பகைஇரண்டால் தான்ஒருவன் இன்துணேயாக் கொள்கஅவற்றின் ஒன்று. 875

தன்துணே இன்று–தனக்கு உதவும் துணேயோனின் இலலே, பகை இரண்டு–கலிவுசெய்யும் பகையோனின் இரண்டு, ஒருவன் தான் அவறறின் ஒன்று இன்துணேயாக் கொள்க–அங்ஙனமாய் நின்றவழி ஒருவனுகிய தான் அப்பகை இரண்ட னுள பொருந்தியது ஒன்றை அப்பொழுதைக்கு இனிய துணே யாகச் செய்து கொளக.

பொருந்தியது ஏனேயதணே வேறறுக்கு ஏற்றது அப்பொழுது அவ் வெலலும்பொழுது திரிபின்ருகச் செய்துகொளக என்பார், 'இன்துணேயா'என்ருர். ஆல்கள–அசை.

இவை இரண்டு பாட்டானும் நட்பாக்குறுமாலது கூறப் பட்டது. (5)

தேறினும் தேரு விடினும் அழிவின்கண தேருன் பகாஅன் விடல். 876

தேறினும் தேருவிடினும்–பகைவனே மூன் தெளிந்தானுயி னும் தெளிந்திலனுயினு ம், அழிவின்கண் தேருன் பகான் விடல்–

தனக்கும் புறத்தொருவினையால் தாழவு வந்துழிக் கூடாது நீக்காது இடையே விட்டுவைக்க.

'முன்தெளிந்தான் ஆயினும அப்பொழுது கூடாதொழிக' என்றது, உள்ளாய் நின்று கெடுத்தல் நோக்கி, 'தெளிந்திலனாயினும் அப்பொழுது நீக்காதொழிக' என்றது, அவ் அழிவிற்குத் துணையாதல் நோக்கி.

இதனான் நொதுமலாக்கற்பாலது கூறப்பட்டது. (6)

நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க மென்மை பகைவ ரகத்து. 877

நொந்தது அறியார்க்கு நோவற்க—நொந்ததனைத் தாமாக அறியாத நட்டார்க்குத் தன் நோவு சொல்லற்க, மென்மை பகைவ ரகத்து மேவற்க—வலியின்மை பார்த்திருக்கும் பகைவர்மாட்டு அவ் வலியின்மையை மேலிட்டுக்கொள்ளற்க.

நோ என்னும் முதனிலைத்தொழிற்பெயர் ஈண்டு அது சொல்லுதற்கண் ஆயிற்று. பகைவாகண் தவிர்வது கூறுவார், நட்டார்கண் தவிர்வதும் உடன்கூறினார்.

இதனான் அவ் இருபகுதிக்கண்ணும் செய்வது கூறப்பட்டது.()

வகை அறிந்து தன்செய்து தன்காப்ப மாயும் பகைவர்கண் பட்ட செருக்கு. 878

வகை அறிந்து தன்செய்து தன்காப்ப—தான் வினைசெய்யும் வகையை அறிந்து அது முடிததற்கு ஏற்பத் தன்னைப் பெருக்கி மறவி புகாமல் தன்னைக் காக்கவே, பகைவாகண் பட்ட செருக்கு மாயும்—தன் பகைவாமாட்டு உளதாய களிப்புக் கெடும்.

வகை—வலியனாய்த தான் எதிரே பொருமாறும, மெலியனாய அளவிற் போர் விலக்குமாறும் முதலாயின. பெருக்கல—பொருள படைகளாற் பெருகசசெயதல. களிப்பு—இவற்றான் வேறும் என்றுஎண்ணி மகிழநதிருததல். இவ் இறுகுதல அறிந்து தாமே அடங்குவர் என்பதாம.

இதனான் களைதற்பாலதன்கண் செய்வன கூறப்பட்டன. (8)

இளைதாக முள்மரங் கொல்க களையுநர் கைகொல்லும் காழ்த்த இடத்து. 879

முள மரம் இளைதாகக் கொல்க—களையவேண்டுவதாய முள் மரத்தை இளைதாய நிலைமைக்கண் களைக; காழ்த்த இடத்துக் களையுநர் கைகொல்லும்—அன்றியே முதிர்ந்த நிலைமைக்கண் களையலுறின் களைவார் கையினை அதுதான் களையும்.

'களையப்படுவதாய தம் பகையை அதுமெலிதாய காலத்தே களைக; அன்றியே, வலிதாயகாலத்துக் களையலுறின் தம்மை அதுதான் களையும்' என்பது தோன்ற நின்றமையின், இது பிறிது மொழிதல்.

*இதனுள் கலியுழ் பருவம் கூறப்பட்டது. (9)

உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார். 880

செயிப்பவர் செம்மல் சிதைக்கலாதார்–தம்மொடு பகைப்பா ரது தருக்கினைக் கெடுக்கலாய் இருக்க இகழ்ச்சியான் அது செய் யாத அரசர், உயிர்ப்ப உளரலர்– மன்ற–பின் உயிர்க்குமாத்தி ரத்திற்கும் உளரலர் ஒரு தலையாக.

அவர் வலியராய்த் தம்மைக் கலைதல் ஒருதலையாகலின், இறந்தாரேயாவர் என்பதாம். அவர் உயிர்த்த துணையானே தாம் இறப்பர் எனினுமமையும.

இதனுள் கலியா வழிப்பதும இழுக்குக் கூறப்பட்டது. (10)

89. உட்பகை

அஃதாவது புறப்பகைக்கு இடனைக்கிக் கொடுத்தது, அது வெலலும தலையுமை உளளாய நிறகும பகை. இதுவும், கலியாய்படுவதன் பாலதாகலின், பகைதகிறம தெரிதலின் பின் வைக்கப்பட்டது.

நிழல்நீரும் இன்னுத இன்னு தமர்நீரும்
இன்னுவாம் இன்னு செயின். 881

நிழல நீரும இன்னுத இன்னு–ஒருவனுக்கு அனுபவிக்க வேண்டுவனவாய நிழலும் நீரும முன் இனியவேனும் பின் நோய் செய்வன இன்னுவாம, தமா நீரும இன்னுசெயின் இன்னுவாம்– அதுபோலத தழுவவேண்டுவனவாய தமரியல்புகளும் முன் இனியவேனும பின் இன்னுசெய்வன இன்னுவாம.

நோயா - பெருங்கால, பெருவயிறு முதலாயின. 'தமர்'என்ற தலை உட்பகையாதறகுரியராய ஞாதியா என்பது அறிக. இன்னு செயல முன்வெளிப்படாமை நின்று துலை பெற்றவழிக் கெடுத்தல். (1)

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடாபு. 882

வாளபோல பகைவரை அஞசறக - வாள்போல எறிதும் என்று வெளிப்படு நிறகும பகைவா பகையினை அஞசாதொழிக, கேளபோல பகைவர் தெடாபு அஞசுக - அங்ஙனம் நில்லாது கேள்போல மறைநது நிற்கும் பகைவர் நட்பினை அஞ்சுக.

பகைவர்–ஆருபெயர். முன்னே அறிந்து காக்கப்படுதலான் 'அஞ்சற்க' என்றும், அங்ஙனம் அறியவும் காக்கவும்படாமையின் கெடுதல் ஒருதலையென்பதுபற்றி 'அஞ்சுக'என்றும் கூறினர். பின்

செய்யும் பகையினும் கொடிதாகலானும் காக்கலாகாது ஆகலானும், அஞ்சப்படுவது முன்செய்த அவர்தொடர்பாயிற்று.

இவை இரண்டு பாட்டானும் உட்பகை ஆகாதது என்பது கூறப்பட்டது. (2)

உட்பகை அஞ்சித்தற்காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும். 883

உட்பகை அஞ்சித தற்காக்க-உட்பகையாயினரை அஞ்சித தன்னைத் காததுக் கொண்டொழுகுக, உலைவிடத்து மட்பகையின் மாணத்தெறும் - அங்ஙனம் ஒழுகாதவழித தனக்கோர் தளர்ச்சி வந்தவிடத்துக் குயவன் மட்கலத்தை அறுக்கும் கருவிபோல அவர் தப்பாமற் கெடுப்பர்.

'காத்தல்' அவர் அலையாமலும் அவர்கு உடம்படாமலும் பரிகரித்தல். மண்ணைப் பருக்கும் கருவி மட்பகை எனப்பட்டது. பகைமை தோன்றுமல உளளாயிருந்தே கெழுதுததலின், கெடுதல தப்பாது என்பதாம். (3)

மனம்மாணு உட்பகை தோன்றின் இனம்மாணு
ஏதம் பலவும் தரும். 884

மனம் மாணு உட்பகை தோன்றின் - புறம திருந்தியது போன்று அகந்திருந்தாத உட்பகை அரசனுக்கு உண்டாவதாயின், இனம் மாணு ஏதம் பலவும் தரும் - அஃது அவனுக்குச் சுற்றம் வபமாகாமைக்கு ஏதுவாகிய குற்றம் பலவறறையும் கொடுக்கும்.

அவை சுற்றதாரை உளளாய்கின்றும் வேறுபடுததலும், அதனால் அவர் வேறுபட்டவழித தான் தேருமையும், பின் அவற்றுன் விளைவனவும் ஆம். (4)

உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்
ஏதம் பலவும் தரும் 885

உறல் முறையான் உட்பகை தோன்றின் - புறதது உறவு முறைததன்மையோடு கூடிய உட பகை அரசனுக்கு உண்டாவதாயின், இறல முறைபான் ஏதம் பலவும் தரும - அஃது அவனுக்கு இறுதல் முறையோடு கூடிய குற்றம பலவற்றையும் கொடுக்கும்.

அவை புறப்பகை துணையாய்நின்றே அது தோன்றுமல கோறல் முதலிய வஞ்சனை செய்தலும், அமைச்சர முதலிய உறுப்புக்களைத் தேய்ததலும் முதலாயின. (5)

ஒன்றுமை ஒன்றியார் கண்படின் எஞ்ஞான்றும்
பொன்றுமை ஒன்றல் அரிது. 886

ஒன்றுமை ஒன்றியார கண் படின் - பகைமை, தனக்கு உள்ளாயினர் மாட்டே பிறக்குமாயின்; பொன்றுமை ஒன்றல்

எஞ்ஞான்றும் அரிது - அரசனுக்கு இறவாமை கூடுதல், எஞ்ஞான்றும் அரிது.

பொருள படை முதலிய உறுப்புக்களாற் பெரியனாய காலத்தும் என்பார், 'எஞ்ஞான்றும்' என்றார்.

இவை நான்கு பாட்டானும், அதனால் தனக்கு வரும் தீங்கு கூறப்பட்டது. (6)

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே உட்பகை உற்ற குடி. 887

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் - செப்பினது புணர்ச்சி போலப் புறத்து வேறுறுமை தெரியாமற் கூடினராயினும், உட்பகை உறற குடி கூடாது - உட்பகை உண்டாகிய குடியிலுள ளோர் அகத்துத் தம்முள கூடார.

செப்பின் புணர்ச்சி - செப்பு மூடியோடு புணர்ந்த புணர்ச்சி. உட்பகையான் மனம் வேறுபட்டமையின், புறப்பகை பெற்றுழி 'வீற்றுவீற்றுவர்' என்பதாம. குடி கூடாது என்பதனை, நாடு வந்தது என்பதுபோலக் கொளக. உட்பகை தான் உற்றகுடியோடு கூடாது என்றும, உட்பகை உண்டாய குடி அப் பகையோடு கூடாது என்றும உரைப்பாரும் உளர். (7)

அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது உட்பகை உற்ற குடி. 888

உடபகை உறறகுடி - புன் வளரந்து வந்தாயினும் உட் பகையுணடாய குடி, அரம பொருத பொன் போலப் பொருது உரம தேயும - அரதனால பொறபபட்ட இருமபு போல அதனால் பொறப்படு வலி தேயும.

'பொருது' என்னும சொபபாடு விளையெசசம் 'தேயும்' என்னும் வினைகொண்டது. அஃது, உரதனின் தொழிலாயினும் குடிமேல ஏற்றுதலின், வினை முதல வினை ஆயிறறு. காரியஞ செய்வது போன்று பொருதி மெல்ல மெலலப் பிரிவிததலான், வலி தேய்கதுவிடும் என்பதாம.

இவை இரண்டு பாடானும், அவன் குடிக்கு வரும் தீங்கு கூறப்படடது. (8)

எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும் உட்பகை உள்ளதாம் கேடு. 889

உட்பகை எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும் - அரசனது உட்பகை அவன் பெருமையை நோக்க எள்ளின் பிளவை ஒத்த சிறுமை உடைததேயாயினும், கேடு உள்ளதாம் - பெருமையெல்லாம் அழியவரும்கேடு அதன் அகத்ததாம.

எத்துணையும் பெரிதாயகேடு, தனக்கு எல்லைவருந்துணையும் எத்துணையும் சிறியதாய உட்பகையுள்ளே அடங்கியிருந்து, வந்தால் வெளிப்பட்டுநிற்கும் என்பதாம்.

இதனான் அது சிறிது என்று இகழப்படாது என்பது கூறப்பட்டது. (9)

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று. 890

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை - மனப்பொருத்தம் இல்லாதாரோடுகூட ஒருவன் வாழும வாழக்கை, குடங்கருள் பாம்போடு உடன் உறைந்தற்று - ஒரு குடிலுள்ளே பாம்போடு கூட உறைந்தாற்போலும்.

'குடங்கம்' என்னும் வடசொல திரிந்து நின்றது. இடச் சிறுமையானும் பயிற்சியானும் பாம்பாற் கோட்படல் ஒருதலையாம்; ஆகவே, அவ் உவமையால் அவனுயிர்க்கு இறுதிவருதல் ஒருதலை என்பது பெற்றாம்.

இதனான் கண்ணோடாதவரைக் கடிக என்பது கூறப்பட்டது. ()

90. பெரியாரைப் பிழையாமை

அஃதாவது பெரியராயினாரை அவமதிதது ஒழுகாமை. 'இரட்டுற மொழிதல' என்பதனால் பெரியாா என்பது ஆற்றலாற் பெரியாராய வேந்தர்மேலும், தவததாற் பெரியாராய முனிவர் மேலும் நின்றது. மேறசொலலாது எஞசி நின்றது ஆகலின், இது வெகுளியான் வருவனவற்றது இறுதிக் கண் வைக்கப்பட்டது.

ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை. 891

ஆற்றுவாா ஆற்றல் இகழாமை-எடுததுக் கொண்டன யாவும் முடிக்க வல்லார்களுடைய ஆற்றலகளை அவமதியாமை, போற்றுவார் போற்றலுள எல்லாம் தலை - தங்கண் தீங்கு வராமல் காப்பார் செய்யும் காவலகள எலலாவறறினும் மிக்கது.

ஆற்றல் என்பது பெருமை, அறிவு, முயற்சி என்னும் மூன்றன்மேலும் நிற்றலின், சாதியொருமை. இகழந்த வழி களைய வல்லார் என்பது தோன்ற 'ஆற்றுவாா' என்றும், அரண், படை, பொருள, நட்பு முதலிய பிறகாவல்கள் அவரான் அழியுமாகலின் அவ் இகழாமையைத் தலையாய காவல் என்றும் கூறினாா.

பொதுவகையால் அவ் இருதிறததாரையும பிழையாமையது சிறப்பு இதனான் கூறப்பட்டது. (1)

பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும். 892

பெரியாரைப் பேணாது ஒழுகின் - ஆற்றல்களால் பெரியராயினாரை வேந்தன் நன்குமதியாது அவமதித்து ஒழுகுவானாயின், பெரியாரால் பேரா இடும்பை தரும் - அவ்வொழுக்கம் அப்பெரியாரால் அவர்க்கு எஞ்ஞான்றும் நீங்காத துன்பங்களைக் கொடுக்கும்.

அத் துன்பங்களாவன: இருமையினும் இடையறாது வரும் மூவகைத் துன்பங்களும் ஆம். அவையெல்லாந் தாமே செய்து கொள்கின்றனர் என்பது தோன்ற, ஒழுக்கத்தை வினைமுதலாக்கியும் பெரியாரைக் கருவியாக்கியும் கூறினார்.

பொதுவகையான் அவரைப் பிழைத்தற்குற்றம் இதனான் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையால் கூறுப. (2)

கெடல் வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின் ஆற்று பவர்கண் இழுக்கு. 893

அடல் வேண்டின் ஆற்றுபவர்கண் இழுக்கு - வேற்று வேந்தரைக் கோறல வேண்டிய வழி அதனை அப்பொழுதே செய்ய வல்ல வேந்தர்மாட்டுப் பிழையினை, கெடல் வேண்டின் கேளாது செய்க - தான் கெடுதல் வேண்டினானாயின், ஒருவன் நீதி நூலைக் கடந்து செய்க.

அப்பெரியாரைக் "காலனும் காலம் பாரிக்கும் பாராது-வேல் ஈண்டு தானை விழுமியோர் தொலைய—வேண்டிடத் தடூஉம் வெல் போர வேந்தர்" (புறநா. 41) என்றார் பிறரும். நீதி நூல் செயலாகாது என்று கூறலின், 'கேளாது' என்றார். (3)

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு ஆற்றாதார் இன்னா செயல் 894

ஆற்றுவார்க்கு ஆற்றாதார் இன்னா செயல் - மூவகை ஆற்றலும் உடையார்க்கு அவை இல்லாதார் தாம் முற்பட்டுஇன்னாதவற்றைச் செய்தல், கூற்றத்தைக் கையால் விளித்தற்று—தானேயும் வரற்பாலனாய கூற்றுவனை அதற்கு முன்னே கைகாட்டி அழைத்தல ஒக்கும்.

கையால விளித்தல் - இகழச்சிக்குறிப்பிற்று. தாமேயும் உயிர முதலிய கோடற்கு உரியாரைத் தம்மேல் வருவித்துக் கொள்வார் இறப்பினது உண்மையும் அண்மையும் கூறியவாறு.

இவை இரண்டுபாட்டானும் வேந்தரைப் பிழைத்தலின் குற்றம் கூறப்பட்டது. (4)

யாண்டுச் சென்று யாண்டும் உளராகார் வெந்துப்பின் வேந்து சேறப்பட்ட வர். 895

வெந்துப்பின் வேந்து செறப்பட்டவர் – பகைவர்க்கு வெய்தாய வலியினையுடைய வேந்தனால் செறப்பட்ட அரசர், யாண்டுச்

சென்று யாண்டும் உளராகார் - அவனைத் தப்பி எங்கே போயுள ராவார், ஓரிடத்தும் உளராகார்.

இடைவந்த சொற்கள் அவாய்நிலையான் வந்தன. வெந்துப் பின் வேந்தாகலால் தம் நிலம் விட்டுப் போயவர்க்கு இடங்கொடுப் பாரில்லை; உளராயின் இவர் இனி ஆகார் என்பது நோக்கி அவனெடு நட்புக்கோடற்பொருட்டும், தாமே வக்தெய்திய அவர் உடைமையை, வௌவுதற்பொருட்டும் கொல்வர்; அன்றெனின் உடனே அழிவர் என்பன நோக்கி, 'யாண்டுச்சென்றுயாண்டும் உளராகார்' என்றார்.

இதனால் அக்குற்றமுடையார் "அருமை உடைய அரண் சோர்த்தும் உய்யார்" என்பது கூறப்பட்டது. (5)

எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். 896

எரியால் சுடப்படினும் உய்வு உண்டாம் - காட்டிடைச் சென்றுஞெருவன் ஆண்டைத் தீயாற் சுடப்பட்டானாயினும் ஒரு வாற்றான் உயிருய்தல் கூடும்; பெரியாரப் பிழைத்து ஒழுகுவார் உய்யார் - தவத்தாற் பெரியாரைப் பிழைதது ஒழுகுவார எவ் வாற்றானும் உயிருய்யார்.

நீ முன் உடம்பினைக் கதுவி அதுவழியாக உயிர் மேற் சேற லின், இடையே உய்யவும் கூடும். அருந்தவர் வெகுளி அன்ன தன்றித தான் நிற்பது கணமாய் அதற்குளளே யாவாக்கும் காத தல் அரிதாகலின்; (குறள-26)அது கூடாதாகலான், அதற்கு ஏது வாய பிழை செய்யற்க என்பதாம். (6)

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னும்
தகைமாண்ட தக்கார் செறின். 897

தகை மாண்ட தக்கார் செறின் - சாப அருள்கட்கு ஏது ஆய பெருமை மாட்சிமைப்பட்ட அருந்தவர் அரசனை வெகுளவ ராயின், வகைமாண்ட வாழ்க்கையும் வான் பொருளும் என்னும்- உறுப்பழகுபெற்ற அவன் அரசாட்சியும் ஈட்டிவைதத பெரும் பொருளும் என்பட்டு விடும்?.

உறுப்பு-அமைச்சு, நாடு, அரண், படைஎன இவை. 'செறின்' என்பது அவர் செருமை தோன்ற நின்றது. இவ்வச்சததான் முன் வருவனவற்றிற்கும் இஃது ஒக்கும். அரசர் தம் செல்வக்களிப் பான் அருந்தவர்மாட்டுப் பிழை செய்வராயின், அச்செல்வம் அவர் வெகுளித் தீயான்ஒருகணத்துள்ளே வெந்துவிடும்என்பதாம்.

குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து. 898

குன்று அன்ரை குன்ற மதிப்பின் - குன்றத்தை ஒக்கும் அருந்தவர் கெட நினைப்பராயின், நிலத்து நின்று அன்னர் குடி-

யொடு மாய்வர் - அப்பொழுதே இக் நிலத்து நிலைபெற்றும் போலும் செல்வர் தம் குடியொடும் மாய்வர்.

வெயில், மழை முதலிய பொறுத்தலும் சலியாமையும் உள்ளிட்ட குணங்கள் உடைமையின், 'குன்றன்னார்' என்றார்: "மல்லல் மலியுலய மாதவர்" (சீவக. முத்தி 191) என்றார் பிறரும். நிலை பெற்றுப்போறலாவது: இறப்பப் பெரியராகலின், இவர்க்கு எஞ் ஞான்றும் அழிவில்லை என்று கண்டாரால கருதப்படுதல். (8)

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து வேந்தனும் வேந்து கெடும். 899

ஏந்திய கொளகையார் சீறின் - காத்தற்கு அருமையான் உயர்ந்த விரதங்களை உடையார் வெகுளவராயின், வேந்தனும் இடை வேந்து முரிந்து கெடும் - அவராற்றலான் இக்திரனும் இடையே தன்பதம் இழந்து கெடும்.

"வேந்தன் மேய தீம்புனல உலகமும்" (தொல். பொருள். அகத. 5) என்றார் பிறரும். நகுடன் என்பான் இக்திரன் பதம் பெறுதச் செலகின்ற காலததுப் பெற்ற களிப்பு மிகுதியான் அகத் நியன் வெகுளவதோர் பிழை செய அதனல் சாபமெய்தி அப்பதம் இடையே இழ்நதான் என்பதனை உட்கொண்டு இவ்வாறு கூறினர்.

இவை நான்கு பாட்டானும் முனிவரைப் பிழைத்தலின் குற்றம கூறபபட்டது. (9)

இறந்துஅமைந்த சார்புடைய ராயினும் உய்யார் சிறநதுஅமைந்த சீரார் செறின். 900

சிறக்து அமைநத சீரார செறின் - கழிய மிக்க தவ,ஞானை உடையார வெகுளவராயின், இறநது அமைந்த சார்பு உடையராயினும, உய்யார் - அவரான் வெகுளப்பட்டார கழியப் பெரிய சார்பு உடையரா ஆயினும அதுபற்றி உய்யமாட்டார்.

சார்பு - அரண, படை, பொருள, நட்பு என இவை. அவை எல்லாம வெகுண்டவரது ஆற்றலால கிரிபுரம்போல அழிந்துவிடும் ஆகலின் 'உய்யார்' என்றார். சீருடையது சீர் எனப்பட்டது.

இதனல அக்குறறமுடையார சார்பு பற்றியும் உய்யார் என் பது கூறப்பட்டது. (10)

91. பெண்வழிச் சேறல்.

இனிக் காமததான் வருவன நேரே பகையல்லவாயினும் ஆக்கம் சிதைதலை அழிவுதலைக் தருதல் என்னும் தொழிலகளால் பகையோடு ஒததலின் பகைப்பாற்படுவன வாம், ஆகலான், அவற்றைப் பகைப் பகுதியது இறுதிக்கண் கூறுவான் தொடங்கி, முதற்கண் பெண்வழிச் சேறல் கூறுகின்றார். அஃதாவது தன்வழி ஒழுகற்பாலளாய இல்லாள் வழியேதான் ஒழுகுதல்.

மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது. 901

மனை விழைவார் மாண் பயன் எய்தார் - இன்பம் காரணமாகத் தம் மனையாளை விழைந்து அவள் தன்மையராய் ஒழுகுவார், தமக்கு இன்துணையாய அறத்தினை எய்தார்; வினை விழைவார் வேண்டாப் பொருளும் அது-இனிப் பொருள செய்தலை முயல்வார் அதற்கு இடையீடென்று இகழும் பொருளும் அவ் இன்பம்.

மனையும், விழைதலும், பயனும் ஆகுபெயர். அவ் இன்பம் அவள தன்மையராதற்கு ஏதுவாய இன்பம். அஃது அவளாற் பயனாய அறத்தினும், அவ் அறததிற்கும் தனக்கும் ஏதுவாய பொருளினும், செல்லவிடாமையின், விடற்பாற்று என்பதாம்.(1)

பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும். 902

பேணாது பெண் விழைவான் ஆக்கம் - தன் ஆண்மையை விட்டு மனையாளது பெண்மையை விழைவான் எய்தி நின்ற செல்வம், பெரியது ஓர் நாண் ஆக நாணுத தரும - இவ் உலகதது ஆண்பாலார்க்கெல்லாம் பெரியதோர நாண உண்டாகத தனக்கும் நாணுதலைக் கொடுக்கும்.

எய்திநின்றதாயிற்று, படைக்கும ஆறறல இலனாகலின். அச்செல்வததால் ஈதலும் துயததலும முதலிய பயன்கொளவாள அவள் ஆகலின், அவ்வாண்மைசசெய்கை அவள கண்ணதாயிற்று என்று ஆண்பாலர் யாவரும் நாண, அதனால தன் ஆண்மையின்மை அறிந்து, பின் தானும் நாணும் என்பது நோக்கி 'பெரியதோர் நாணாக நாணுததரும்' என்றார்.

இவை இரண்டு பாட்டானும் மனைவிழைதற குறறம் கூறப்பட்டது. (2)

இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும. 903

இல்லாள்கண் தாழ்நத இயல்பு இன்மை - ஒருவன் இல்லாளமாட்டுத் தாழ்தற்கு ஏதுவாய அச்சம, நல்லாருள நாணு எஞ்ஞான்றும் தரும் - அஃது இலராய நல்லாரிடைச் செல்லுங்கால் நாணுதலை அவனுக்கு எக்காலததும் கொடுக்கும்.

அவளதான் அஞ்சி ஒழுகுதல் இயல்பாகலின், அவளையஞ்சுதல் இயல்பின்மையாயிற்று. அங்ஙனம் அஞ்சியொழுகுதலின், அவளை நியமிப்பார் இல்லையாம்; ஆகவே எல்லாக் குற்றமும் விளையும் என்பது நோக்கி, 'எஞ்ஞான்றும் நாணுத தரும்' என்றார். (3)

மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறுஎய்தல் இன்று. 904

மனையாளை அஞ்சும் மறுமை இலாளன் - தன் மனையாளை அஞ்சி ஒழுகுகின்ற மறுமைப் பயன் இல்லாதானுக்கு, வினை ஆண்மை வீறு எய்தல் இன்று - வினையை ஆளுந்தன்மை உண்டாய வழியும் நல்லோரால் கொண்டாடப்படாது.

'உண்டாய வழியும்' என்பது அவாய்நிலையான் வந்தது. இல்லறம் செய்தற்குரிய நன்மை இன்மையின், 'மறுமையிலாளன்' என்றும், வினையையாளும் தன்மை தன் தன்மையில்லாத அவனால முடிவு போகாமையின், 'வீறு எய்தல் இன்று' என்றும் கூறினார். (4)

இல்லாளை அஞ்சுவான் அஞ்சும்மற்று எஞ்ஞான்றும் நல்லார்க்கு நல்ல செயல். 905

இல்லாளை அஞ்சுவான் - தன் மனையாளை அஞ்சுவான், நல்லார்க்கு நல்ல செயல் எஞ்ஞான்றும் அஞ்சும் - தான் தேடிய பொருளேயாயினும் அதனால் நல்லார்க்கு நல்லன செய்தலை எஞ்ஞான்றும் அஞ்சா நிற்கும்.

நல்லார் - தேவர், அருந்தவர், சான்றோர், இருமுதுகுரவர் முதலாயினாரும் நல விருந்தினரும். நல்லன செய்தல். அவர் விரும்புவன கொடுத்தல். அது செய்ய வேண்டும் நாளகளினும் என்பார், 'எஞ்ஞான்றும்' என்றார். "இல்லாளை அஞ்சி விருந்தின் முகங்கொன்ற நெஞ்சிற, புலலாளனாக" (சீவக. மண்மகள். 217) என்றார் பிறரும். (5)

இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள் அமைஆர்தோள் அஞ்சு பவர். 906

இல்லாள அமை ஆர் தோள அஞ்சுபவர் - தம் இல்லாளுடைய வேய்போலும் தோளினை அஞ்சுவார், இமையாரின் வாழினும் பாடு இலர் - வீரத்தால துறக்கம எய்திய அமரர்போல இவ் உலகத்து வாழந்தாராயினும், ஆண்மையிலர்.

அமரர்போல வாழதலாவது, பகைத்த வீரா தோள்களை எல்லாம் வேறலான் நன்கு மதிக்கப்பட்டு வாழதல். அது கூடாமையின், 'வாழினும்' என்றார். 'அமை ஆர் தோள' எனவே அஞ்சுதற்காரணத்தது எண்மை கூறியவாறு. வீரா தோளகளை வென்றார் ஆயினும இல்லாள தோளகளை அஞ்சுவார ஆண்மையிலார் என்பதாம்.

இவை நான்கு பாட்டானும் அவளை அஞ்சுதற்குற்றம் கூறப்பட்டது. (6)

பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மையின் நாண்உடைப் பெண்ணே பெருமை உடைத்து. 907

பெண் ஏவல் செய்து ஒழுகும் ஆண்மையின் - நாண் இன்றித் தன் இல்லாளது ஏவல் தொழிலைச் செய்து திரிகின்றவனது ஆண்

தன்மையின், நாண் உடைப் பெண்ணே பெருமை உடைத்து - நாணினையுடைய அவள் பெண் தன்மையே மேம்பாடு உடைத்து.

'நாணுடைப் பெண்' என வேண்டாது கூறியது அவள் ஏவல் செய்வானது நாணின்மை முடித்தற் காதலின், அம் மறுதலைத் தொழில் வருவிக்கப்பட்டது. ஏவல் - ஆகு பெயர். இறுதிக்கண் 'பெண்' என்பதூஉம் அது. ஏவல செய்விததுக் கோடற சிறப்புத் தோன்றப் பெண்ணே எனப் பிரித்தார். (7)

நட்டார் குறைமுடியார் நன்றுஆற்றார் நல்நுதலாள்
பெட்டாங்கு ஒழுகு பவர். 908

நன்னுதலாள பெட்டாங்கு ஒழுகுபவா - தாம் வேண்டியவா றன்றித் தம் மனையாள வேண்டியவாறு ஒழுகுவார், நட்டார்குறை முடியார் - தம்மொடு நட்புச் செய்தார் உற்ற குறை முடிக்கமாட் டார், நன்று ஆற்றார் - அதுவேயன்றி மறுமைக்குத துணையாய அறஞ் செய்யவும் மாட்டார.

'நன்னுதலாள்' என்பதனை "அமையார்தோள" (குறள 906) என்புழிப் போலக் கொளக. அவள தானே அறிந்து ஏவலும் பொருள் கொடுத்தலும் கூடாமையின், இருமைக்கும் வேண்டு வன செய்யமாட்டார என்பதாம. (8)

அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ஏவல் செய்வார்கண் இல். 909

அறவினையும் - அறச் செயலும், ஆன்ற பொருளும் - அது முடித்தற்கு ஏதுவாய பொருட் செயலும, பிறவினையும் - இவ இரண்டின் வேறாய இன்பச் செயலகளும, பெண் ஏவல செய்வார் கண் இல - தம் மனையாள ஏவல் செய்வார்மாட்டு உளவாகா.

புலன்கள் ஐந்து ஆகலின், 'பிறவினை' எனப் பன்மையாயிற்று. அவை நோக்கி அறச் செயல பொருட செயலகள முன்னே ஒழிந்தார்க்குத் தலைமை அவள கண்ணதாகலின், பின் அவை தாமும் இலவாயின என்பது தோன்ற, அவற்றைப் பிரித்துக் கூறினார்.

இவை மூன்று பாட்டானும அவள ஏவல செய்த குற்றம் கூறப்பட்டது. (9)

எண்சேர்ந்த நெஞ்சத்து இடன்உடையார்க்கு எஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல். 910

எண் சேர்ந்த நெஞ்சத்து இடன் உடையார்க்கு - கருமச் சூழ்ச்சிக்கண் சென்ற நெஞ்சததினையும அதனினாய செலவத்தினை யும் உடையராய வேநதர்க்கு, பெண் சோநது ஆம் பேதைமை எஞ் ஞான்றும் இல் - மனையாளைச் சேர்தலான் விளையும் பேதைமை எக்காலத்தும் உண்டாகாது.

"இடன் இல் பருவத்தும்" (குறள் 218) எனவும் "இடன் இன்றி இரந்தோர்க்கு" (கலித். பாலை. 1) எனவும் வந்தமையான், 'இடன்' என்பது அப்பொருளாதல் அறிக. இளமைக் காலத்தும் என்பார், 'எஞ்ஞான்றும்' என்றார். அப் பேதைமையாவது மேற் சொல்லிய விழைதல், அஞ்சல, ஓவல் செய்தல் என்னும் மூன்றற்கும் காரணமாயது.

எகிர்மறைமுகத்தான் அம் மூன்றும் இதனுல் தொகுத்துக் கூறப்பட்டன. (10)

92. வரைவின் மகளிர்

அஃதாவது தம் கலம் விலைகொடுப்பார் யாவர்க்கும் விற்பதலலது அதற்கு ஆவார் ஆகாதார் என்னும் வரை விலாத மகளிரது இயல்பு; ஆதலால் தமக்குரிய மகளிரான் வருங் குற்றத்தின் பின் வைக்கப்பட்டது.

அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும். 911

அன்பின் விழையார் பொருள விழையும் ஆய் தொடியார் - ஒருவனே அன்புபற்றி விழையாது பொருள பற்றி விழையும் மகளிர், இன்சொல் இழுக்குதரும-அது கையுறுகதுணையும தாம் அன்புபற்றி விழைகதாராகச சொல்லும இனியசொல் அவனுக்குப் பின் இன்னுமையைப் பயக்கும்.

பொருள என்புழி 'இன்' விகாரதகால தொக்கது. ஆய்ந்த தொடியினையுடையார் என்றதனுலும், இனிய சொல என்றதனுலும், அவர் கருவி கூறப்பட்டது. அச சொல அப்பொழுதைக்கு இனிதுபோன்று பின் வறுமை பயதலின், அது கொளலற்க என்பதாம. (1)

பயன்தூக்கிப் பண்புஉரைக்கும் பண்புஇல் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல். 912

பயன் தூக்கிப் பண்பு உரைக்கும் பண்பு இல் மகளிர் - ஒருவனுக்கு உளள பொருளை அளகதறிந்து அது எய்தும துணையும் தம் பண்புடைமை சொலலும பண்பிலலாத மகளிரது, நயன் தூக்கி களளா விடல - ஒழுகலாற்றினை ஆராய்ந்தறிகது அவரைப் பொருந்தாது விடுக.

பண்பு சொல்லின்கண் அல்லது தமகண் கிடவாமை தோன்றப் "பண்பு இல் மகளிர்' என்றும, அவர்க்கு அது சாதி தருமமாதல தூலானேயன்றி அவர் செயலானும் அறிக்தது என்பார் 'நயன் தூக்கி' என்றும், அவ் அறிவு அவரை விடுதற்கு உபாயம் என்பது தோன்றப்பின் 'நளளாவிடல்' என்றும் கூறினர். (2)

பொருட்பெண்டிர் பொய்ம்மைமுயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று. 913

பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம் - கொடுப்பாரை விரும்பாத பொருளையே விரும்பும் பொது மகளிரது பொய்மையையுடைய முயக்கம், இருட்டு அறையில் ஏதில பிணம் தழீயற்று - பிணமெடுப்பார் இருட்டறைக்கண்ணே முன்னறியாத பிணத்தைத தழுவினற்போலும்.

பொருட்கு முயங்கும் மகளிர், கருத்தும் செயலும் ஆராயாது சாதியும் பருவமும் ஒன்றாதோர் முயங்குங்கால அவர் குறிப்புக் கூலிக்குப் பிணம் எடுப்பார் காணப்படாத ஓரிடத்தின்கண் இயைபில்லாததோர் பிணத்தை எடுக்குங்கால் அவர் குறிப்போடு ஒக்கும் எனவே, அகத்தால அருவரா நின்றும் பொருளநோக்கிப் புறத்தால் தழுவுவா, அதனை ஒழிக என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் அவர் சொல்லும் செயலும் பொய் என்பது கூறப்பட்டது. (3)

பொருட்பொருளார் புன்னலம்தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர். 914

பொருட் பொருளார புலநலம் - இன்பமாகிய பொருளை இகழ்ந்து பொருளாகிய பொருளையே விரும்பும மகளிரது புல்லிய கலத்தை, அருட்பொருள ஆயும அறிவினவா தோயார - அருளொடு கூடிய பொருளை ஆராய்ந்து செய்யும அறிவினையுடையார் தீண்டார்.

அறம் முதலிய நான்கும் பொருள எனப்படுதலின், 'பொருட் பொருவா' என விசேடித்தார். புன்மை இழிந்தாரக்கே உரித்தாதல. தாம் விரும்புகின்ற அறத்திற்கு அவா மெய்ந் நலம் மயக்கலியாகலின், தோயார் என்பதாம. (4)

பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர். 915

மதி நலத்தின் மாண்ட அறிவினவர் - இயற்கையாகிய மதி நன்மையான் மாட்சிமைப்பட்ட செயறகை அறிவினையுடையார், பொது நலத்தார் புன்னலம் தோயார - பொருள கொடுப்பார்க் கெல்லாம் பொதுவாய ஆசையினையுடைய மகளிரது புல்லிய கலத்தைத் தீண்டார்.

மதி நன்மை முற்பிறப்புக்களில செய்த நல்வினைகளான் மனம் தெளிவுடைத்தாதல். அதனன் அன்றிக் கல்வியறிவு மாட்சிமைப்படாமையின், 'மதிநலத்தின் மாண்ட அறிவினவர்' என்றும், அவ்வறிவுடையார்க்கு அவராசையது பொதுமையும் மெய்க் கலத்தது புன்மையும் விளங்கிய தோன்றலின் 'தோயார்' என்னும் கூறினர். (5)

தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள். 916

தகை செருக்கிப் புன்னலம் பாரிப்பார் தோள்–ஆடல், பாடல், அழகு என்பனவற்றால் களித்துத் தம் புல்லிய கலத்தை விரும் கொடுப்பார் யாவராமாட்டும் பரப்பும் மகளிர் தோளினை, தம் நலம் பாரிப்பார் தோயார்-அறிவொழுக்கங்களானுய தம்புகழை உலகத்துப் பரப்புதற்குரிய உயர்ந்தோர் நீண்டார்.

ஆடல் முதலிய மூன்றும்உடைமை அவர்க்கு மேம்பாடாகவின் 'தகை' என்றும், தோயின் அறிவொழுக்கங்கள அழியும் ஆகலின் அவற்றால் புகழ பரப்புவார் 'தோயார்' என்றும் கூறினர். தந்நலம் என்புழி நலம் ஆகுபெயர்.

இவை மூன்று பாட்டாலும் அவரை உயர்ந்தோர் நீண்டார் என்பது கூறப்பட்டது. (6)

நிறை நெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சில்
பேணிப் புணர்பவர் தோள். 917

நெஞ்சின் பிறபேணிப் புணர்பவர் தோள - நெஞ்சினும் பிற வற்றை ஆசைப்பட்டு அவை காரணமாகக் கொடுப்பாரை மெய்யாற் புணரும் மகளிர் தோளகளை, நிறை நெஞ்சம இல்லவர் தோய்வர் - நிறையால் திருந்திய நெஞ்சம இலலாதார் தோய்வர்.

பொருளும் அதலை படைக்கப்படுவனவும விரும்பும் நெஞ்சு அவற்றின்மேலதாகலின், புணாவது உடம்புமாதத்திரம என்பது அறிந்து அது வழி ஒடாது நிற்கும நெஞ்சினையுடையார் தோயாமையின், அஃதிலார் 'தோய்வர்' என்றார். (7)

ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கு என்ப
மாய மகளிர் முயக்கு. 918

மாய மகளிர் முயக்கு - உருவு சொற செயல்களான் வஞ்சித்த லீலை வலை மகளிரது முயக்கத்தை, ஆயும அறிவினர் அல்லார்க்கு அணங்கு என்ப - அவ் வஞ்சலீலை ஆராய்ந்தறியும அறிவுடையார் அலலார்க்கு அணங்கு தாக்கு என்று சொலலுவர் நாலோர்.

அணங்கு காமநெறியான் உயிர்கொளளும் தெய்வமகள. தாக்கு-நீண்டல். இவ் உருவகத்தான் அம் முயக்கம் முன் இனிது போன்று பின் உயிரகோடலபெற்றும். இது நூலோர் துணிவு என்பது தோன்ற அவாமேல வைத்துக் கூறினர். அப்பெயர் அவாய் நிலையான் வநதது (8)

வரைவுஇலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு. 919

வரைவு இலா மாண் இழையார் மென்தோள் - உயர்ந்தோர் இழிந்தோர் என்னது விலைகொடுப்பார் யாவரையும் முயங்கும் மகளிரது மெல்லியதோளகள், புரை இலாப் பூரியர்கள ஆழும் அளறு - அக் குற்றத்தையறியும் அறிவில்லாத கீழ்மக்கள புக்கு அழுந்தும் நிரயம்.

உயர்தற்கு ஏதுவாகலின், 'புரை' எனப்பட்டது. சாதியான் இழிந்தாரின் நீக்குதற்குப் 'புரை இலாப் பூரியாகள' என்றும், அவர் ஆழ்தற்கு ஏதுவாகிய உருவம் முதலிய மூன்றும் என்பது தோன்ற 'மாணிழையார் மென்தோள' என்றும, அவாக்கு அளற்றினை இடையின்றிப் பயக்கும் என்பது தோன்ற உருவகமாக்கியும் கூறினர். (9)

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. 920

இருமனப் பெண்டிரும் களளும் கவறும் - கவாத மனத திணையுடைய மகளிரும் களளும் சூதும் என இம் மூன்றும், திரு நீக்கப்பட்டார் தொடர்பு - திருமகளால துறக்கப்பட்டார்க்கு நட்பு.

இருமனம் - ஒருவனேடு புணர்தலும் புணராமையும் ஒரு காலத்தேயுடைய மனம். கவறு - ஆகுபெயர். ஒத்த குற்றத்த வாகலின், கள்ளும் சூதும உடன் கூறப்பட்டன. வடநூலாரும் இக் கருத்தான் விதனம என உடன் கூறினர். வருகின்ற அதிகார முறைமையும் இதனன் அறிக. திணைவிராய் எண்ணிய வழிப் பன்மைபற்றி முடிபுகோடலின், ஈண்டு, அஃறிணையாற் கொண்டது. திரு நீக்கப்பட்டமை இக் குறிகளான் அறியப் படும் என்பதாம்.

இவை நான்கு பாட்டானும சோவார் இழிந்தோர் என்பது கூறப்பட்டது. (10)

93. கள் உண்ணாமை

இனி, ஒழுக்கமும உணர்வும் அழிதற்கண் அவ் வரைவின் மகளிரோடு ஒப்பதாய களளினை உண்ணாமையது சிறப்பு எதிர்மறைமுகத்தால கூறுகின்றார.

உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார். 921

கள்காதல் கொண்டு ஒழுகுவார் - கள்ளின்மேற்காதல் செய் தொழுகும் அரசர், எஞ்ஞான்றும் உட்கப்படார் - எஞ்ஞான்றும் பகைவரான் அஞ்சப்படார்; ஒளி இழப்பர் - அதுவே அன்றி மூன் எய்தி நின்ற ஒளியினையும் இழப்பர்.

அறிவின்மையால் பொருள் படை முதலியவற்றும் பெரியராய காலத்தும் பகைவர் அஞ்சார், தம்முன்னோரான் எய்திநின்ற ஒளியினையும் இகழ்ப்பாட்டான் இழப்பர் என்பதாம்.

இவை இரண்டானும் அரசு இனிது செல்லாது என்பது இதனுள் கூறப்பட்டது. (1)

உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார். 922

களை உண்ணற்க - அறிவுடையராயினர் அஃதிலராதற்கு ஏதுவாய களளினை உண்ணுதொழிக, உணில் சான்றோரான் எண்ணப்பட வேண்டாதார் உண்க - அன்றியே உண்ணல் வேண்டுவார் உளராயின், நலலோரால எண்ணப்படுதலை வேண்டாதார் உண்க.

பெறுதறகரிய அறிவைப் பெறறு வைத்தும் கள்ளான் அழிந்துக்கொளவாரை இயலபாகவே அற்று இலலாத விலங்குகளுடனும் எண்ணுராகலின் 'சான்றோரான் எண்ணப்பட வேண்டாதார் உண்க' என்றார். (2)

ஈன்றாள முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. 923

ஈன்றாள முகததேயும களி இன்னாது - யாதுசெய்யினும் உவக்கும தாய் முன்பாயிலும களளுணடு களிததல இன்னாதாம், மற்றுச் சான்றோர முகதது என்?-அனபின், குறறமயாதும பொருத சான்றோமுன்பு களிததல அவாக்கு யாதாம்?

மனம மொழிமெய்கள தம வயததவன்மையான் நாண் அழியுமு, அழியவே, ஈன்றாரும் இன்னாதாயிறறு, அனபின், கள இருமையும கெடுததல அறிது சேயமைக்கண்ணே கடியும் சான்றோர்க்கு இன்னாதாதல சொலலவேணடுமோ என்பதாம். (3)

நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்என்னும்
பேணுப் பெருங்குற்றத் தாக்கு. 924

கள என்னும பேணுப் பெருங்குற்றதாக்கு - கள என்று சொலலப்படுகின்ற யாவரும இகழும மிக்க குறறத்தினையுடையாரை, நாண் என்னும நலலாள புறங்கொடுக்கும - நாண் என்று சொலலப்படுகின்ற உயாகதவள நோக்குதற்கு அஞ்சி அவர்க்கு எதிர்முகமாகாள

காணுதற்கும் அஞ்சி உலகத்தார் சேய்மைக்கண்ணே நீங்குவராகலின் 'பேணு' என்றும், பின் ஒருவாற்றானும் கழுவப்படாமையின், 'பெரும் குற்றம' என்றும, இழிந்தோர்பால் நில்லாமையின் 'நல்லாள' என்றும் கூறினர். பெண்பாலாக்கியது வடமொழி முறைமைபற்றி.

இவை மூன்று பாட்டானும் ஒளியிழத்தற் காரணம் கூறப்பட்டது. (4)

கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். 925

பொருள கொடுத்து மெய் அறியாமை கொளல் - ஒருவன் விலைப்பொருளைக் கொடுத்துக் களளால் தனக்கு மெய்ம்மறப்பினைக் கொளளுதல, கை அறியாமை உடைத்து - அவன் பழவினைப்பயனாய செய்வதறியாமையைத தனக்குக் காரணமாக உடைத்து.

தன்னை அறியாமை சொலலவே, ஒழிந்தன யாவும் அறியாமை சொல்லல் வேண்டாவாயிற்று. கை அப்பொருட்டாதல் "பழனுடைப் பெருமரம் வீழநதெனக் கையற்று" (புறநா. 20, 209) என்பதனானும் அறிக. அறிவார் விலைகொடுத்து ஒன்றனைக் கொளளுங்கால் தீயதுகொளளாமையின் மெய்யறியாமைகொளல முன்னை அறியாமையான் வந்தது என்பதாம். (5)

துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்உண் பவர். 926

துஞ்சினார் செததாரின் வேறு அல்லர் - உறங்கினார செததாரின் வேறாதல் உடையரேனும் அக்காலதது அறிவின்மையான் வேறு எனப்பட்டார், கள உண்பவர் எஞ்ஞான்றும் நஞசு உண்பார்-அவ்வாறே களளுண்பார நஞ்சுண்பாரின் வேறாதல உடையரேனும், எக்காலததும அறிவின்மையான் வேறு எனப்படார், அவர்தாமே யாவா.

உறங்கினார்க்கும் கள உண்பாரக்கும வேற்றுமை உயிர்ப்பு நிற்றல். வேறாதலும் வேறன்மையும் உடைமை காட்டற்கு உவமை புணர்க்கப்பட்டது. இதனை நிரல நிரை யாக்கி, 'திரிக்கப்படுதலால் உறங்கினாரும் நஞ்சுண்பாரும் ஒப்பா, கைவிடப்படுதலான் செததாரும் கள உண்பாரும் ஒப்பர்' என்று உரைப்பாரும் உளர். அதிகாரப்பொருள் பின்னதாயிருக்க யாதும் இயைபிலலாத நஞ்சுண்பார்க்கு உவமைபுணர்தது ஈண்டுக் கூறல பயனின்றாகலானும், சொற்கிடக்கை நிரலநிரைக்கு ஏலாமையானும், அஃகு உரையன்மை அறிக.

இவை இரண்டு பாட்டானும் அவரது அறிவிழததற்குற்றம் கூறப்பட்டது. (6)

உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ஒற்றிக் கண்சாய் பவர். 927

கள் ஒற்றிக் கண் சாய்பவர் - கள்ளை மறைந்துண்டு அக்களிப்பால் தம் அறிவு தளர்வார், உள்ளூர் உள் ஒற்றி எஞ்ஞான்

றும் நகுப்படுவர் - உள்ளூர் வாழ்பவரான் உள் நிகழ்கின்றது உய்த்துணர்ந்து எஞ்ஞான்றும் தகுதல் செய்யப்படுவர்.

உள்ளூர் - ஆகுபெயர். 'உண்டு' என்பது அவாய்நிலையான் வந்தது. உய்த்துணர்தல் - ஊகூர்ச்சியால் களிப்பினை உணர்ந்து அதனால் களளுண்டது உணர்தல். (7)

களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும். 928

களித்து அறியேன் என்பது கைவிடுக - மறைந்துண்டுவைத்து யான் களளுண்டறியேன் என்று உண்ணுதபொழுது தம் ஒழுக்கங் கூறுதலேயொழிக, நெஞ்சகத்து ஒளித்ததும் ஆங்கே மிகும் - அவ் உண்டபொழுதே பிறரறியின் இழுக்காம் என்று முன் நெஞ்சத்து ஒளிதக குற்றமும் முன்னையளவின் மிக்கு வெளிப்படுதலான்.

'களித்தறியேன்' எனக்காரணத்தைக் காரியத்தாற் கூறினார்.

இவை இரண்டு பாட்டானும் அது மறைக்கப்படாது என்பது கூறப்பட்டது. (8)

களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. 929

களித்தானைக் காரணம் காட்டுதல் - களளுண்டு களிததான் ஒருவனை இப்படி ஆகாதென்று பிறரெருவன் காரணம் காட்டித் தெளிவிததல, நீர்க் கீழ்க் குளித்தானைத் தீத் துரீஇயற்று - நீருள் மூழ்கினானொருவனைப் பிறரெருவன் விளக்கிலால் காடுதலே யொக்குமே.

'களித்தானை' என்னும் இரண்டாவது "அறிவுடை யந்தணன் அவனைக்காட் டென்றலே" (கலித. மருதம். 7) என்புழிப்போல நின்றது. நீருள விளக்குச் செல்லாதாற்போல அவன் மனத்துக் காரணம செல்லாது என்பதாம.

இதனால் அவனை தெளிவித்தல் முடியாது என்பது கூறப் பட்டது. (9)

கள்உண்ணப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு. 930

கள உண்ணப் போழ்தில களிதததானை - களஉண்பாரெருவன் தான் அஃது உண்ணுது தெளிந்திருந்த பொழுதின்கண் உண்டு களித்த பிறனைக் காணுமன்றே, காணுங்கால் உண்டதன் சோரவு உளனான்கொல - காணுங்கால தான் உண்டபொழுது உளதாம் சோர்வினை அவன் சோர்வால் அதுவும் இற்றென்று கருதான் போலும்?

சோர்வு மனமெழுமெய்களதன்வயத்த அல்லவாதல்.

கருதலளவையான் அதன் இழுக்கினை உய்த்துணரின் ஒழியும் என இதனுல் அஃது ஒழிதற் காரணம் கூறப்பட்டது. (10)

94. சூது

இனி, அக்கள்ளுண்டல்போல அறம்பொருள இன்பங் கட்கு இடையீடாகிய சூதாடலும் பிணியுழத்தலும் கூடா வான் தொடங்கி, முதற்கண் சூதினது இயல்பு கூறுகின்றார்.

வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. 931

வென்றிடினும் சூதினை வேண்டற்க - தான்வெல்லும் ஆற்றல் உடையனுயினும் சூதாடலை விரும்பாதொழிக, வென்றதூஉம் தூண்டிற் பொன் மீன் விழுங்கியறறு - வென்று பொருளெய்து வார் உளரால் எனின் அவ் வென்றபொருள் தானும் இரையான் மறைந்த தூண்டிலிரும்மீனை இரை எனக் கருதி மீன் விழுங்கினற் போலும்.

வேறல் ஒருதலையன்மையின் 'வென்றிடினும்' என்றும், கரு மங்கள பலவும் கெடுதலின், 'வேண்டற்க' என்றும் கூறினர். எய் தியபொருள சூதாடுவார் மீங்காமைக்கு இட்டதோர் தினை என்பதூ உம், அதனுல் மின் துயருழத்தலும், உவமையால் பெற்றும். (1)

ஒன்றுஎய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு. 932

ஒன்று எய்தி நூறு இழக்கும் சூதர்க்கும் - அததூண்டிற் பொன் போன்ற ஒன்றினை முன்பெற்று இன்னும் பெறுதுமை என் னும் கருத்தால் நூற்றினை இழநது வறியராம் சூதர்க்கும், நன்று எய்தி வாழ்வது ஓராறு உண்டாங்கொல் - பொருளால அறனும் இன்பமும் எய்தி வாழ்வதொரு நெறியுண்டாமோ, ஆகாது.

அவ்வாற்றல் பொருளிழந்தே வருதலான் அதனல எய்தும் பயனும் அவர்க்கு இல்லை என்பதாம். (2)

உருள்ஆயம் ஓவாது கூறின் பொருள்ஆயம்
போஒய்ப் புறமே படும். 933

உருள் ஆயம் ஓவாது கூறின் - உருளும் கவற்றின்கண் பட்ட ஆயத்தை இடைவிடாது கூறிச் சூதாடுமாயின், பொருள ஆயம் போஒய்ப் புறமே படும் - அரசன் ஈட்டிய பொருளும் அவன் பொருள்வருவாயும் அவனைவிட்டுப்போய்ப் பகைவர் கண்ணே தங்கும்.

கவற்றினது உருட்சியை அதனினைய ஆயத்தின்மேல் ஏற்றி யும், சூதாடலை அது கூறலாகிய காரணத்தின்மேலிட்டும் கூறினர்.

பொருளாயம் என்பது உம்மைத்தொகை. ஆயம் வடமொழித் தீரிசொல். காத்தற்கண்ணும் இயற்றற்கண்ணும் கருத்திலனுகலின், அவை இரண்டும் பகைவர்பாற் செல்லும் என்பதாம். (3)

சிறுமை பலசெய்து சீர்அழிக்கும் சூதின்
வறுமை தருவதுஒன்று இல். 934

சிறுமை பல செய்து சீர் அழிக்கும் சூதின் - தன்னை விழைத்தார்க்கு முன்னிலலாத துன்பங்களை பலவற்றையும் விளைத்து உளள புகழையும் கெடுக்கும் சூதுபோல், வறுமை தருவது ஒன்று இல - நல்குரவினைக் கொடுக்கவல்லது பிறிதொன்று இல்லை.

அத் துன்பங்களை முன்னர்க் கூறுப. நல்வினைகளையும் நல்வினைதனையும் நீக்கித் தீவினைகளையும் தீயினைதனையும் கூட்டுதலால், 'சீர் அழிக்கும்' என்றார். வறுமைக்கு எல்லியாவர் என்பதாம்.(4)

கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார். 935

இல்லாகியார் - முற்காலத்துத தாம் உளராகியே இல்லாகி ஒழிகினும், கவறும் கழகமும் கையும் தருக்கி இவறியார்-கவற்றினையும் அந்து ஆடுங் களத்தினையும் அவ் ஆடற்குவேண்டும் கைத தொழிலினையும் மேற்கொண்டு கைவிடாத வேந்தர்.

கைததொழில் - வெலலும் ஆயம்படப் பிடிததெறிதல். அவ் இவறுதலால பாண்டவர்தம் அரசுவிட்டு வனதிடைப்போய் ஆண்டுமறைந்தொழுகினர் என அநுபவம காட்டியவாறு.

இவை ஐந்து பாட்டாலும் அதனது வறுமைபயததற் கும்மம் கூறப்பட்டது. (5)

அகடுஆரார் அல்லல் உழப்பர்சூது என்னும்
முகடியான் மூடப்பட் டார். 936

சூது என்னும் முகடியான் மூடப்பட்டார் - தன் பெயர் சொல்லல் மங்கலம் அன்மையின் சூது என்று சொல்லப்படும் முகடியான் விழுங்கப்பட்டார், அகடு ஆரார் அல்லல் உழப்பர் - இம்மைக்கண் வயிறுரப்பெறார், மறுமைக்கண் நிரயத்துன்பம் உழப்பர்.

செல்வங்கெடுத்து நல்குரவு கொடுத்தல் தொழில் வேறு படாமையின் 'சூது என்னும் முகடி' என்றும், வெற்றிதோல்விகள நோக்கி ஒருபொழுதும் விடாராகலின் ஈண்டு 'அகடு ஆரார்' என்றும், பொய்யும் களவும் முதலிய பாவங்கள ஈட்டலின் ஆண்டு 'அலலல் உறுப்பர்' என்றும் கூறினர். வயிறுராமை சொல்லவே, ஏனைப்புலன்கள துகரப் பெறுமை சொலலவேண்டாவாயிற்று. உழப்பர் என்பது எதிர்காலவினைச் சொல். (6)

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கீழ்த்துக் காலை புகின். 937

காலை கழகத்துப் புகின் - அறம் பொருள் இன்பங்கட்கு அடைத்த காலம் அரசனுக்குச் சூதாடு களத்தின்கண் கழியுமாயின் பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும் - அக் கழிவு தொன்று தொட்டுவந்த அவன் செல்வத்தினையும் நற்குணங்களையும் போக்கும்.

'பழகிய' என்பது பண்புடனும் இயையும். தான் செய்து கொள்ளும் அறம் முதலியவே யன்றி முன்னோரைத் தொடங்கி வருகின்ற செல்வமும் முன்செய்த கல்வினையின் பயனை பண்பும் இலவாம் என்பதாம். (7)

பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்து
அல்லல் உழப்பிக்கும் சூது. 938

சூது - சூது, பொருளை கெடுத்து - தன்னிடப்பயின்றவன் பொருளைக் கெடுத்து, பொய் மேற்கொளீ இ - பொய்யை மேற் கொளளப்பண்ணி, அருளை கெடுத்து - மனத்து எழும் அருளைக் கெடுத்து, அல்லல் உழப்பிக்கும் - இவ்வாற்றான் அவனை இருமையினும் துன்பம் உறுவிக்கும்.

இத்தொழிலகள் மூன்றற்கும் சூது வினைமுதலாகவும், தோல்வி, வெற்றி, செற்றம் என்பன முறையே கருவிகளாகவும் கோள்க. முன்னதனால் இம்மையினும், ஏனையவற்றான் மறுமையினும் ஆம். 'பொருளைகொடுத்து'என்பது பாடமாயின், அவ் எச்சத்திற்கு முடிவு 'மேற்கொளீ இ' என்புழி மேற்கோடலாகிய வினைமுதல்வினை. (8)

உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின். 939

ஆயம் கொளின் - அரசன் சூதினைத் தனக்கு வினைதைத் தொழிலாக் விரும்புமாயின், ஒளி கல்வி செல்வம் ஊண் உடை என்று ஐந்தும் அடையாவாம் - அவனை ஒளியும் கல்வியும் செல்வமும் ஊணும் உடையும் என்று இவ்வைகதும் சாராவாம்.

ஆயம் - ஆகுபெயர். இச் சிறப்புமுறை செய்புள் நோக்கிப் பிறழ்கின்றது. செல்வம் அறுவகை உறுப்புக்கள. ஊண் உடை என்பனவற்றால் துப்புரவுகளெலலாம் கொள்ளப்படும். காலமும் கருத்தும் பெருமையின், இவை உளவாகா என்பதாம்.

இவை நான்கு பாட்டானும் சிறுமை பல செய்து அவற்றான் இருமையும் கெடுத்தல் கூறப்பட்டது. (9)

இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர். 940

இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் - சூதாடினான் இருமைப் பயன்களையும் இழக்குந்தோறும் அதன்மேற் காதல் செய்யும் சூதன்போல, துன்பம் உழத்தொறூஉம் காதற்று உயிர்-உடம்பான் மூவகைத் துன்பங்களையும் அனுபவிக்கும் தோறும் அதன்மேற் காதலே உடைத்து உயிர்.

சூது - ஆகுபெயர். உயிரினது அறியாமை கூறுவார் போன்று சூதனது அறியாமை கூறுதல் கருத்தாகலின், அதனை யாப்புறுத்தற்பொருட்டு உவமமாக்கிக் கூறினர். இதன் எதிர் மறைமுகத்தால், சூதினை வெறுத்தழிவானை யொக்கும் உடம்பினை வெறுத்தொழியும் உயிர் எனவும் கொளக.

இதனால் அஃது ஒழிதற்கு அருமையும் ஒழிந்தாரது பெருமையும் கூறப்பட்டன. (10)

95. மருந்து

பழவினையானும் காரணங்களானும் மக்கட்கு வாதம் முதலிய பிணிகள்வரும், அவற்றுள பழவினையான் வருவன அதன் கழிவின்கண் அல்லது தீராமையின் அவை ஒழித்து, ஏனைக்காரணங்களான் வருவனவற்றைத் தீர்க்கும் மருந்தின் திறம் கூறுகின்றார். காரணங்களாவன உணவுசெயல்களது ஒவ்வாமையாகலின், பிணிகளும் காரணத்தான் வருவன வாயின.

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. 941

மிகினும் குறையினும் - உணவும செயல்களும் ஒருவன்பகுதிக்கு ஒதத அளவின அன்றி அதனின் மிகுமாயினும் குறையுமாயினும், நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்றும் நோய் செய்யும் - ஆயுள வேதமுடையாரால வாதமுதலாக எண்ணப்பட்ட மூன்று நோயும் அவனுக்குத துன்பஞசெய்யும்.

'நூலோர் எண்ணிய' எனவே, அவர் அவற்றுள் வகுத்த வாதப்பகுதி பித்தப்பகுதி ஐப்பகுதி என்னும் பகுதிப்பாடும் பெறும். அவற்றிற்கு உணவு ஒத்தலாவது சுவை வீரியங்களாலும் அளவாலும் பொருநதுதல். செயல்கள ஒததலாவது மனமொழி மெய்களாற்செய்யுந் தொழில்களே அவை வருந்துவதற்கு முன்னே ஒழிதல. இவை இரண்டும் இங்ஙனமின்றி மிகுதல் குறைதல் செய்யின், அவை தத்தம் நிலையின் நிலலாவாய் வருத்தும் என்பதாம். காரணம் இரண்டும் அவாய்நிலையான் வந்தன. மூற்று உம்மை விகாரத்தால் தொக்கது. இதனால் யாக்கைக்கு இயல்பாகிய நோய் மூவகைத்து என்பதூஉம், அவை துன்பஞ்செய்தற்காரணம் இருவகைத்து என்பதூஉம் கூறப்பட்டன. இன்பம் செய்தற்காரணம் முன்னர்க் கூறுப. (1)

மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின். 942.

அருந்தியது அற்றது போற்றி உணின் - ஒருவன் முன்னுண்டது அற்றபடியைக் குறிகளால் தெளிய அறிந்து பின் உண்ணுமாயின், யாக்கைக்கு மருந்து என வேண்டாவாம-அவன் யாக்கைக்கு மருந்து என்று வேறுவேண்டாவாம்.

குறிகளாவன - யாக்கை நொய்ம்மை, தேக்கின் தூய்மை, கரணங்கள தொழிற்குரியவாதல, பசிமிகுதல் என இவை முதலாயின. பிணிகள யாக்கையவாகலின், 'யாக்கைக்கு' என்றார் 'உணின்' என்பது அதன் அருமை தோன்ற நின்றது. (2)

அற்ருல் அளவறிந்து உண்க அஃதுடம்பு பெற்ருன் நெடிது உய்க்கும் ஆறு. 943.

அற்ருல் அறும் அளவு அறிந்து உண்க-முன்னுண்டது அற்ருல பினனுண்பதன் அளவு அறிந்து அவ்வளவிற்ருக உண்க, உடம்பு பெற்ருன் நெடிது உய்க்கும ஆறு அஃது - இறப்பவும பலவாய பிற யாக்கைகளிற் பிழைத்தப் பெறறகு அரிய இம் மானுடயாக்கையைப் பெற்ருன் அதனை நெடுங்காலம் கொணடு செலுத்தும் நெறி அதுவாகலான்.

இம்மை மறுமை வீடுபேறுகள எய்தற்பாலது ஈது ஒன்று மேயாகலின், 'உடம்பு பெறறுன்' என்றும், அது நெடிதுநின்றுழி அவைபெருகச்செய்து கொளளலாம ஆகலின், 'நெடிது உய்க்கு மாறு' என்றும் கூறினார். 'பெறறால்' என்று பாடம ஓதுவாரும் உளர். (3)

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல துய்க்க துவரப் பசித்து. 944

அற்றது அறிந்து - முன்னுண்டது அறறபடியையறிந்து, துவரப்பசித்து-பின் மிகப்பசிதது, மாறலல கடைப்பிடித்ததத துய்க்க-உண்ணுங்கால் மாறுகொளளாத உணவுகளைக் குறிக்கொண்டு உண்க.

'அற்றது அறிந்து' என்னும் பெயர்த்துரை அதனை யாப்புறுத்தற்பொருட்டு. உண்டது அற்ருலும் அதன் பயனுகிய இரதம் அருதாகலான் அதுவும் அறல்வேண்டும் என்பார், 'மிகப் பசித்து' என்ருர். பசிததல்வினை ஈண்டு உடையான்மேல் நின்றது. மாறுகொளளாமையாவது உண்பான் பகுதியோடு மாறுகொளளாமையும், கால இயல்போடு மாறுகொளளாமையும், சுவை வீரியங்களால் தம்முள மாறுகொள்ளாமையும் ஆம். அவையாவன: முறையேவாதபித்தஐகளாயை பகுதிகட்கு ஆடாதவற்றைச் செய்வனவாதலும், பெரும்பொழுது சிறுபொழுது என்னும் கால வேறுபாடுகளுள ஒன்றற்காவன பிறிதொன்றற்கு ஆகாமையும்,

தேனும் நெய்யும் தம்முள் அளவொத்து நஞ்சாதல் போல்வனவும் ஆம். அவற்றைக் குறிக்கொளளாத மனம்பட்டவாற்றுல் துய்ப் பின் அதனனே நோயும் மரணமும் வருதலின், 'கடைப்பிடித்து' என்றார். (4)

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துஉண்ணின் ஊறுபாடு இல்லே உயிர்க்கு. 945

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின் - அம் மூவகை மாறுகோளும் இல்லாத உணவைத் தன் உளளம் வேண் டியவளவினன் அன்றிப் பிணிவாராவளவிலை ஒருவன் உண்ணு மாயின், உயிர்க்கு ஊறுபாடு இலலே - அவன் உயிர்க்குப் பிணிக ளால் துன்பம விளேதல் உண்டாகாது.

உறுவதனே 'ஊறு' என்றார், அஃது இன்பத்திற் செல்லா தாயிற்று- இலலே என்பது தொடாபாகலின். துன்பமுறுவது உயிரேயாகலின், அதன்மேலவைதத்துக் கூறினர். மாறுபாடு இல் வழியும் குறைதல நன்று என்பதாம,

இவை நான்கு பாட்டானும் உண்ணப் படுவனவும், அவற்றது அளவும், காலமும். பயனும கூறப்பட்டன. (5)

இழிவுஅறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும் கழிபேர் இரையான்கண் நோய் 946

இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம்போல் - அக்குறை தலே நன்று என்று அறிந்து அவ்வாறே உண்பவன்மாட்டு இன்பம் நீங்காது நிலேநிற்குமாறு போல, கழிபோ இரையான்கண் நோய் நிற்கும - மிகப்பெரிய இரையை விழுங்குவான்மாட்டு நோய் நீங்காது நிலேநிற்கும.

அவ்வாறேற உணடல. உண்ணலாம் அளவில் சிறிது குறைய உண்டல. இன்பமாவது வாதமுதலிய மூன்றும் சமத்தம் நிலேயில் திரியாமையின் மனம மொழி மெய்கள அவன் வயத்தவாதலும், அதனன் அறம் முதலிய நான்கும எய்தலும் ஆம். இரையை அள வின்றி எடுத்து அதனன் வருதலும் விலங்கோடு ஒத்தலின், 'இரையான்' என்றார். விதி எதிர்மறைகளே உவமமும் பொரு ளும் ஆக்கியது இரண்டானும் பெறுதறகு. (6)

தீயள வன்றித் தெரியான் பெரிதுஉண்ணின் நோய்அள வின்றிப் படும். 947

தெரியான் தீ அளவு அன்றிப் பெரிது உண்ணின் - தன் பகுதி யும் அதற்கு ஏற்றஉணவும் காலமும் ஆராயாது வேண்டியதோர் உணவை வேண்டியதோர் காலத்து வயிற்றுத நீ அளவன்றி ஒருவன் மிக உண்ணுமாயின், நோய் அளவு இன்றிப் படும் - அவன்மாட்டு நோய்கள எல்லேயற வளரும்.

தெரியாமை வினைக்குச் செயப்படுபொருள்கள அதிகாரத் தான் வந்தன. நோய் - சாதியொருமை.

இவை இரண்டு பாட்டானும் அவ்வகை உண்ணவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது. (7)

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல். 948

நோய் நாடி - மருத்துவரையிலன் ஆதுரன்மாட்டு நிகழ்கின்ற நோயை அதன் குறிகளான் இன்னது என்று துணிந்து, நோய் முதல் நாடி - பின் அது வருதற் காரணமாதை ஆராய்ந்து, அது தணிக்கும் வாய் நாடி - பின் அதுதீர்க்கும உபாயத்தினை அறிந்து, வாய்ப்பச் செயல் - அதனைச் செய்யும்வழிப் பிழையாமற் செய்க.

காரணம் - உணவு செயல் என முறைகூறிய இரண்டும். அவற்றை ஆயுள்வேதமுடையார நிதானம என்ப. அவை நாடுதற்பயன் - நோயினையும் வாயினையும் ஐயமறத் துணிதல. மருந்து செய்தல, உதிரம் கலத்தல, அறுத்தல, சுடுதல் முதலிய செயலகளெலலாம் அடங்குதற்கு, 'அதுதணிக்கும் வாய்' என்றார். "கழுவாயும்உள" (புறநா. 94) என்றார பிறரும், பிழையாமை பழைய மருத்துவர் செய்துவருகின்ற முறைமையின் தப்பாமை.()

உற்றுழி அளவும் பிணிஅளவும் காலமும் கற்றுழி கருதிச் செயல். 949

கற்றுழி - ஆயுளவேதத்தினைக கறற மருததுவன், உற்றுழி அளவும் பிணி அளவும் காலமும் கருதிச செயல - அவ உபாயத தினைச் செய்புங்கால, ஆதுரன் அளவினையும அவன்கண்நிகழ கின்ற நோயின் அளவினையும் தன்செயற்கு ஏற்ற காலத்தினை யும் அந்நூல் நெறியால நோக்கி, அவறறோடு பொருதசை செயக.

ஆதுரன் அளவு - பருகி பருவம் வேதனை வலிகளின் அளவு. பிணி அளவு - சாத்தியம், அசாதத்தியம், யாப்பியம் என்னும் சாதி வேறுபாடும், தொடக்க கடு பாறு என்னும் அதன் பருவ வேறு பாடும், வன்மை மென்மைகளும் முதலாயின. காலம் - மேற் சொல்லியன. இம்மூன்றும் பிழையாமல நூலநெறியானும் உணர்வு மிகுதியானும் ஆராய்ந்து செய்கஎன்பார 'கறறுன் கருதிச் செயல்' என்றார்.

இவை இரண்டு பாட்டானும் அவ் இழுக்குப்பட்டுழி மருத்து வன் தீர்க்குமாறு கூறப்பட்டது. (9)

உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான்என்று அப்பால்நாற் கூற்றே மருந்து. 950

மருந்து தனினிக்கு மருந்தாவது, உற்றவன் - அதனையுற்ற வன், தீர்ப்பான் - அதனைத் தீர்க்கும் மருத்துவன், முருந்து அவ

னுக்குக் கருவியாகிய மருந்து, உழைச் செலவான் என்ற அப்பால நாற்கூற்று - அதனைப்பிழையாமல இயற்றுவான் என்று சொல லப்பட்ட நான்கு பகுதியையுடைய நான்கு திறததது.

நான்கு என்னும எண் வருகின்றமையின், அதுநோக்கி 'அப் பால'என்றொழிததார. 'நாறகூறறது'எனபது விகாரமாயிறறு. அவறறுள உறறவன்வகை நானகாவன : பொருளுடைமை, மருததுவன்வழிநிறறல, நோய்நிலைஉணாததலவன்மை, மருததுத துன்பம பொறுததல என்பன இவை. தீாபபான்வகை நான்கா வன நோய்கணடு அஞஞாமை, ஆசிரியனைவழி படடு ஓதிய கலவி யும நுணணறிவும உடைமை, பலகாலும தீாததுவருதல, மன மொழிமெய்கள தூயவாதல என இவை. மருநதின் வகை நானகா வன பலபிணிகட்கும் ஏறறல, சுவை வீரியம் விளைவாற்றல் களான் மேம்படுதல, எளிதின எயதப்படுதல், பகுதியோடு பொருநதுதல என இவை. இயறறுவான்வகை நான்காவன ஆதுரன்மாட்டு அன்புடைமை, மனமொழிமெயகள தூயவாதல, சொலலியன அவ்வாறே செயதல வனமை, அறிவுடைமை என இவை. இவையெலலாம் கூடியவழியலலது பிணி தீராமையின், இத தொகுதியையும 'மருநது'என்றார, ஆயுளவேதமுடையாரும் இவை காலகளாக நடக்கும என்பதுபறறி 'பாதம' என்றும், இவை மாறுபட்டவழிச சாததியமும முதிரநது அசாததியமாம் என்றும கூறினார்.

இதனால அதனைத தீாததறகு வேணடுவன எலலாம் தொகுத் துக் கூறப்பட்டன. (10)

அங்க இயல முறறும.

—:o:—

ஒழிபு இயல்

—:o:—

இனி, அவ அரசியலினும் அங்க இயலினும அடங்காது ஒழிநதவற்றது இயலபு பதின்மூன்று அதிகாரததால கூறு வான்தொடங்கி, முதறகண குடிமை கூறுகின்றார.

96. குடிமை.

அஃதாவது உயாநத குடியின்கண் பிறநதாரது தன் மை உயாநத குடிப்பிறப்பு நாலவகைவருணததாாக்கும இன்றியமையாதாகலின், அசசிறப்புப்பறறி இது முன வைக் கப்பட்டது.

இற்பிறந்தார கண்ணல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு. 951

செப்பமும் நாணும் ஒருங்கு- செம்மையும் நாணும் சேர, இற்பிறந்தார்கண் அல்லது இயல்பாக இல்லை - குடிப்பிறந்தார் மாட்டல்லது பிறர்மாட்டு இயற்கையாக உளவாகா.

'இல்' 'குடி' 'குலம்' என்பன ஒருபொருள் ஈண்டு உயர்ந்தவற்றின்மேல். செம்மை கருத்தும் சொல்லும் செயலுந்தமமுள மாறாகாமை. நாண் - பழிபாவங்களின் மடங்குதல். இவை இற்பிறந்தார்க்காயின் ஒருவர் கற்பிக்கவேண்டாமல் தாமே உளவாம், பிறர்க்காயின் கற்பித்தவழியும் நெடிதுநில்லா என்பதாம். (1)

ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும் இழுக்கார் குடிப்பிறந் தார். 952

குடிப்பிறந்தார் உயர்ந்த குடியின்கண் பிறந்தார், ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம் மூன்றும் இழுக்கார்-தமக்குரிய ஒழுக்கம் மெய்மை நாண் எனப்பட்ட இம் மூன்றன்கண்ணும் கலவியான் அன்றித் தாமாகவே வழுவார்.

ஒழுக்கம் முதலியன மெய்ம் மொழி மனங்களினவாகலின், அம்முறையவாயின. இழுக்குதல் அறியாது வருகின்றமையின், 'இழுக்கார்' என்றார். (2)

நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும் வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. 953

வாய்மைக் குடிக்கு-எக்காலத்தும் திரிபில்லாத குடியின்கண் பிறந்தார்க்கு, நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும் வகை என்ப-வறியார் சென்ற வழி முகமலாச்சியும், உள்ளன கொடுத்தலும், இன்சொற்சொல்லுதலும், இகழாமையும் ஆகிய இந்நான்கும் உரிய கூறுவென்று சொல்லுவர் நூலோர்.

பொய்மைமை திரிபு உடைமையின் திரிபின்மையை 'வாய்மை' என்றும், 'இல்லாரை எல்லாரும் எள்ளுவர்' ஆகலின் இகழாமையை அவர் கூறாக்கியும் கூறினார். 'குடி' ஆகுபெயர். நான்கின் வகை என்பது பாடமாயின், வாய்மைக் குடிப்பிறந்தாருக்குப் பிறரின் வேறுபாடு இந்நான்கான் உளதாம் என்று உரைக்க.

இவை மூன்று பாட்டானும் குடிப்பிறந்தாரது இயல்பு கூறப்பட்டது. (3)

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலா. 954

அடுக்கிய கோடி பெறினும் - பலவாக அடுக்கிய கோடி அளவிற்றாய பொருளைப் பெற்றாராயினும், குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலா - உயர்ந்த குடியின்கண் பிறந்தார் தம் ஒழுக்கம் குன்றும் தொழில்களைச் செய்யார்.

'அடுக்கியகோடி' என்பது, ஈண்டு எண்ணப்படும் பொருள மேல நின்றது. குன்றும தொழிலகள குன்றுதற்கு ஏதுவாய தொழிலகள. (4)

வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று. 955

பழங்குடி - தொன்றுதொட்டுவருகின்ற குடியின்கண பிறந்தார, வழங்குவது உள்வீழ்ந்தக்கண்ணும-தாம்கொடுக்கும பொருள பண்டையில சுருங்கிய விடததும, பண்பின தலைப்பிரிதல இன்று தம பணபுடைமையின் நீங்கார.

தொன்றுதொட்டு வருதல-'சேர சோழ பாண்டியா' என்றாற போலப் படைப்புக் காலந்தொடங்கி மேமபடடுவருதல. அவர்க்கு நலகுரவாவது வழங்குவது உள்வீழவது ஆகலின், அதனையே கூறினார. (5)

சலம்பற்றிச் சால்பில செய்யார்மாசு அற்ற
குலம்பற்றி வாழ்தும் என்பார். 956

மாசு அறற குலம பறறி வாழதும் என்பார - வசையறறு வருகின்ற நமகுடி மரபினைடு ஒதது வாழக்கடவேம் என்று கருதி அவ்வாறு வாழவார, சலம பறறிச சாலபு இல செயயார-வறுமை யுற்றவழியும், வஞசனையைப்பொருநதி, அமைவிலவாய தொழில களைச செயயார.

அமைவின்மை அம்மரபிறகு ஏலாமை.

இவை மூன்று பாடடாலும அவா வறுமையுறறவழியும அவ் இயலபின வேறுபடார என்பது கூறப்பட்டது. (6)

குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து. 957

குடிப் பிறநதாரகண் குறறம-உயாநதகுடியின்கண் பிறநதார மாட்டு உளதாம குறறம, விசுமபின் மதிக்கண மறுப்போல உயாநது விளஙகும - தான் சிறிதேயாயினும விசும்பின்கண் மதி யிடதது மறுப்போல ஓங்கித தோன்றும்.

உயாகுடிமுதலிய பொருளவகைமூன்றற்கும விசும்பு முதலிய உவமைவகை ஒததுப் பால மாறுபட்டது. குடியதுஉயாச்சியானும் மதிபோன்ற அவா நறகுணங்களோடு மாறாதலானும, உலகெங்கும் பரநது வெளிப்படும் என்பதாம. (7)

நலத்தின்கண் நார்இன்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப படும். 958

நலததின்கண் நார் இன்மை தோன்றின்-குலநலமுடையனாய் வருகின்றவன்கணணே ஈரம இன்மை உளதாமாயின், அவனைக்

குலத்தின்கண் ஐயப்படும் அவனை அக் குலப்பிறப்பின்கண்ணே ஐயப்படும் உலகம்.

நலபுமகுலபும் அகுபெயர். நாரின்மையால கொடாமையும் கடுஞ்சொலலும் முதலிய கூறப்படடன. தோன்றின் என்பது தோன்றுமை விளக்கி நின்றது. நலனுடையனைய வருதலினிடையே இவைதோன்றலின, உளளது ஐயமாயிற்று. உலகம் என்பதும் அவாய் நிலையான் வநதது. ஐயப்படல் என்பது பாடமாயின், ஐயப்படுக என விகியாகி உலரக்க.

இவை இரண்டுபாட்டானும் வேறுபட்ட வழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது. (8)

நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல். 959

நிலததிற் கிடந்தமை கால் காட்டுமை - நிலததினியல்பை அதன் கண் முளைத்த முளை காட்டும், குலததிற் பிறந்தார் வாய்சசொல் காட்டும் - அதுபோலக் குலததின் இயலபை அதன்கண் பிறநதார் வாயிற சொல காட்டும.

கிடந்தமை உளளபடி முளைததமாதிரதானே நன்மையும் தீமையும தெரிதலின், இலை முதலிய கூறாயிஙகள், ஆகவே, பொருளினும செயல முதலியன வேண்டாவாயின. குலதது இயல்பு அறிதறகருவி கூறுவார் போன்று, இனசொல் வேணடுமென்ற வாரயிறது. (9)

நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. 960

நலம் வேண்டின் நாண் உடைமை வேண்டும் - ஒருவன் தனக்கு நலனுடைமையை வேண்டுவனாயின், தான் நாணுடையன் ஆதலே வேண்டுக, குலம் வேண்டின் யாராக்கும் பணிவு வேண்டுக- குலனுடைமையை வேண்டுவானாயின் பணியப்படுவார் யாவர் மாட்டும் பணிதலே வேண்டுக.

நலம் - புகழ் புண்ணியங்கள. வேண்டும் என்பது விதிப் பொருட்டாய் நின்றது, "வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்" (தொல். சொல். கிளவி. 33) என்புழிப்போல. "அந்தணர் சான்றோர் அருந்தவததோர் தம்புனனோர், தந்தை தாய் என்றிவர்" எல்லாரும் அடஙக 'யாராக்கும்' என்றார். பணிவு இருக்கை எழுநதும் எதிர்செலவும் முதலாயின.

இவை இரண்டு பாட்டானும் குடிமைமக்கு வேண்டுவன கூறப்பட்டன. (10)

97. மானம்

இனி, குடிப்பிறக்தார்க்கு உரியவாய குணங்கள கூறு வான் தொடங்கி, முதற்கண் மானம் கூறுகின்றார். அஃதா வது எஞ்ஞான்றும் தம் நிலேயில் தாழாமையும், தெய்வத தால் தாழ்வு வருதுழி உயிர்வாழாமையும் ஆம். இஃது அக் குடிப்பிறப்பினே நிறுதலதலுடைமையின், அச் சிறப்புப்பறறி முன் வைக்கப்பட்டது.

இன்றி அமையாச் சிறப்பின ஆயினும் குன்ற வருப விடல். 961

இன்றி அமையாச் சிறப்பினே ஆயினும் - செயயாதவழித் தாம் அமையாத சிறப்பினே உடையவேயெனினும், குன்ற வருப விடல் - தம் குடிப்பிறப்புத தாழவரும் செயலகளே ஒழிக.

அமைபாமை - இறுதலல. 'குடிப்பிறப்பு' என்பது அதிகார முறைமையான் வந்தது. 'இறப்பவருவழி இளிவந்தன செய்தாயி னும உயக' என்னும வடநால் முறைமையை மறுதது, உடம் பினது நிலேயின்மையையும் மானதகினது நிலேபுடைமையையும் தூக்கி அவை செய்யற்க என்பதாம். (1)

சீரினும் சீர் அல்ல செய்யாரே சீரொடு பேராண்மை வேண்டு பவர். 962

சீரினும் சீர் அல்ல செய்யா - புகழ்செய்யுமிடத்தும் தம் குடிமைக்கு ஒவ்வாத இளிவரவுகளேச் செய்யார், சீரொடு பேராண்மை வேண்டுபவா - புகழுடனே மானதகை நிறுதலதலே விரும்புவா.

எவ்விடததும் நிலேகுலேபாத திண்மையான் உளதாதல பற்றி 'பேராண்மை' எனப்பட்டது. நிலேயுடைய புகழின்பொருட்டாக வும செய்யா என்பதாம. (2)

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு. 963

பெருக்கததுப் பணிதல வேண்டுமு - குடிப்பிறக்தார்க்கு நிறைந்த செலவம் உளதாயவழி யாவாமாட்டும் பணிவு வேண்டும், சிறிய சுருக்கதது உயர்வு வேண்டும் - குறைந்த நல்சூழவுளதாய வழிப் பணியாமை வேண்டும்.

பணியாமை - தாழவு வாராமற் பழைய உயர்ச்சிக்கண்ணே நிற்றல். செல்வுக்காலே அஃது உயர்ச்சி செய்யத தாம் தாழ்த லும், அல்லற்காலே அது தாழவு செய்யத தாம் உயர்தலும் வேண்டும் என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் தாம் தாழ்தற்கு ஏதுவாயின செய்யாமைச் சிறப்புக் கூறப்பட்டது. (3)

தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. 964

மாந்தர் - குடிப்பிறந்த மாந்தர், நிலையின் இழிந்தக்கடை - தம் உயர்ந்த நிலையை விட்டு அதனினின்றும் தாழ்ந்தவழி, தலையின் இழிந்த மயிர் அனையர் - தலையைவிட்டு அதனில நின்றும் வீழ்ந்த மயிரினை ஒப்பர்.

அக் நிலையை விடாது நின்றவழிப் பேணப்படுதலும், விட்டுத தாழ்ந்தவழி இழிக்கப்படுதலும உலமையாற பெற்றும். (4)

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின். 965

குன்றின் அனையாரும் - குடிப்பிறப்பான் மலைபோல உயர்ந்தோரும், குன்றுவ குன்றி அனைய செயின் குன்றுவர் - தாழுதற்கு ஏதுவாகிய செயலகளை ஒரு குன்றி அளவாயினும் செய்வராயின் தாழுவர்.

'குன்றியனையவும்' என்னும இழிவுசிறப்பு உம்மை விகாரதத்தால் தொக்கது. தாழுதற்கு ஏதுவாய செயலகளாவன· இனிவருதன. சொற பின் வருங்கால். (5)

புகழ்இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்ற நிலை. 966

இகழ்வார பின் சென்று நிலை - மானததை விட்டுத் தன்னை அவமதிபபார பின்னே ஒருவன்சென்று நிற்கின்றநிலை, புகழ இன்று-இவ்வுலகத்துப் புகழ பயவாது, புததேள நாடடு உய்யாது ஏனைப் புததேளுலகத்துச் செலுத்தாது, மற்று என் - இனி அவனுக்கு அது செய்வது யாது?.

புகழ பயப்பதனை 'புகழ்' என்றார். பயனை இவ் இரண்டும இன்றிக் கொன்னே மானம் கெடுகின்றது என்னை என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் அவை செய்தற் குறறம் கூறப்பட்டது. (6)

ஒட்டார்பின் சென்றுஒருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று. 967

ஒட்டார் பின் சென்று ஒருவன் வாழதலின் - தன்னை இகழவார் பின்னே சென்று பொருள பெற்று அதனால ஒருவன் உயிர் வாழ்தலின், அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று - அது செயயாது இறததான் என்று சொலலப்படுதல அவனுக்கு நன்று.

ஒட்டுதல் - பொருந்துதல். 'அந்நிலையே' என்றது செல்லாத முன்னை நிலைக்கண்ணே நின்று என்றவாறு, அப்பொழுதே என்றும் ஆம். 'புகழும் புத்தேள் நாடும் பயவாதேனும் பொருள் பெற்று உயிர்வாழவாம்' என்பாரை நோக்கிக் கூறியது. (7)

மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடுஅழிய வந்த இடத்து. 968

பெருந்தகைமை பீடு அழிய வந்த இடத்து - உயர்குடிப்பிறப்புத தன்வலியாகிய மானம அழியவநதுழி, ஊன் ஓமபும் வாழக்கை மறறு மருநதோ - இறத்தலொழிநது பயனில்லாத உடமபினைக் காக்கும வாழக்கை பினனும் இறவாமைக்கு மருந்தாமோ?

'மறறு' என்பது மேறசொல்லிய இறப்பினை மாறறிநின்றது. நற்குணஙகட்கு எலலாம இடனாதல சிறப்புப்பறற, 'பெருந தகைமை' எனறும, அவை எலலாவற்றுளளும அதறகு வலியாதறசிறப்புப்பற்றி, 'பீடு' என்றும, அஃது அழுநதால் நின்ற வெற்றுடமபு இழிக்கப்படுதலின், அதனை 'ஊன' எனறும, பின்னும இறததல ஒருதலை என்பார 'மருநதோ' என்றும கூறினார். மானததின்தொழில அதறகு இடனாகிய குடிப்பிறப்பின் மேல நின்றது. (8)

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 969

மயிர நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் தன் மயிர்த்திரளின் ஒருமயிர நீங்கினும உயிரவாழாத கவரிமாவை ஒப்பார, மானம் வரின் உயிர நீப்பர் - உயிர நீக்கததான் மானம எயதும எல்லை வரின், அதனைத தாங்காது இறப்பர.

இழிவு சிறப்பு உமமை விகாரததால் தொக்கது. உயிரும் மானமும உடன் நிலலாமைக்கண் பின்னும் போவதாய உயிரை நீதது எஞ்ஞான்றும நிறபதாய மானததை எயதுவர் என்பதாம். உவமை அவர்க்கு அஃது இயலபு என்பது விளக்கி நின்றது. (9)

இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு. 970

இளி வரின் வாழாத மானம் உடையார் ஒளி - தமக்கு இழிவு வந்துழிப் பொறுதது உயிர்வாழாது அதனைநீதத மானமுடையாரது புகழ்வடிவினை, தொழுது ஏததும உலகு - எஞ்ஞான்றும் தொழுது துதியாநிற்பர் உலகததார.

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவன் ஏவா வான ஊர்தி - எய்துவா" (புறநா. 27) ஆகலின், துறக்கச்செலவு சொல்ல வேண்டாவாயிற்று.

இவை நான்கு பாட்டானும் மானப்பொருட்டாய இறப்பினது சிறப்புக் கூறப்பட்டது. (10)

98. பெருமை

அஃதாவது செயற்கு அரிய செய்தல, தருக்கு இன்மை, பிறர் குற்றம் கூறாமை என்றிவை முதலிய நற் குணங்களாற் பெரியாரது தன்மை. நிலையினும் மேன் மேல் உயர்த்தல் பயத்தவாயல் இவை உளவாவது நிலையில் தாழாமை உளவழியாகலின், இது மானத்தின் பின் வைக்கப் பட்டது.

ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை இளியொருவற்கு அஃதுஇறந்து வாழ்தும் எனல். 971

ஒருவற்கு ஒளி உளள வெறுக்கை - ஒருவனுக்கு ஒளியாவது பிறராற் செயற்கரிய செய்வேம் என்று கருதும் ஊக்கமிகுதி, ஒரு வற்கு இளி அஃது இறந்து வாழ்தும் எனல் - ஒருவனுக்கு மாசாவது அச் செயலியொழிந்து உயிர்வாழக்கடவேம் என்று கருதுதல்.

ஒளி: தான் உளளை காலத்து மிக்குத தோன்றுதலுடைமை. "ஒளிநிருன் ஓங்கு புகழ் செய்யான்" (காலடி. 9) என்றார் பிறரும். மேலும் 'செயற்கரிய செய்வார் பெரியர்' (குறள. 26) என்றார் ஆயினும், ஈண்டு அவை அளவிறந்த ஒப்புரவு ஈகை முதலியவாம். அவற்றினுலை பெருமையை அதன் காரணத்தின்மேலிட்டு 'உளள வெறுக்கை'யென்றும், அது தன்னையே அதன்காரியமாகிய ஒளி ஆக்கியும் கூறினர். இவ்வாறு இதன் எதிர்மறைக்கண்ணும் ஒக்கும்.

இதனன் பெருமையின் சிறப்புக் கூறப்பட்டது. (1)

பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா செய்தொழில் வேற்றுமை யான். 972

எலலா உயிர்க்கும் பிறப்பு ஒக்கும் - எல்லா மக்களுயிர்க்கும் பொதுவாகிய பிறப்பியல்பு ஒக்குமேயெனினும், சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான் - பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பியல்புகள ஒவ்வா அவை செய்யும் தொழில்களது வேறு பாட்டான்.

வேறுபாடு: நல்லனவும், தீயனவும், இரண்டுமாயினவும், இரண்டுமல்லவாயினவுமாய அளவிறந்த பாகுபாடுகள. விண வயத்தாற் பஞ்சபூதபரிணம மாகிய யாக்கையைப் பொருந்தி நின்று, அதன் பயன் அநுபவித்தல எலலா வருணத்தார்க்கும் ஒத்தலின் 'பிறப்பு ஒக்கும்' என்றும், பெருமை சிறுமைகட்குக் கட்டளைக்கல்லாகிய தொழிற்பாகுபாடுகள வருணந்தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலின், 'சிறப்பு ஒவ்வா' என்றும் கூறினர். (2)

மேல்இருந்தும் மேலல்லார் மேல்அல்லர் கீழ்இருந்தும்
கீழ்அல்லர் கீழல்ல வர். 973

மேல் அல்லார் மேல் இருந்தும் மேல் அல்லர் - செயற்கரிய செய்கலாத சிறிய ராயினர், உயர்ந்த அமளி முதலியவற்றின் மிசை இருந்தாராயினும் பெரியராகார்; கீழ அல்லவர் கீழ் இருந்தும் கீழ அல்லர் - அவைசெய்து பெரியராயினர், தாழ்ந்த வறு நிலத்திருந்தாராயினும் சிறியராகார்.

மேலிருத்தல் கீழிருத்தல்களால செல்வ கல்குரவுகளும், மேல் கீழ்களால பெருமை சிறுமைகளும், கருதப்பட்டன.

இவை இரண்டு பாட்டானும் முறையே குடிமைமாத்திரத் தானும் செலவமாத்திரத்தானும் அஃது உளதாகாமை கூறப் பட்டது. (3)

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டுஒழுகின் உண்டு. 974

ஒருமை மகளிரே போல - கவராதமனதகினையுடைய மகளிர் நிறையின் வழுவாமல தம்மைத தாம் காததுக் கொண்டொழுகு மாறுபோல, பெருமையும் தன்னைத தான் கொண்டு ஒழுகின் உண்டு - பெருமைக்குணனும், ஒருவன் நிறையின் வழுவாமல் தன்னைத தான் காதலுக்கொண்டொழுகுவானையின், அவன்கண் உண்டாம்.

பொருளின் தொழில உவமையினும் வருதது. கற்புண்டாதல் தோன்ற நின்றமையின், உம்மை எச்ச உம்மை. ஒழுகுதல் - மனம்மொழி மெய்களை ஒடுக்கி ஒப்புரவு முதலிய செய்துபோதல்.

இதனன் அஃது உளதாமாறு கூறப்பட்டது. (4)

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். 975

பெருமை உடையவர் - அவ்வாற்றால பெருமையுடையராயி னர், அருமை உடைய செயல ஆற்றின் அறறுவார தாம் வறிய ராயவழியும் பிறரால் செய்தறகு அரியவாய தம் செயல்களை விடாது அவை செய்யும் நெறியால கடைபோகசசெய்தலில வல்ல ராவர.

'வறியராயவழியும்' என்பது, முன்செய்து போந்தமை தோன்றப் 'பெருமை உடையவர்' என்றதனனும், 'ஆறறுவார்' என்றதனனும் பெற்றும்.

இதனன் அதனை உடையார் செய்கி கூறப்பட்டது. (5)

சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு. 976

பெரியாரைப் பேணிக் கொளவேம் என்னும் நோக்கு - அப் பெற்றியராய பெரியாரை வழிப்பட்டு அவர இயலபினை யாம் கோடும் என்னும் கருத்து, சிறியார் உணர்ச்சியுள இல்லை மற்றைச சிறியராயினரா மனததின்கண் உளதாகாது.

குடிமை, செல்வம், கலவி என்று இவற்றது உண்மை மாத்திரததால் தம்மை வியந்திருப்பார்க்கு, அவை தமக்கு இயல்பு என்று அமைநதிருப்பாரை வழிபடடு, அஃது உடையராதல் கூடாது என்பதாம். (6)

இறப்பே புரிந்த தொழிற்ருஞ் சிறப்புநதான் சீரல் லவர்கண் படின். 977

சிறப்பு தானும் - தனக்கு ஒக்கும் பெரியாரிடத்து அமைக திருததலைச் செயவதாய சிறப்புதானும், சீர அல்லவர்கண் படின் - தனக்கு ஒவ்வாத சிறியாரிடதது படுமாயின், இறப்பே புரிந்த தொழிற்ரும் - அதனை ஒழிநது தருக்கின் கண்ணே மிக்க செயலை உடைததாம.

தருக்கினை மிகச்செய்யும் என்பதாயிற்று. சிறப்பு குடிமை, செலவம், கல்விகளினைய மிகுதி.

இவை இரண்டு பாட்டானும் அஃதிலார் செய்கி கூறப் பட்டது. (7)

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து. 978

பெருமை என்னும் பணியும்-பெருமையுடையார் அச் சிறப்பு உண்டாய ஞான்னும் தருக்கின்றி அமைந்தொழுகுவர், சிறுமை (என்னும்) தன்னை வியநது அணியும்-மறறைச் சிறுமையுடையார அஃதிலராதலானறும் தம்மை வியநது புனையாகிற்பர.

பொருளின் தொழில்கள பணபின்மேல ஏறறப்பட்டன. இஃது 'அற்றம் மறைக்கும் பெருமை' (குறள 980) என்புழியும் ஒக்கும். என்றும என்பது பின்னும வருது இயைந்தது. ஆம் என்பன இரண்டும் அசை. புனைதல - பிறரின் தமக்கு ஓர் மிகுதியை ஏற்றுக்கோடல. இதற்கு, 'உயாநதார் தாழுவார் தாழந்தார உயர்வார, இஃதொரு விநோதம் இருந்தவாறு என?' என உலகியலை வியநது கூறிறறு அக்குவாரும் உளர. (8)

பெருமை பெருமிதம் இன்மை சிறுமை பெருமிதம் ஊர்ந்து விடல். 979

பெருமை பெருமிதம் இன்மை - பெருமைக்குணமாவது காரணமுண்டாயவழியும் அஃது இயலபாதல் நோக்கித தருக்கின்றியிருத்தல, சிறுமை பெருமிதம் ஊர்நது விடல - சிறுமைக் குணமாவது அஃது இல்வழியும் அதனை ஏற்றுக்கொண்டு தருக்கின் மூடிவின் கண்ணே நின்றுவிடுதல்.

அளவறத் தருக்குதல் என்பதாயிற்று. 'விடும்' என்று பாடம் ஓதுவாரும் உளர்; மூற்றுத்தொடரும் எழுவாய்த் தொடரும் தம்முள இயையாமையின், அது பாடமன்மை உணர்க.

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். 980

பெருமை அற்றம் மறைக்கும் - பெருமையுடையார் பிறர் மானத்தையே கூறி அவமானதத்தை மறையா நிற்பர், சிறுமை குற்றமே கூறிவிடும் - மற்றைச்சிறுமையுடையார் பிறர்குணதத்தை மறைதத்துக் குற்றத்தையே கூறிவிடுவர்.

மறைத்தலும் கூறலும் ஏனையிடத்தும் இயைந்தன. அற்றம்-ஆகுபெயர். தான் என்பது அசை.

இவை மூன்று பாட்டானும் இருவர் செயலும் ஒருங்கு கூறப் பட்டன. (10)

99. சான்றாண்மை

அஃதாவது பல குணங்களானும் நிறைதது அவற்றை ஆளதல தன்மை. 'பலகுணங்களானும்' என்பது சாலுதல் தொழிலால பெறப்படுதலின் 'அவறறை' என்பது வருவிக்கப்பட்டது. பெருமையுள அடங்காத குணங்கள பலவற்றையும் தொகுத்துக்கொண்டு நிற்றலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. 981

கடன் அறிந்து சான்றாண்மை மேற்கொளபவர்க்கு - கமக்குத தகுவது இது என்று அறிந்து சான்றாணமையை மேற்கொண்டொழுகுவாாக்கு, நலலவை எலலாம கடன் என்ப - நலலனவாய குணங்கள எலலாம் இயலபாயிருக்கும என்று சொலலுவர் நூலோர்.

சில குணங்கள இலவாய வழியும, உளளன செய்துகொண்டனவாயவழியும சான்றாணமை என்னும சொற்பொருள கூடாமையின், நூலோர் இவ ஏதப்பெயா பற்றி அவா இலக்கணம் இவ்வாறு கூறுவர் என்பதாம. (1)

குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
ஏந்நலத் துள்ளதூஉம் அன்று. 982

சான்றோர் நலன் குணநலமே - சான்றோர் நலமாவது குணங்களாலாய நலமே, பிற நலம் எந்நலதத்தும் உளளது அன்று—அஃது ஒழிந்த உறுப்புக்களாலாய நலம் ஒருநலத்தினும் உளளதன்று.

அகநலத்தை முன்னே பிரித்தமையின், ஏனைப் புறநலத்தை 'பிறநலம்' என்றும், அது குடிப்பிறப்பும் கல்வியும் முதலாக நூலோர் எடுத்த நலங்களுள புகுதாமையின் எங்நலத்துள்ளதூஉம் அன்று என்றும் கூறினர்.

இவை இரண்டு பாட்டானும் சாலபிற்கு ஏற்ற குணங்கள பொதுவகையால கூறப்பட்டன. (2)

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு ஐந்துசால்பு ஊன்றிய தூண். 983

அன்பு – சுற்றத்தார்மேலேயன்றிப் பிறர்மேலும் உளதாய அன்பும், நாண் – பழிபாவங்களின் நாணமும், ஒப்புரவு – யாவர் மாட்டும் ஒப்புரவு செய்தலும், கண்ணோட்டம – பழையார்மேல கண்ணோடலும, வாய்மையொடு-எவ்விடத்தும மெயமமை கூறலும் என, சால்பு ஊன்றிய தூண ஐந்து – சாலபு என்னும் பாரதத்தைத் தாங்கிய தூண்கள ஐந்து.

எண்ணொடு முன்னவற்றோடும் கூடிற்று. இக்குணங்கள இல வழிச் சாலபு கிலேபெருமையின், இவற்றை 'தூண' என்றார். ஏகதேச உருவகம். (3)

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை சொல்லா நலத்தது சால்பு. 984

நோன்மை கொலலா நலததது – பிற அறங்களும் வேண்டுமாயினும் தவம் ஓர் உயிரையும கொலலாத அறத்தின்கண்ணதாம், சாலபு பிறாதீமை சொல்லா நலததது – அதுபோலப் பிற குணங்களும் வேண்டுமாயினும் சால்பு பிறர் குறறதைச் சொலலாத குணதகின் கணணதாம்.

நலம என்னும் ஆருபெயர்ப்பொருள இரண்டனையுந் தலமை தோன்ற, இவ்இரண்டற்கும் அதிகாரமாக்கிக்கூறினர். தவதகிற்குக் கொல்லா வரம சிறநதாறபோலச் சால்பிற்குப் பிறா குற்றஞ சொலலாக் குணம் சிறநதது என்பதாம். (4)

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர் மாற்றாரை மாற்றும் படை. 985

ஆற்றவார் ஆற்றல் பணிகல் - ஒரு கருமத்தைச் செய்து முடிப்பாரது ஆறறலாவது அகறகுக துணையாவாரைத் தாழ்ந்து கூட்டிக்கொளளுதல, சான்றோ மாற்றாரை மாற்றும் படை அது - இனிச் சாலபுடையாா நம பகவரைப் பகைனமயொழிக்குங் கருவியும் அதுவே.

ஆற்றல் அது வல்லராந் தன்மை. இறந்தது தழீஇய எச்ச உம்மை விகாரததால் தொக்கது. சால்பிற்கு ஏற்ற பணிதற் குணத்தது சிறப்புக் கூறுவார், ஏனையதும் உடன் கூறினர். (5)

சால்பிற்குக் கட்டளை யாதுஎனின் தோல்வி துலைஅல்லார் கண்ணும் கொளல். 986

சால்பிற்குக் கட்டளை யாது எனின்–சால்பாகிய பொன்னின் அளவறிதற்கு உரைகல்லாகிய செயல் யாது எனின், *தோல்வி துலை அலலாரகண்ணும் கொளல்*-அது தமமின் உயாநதாரமாட்டுக் கொளளும் தோலவியை இழிநதாராமட்டும கோடல.

துலை - ஒப்பு. எச்ச உமமையான் இருநிறததார் கண்ணும் வேண்டுதல பெற்றும். கொளளுதல வெலலும்ம ஆறறலுடையரா யிருநதே ஏறறுக்கொளளுதல. இழிநதாரை வெலலுதல கருதித் தம்மோடு ஒப்பிததுக்கொளளாது, தோலவியான் அவரினும் உயர் வரா யின், அதனால சாலபளவு அறியப்படும என்பதாம. (6)

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு. 987

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால - தமக்கு இன்னாதவற்றைச் செயதாரக்கும சாலபுடையார் இனியவற்றைச் செய்யாராயின், *சாலபு என்ன பயததது* – அச சாலபு வேறு என்ன பயனை உடைதது.

சிறப்பு உம்மை அவர் இன்னாசெயதற்கு இடனதல விளக்கி நின்றது. ஓகாரம் அசை. *இனா* - எதிமமறைப்பொருட்டு. தாமும் இன்னாசெயவராயின், சாலபால ஒருபயனுமிலலை என்பதாம்.

இவை ஐந்து பாட்டானும் சிறப்புவகையால் கூறப்பட்டது.(7)

இன்மை ஒருவற்கு இளிவன்று சால்புஎன்னும் திண்மைஉண் டாகப் பெறின். 988

சாலபு என்னும் திண்மை உண்டாகப் பெறின்–சாலபு என்று சொலலப்படும வலி உணடாகப்பெறின், *ஒருவறகு இன்மை இளிவு அன்று* - ஒருவனுக்கு நலகூபவு இளிவாகாது.

தளராமை நாட்டுதலின் வலிபாயிற்று. இன்மையான் வரு வதனை இன்மையாக உபசரிததுக் கூறினார. சாலபுடையார் நல கூரநதவழியும் மேம்படுதலுடையா என்பதாம். (8)

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்ரூண்மைக்கு ஆழி எனப்படு வார். 989

சான்ரூண்மைக்கு ஆழி எனப்படுவார் - சால்புமையாகிய கடற்குக் கரை என்று சொலலப்படுவார், *ஊழி பெயரினும் தாம் பெயரார்* - ஏனைக்கடலும் கரையுள நிலலாமற் காலந திரிநதாலும் தாம் திரியார்.

சான்ரூண்மைக்குப் பெருமைதோன்ற அதனைக்கடலாக்கியும், அதனைத் தாங்கிக் கொண்டுநிற்றலின் அஃதுடையாரைக் கரை

யாக்கியும் கூறினர், "பெருங்கடற்கு ஆழியனையன் மாதோ" (புறநா. 330) என்றார் பிறரும். ஏகதேச உருவகம். (9)

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான் தாங்காது மன்னோ பொறை. 990

சான்றவர் சான்றாண்மை குன்றின் - பலகுணங்களாலும் நிறைந்தவர் தம் தன்மை குன்றுவராயின், இருநிலந்தான் பொறை தாங்காது - மற்றை இருநிலந்தானும் தன்பொறையைத் தாங்காத தாய் முடியும்.

'தானும்' என்னும் எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. அவர்க்கு அது குன்றாமையும் அதற்கு அது தாங்கலும் இயல்பாகலான், அவை எஞ்ஞான்றும் உளவாகா என்பது தோன்ற நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம் அசை. இதற்கு 'இரு நிலம் பொறை தாங்குவது சான்றவர் துணையாக வருதலான்' அதுவும் அது தாங்கலாற்றாது என்று உரைப்பாரும் உளர்.

இவை மூன்று பாட்டானும் அவற்றான் நிறைந்தவரது சிறப்புக் கூறப்பட்டது. (10)

100. பண்பு உடைமை

அஃதாவது பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாதுநின்றே எல்லார் இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்; "பண்பெனப் படுவது பா நிகழ்தொழுகல்" (கலித். நெய்தல். 16) என்றார் பிறரும். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

எண்பதத்தால் எய்தல் எளிதுஎன்ப யார்மாட்டும் பண்புடைமை என்னும் வழக்கு. 991

யார்மாட்டும் எண்பதத்தால - யாவர்மாட்டும் எளிய செவ்வியராதலால, பண்புடைமை என்னும் வழக்கு எய்தல் எளிது என்ப–அரிதாய பண்புடைமை என்னும் நன்னெறியினை எய்துதல் எளிது என்று சொல்லுவர் நூலோர்.

குணங்களால நிறைந்து செவ்வி எளியருமையாக்கால் பண்புடைமை தானே உளதாம் ஆகலின், எண்பதத்தால எய்தல எளிது என்றும, அஃது உலகத்தையெல்லாம் வசிகரித்தற் பயத்ததாகலின் அதனைத் தொலலோர் சென்ற நன்னெறியாக்கியும், அதனை எளிதின் எய்துதற்கு இது நூலோர் ஓதிய உபாயம் என்பார் அவர்மேல வைத்தும் கூறினார். (1)

அன்புஉடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்இரண்டும் பண்புஉடைமை என்னும் வழக்கு. 992

அன்பு உடைமை ஆன்ற குடிப் பிறத்தல் இவ் இரண்டும் - பிறர்மேல் அன்பு உடையனதலும் உலகதோடு அமைந்த குடியின் கண் பிறதலும் ஆகிய இவ்இரண்டும், பண்பு உடைமை என்னும் வழக்கு-ஒருவனுக்குப் பண்பு உடைமை என்று உலகத்தார் சொலலும நன்னெறி.

அமைதல ஒததுவருதல். 'குடிப்பிறதல்' என்றது பிறந்தார் செயலீல. தனிததவழி ஆகாது இரண்டும கூடியவழியே ஆவதென்பது தோன்ற, முறமுமமை கொடுத்தார். காரணங்கள காரியமாக உபசரிக்கப்பட்டன.

இவை இரண்டு பாட்டானும பண்பு உடையர் ஆதற்காரணம் கூறப்பட்டது. (2)

உறுப்புஒத்தல் மக்கள்ஒப்பு அன்ருல் வெறுத்தக்க பணபுஒத்தல ஒப்பதாம் ஒப்பு. 993

உறுப்பு ஒததல மக்கள ஒப்பு அன்று – செறியத்தகாத உடமபால ஒததல ஒருவனுக்கு நன்மக்களோடு ஒப்பாகாமையின் அது பொருதுவதன்று, ஒப்பதாம ஒப்பு வெறுததக்க பண்பு ஒததல – இனிப் பொருத்துவதாய ஒப்பாவது செறியத தக்க பண்பால ஒததல.

வடநூலார் 'அங்கம்' என்றமையின் 'உறுப்பு' என்ருர். ஒருவனுக்கு நன்மக்களொடு பெறப்படும ஒப்பாவது உயிரின் வேருய் நிலீயுதல இலலா உடமபு ஒததல அன்று, வேறன்றி நிலீயுத லுடைய பண்பு ஒததலாகலான், அபபெற்றிதாய அவர் பண்பினீயுடையன்-ஆக என்பதாம. (3)

நயனெடு நன்றி புரிந்த பயனுடையார் பண்புபா ராட்டும் உலகு. 994

நயனெடு நன்றி புரிநதபயன் உடையார பண்பு - நீதியையும் அறததையும விரும்புதலொற பிறாக்கும தமக்கும பயன்படுதல் உடையாரது பண்பினீன, உலகு பாராட்டும – உலகததார் கொண்டாடாநிற்பர்.

'புரிநத' என்னும் பெயரெச்சம ாண்டு காரணப்பொருட்டு. நயனெடு நன்றி புரிதலும பயனுடைமையும பண்புகாரணமாக வநதமையின், 'அதனீப்பாராட்டும்' என்ரு. (4)

நகையுள்ளும் இன்னது இகழ்ச்சி பகையுள்ளும் பண்புஉள பாடறிவார் மாட்டு. 995

இகழச்சி நகையுளளும இன்னது-தன்னீயிகழதல ஒருவற்கு வினீயாட்டின் கணணும இன்னது, பாடு அறிவாரமாட்டுப் பலகையுளளும • பண்பு உள – ஆகலாற பிறர் பாடு அறிநதொழுகுவார் மாட்டுப் பகைமையுள வழியும அஃது உளதாகாது இனியவாய பண்புகளே உளவாவன.

'பாடறிவார்' எனவே, அவ் இன்னுமையறிதலும் பெற்றும். அதனை அறிந்தவர் பின் அது செய்யார்; இனியவே செய்வார் என்பது கருதது. இதற்குப் பிறரெல்லாம் இரண்டு தொடரும் தம்மூள் இயையாமல் உரைப்பாரும், 'இன்னது' என்னும் சொற்குப் பிறவாது என்று உரைப்பாருமாயினர். (5)

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல் மண்புக்கு மாய்வது மன். 996

பண்பு உடையார்ப் பட்டு உலகம் உண்டு - பண்புடையாரை கண்ணே படுதலால உலகியல் எஞ்ஞான்றும உண்டாய் வாரர நின்றது, இன்றேல அது மண்புக்கு மாய்வது–அண்டுப்படுதலிலலை யாயின், அது மண்ணின்கண் புக்கு மாயாதுபோவதாம்.

'பட' என்பது திரிந்து நின்றது. உலகம் - அருபெயர். மற்றைப் பண்பிலலார் சார்பன்மையின் ஓர்சார்புமினறி மண்ணின்கண் புக்கு மாயுமது வேண்டாவாயிற்று என்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது.

இவை நான்கு பாட்டானும் அதனையுடையாரது உயர்ச்சி கூறப்பட்டது. (6)

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர் மக்கட்பண்பு இல்லா தவர். 997

மக்கட் பண்பு இல்லாதவர்-நன்மக்கட்கே உரிய பண்பிலலாதவர், அரம்போலும கூர்மையரேனும் – அரதனின் கூர்மை போலும் கூரமையை உடையரேயாயினும், மரம் போல்வர் - ஓர் அறிவிற்றய மரதனினை ஒப்பர்.

அரம் - ஆகுபெயர். ஓர் அறிவு – ஊற்றினையறிதல. உவமை இரண்டனுள, முன்னது தான் மடிவின்றித தன்னையுறற பொருளகனை மடிவித்தலாகிய தொழிலபறறி வரதது, ஏனையது விசேடவறிவின்மையாகிய பண்புபறறி வரதது. அவ் விசேட அறிவிறருப் பயனய மக்கட்பண்பு இனமையின், அதுதானும இலலை என்பதாயிற்று. (7)

நண்புஆற்ரு ராகி நயமில செய்வார்க்கும் பண்புஆற்ரு ராதல் கடை. 998

நண்பு ஆற்ரராகி நயம் இல செய்வாாக்கும் – தம்மொடு நட்பினைச செயயாத பகைமையைச் செய்தொழுகுவார்மாட்டும், பண்பு ஆற்ரராதல் கடை – தாம் பண்புடையராய் ஒழுகாமை அறிவுடையார்க்கு இழுக்காம்.

நயம் – ஈரம். சிறப்பு உம்மை அவர் பண்பாற்ரூமைக்கிடனுதல் தோன்றநின்றது. அதனைச் செயயின் தாமும் அவர் தன்மையராவர் என் பார், 'கடை' என்ரார். (8)

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள். 999

நகல் வல்லர் அல்லார்க்கு - பண்பின்மையான் ஒருவரோடும் கலந்து உளமகிழ்தல்மாட்டாதார்க்கு, மாயிரு ஞாலம் பகலும் இருட்பாற் பட்டன்று – மிகவும் பெரிய ஞாலம் இருளில்லாத பகறபொழுதினும் இருளின்கண் கிடந்ததாம.

எலலாரோடும் கலதறியப்பெறுமையின் பண்பில்லார்க்கு உலகியல் தெரியாது என்பார், 'உலகம் இருளின்கண்பட்டது' என்றார். 'பாழபட்டன்று இருள' என்று பாடம் ஓதி, 'இருள நீங்கிறறன்று' என்று உரைப்பாரும உளா. (9)

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று. 1000

பண்பு இலான் பெறற பெருஞசெலவம – பண்பில்லாதவன் முன்னகல் விண்ணயான் எயதிய பெரிய செலவம் அக்குறறத்தால் ஒருவற்கும் பயன்படாது கெடுதல், நன்பால கலந்தீமையால திரிந் தற்று - நல்ல ஆன்பால ஏறற கலதனின் குற்றத்தால் இன்சுவைத் தாகாது கெட்டாற்போலும.

'கலதீமை' என்பது மெலிந்துநின்றது. தொழிலுவமமாக வின் பொருளின்கண் ஒதத தொழில வருவிக்கப்பட்டது. படைக்கும ஆற்றலஇலலதைதோன்ற 'பெற்ற' என்றும,எலலாப்பயனும் கோடறகு ஏறற இடனுடைமைதோன்ற, 'பெருஞ்செலவம்' என்றும் கூறினர். அச செல்வமும பயன்படாது என்ற இதனன் வருகின்ற அதிகாரப் பொருண்மையும் தோறறுவாய் செய்யப் பட்டது.

இவை நான்கு பாட்டானும அஃதஇலலாரது இழிவு கூறப் பட்டது. (10)

101. நன்றியில் செல்வம்

அஃதாவது ாட்டியாறகும் பிறர்க்கும் பயன்படதல இல்லாத செலவத்தினது இயலபு. உடையானது குறறம் செலவதனின்மேல ஏறறப்படடது. அதிகார முறைமைமேல தோறறுவாய செயத அதனன் பெறறும.

வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணுன்
செத்தான் செயக்கிடந்தது இல். 1001

வாய்சான்ற பெருமபொருள வைததான் அஃது உண்ணுன் - தன்மீன அகலமெலலாம நிறைதறகு ஏதுவாய பெருமபொருளை ஈட்டிவைதீது உலோபததால அதனை உண்ணாதவன், செததான் செயக் கிடந்தது இல – உலகியலும செததாலும, அதன்கண அவனால் செயக்கிடநததோர் உரிமை இன்மையான.

வைத்தான் என்பது முற்றெச்சம். உண்ணுதல் அதனன் ஐம்புலன் கனையும் நுகர்தல். 'வாய்சான்றபெருமபொருளை வைததாலெருவன் அதனைபுண்ணது செததவழி அதன்கண் அவனுற்செய்யக் கிடந்ததோர உரிமையிலலியாகலான், வையாது பெற்றபொழுதே நுகாக' என்று உரைப்பினும் அமையும. இதறகு 'செததான்' என்பது எசசம்.

இதனால ஈட்டியானுக்குப் பயன்படலின்மை கூறப்பட்டது. ()

பொருளான்ஆம் எல்லாம்என்று ஈயாது இவறும் மருளான்ஆம் மாணாப் பிறபபு. 1002

பொருளான் எல்லாம் ஆம் என்று - பொருளொன்றும் உண்டாக அதனால எல்லாம உண்டாம என்றறிந்து அதனை ஈட்டி, ஈயாது இவறுமம மருளான் - பின் பிறாக்கு ஈயாது பற்றுளளம்செயயும மயக்கததாலே, மாணாப் பிறப்பு ஆம் – ஒரு வனுக்கு நிறைதலிலலாத பேயப்பிறப்பு உணடாம.

இருமையினும எயதும இன்பங்கள பலவும அடங்க 'எலலாம்' என்றும்ம, ஈட்டுதறகு மூன் உணடாய அறிவு மின மயங்குதலின், 'மருள' என்றும், பொருளுணடாயிருக்கப் பிறாபசி கணடிருந்த தீவினை பற்றி உணவுகள உளவாயிருக்கப் பசிததுவருதும் பிறப்பு உளதாம் என்றும் கூறினார. (2)

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர் தோற்றம நிலக்குப் பொறை. 1003

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர் தோற்றம் - யாம் பிறரின்மிக ஈடடுதும் என்று பொருளினது ஈட்டல மாததிரததை யேவிரும்பி அதன் பயனைய புகழை விருமபாத மக்களது பிறப்பு, நிலக்குப் பொறை - நிலததிறகுப் பாரமாம அததனனையே.

இசை இருமைக்கும உறுதியாய அறமாகலின் ஈகையான் அதனையே வேணடல் செய்யாது ஈடடல துன்பதனையும காததல் துன்பதனையும வேணடியஅறிவின்மம பற்றி 'நிலக்குப்பொறை' என்றார. பிறப்பு என்றது அதறகு உரிய உடம்பினை. (3)

எச்சம்என்று என்எண்ணுங் கொல்லோ ஒருவரான் நச்சப் படாஅ தவன் 1004

ஒருவரான் நச்சப்படாதவன் - ஒருபொருளும் ஈந்தறியாமை யின் ஒருவராலும் நச்சப்படுதல இல்லாதவன், எச்சம் என்று என் எண்ணுங்கொல் - தான் இறந்தவழி ஈண்டு ஒழிந்து நிற்பதாக யாதனைக்கருதுமோ?

ஈண்டு ஒழிந்து நிற்கும்புகழ ஈவான்மேலன்றி நில்லாமையின், அவனுக்கு அதனைடு யாதும் இயையு இல்லை என்பார், 'என் எண் ணும்கொலலோ' என்றார. ஓகாரம் - அசை.

இவை மூன்று பாட்டானும் பிறர்க்குப் பயன்படலின்மை கூறப்பட்டது. (4)

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய கோடிஉண் டாயினும் இல் 1005

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு - பிறர்க்கு ஈவதும் தாம் நுகாவதுமாய இரண்டு செய்கையும் உடையரல்லாதார்க்கு, அடுக்கிய கோடி உண்டாயினும் இல் - பலவாக அடுக்கிய கோடிப் பொருளுண்டாயினும் ஒன்றும் இல்லை.

இன்பததினும அறம் சிறநதமையின், கொடுத்தல தொழில முற்கூறப்பட்டது. 'அடுக்கியகோடி' என்றது ஈண்டு எண்ணப்படும் பொருளமேல நின்றது. ஒன்றுமில்லார் போலப் பயனிரண்டும் இழத்தலின், 'இல்' என்றார். (5)

ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்குஒன்று ஈதல் இயல்பிலா தான். 1006

தான் துவ்வான் தக்காரக்கு ஒன்றுஈதலஇயலபிலாதான்-தான் நுகராயை அதன்மேலும் தகுதியுடையாரக்கு அவாவேண்டிய தொன்றனை ஈதலியற்கை இலனாயினான், பெரும செலவம்ஏதம- இரணடும் செயதற்கு இடனுடைத்தாய செலவததிறகு ஒரு நோய்.

தகுதி - தானம கோடறகு ஏறபுடைமை. ஏதம - ஆகுபெயர். நுகரப்படுதலும ஈயப்படுதலுமாகிய தொழிற்கு உரியதனை அன்றாக்கினமையின், 'நோய' என்றார. 'ஈதல இயலபிலாதானது பெருஞசெலவம் அவனுக்கு நடடல காததல முதலியவறறால துன்பமேயாம்' என்று உரைப்பாரும உளர.

இவை இரணடு பாடடானும் அவ் இருமையும உடன் கூறப்பட்டன. (6)

அற்றார்க்குஒன்று ஆற்றாதான் செல்வம் மிகுநலம் பெற்றாள் தமியள்மூத் தற்று. 1007

அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் - ஒருபொருளுமிலராயினாக்கு அவா வேணடியதொன்றனைக் கொடாதானது செலவம் கொன்னே கழிதல, மிகுநலம பெறறாள தமியள மூததறறு- பெண்டிரின் மிக்க நலததினைப பெறறாளொருததி கொடுப்பாரின்மையின் கொழுநன் இன்றித் தமியளாய மூதத தன்மைதது.

நலம்-வடிவின் நன்மையும குணததின் நன்மையும். இரண்டும ஒருங்கு பெறுதல அரிதாகலின, 'பெறறாள' என்றார. கொடுப்பாரும் கொழுநனுமேயனறித தானும் பயன் இழநது கழிநத குமரியோடு உவமை கூறினமையின், தானும் ஏறபானுமே யன்றிச் செலவமும் பயனிழந்து கழியும் என்பதாயிற்று. (7)

நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று. 1008

நச்சப்படாதவன் செல்வம் - வறியார்க்கு அணியளவிருந்தும் ஒன்றுங்கொடாமையின் அவரான் நச்சப்படாதவன் செல்வமெய்துதல், ஊர் நடுவுள நச்சுமரம் பழுத்ததற்று-ஊரிடைநிற்பதோர் நச்சுமரம் பழுத்தாற்போலும்.

'நடுஊர்' என்பது பின்முன்னுகத்தொக்க அரும்வேற்றுமைத தொகை. அண்மை உடைமைகளாற் பயனில்லை என்பதாம். (8)

அன்புஒரீஇத் தற்செற்று அறம்நோக்காது ஈட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர். 1009

அன்பு ஒரீஇ - ஒருவன் கொடாமைப்பொருட்டுச் சுற்றத்தார் கட்டார் கண் அன்பு செய்தலியொழிந்து, தன்செற்று - வேண்டுவன நுகராது தன்னைச்செறுத்து, அறம் நோக்காது - வறியார்க்கு ஈதல் முதலிய அறத்தை நினைப்பதம செய்யாது, ஈட்டிய ஒண் பொருள கொளவார் பிறர் - ஈட்டிய ஒளவிய பொருளைக்கொண்டு போய்ப் பயன்பெறுவார் பிறர்.

பயனுய அறனும இன்பமும் செய்துகொளளாதானுக்குப் பொருளாலுளளது ஈட்டல துன்பமே என்பது தோன்ற 'ஈட்டிய' என்றும், அவன்வழியினுளளாராக்கும உதவாது என்பது தோன்ற 'பிறர்' என்றும் கூறினார். (9)

சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனையது உடைத்து. 1010

சீர் உடைச் செல்வர் சிறுதுனி - புகழுடைத்தாய செல்வத நினையுடையவரது நிற்கும் காலம சிறிதாய வறுமை, மாரி வறங் கூர்ந்தனையது உடைத்து - உலகதனை யெலலாம் நிலைகிறுத்தும மேகம் வறுமை மிக்காறபோல்வதோர் இயலபினையுடைத்து.

துனி - வெறுப்பு, அதனைச் செய்தலால, துனி எனப்பட்டது. யாவாக்கும் பயன் பட்டார் அதனைன் வறியராயவழியும் அவ் வறுமை கடிதின் நீங்குதலின் பின்பும் செலவராய்ப் பயன்படுவா என்பது உவமையால் பெறப்பட்டது; படவே, நன்றியில்லாத செல்வம் எஞ்ஞான்றும் பயன்படாது என்பதாயிற்று. இதற்கு, சீர் உடைச்செல்வர் இரவலரோடு வெறுக்கும் நிலையில் வெறுப்பு 'மாரிவறங்கூர்ந்தனைய தன்மையை உடைத்து' என அதிகாரத தோடு பொருந்தாமை மேலும் ஓர்பொருள் தொடர்புபடாமல் உரைப்பாரும் உளர்.

இவை நான்கு பாட்டானும் அச் செல்வத்தது குற்றம் கூறப் பட்டது. (10)

102. நாண் உடைமை

அஃதாவது மேற்சொல்லிய சால்பு பண்பு முதலிய குணங்களான் உயர்ந்தோர் தமக்கு ஒவவாத கருமங்களில் நாணுதல உடையராந் தன்மை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

கருமத்தான் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற. 1011

நாணுக் கருமததால் நாணுதல-நன்மக்கள நாணுவது இழிந்த கருமங் காரணமாக நாணுதல, பிற திரு நுதல நலலவர் நாணு - அஃதன்றி மனமொழிமெயகளது ஒடுக்கததான் வருவனவோ வெனின், அவை அவரளவலல, அழகிய நுதலினையுடைய குலமகளிர நாண்கள.

'பிற குலமகளிர் நாண்' என்றதனான் ஏனையது நன்மக்கள நாண் என்பதும், 'நாணுகல' என்றதனால கருமததது இழிவும பெறறாம. 'திருநுதல் நலலவர்' என்பது புகழசசிக்குறிப்பு. ஏதுப் பன்மைபற்றி 'பிற' என்றார். இனி, 'அறறமமறறததல முதலியன பொதுமகளிர் நாணோடு ஒக்கும' என்று உரைப்பாரும் உளா, அவாக்கு நாண கேடு பயக்கும் என விலக்கப்பட்டமையானும், அவாபெயராற கூறப்படாமையானும் அஃது உரையன்மை அறிக.

இதனான் நாணினது இலக்கணம கூறப்பட்டது. (1)

ஊண்உடை எச்சம் உயிர்க்குஎல்லாம் வேறல்ல
நாண்உடைமை மாந்தர் சிறப்பு. 1012

ஊண் உடை எச்சம் உயிரக்கு எல்லாம் வேறு அல்ல - ஊணும உடையும் அவையொழிநதனவும மக்களுயிர்க்கெலலாம் பொது மாநதா சிறப்பு நாண் உடைமை - நன்மக்கட்குச் சிறப்பாவது நாணுடைமையே, அவையலல.

ஒழிநதன உறக்கமும அசசமும் காமமும். சிறப்பு - அவ் உயிரகளின் வேறுபாடு. 'அசசம' என்று பாடமோதுவாரும் உளா. (2)

ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண்என்னும்
நன்மை குறித்தது சால்பு. 1013

உயிர் எலலாம் ஊனைக்குறித்த - எலலா உயிர்களும் உடம்பினைத தமக்கு நிலைக்களனாகக்கொண்டு அதனைவிடா, சால்பு நாண் என்னும நன்மை குறித்தது - அதுபோலச் சால்பு நாண் என்னும் நன்மைக்குணத்தைத் தனக்கு நிலைக்களனாகக்கொண்டு அதனை விடாது.

உடம்பு என்பது சாதியொருமை. நன்மை - ஆகுபெயர். உயிர் உடம்போடு கூடியல்லது பயனெய்தாதவாறுபோலச் சால்பு நாணோடு கூடியல்லது பயன் எய்தாது என்பதாம். 'ஊணைக் குறித்த' என்று பாடம் ஓதுவாரும் உளர். (3)

அணியன்றே நாண்உடைமை சான்றோர்க்கு அஃதுஇன்றேல்
பிணியன்றே பீடு நடை. 1014

சான்றோர்க்கு நாண்உடைமை அணியன்றே - சான்றோர்க்கு நாண்உடைமை ஆபரணமாம், அஃது இன்றேல் பீடுநடை பிணியன்றே - அவ் ஆபரணம் இல்லையாயின் அவர் பெருமிதத்தையுடைய நடை கண்டார்க்குப் பிணியாம்.

அழகு செய்தலின் 'அணி' என்றும், பொறுத்தற்கு அருமையின் 'பிணி' என்றும் கூறினர். ஓகார இடைச்சொற்கள எதிர் மறைக்கண் வந்தன.

இவை மூன்று பாட்டானும் அதன் சிறப்புக் கூறப்பட்டது. ()

பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு. 1015

பிறர் பழியும் தம் பழியும் நாணுவார் - பிறர்க்கு வரும் பழியையும் தமக்கு வரும்பழியையும் ஒப்ப மதித்து நாணுவாரை, உலகு நாணுக்கு உறைபதி என்னும் - உலகத்தார் நாணுக்கு உறைவிடம் என்று சொலலுவர்.

ஒப்பமதித்தல - அதுவும தமக்கு வந்ததாகவே கருதுதல. அக் கருத்துடையார பெரியராகலின், அவரை உயர்ந்தோர் யாவரும் புகழுவர் என்பதாம்.

இதனுள் அதன் உடையாரது சிறப்புக் கூறப்பட்டது. (5)

நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர். 1016

மேலாயவர் - உயர்ந்தவர், வேலி நாண் கொளளது - தமக்கு ஏமமாக நாணினைக் கொள்வதன்றி, வியன் ஞாலம் பேணலர் - அகன்ற ஞாலத்தைக் கொளள விரும்பார்.

பழிபாவங்கள புகுதாமற்காத்தலின், 'வேலி' என்றார் நாணும் ஞாலமும் தம்முள மாறுயவழி அந்நாணினைக் கொளவதலலது அவைபுகுதும் நெறியாய ஞாலத்தினைக்கொளள விரும்பார் என்பதாம். மன்னும் ஓவும் அசை. 'நாணுடைய வேலியைப் பெற்றலது ஞாலம்பெற விரும்பார்' என்று உரைப்பாரும் உளர். (6)

நாணுஒல் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர். 1017

நாண் ஆள்பவர் - நாணினது சிறப்பு அறிந்து அதனை விடா தொழுகுவார், நாணால உயிரைத துறப்பர் - அநநாணும் உயிரும் தம்முள மாறாயவழி நாண்சிதையாமைப் பொருடடு உயிரை நீப் பர், உயிரப்பொருட்டு நாண் துறவார - உயிர் சிதையாமைப் பொருட்டு நாணினை நீக்கார்.

உயிரினும் நாண் சிறநததென்பதாம்.

இவை இரண்டு பாடடானும அவாசெயல் கூறப்பட்டது. (7)

பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து. 1018

பிறர் நாணத்தக்கது தான் நாணான் ஆயின்-கேட்டாரும் கண் டாரும நாணததக்க பழியை ஒருவன் தான் நாணாது செய்யுமா யின், அறம நாணததக்கது உடைதது - அந நாணாமை அவனை அறம விடடு நீங்கத் தக்க குறறததினை யுடைத்து.

தான் எனச செயவானைப் பிரிக்கின்றா ஆகலின் 'பிறர்' என்றார். நாணோடு இயைபு இலலாதானை அறமசாராது என்பதாம்.

குலம்சுடும் கொள்கை பிழைப்பின் நலம்சுடும்
நாண்இன்மை நின்றக் கடை. 1019

கொளகை பிழைப்பின் குலம் சுடும் - ஒருவனுக்கு ஒழுக்கம் பிழைக்குமாயின் அப பிழைபபு அவன் குடிப்பிறப்பொன்றனை யும் கெடுககும, நாணின்மை நின்றக்கடை நலம சுடும - ஒருவன் மாடடு நாணின்மை நின்றவழி அநநிலை அவன் நலம யாவறறை யும கெடுக்கும.

நிறறல. ஒருபொழுதும நீஙகாமை. நலம் சாதிபொருமை யாகலின், பிறப்பு, கலவி, குணம, செயல, இனம் என்றிவறறான் வநதனவெலலாம கொளளபபடும. ஒழுக்க அழிவினும நாண் அழிவு இறபபத தீது என்பதாம. (9)

நாண்அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை
நாணால உயிர்மருட்டி யற்று. 1020

அகதது நாண் இலலார் இயக்கம் - தம் மனத்தின்கண் நாண் இலலாத மக்கள உயிருடையாரபோன்று இயங்குகினற இயக்கம் மரப்பாவை நாணால உயிர மருடடியறறு-மரததாறசெயத பாவை இயநதிரக கயிறறினானாய தன் இயக்கததால உயிருடைததாக மயக்கினாறபோலும்.

கருவியே கருததாவாயிறறு. நாணிலலாத மக்கள இயக்கம் நாணுடைய பாவை இயக்கமபோலவதலலது உயிரியக்கம அன்று எனபதாம.

இவை மூன்று பாட்டானும நாணில்லாரது இழிவு கூறப் பட்டது. (10)

103. குடி செயல் வகை

அஃதாவது ஒருவன் தான் பிறந்த குடியை உயரச் செய்தலின் திறம். இது தாழ்வின்கண் நாணுதலுடையார்க்கு உளதாவது ஆகலின் நாணுடைமையின் பின்வைக்கப் பட்டது.

கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும் பெருமையின் பீடுடையது இல். 1021

கருமம் செயக் கைதூவேன் என்னும் பெருமையின் - தன் குடி செய்தற் பொருட்டுத தொடங்கிய கருமம் முடியாமையின் எண்ணிய கருமம் செய்தற்கு யான் கையொழியேன் என்னும் ஆள்வினைப்பெருமைபோல, ஒருவன் பீடு உடையது இல் - ஒருவனுக்கு மேம்பாடுடைய பெருமை பிறிது இல்லை.

'குடிசெயற்கு' என்பது அதிகாரத்தான் வந்தது. பல வகைத்தாய கருமச்செயலாற் செலவமும் புகழும் எய்திக் குடிஉயரும் ஆகலின், 'பீடுடையது இல்' என்றார். குடிசெய்தற் கருமமே நடத்தலால் 'தன்' கருமஞ் செய்ய என்றும் 'பிறர்' கருமஞ செய்ய என்றும் உரைப்பாரும் உளர். தன் கருமமும் அதுவேயாகலானும், பிறர் ஏவல் செய்தல் தலைமையன்மையானும், அவை உரையன்மை அறிக. (1)

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின் நீள்வினையான் நீளும் குடி. 1022

ஆளவினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீளவினையான் - முயற்சியும் நிறைந்த அறிவும் என்று சொல்லப்பட்ட இரண்டினையுமுடைய இடையறாத கருமச்செயலால், குடி நீளும் - ஒருவன் குடி உயரும்.

நிறைதல் - இயற்கையறிவு செயற்கையறிவோடு கூடி நிரம்புதல். ஆளவினை-மடி புகுதாமற்பொருட்டு. ஆன்ற அறிவு - உயர்தற்கு ஏற்ற செயலெலாம அவை முடிக்குந்திறமும் பிழையாமல எண்ணுதற்பொருட்டு.

இவை இரண்டு பாட்டானும் அச் செயற்குக் காரணம் கூறப்பட்டது. (2)

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம் மடிதற்றுத் தான்முந் துறும். 1023

குடி செய்வல் என்னும் ஒருவற்கு - என் குடியினை உயரச் செய்யக் கடவேன் என்றுகொண்டு அதற்கு ஏற்ற கருமங்களின் முயலும் ஒருவனுக்கு, தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும் - தெய்வம் ஆடையைத் தற்றுக்கொண்டு தான் முந்துற்று நிற்கும்.

முயற்சியை அதன் காரணத்தால் கூறினர். தற்றுதல் இறுக உடுத்தல். முன் நடப்பார்செயல் நியதிமேல் ஏறறப்பட்டது. (3)

சூழாமல் தானே முடிவுஎய்தும் தங்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு. 1024

தம் குடியைத் தாழாது உஞற்றுபவர்க்கு–தம குடிக்காம் வினையை விரைந்து முயலவார்க்கு, சூழாமல தானே முடிவெய்தும் – அவ்வினை முடிக்குக் நிறம் அவர் சூழவேண்டாமல தானே முடிவெயதும்.

குடி-ஆருபெயர். தெய்வம் முந்துறுதலாற் பயன்கூறியவாறு.

இவை இரண்டு பாட்டானும் அதற்குத் தெய்வம் துணையாதல் கூறப்பட்டது. (4)

குற்றம் இலனுய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. 1025

குற்றம் இலனுய்க் குடி செய்து வாழ்வானை - குற்றமாயின செய்யாது தன் குடியை உயரச் செய்தொழுகுவானை, சுற்றமாச் சுற்றும் உலகு - அவனுக்குச் சுற்றமாகவேண்டித் தாமே சென்று சூழவர் உலகத்தார்.

குற்றமாயின அறநீகிடக்கு மறுதலையாய செயல்கள. தாமும் பயன் எயதல் நோக்கி யாவரும் சென்று சார்வர் என்பதாம். (5)

நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல். 1026

ஒருவறகு நல்லாண்மை என்பது – ஒருவனுக்கு நல்லாண்மை என்று உயாததச் சொல்லப்படுவது, தான்பிறநத இல்லாண்மை ஆக்கிக்கொளல - தான் பிறநத குடியினையாளுந் தன்மையைத தனக்குளதாக்கிக் கோடல.

போாததொழிலின் நீக்குதற்கு 'நலலாண்மை' என விசேடித் தார். குடியினையாளுந தன்மை - குடியினுளளாரை உயரச் செய்து தன்வழிப்படுததல். அதனைசசெய்து கோடல நல்லாண் மையாமாறு வருகின்ற பாட்டால பெறப்படும். (6)

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. 1027

அமரகத்து வன்கண்ணா போல - களத்தின்கண் சென்றார் பலராயினும் போர்தாக்குதல வன்கண்ணர்மேலதானுற்போல, தமரகதது பொறை ஆற்றுவார் மேற்றே - குடியின்கண் பிறந தார் பலராயினும் அதன் பாரம் பொறுததல் அது வல்லார் மேலதாம்.

பொருட்கு ஒக்க வேண்டும் சொற்கள் உவமைக்கண் வருவிக்கப்பட்டன. நன்கு மதிக்கப்படுவார் அவரே என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் அதுசெய்வார் எயதுஞ சிறப்புக் கூறப்பட்டது (7)

குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும் 1028

மடி செயது மானம் கருதக் கெடும் - தம் குடியினை உயரச் செய்வார அச செயலையே நோக்காது காலததை நோக்கி மடியினைச் செயதுகொண்டு, மானததையும் கருதுவராயின் குடி கெடும, குடி செய்வாரக்குப் பருவம இல்லை - ஆகலான் அவர்க்குக் காலநியதி இலலை.

காலததை நோக்கி மடி செய்தல் - வெயில் மழை பனி என்பன உடைமை நோக்கிப் பின்னாச செய்தும எனறு ஒழிநதிருததல. மானம் கருதுதல. 'இக்குடியிலுளளார யாவரும் இனபமுற இக்காலததுத துன்பமுறுவேன் யானோ' என்று உட்கோடல், மேல "இகல் வெலலும் வேநதர்க்கு வேண்டும் பொழுது" (குறள. 481) என்றது உடகொணடு இவர்க்கும் வேண்டுமோ? என்று கருதினும் அது கருதற்க என்று மறுததவாறு. (8)

இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு. 1029

குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் உடம்பு - மூவகைத் துன்பமும் உறற பாலதாய தன் குடியை அவை உறாமறகாக்க முயல்வானது உடமபு, இடுமபைக்கே கொளகலஙகொல - அம் முயற்சித் துன்பததிற்கே கொளகலமாம் அததுணையோ? அஃது ஒழிந்து இன்பததிற்கு ஆதல் இல்லையோ?

"உறைப்பெயல ஓலை போல, மறைக்குவன் பெரும நிற குறிதது வருவேலே" (புறநா. 290) என்புழியும மறைததல இப்பொருட்டாயிற்று. என் குடிமுழுதும் இன்புற்றுயரவே நான் இருமையும் எய்துதலான் இம் மெயவருதத மாததிரம் எனக்கு நன்று என்று முயலும் அறிவுடையான் அஃதொருஞான்றும் ஒழியாமை நோக்கி, 'இடும்பைக்கே கொளகலங் கொல்லோ' என்றார். இது குறிப்பு மொழி.

இவை இரண்டு பாட்டானும் அவர் அது செய்யும் இயல்பு கூறப்பட்டது. (9)

இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்துஊன்றும்
நல்லாள் இலாத குடி. 1030

இடுக்கண் கால் கொன்றிட வீழும் - துன்பமாகிய நவியம் புகுந்து தன்முதலை வெட்டிச் சாய்க்க ஒருபற்றின்றி வீழா நிற்கும்,

அடுத்து ஊன்றும் நல்லாள இலாத குடி - அக்காலத்துப் பற்றுவன கொடுத்துத் தாங்கவல்ல நல்ல ஆண் மகன் பிறவாத குடியாகிய மரம்.

முதல் - அதன் வழிக்கு உரியார். வளர்ப்பாரைப் பெற்றுழி வளர்ந்து பயன்படுதலும் அலலாவழிக் கெடுதலும் உடைமையின், மரமாக்கினர், "தூங்குசிறை வாவலுறை தொல் மரக்கள அன்ன, ஓங்கு குலம் மையஅத னுட்பிறந்த வீரர், தாங்கலகடன்" (சீவக. காகதருவ. 6) என்ருர் பிறரும். இது குறிப்பு உருவகம்.

இதனுன் அவர் இல்லாத குடிக்கு உளதாம குறறம் கூறப் பட்டது. (10)

104. உழவு

அஃதாவது சிறுபான்மை வாணிகாக்கும பெரும் பான்மை வேளாளாக்கும உரிததாய உழுதல தொழில். செய்விக்குங்கால் ஏஜ மியார்க்கும உரித்து. இது, மேல் குடி உயாதற்கு ஏது என்ற ஆளவினவகையாகலின், குடிசெயல வகையின் பின் வைக்கப்பட்டது.

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனுல்
உழந்தும் உழவே தலை. 1031

சுழன்றும ஏர்ப்பினனது உலகம - உழுதலான் வரும மெய் வருததம நோக்கிப் பிறதொழில்களீச செயது திரிததும், முடிவில ஏருடையார் வழியதாயிறறு உலகம, அதனுல உழுதலும தலை உழவே - அதலான் எலலாவருதத முறறும, தலியாய தொழில் உழவே.

ஏர்-ஆகுபெயர். பிறதொழில்களால் பொருளெயகிய வழியும உணவின் பொருட்டு உழுவாகண செலலவேண்டுதலின் 'சுழன் றும ஏர்ப்பின்னது உலகம்' என்றும, வருதலில வேணும் பிற தொழில்கள கடை என்பது போதர, 'உழுதலும உழவே தலை' என்றும கூறினர.

இதனுன் உழவினது சிறப்புக் கூறபபட்டது. (1)

உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றுது
எழுவாரை எல்லாம் பொறுத்தது. 1032

அஃது ஆற்றுது எழுவாரை எலலாம பொறுதது - அவ் உழுதலீச் செயயமாடடாது பிறதொழிலகள மேலசெலவார் யாவரை யும தாங்குதலால, உழுவார் உலகததாாக்கு ஆணி - அது வல்லார் உலகததாராகிய தோக்கு அச்சாணியாவர.

"காடுகொன்று நாடாக்கிக் குளதெதாட்டு" (பட்டினப்.) என் றும் போல உழுவார் என்றது உழுவிப்பார்மேலுஞ் செலலும். 'உலகதீதார்' என்றது ஈண்டு அவரையொழிகதாரை. கலங்காமலஃ நிறுததற்கண் ஆணிபோறலின், 'ஆணி' என்ருர்.

பொறுத்தலான் என்பது நிரிக்து நின்றது. ஏக தேச உருவகம். 'அஃது ஆற்றார் தொழுவாரே எல்லாம் பொறுதது' என்று பாடம் ஓதி, 'அதுமாட்டாதார் புரப்பார் செய்யும் பரிபவமெல்லாம் பொறுதது அவரைத் தொழுவாரே யாவர்' என்று உரைப்பாரும் உளர். (2)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். 1033

உழுது உண்டு வாழவாரே வாழவா - யாவரும் உண்ணும் வகை உழுதலீசசெயது அதனால தாமும உணடு வாழகின்றாரே தமக்குரியராய் வாழகின்றவா, மற்றெலலாம தொழுது உண்டு பின்செல்பவர் - மறறையாரெலலாம் பிறரைத தொழுது அதனால் தாம் உண்டு அவரைப் பின்செலகின்றவர்.

மற்று என்பது வழக்குப்பற்றி வநதது. தாமும் மக்கட் பிறப்பினராய வைகதுப் பிறரைத தொழுது அவா சில கொடுப்பத தம் உயிரோம்பி அவர்பின் செலவா தமக்குரியரல்லர் என்பது கருதது. (3)

பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர். 1034

அலகு உடை நீழலவர் - உழுதல தொழிலான் நெல்லீனியுடையராய தண்ணளியுடையோர, பலகுடை நீழலும் தம்குடைக் கீழ்க் காண்பர் - பலவேநதர் குடை நிழலதாய மண் முழுதினையும் தம் வேநதர்குடைக்கீழே காணபர்.

அலகு - கதிர், அஃது ஈண்டு ஆகுபெயராய் நெலமேல தாயிற்று. 'உடைய' என்பது குறைத்து நின்றது. நீழலபோறலின், நீழல் எனப்பட்டது. நீழலவர் என்றது இரப்போர்க்கெலலாம் ஈதல் நோக்கி, ஒற்றுமைபறறி 'தங்குடை' என்றார். குடை நீழல் என்பதூஉம் ஆகுபெயர், "ஊன்றுசால மருங்கின் ஈன்றதன் பயனே" (புறநா. 35) என்றதனால தம் அரசனுக்குக் கொற்றம் பெருக்கி மண் முழுதும் அவனதாகக் கணடிருபபர் என்பதாம், "இரப்போர் சுற்றமும் புரப்போ கொற்றமும உழவிடை விளைப்போர்" (சிலப். நாடு காண். 149) என்றார் பிறரும். (4)

இரவார் இரப்பார்க்கு ஒன்றுஈவர் கரவாது
கைசெய்தூண் மாலீ யவர் 1035

கைசெய்து ஊண் மாலீயவர் இரவார்-தம் கையால உழுது உண்டலீ இயல்பாகவுடையார் பிறரைத் தாம் இரவார். இரப்பார்க்கு ஒன்று கரவாது ஈவர்-தம்மை இரப்பார்க்கு அவர்வேண்டியதொன்றனைக் கரவாது கொடுப்பர்.

'செய்து' என்பதற்கு உழுதலை எனவருவிக்க. 'கைசெய்தூண் மாலையவர்' என்பது ஒருஞான்றும் அழிவில்லாதசெலவமுடையர் என்னும் ஏதுவை உட்கொண்டுநின்றது. (5)

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம் என்பார்க்கு நிலை. 1036

உழவினார் கை மடங்கின்–உழுதலையுடையார் கை அதனைச் செய்யாது மடங்குமாயின், விழைவதூஉம விட்டேம என்பார்க்கு நிலை இலலை–யாவரும விழையும உணவும் யாம துறநதேம் என பார்க்கு அவ் அறததின்கண நிற்றலும உளவாகா.

உமமை இறுதிக்கண்ணும் வநது இயைநதது. உணவின்மையால, தாம் உணடலும் இலலறஞ செய்தலும யாவாக்கும் இல்லையாயின. அவர் உறுப்புமாததிரமாய கை வாளாவிருப்பின் உலகதது இம்மை மறுமை வீடு என்னும் பயன்கள நிகழா என்பதாம். 'ஒன்றனை மனததால விழைதலும ஒழிநதேம் எனபாாக்கு' என உரைப்பாரும உளா.

இவை ஐநது பாட்டானும் அதனைச் செய்வாரது சிறப்புக் கூறப்பட்டது. (6)

தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும். 1037

தொடிப்புழுதி கஃசா உணக்கின்–ஒருநிலததினை உழுதவன் ஒருபலப் புழுதி கஃசாமவண்ணம அதனைக் காயவிடுவானாயின், பிடிதது எருவும் வேணடாது சாலப் படும்–அதன்கண்செய்த பயிா ஒருபிடியின்கண் அடங்கிய எருவும் இடவேண்டாமல் பணைதது விளையும.

பிடிதது பிடியின்கண்ணது. 'பிடிதத' என்பதன்விகாரம் என்பாரும உளா. 'வேணடாமல, சான்று' என்பன திரிநது நின்றன. (7)

ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றுஅதன் காப்பு. 1038

ஏரினும் எரு இடுதல் நன்று–அப் பயிாக்கு அவ் உழுதலினும் எருப்பெய்தல் நன்று, கட்டபின் அதன்காப்பு நீரினும் நன்று–இவ் இரண்டும செயது களைகட்டால அதனைக் காததல அதறகு நீர்கால யாத்தலினும் நனறு.

ஏா–ஆகுபெயா. காத்தல பட்டிமுதலியவறறான் அழிவெய்தாமல் காததல. உழுதல, எருபபெயதல, களைகட்டல, நீாகால் யாததல, காததல என்றுஇமமுறையவாய இவ் ஐந்தும் வேண்டும் என்பதாம. (8)

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும். 1039

கிழவன் செல்லான் இருப்பின்–அக் நிலத்திற்குரியவன் அதன்கண் நாளதோறும் சென்று பார்த்து அதற்கான செய்யாது மடிந்திருக்குமாயின், நிலம் இல்லாளின் புலந்து ஊடிவிடும்–அஃது அவன் இல்லாளைபோலத் தன்னுளளே வெறுத்துப் பின் அவனோடு ஊடிவிடும்.

செலவுதல்–ஆகுபெயர். பிறரை ஏவியிராது தானேசெறல் வேண்டும் என்பது போதர, 'கிழவன்' என்றார். தன் கண்சென்று வேண்டுவன செய்யாது வேறிடத்திருந்த வழி மனையாள ஊடுமாறு போல என்றது அவன் போகம இழத்தல் கோக்கி.

இவைமூன்று பாட்டானும் அதுசெய்யுமாறு கூறப்பட்டது.(9)

இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும் 1040

இலம் என்று அசைஇ இருப்பாரைக்காணின்–யாம் வறியேம் என்று சொலலி மடிந்திருப்பாரைக் கண்டால, நிலம் என்னும் நல்லாள நகும் - நிலமகள என்று உயர்ததுச்சொல்லப்படுகின்ற நல்லாள தன்னுளளே நகாநிற்கும்.

உழுதல் முதலிய செயவாா யாவர்க்கும் செல்வங்கொடுத்து வருகின்றவாறு பற்றி 'நல்லாள' என்றும், அதுகண்டுவைத்தும் அதுசெய்யாது வறுமையுறுகின்ற பேதைமைபற்றி, 'நகும்' என்றுங்கூறினர். 'இரப்பாரை' என்று பாடம ஓதுவாரும் உளர்.

இதனால் அதுசெய்யாத வழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது. வருகின்ற அதிகாரமுறைமைக்குக் காரணமும இது. (10)

106. நல்குரவு

அஃதாவது நுகரப்படுவனயாவும் இல்லாமை.

இன்மையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின்
இன்மையே இன்னா தது. 1041

இன்மையின் இன்னாதது யாது எனின் - ஒருவனுக்கு வறுமை போல இன்னாதது யாது என்று வினவின், இன்மையின் இன்னா தன இன்மையே - வறுமைபோல இன்னாதது வறுமையே, பிறி திலை.

இன்னாதது: துன்பஞ்செய்வது. ஒப்பது இல்லை எனவே, மிக்கது இன்மை சொலல வேண்டாவாயிற்று. (1)

இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும். 1042

இன்மை என ஒருபாவி - வறுமை என்று சொல்லப்படுவதொரு பாவி, மறுமையும் இமமையும இன்றி வரும - ஒருவனுழை வருங்கால அவனுக்கு மறுமையின்பமும இமமையின்பமும் இலலையாக வரும.

'இன்மையென ஒருபாவி' என்பதற்கு மேல "அழுக்காறென ஒருபாவி" (குறள. 16[illegible]) என்புழி உரைததாங்கு உரைக்க. மறுமை இமமை என்பன ஆகுபெயர். ஈயாமையானும துவ்வாமையானும் அவை இலவாயின. 'இன்றிவிடும' என்று பாடம ஓதிப் 'பாவியால' என விரிததுரைப்பாரும் உளர். (2)

தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும் நசை. 1043

நலகுரவு என்னும நசை - நலகுரவு என்று சொலலப்படும் ஆசை, தொல வரவும தோலும தொகையாகக் கெடுக்கும் - தன்னால் பறறப்பட்டாருடைய பழைய குடிவரவினையும அதறகு ஏறற சொலலினையும் ஒருங்கே கெடுககும.

நசையில வழி நல்குரவும இலலையாகலின் நலகுரவையே நசையாக்கி, அஃது அக் குடியின் தொல்லோரக்கு இலலாத இழி தொழிலகளையும இளிவநத சொறகளையும உளவாக்கலான் அவ் இரண்டனையும் ஒருங்கு கெடுக்கும் என்றார் "குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம கொலலும" (மணி. 11, 76) என்றார பிறரும். தோலாவது "இழுமென் மொழியால விழுமியது நுவறல"(தொல். பொருள. செயயு. 239) என்றார தொலகாப்பியனாரும. இதறகு 'உடம்பு' என்று உரைப்பாரும உளர, அஃது அதறகுப் பெயராயினும் உடமபு கெடுக்கும என்றறகு ஓர பொருட சிறபபு இலலாமை அறிக. (3)

இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறககும் சோர்வு தரும் 1044

இறபிறநதார் கண்ணேயும் - இளிவநத சொறபிறவாத குடிப்பிறநதார மாடடேயும, இளிவநத சொறபிறக்கும சோர்வு இன்மை தரும் - அது பிறததறகு ஏதுவாகிய சோரவினை நலகுரவு உணடாக்கும.

சிறப்பு உம்மை அவர்மாட்டு அது பிறவாமை தோன்ற நின்றது. இளிவநத சொல - இளிவருதறகு ஏதுவாகிய சொல. அஃதாவது எமக்கு ஈயவேண்டும என்றல. சோரவு-தாம உறுகின்ற துன்பம மிகுதிபற்றி ஒரோவழித தம் பிறபபினை மறநது அது சொல்லுவதாக நினைததல. (4)

நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும. 1045

நல்குரவு என்னும் இடும்பையுள் - நல்குரவு என்று சொல்லப் படும் துன்பம் ஒன்றனுளளே, பல் துன்பங்கள சென்றுபடும் - பலதுன் பங்களும் வந்து விளையும்.

சூரை - இசைநிறை. செலவு - விரைவின் கண் வந்தது. துன்பமுந்தானும் உடனே நிகழுதலின் நல்குரவைத் துன்பமாக்கி யும், அத துன் பமடியாகச் செல்வர் கடை நோக்கிச் சேறல் துன்ப மும், அவரைக் காண்டல துன் பமும், கண்டால் மறுதது முகி நிகழும் துன்பமும், மறுவழியும் அவர் கொடுத்தது வாங்கல் துன்பமும், அதுகொடுவாது நுகர்வன கூட்டல் துன்பமும் முதலாயின நாள தோறும் வேறுவேறாக வருதலின் எலலாத துன்பங்களும் உள வாம் என்றும் கூறினர்.

இவை ஐந்து பாட்டானும் நல்குரவின் கொடுமை கூறப் பட்டது. (5)

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார் சொற்பொருள் சோர்வு படும். 1046

நற்பொருள நன்கு உணர்ந்து சொல்லினும் - மெய்ந்நூற் பொருளாத தெளிய அறிநது சொன்ன ராயினும், நலகூர்ந்தார் சொற் பொருள சோவு படும் - நலகூர்ந்தா சொல்லுஞ்சொல பொருளின்மையைத தலைப்படும்.

பொருளின்மையைத தலைப்படுதலாவது 'யாம் இவர் சொல் லியன விரும்பிக் கேட்குமாயின் கண்ணோடி இவர் உறுகின்ற குறைமுடிக்க வேண்டும்' என்று அஞ்சி யாவரும கேளாமையிற் பயனில்சொலலாய் முடிதல். கலவியும் பயன்படாது என்பதாம்.()

அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும் பிறன்போல நோக்கப் படும். 1047

அறம் சாரா நல்குரவு–அறத்தோடு இயைபில்லாத நல்குர வுடையான், ஈன்ற தாயானும் பிறன்போல நோக்கப்படும்-தன்னை ஈன்ற தாயானும் பிறனைக் கருதுமாறு போலக் கருதி நோக்கப் படும்.

அறததோடு கூடாமை· காரண காரியங்களுள ஒன்றலும் இயையாமை. நல்குரவு - ஆகுபெயர். சிறப்பு உம்மை அவளது இயற்கையன்புடைமை விளக்கி நின்றது. கொளவதின்றுதலே யன்றிக் கொடுப்பது உண்டாதலும் உடைமையின், அது நோக் கிச் சுற்றதாதார் யாவரும் துறப்பர் என்பதாம. (7)

இன்றும் வருவது கொல்லோ நெருநலும் கொன்றது போலும் நிரப்பு 1048

நெருநலும் கொன்றதுபோலும் நிரப்பு–நெருநற்றும் கொன் றது போன்று எனக்கு இன்னதவற்றைச் செய்த நல்குரவு, இன்

றும் வருவது கொல்லோ - இன்றும் என்பால் வரக்கடவதோ, வந்தால் இனி யாது செய்வேன்?

அவ் இன்னாதனவாவன–மேற் சொல்லிய (குறள். 1045) துன்பங்கள. நெருநல் மிக வருந்தித தன் வயிறு நிறைத்தானொருவன் கூற்று. (8)

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது. 1049

நெருப்பினுள துஞ்சலும் ஆகும் - மந்திரம் மருந்துகளான் ஒருவனுக்கு நெருப்பிடையே கிடந்து உறங்கலும் ஆம், நிரப்பினுள் யாதொன்றும் கண்பாடு அரிது - நிரப்புவந்துழி யாதொன்றானும் உறக்கம் இலலை.

நெருப்பினும் நிரப்புக் கொடிது என்றவாறாயிற்று. இதுவும் அவன் கூற்று.

இவை நான்கு பாட்டானும் நலகூாநதார்க்கு உளதாம் குற்றம் கூறபபட்டது. (9)

துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று. 1050

துப்புரவு இலலார துவரத துறவாமை-நுகரப்படும் பொருளகளிலலாதார தமமாற செயற்பாலது முறறத துறததலேயாகவும் அது செய்யாதொழிதல, உப்பிறகும காடிக்கும கூற்று - பிறர் இலலினுளவாய உப்பிற்கும காடிக்கும் கூறறும்.

மானம அழியாமையின் செயற்பாலது அதுவேயாயிற்று. முற்றத துறததல சுறறநதானே விடடமையின் ஒருவாற்றால் துறநதாராயினார நின்ற தம உடமபினையும் துறததல். அது செய்யாது கொண்டிருததல இரண்டனையும் மாளப்பண்ணுதலின், அதனை அவறறிற்குக் கூறறு என்றார. இனி, 'முற்றத்துறத்தலாவது துப்புரவிலலாமையின் ஒருவாற்றால் துறந்தாராயினார் பின் அவற்றை மனததால் துறவாமை' என்று உரைப்பாரும் உளர்.

இதனான் அஃது உளதாயவழிச் செய்வது கூறப்பட்டது. (10)

106. இரவு

இனி 'மானந தீரா இரவு இரவாமையோடு ஒத்தலின், அதனானும வீடெய்தற் பயதததாய உடம்பு ஓம்பப்படும்' என்னும் அறநூல் வழக்குப்பற்றி மேல எய்திய துவரத்துறத்தல் விலக்குதற்பொருட்டு 'இரவு' கூறுகின்றார். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம்பழி அன்று. 1051

இரத்தக்கார்க் காணின் இரக்க - நல்கூர்ந்தார் இரத்தற்கு ஏற்புடையாரைக் காணில், அவர்மாட்டு இரக்க; கரப்பின் அவர் பழி தம் பழி அன்று - இரந்தால அவர் கரந்தாராயின் அவர்க்குப் பழியாவதல்லது தமக்குப் பழியாகாமையான்.

'இரவு' என்னும் முதனிலித்தொழிற்பெயரது இறுதிக்கண் நான்கன் உருபு விகாரத்தால் தொக்கது. இரத்தற்கு ஏற்புடைய ராவார் உரையாமைமுன் உணரும் ஒண்மையுடையராய் மாற்றது ஈவார். அவர் உலகதது அரியராகலின் 'காணின்' என்றும், அவர் மாட்டு இரந்தார்க்கு இரவான்வரும் இழிவு இன்மையின், 'இரக்க' என்றும், அவர் ஈதலின் குறைகாட்டாமையின 'கரப்பின்' என்றும், காட்டுவாராயின் அப் பழி கூவெளாறுவைக்கண் மாசு போல அவர்கண் கடிதுசேறலின் 'அவர் பழி' என்றும, ஏறபிலார் மாட்டு இரவன்மையின் 'தமபழியன்று' என்றும கூறினார். (1)

இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை
துன்பம் உருஅ வரின். 1052

ஒருவற்கு இரத்தல் இன்பம் - ஒருவறகு இரததல் தானும் இன்பத்திற்கு ஏதுவாம், இரந்தவை துன்பம உரு வரின் - இரந்த பொருளகள ஈவாரது உணர்வு உடைமையால தான் துன்புறுமல வருமாயின்.

இன்பம் - ஆகுபெயர். 'உருமல' என்பது கலடக்குறைநது நின்றது. துன்பம் - சாதியொருமைப்பெயர். அவையாவன ஈவார்கண் காலமும் இடனும் அறிநது சேறலும, அவர் குறிப்பறி தலும், அவரைத் தம் வயத்தராக்கலும், அவா மன்மெகிழவன நாடிச்சொல்லலும் முதலியவற்றுள் வருவனவும், மறுததுழி வருவனவும் ஆம். அவையுறுமல வருதலாவது அவர் முன்னுணர்ந்து ஈயக்கோடல. 'இரந்தவர் துன்பமுறுவரின்' என்ற பாடம் ஓதி, இரக்கப்பட்டவர் பொருளின்மை முதலியவறறுல துன்புறுது எதிர் வந்து ஈவராயின் என்று உரைப்பாரும உளர்.

இவை இரண்டு பாட்டானும் நல்குரவான் உயிர் நீங்கும் எல்லீலக்கண் இளிவில்லா இரவு விலக்கப்படாது என்பது கூறப் பட்டது. (2)

கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்நின்று
இரப்பும்ஓர் ஏஎர் உடைத்து. 1053

கரப்பிலா நெஞ்சின் கடன் அறிவார் முன் நின்று இரப்பும் - கரத்தல இல்லாத நெஞ்சினையுடைய மானம் அறிவார்முன்னர் நின்று அவர்மாட்டு ஒன்று இரததலும், ஓர் ஏஎர் உடைதது - ஈல கூர்ந்தார்க்கு ஓர் அழகு உடைதது.

"சிறியசுருக்கதுவேண்டும் உயர்வு" (குறள. 963) என்ற தனல், அவர்க்கு அது கடன் எனப்பட்டது. அதனீன அறிதல் சொல்லுதலுற்று உரைக்கலாகாமைக்கு ஏதுவாய அதன் இயல்

பினை அறிதல். அவ் அறிவுடையார்க்கு முன் நிற்றல் மாத்திரமே அமைதலின், 'முன் நின்று' என்றும், சொல்லுதலான் வரும் சிறுமை எய்தாமையின், 'ஓர் ஏஎருடைத்து' என்றும் கூறினர். உம்மை அதன் இழிபு விளக்கிநின்றது. (3)

இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு. 1054

கரத்தல் கனவிலும் தேற்றாதார்மாட்டு இரத்தலும் - தமக்குள ளது கரத்தலேலிக் கனவின்கண்ணும் அறியாதார்மாட்டுச் சென்று ஒன்றினை இரத்தலும், ஈதலே போலும் - வறியார்க்கு ஈதலே போலும்.

உம்மை - ஈண்டும் அவ்வாறு நின்றது. தான் புகழ்பயவாதா யினும் முன்னுளதாய புகழ கெட வாராமையின் 'ஈதலேபோலும்' என்றார். ஏகாரம் - பிறறசை. (4)

கரப்பிலார் வையகத்து உண்மையான் கண்ணின்று
இரப்பவர் மேற்கொள் வது. 1055

கண்ணின்று இரப்பவர மேற்கொளவது - சொல்லுதன் மாட்டாது முன் நிற்றல மாத்திரதான் இரப்பார உயிரோம்பற் பொருட்டு அதனை மேற்கொண்டு போதுகின்றது, கரப்பு இலார் வையகதது உண்மையான் - அவர்க்கு உளளது கரவாது கொடுப் பார் சிலர் உலகதது உளராய தன்மையானே, பிறிதொன்றன் அன்று.

அவர் இலலியாயின், மானம் நீக்க மாட்டாமையின் உயிர் நீப்பர் என்பதாம். (5)

கரப்புஇடும்பை இல்லாரைக் காணின் நிரப்புஇடுமபை
எல்லாம் ஒருங்கு கெடும். 1056

கரப்பு இடும்பை இல்லாரைக் காணின் - உளளது கரதத லாகிய நோயிலலாரைக் கண்டால, நிரப்பு இடும்பை எலலாம் ஒருங்கு கெடும - மானமவிடாது இரப்பாரக்கு நிரப்பான் வரும் துன்பங்களெலலாம சேரக்கெடும.

கரததல - ஒருவற்கு வேண்டுவதொன்றன்மையின் அதனை 'நோய்' என்றும், அஃது இலலாத இரக்கததக்காரைக் கண்ட பொழுதே அவர் கழிஉவகையராவா ஆகலின் 'எலலாம் ஒருங்கு கெடும்' என்றும் கூறினர். இடுமபை ஆகுபெயர். 'முழுதும் கெடும்' என்று பாடம் ஓதி, 'எஞசாமற் கெடும்' என்று உரைப் பாரும் உளர. (6)

இகழ்ந்துள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்பது உடைத்து. 1057

இகழ்ந்து எள்ளாது ஈவாரைக் காணின்–தம்மை அவமதித்து இழிவு சொல்லாது பொருளகொடுப்பாரைக் கண்டால், உள்ளம் மகிழ்ந்து உளளுள் உவப்பது உடைதது–அவ் இரப்பாரது உளளம் மகிழ்நது உளளுளளே உவக்கும் தன்மையுடைதது.

இகழநது எளளாது எனவே, நன்கு மதிததலும் இனியவை கூறலும் பெறுதலும். நிரப்பு இடும்பை கெடுதலளவேயன்றி ஐம்புலன்களாலும் பேரின்பம்எய்திஞராகக்கருதலான், 'உளளுள உவப்பதுஉடைத்து' என்ருர்.

இவை ஐநது பாட்டாலும் அவ் இரதத்தக்காரது இயல்பு கூறப்பட்டது. (7)

இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம் மரப்பாவை சென்றுவந் தற்று. 1058

இரப்பார் இலலாயின்–வறுமையுற்று இரப்பார இலலையாயின், ஈர்ங்கண்மா ஞாலம்–குளிர்ந்த இடத்தையுடைய பெரிய ஞாலத்துளளார செலவு வரவுகள, மரப்பாவை சென்றுவந்தற்று–உயிரில்லாத மரப்பாவை இயகதிரக் கயிறருல் சென்று வருதாம் போலும்.

ஐகாரம் - அசைநிலை. ஞாலம் என்னும் ஆகு பெயர்ப் பொருட்கு உவமையோடு ஒதத தொழில வருவிக்கப்பட்டது. ஞாலத்துளளார் என்றது அவரை ஒழிநதாரை. அவர்க்கு ஈதலைச் செய்து புகழும் புண்ணியமும எய்தாமையின், உயிருடையரல்லர் என்பதாம், "ஈவாரும் கொளவாரும் இல்லாத வானதது, வாழ்வாரே வண்க ணவா" என்ருர் பிறருமம. இத தொடையின்பம் நோக்காது 'இரப்பவர் இலலாயின்' என்று பாடம் ஓதுவாரும் உளர். (8)

ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள் மேவார் இலாஅக் கடை. 1059

இரந்துகோள மேவார் இலாஅக்கடை - அவர்பாற்சென்று ஒன்றனை இரந்துகோடலை விரும்புவார் இலவழி, ஈவார்கண் தோற்றம என் உண்டாம் - கொடுப்பார்மாட்டு என்ன புகழுண்டாம்? யாதுமில்லை.

தோற்றம் - ஆகுபெயர். மேவுவார் என்பது விகாரமாயிற்று. கொடுததல வன்மை வெளிப்படாமையின், அதனல் புகழெய்தார் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் உலகிற்கு இரப்பார்வேண்டும் என்பது கூறப்பட்டது. (9)

இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்புஇடும்பை தானேயும் சாலும் கரி. 1060

இரப்பான் வெகுளாமை வேண்டும் - ஈவானுக்குப் பொருள் உதவாவழி இவன் எனக்கு ஈகின்றிலன் என்று அவனை இரப்பான் வெகுளாதொழிதலவேண்டும்; நிரப்பு இடுமபை தானேயும் காரி சாலும் - அது வேண்டியபொழுது உதவாது என்பதற்கு வேறு சான்று வேண்டா, நிரப்பாகிய தன் இடுமபை தானேயுஞ் சான்ற தல அமைபும.

யாவாக்கும பெடவேண்டுதலும நிலையின்மையும முதலிய பிறசான்றும் உண்டு என்பதுபட நின்றமையின், உம்மை எச்ச உம்மை. தனக்கேயன்றி மறறையிரநதார்க்கும் அற்றைக்கன்று பொருள கடைக்கூட்டற்கு அவனுமம துன்பதததை தனக்கே பாகவைத்துத் தானுமந துன்பம் தான் அறிநது வெகுளற்க என்பதாம்.

இதனுன் அவாக்கு இன்றியமையாததோர் இயல்பு கூறப்பட்டது. (10)

107. இரவு அச்சம்

அஃதாவது மானந தீரவரும இரவிறகு அஞ்சுதல். அதிகார முறைமையும இதனுனே விளங்கும.

கரவாது உவந்துஈயும் கண்ணன்னர் கண்ணும்
இரவாமை கோடி யுறும். 1061

கரவாது உவந்து ஈயும கண் அன்னர் கண்ணும இரவாமை– தமக்கு உளளது கரவாது இவா வரப்பெறறேம் என்று உள மகிழ்நது கொடுக்கும கணபோலச சிறநதகார்மாட்டும இரவாதே ஒருவன் வறுமை கூறதல, கோடி உறும்–இரந்து செலவம எய்தலின் கோடிமடஙகு நன்று.

நலகுரவு மறைக்கப்படாத கூட்டாமாடடும ஆகாது என்பதுபட நின்றமையின், உமமை உயாவுசிறப்பின்கண்வநதது. அவ்விரவான் மானந தீராது எனினுந துணியலலது அதற்கு மிகுதி கூடாமையின், வல்லதோர முயறசியான் உயிரோமபலே நலலது என்பது கருதது. (1)

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகுஇயற்றி யான். 1062

உலகு இபற்றியான் இரநதும உயிரவாழதல வேண்டின் - இவ் உலகததைப் படைநதவன் இதன்கண் வாழ்வார்க்கு முயன்று உயிர்வாழதலேயனறி இரநதும உயிரவாழதலே வேண்டி விதிததானையின், பரநது கெடுக - அக் கொடியோன்தானும அவரைப் போன்று எஙகும அலமநது கெடுவானாக.

மக்களுயிர்க்கெலலாம் வாழநாளும், அதற்கு வேண்டுவதாய உண்டியும், அதற்கு ஏதுவாய செய்தொழிலும், பழவினையதத்தால் கருவொடுகலந்தவன்றே அவன் கற்பிக்குமன்றே? அவற்றுள் சில

உயிர்க்கு இரத்தலேயும் ஒரு செய்தொழிலாகக் கற்பிததானுயின் அத் தீவினையால் தானும் அத் துன்பமுறல்வேண்டும் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் அவ் இரவின் கொடுமை கூறப் பட்டது. (2)

இன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்
வன்மையின் வன்பாட்டது இல். 1063

இன்மை இடும்பை இரந்து தீர்வாம் என்னும் வன்மையின் – வறுமையான் வரும் துன்பததை முயன்று நீக்கக்கடவேம் என்று கருதாது இரந்து நீக்கக் கடவேம் என்று கருதும் வன்மைபோல, வன்பாட்டது இல-வலிமைப்பாடுடையது பிறிது இலலே.

நெறியாய முயற்சி நிற்க நெறியல்லாத இரவால் தீர்க்கக் கருதுதலின், வன்மையாயிற்று. வன்பாடு - முருட்டுத தன்மை; அஃதாவது ஓராது செய்துநிற்றல்.

இதனன் வறுமை தீாதற்கு நெறி இரவன்று என்பது கூறப் பட்டது. (3)

இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடம்இல்லாக்
காலும் இரவுஒல்லாச் சால்பு. 1064

இடம் இல்லாக்காலும இரவு ஒல்லாச் சாலபு - நுகரவேண்டு வன இன்றி நல்கூர்ந்தவழியும் பிறர்பாற்சென்று இரத்தலேஉடம் படாத அமைதி, இடமெல்லாம் கொளளாத தகைததே - எல்லா உலகும் ஒருங்கு இயைந்தாலும கொளளாத பெருமையுடைத்து.

அவ் இரத்தலேச் சால்பு விலக்குமாகலின், இரவு ஒல்லாமை அதன்மேல் ஏற்றப்பட்டது. இதனன் அநநெறியல்லதனேச் சால் புடையார் செய்யார் என்பது கூறப்பட்டது. (4)

தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்குஇனியது இல். 1065

தாள தந்தது தெணணீர அடுபுற்கையாயினும் - நெறியாய முயற்சி கொடுவாது தாகதது தெளிநதநீர்போலும் அடுபுற்கையே யாயினும், உண்ணலின் ஙாங்கு இனியது இல - அதனேயுண்டற்கு மேல் இனியது இலலே.

தாள தநதகூழ செறிவின்றித தெண்ணீர் போன்றதாயினும் இழிவாய இரவான்வந்ததன்றித தம் உடைமையாகலின், அமிழ் தததோடு ஒக்கும் என்பதாம்.

இதனன் நெறியிலலையது சிறிதேனும், அது செய்யும் இன்பம் பெரிது என்பது கூறப்பட்டது. (5)

ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல். 1066

ஆவிற்கு நீர் என்று இரப்பினும் - தண்ணீர்பெறாது இறக்கும் நிலைமைததாயதோர் ஆவினைக் கண்டு அறமநோக்கி இதற்குத் தண்ணீர் தரல்வேண்டும் என்று இரந்து சொல்லுங்காலும், இரவின் நாவிற்கு இளிவந்தது இல-அவ்விரவுபோல ஒருவன்நாவிற்கு இளிவந்தது பிறிது இல்லை.

ஆ காததோமபல் பேரறமாகலின் 'ஆவிற்கு' என்றும், பொருள கொடுத்துக் கொள்ளவேண்டாத எண்மைத்தாகலின் 'நீர்' என்றும இரக்கின்றானுக்கு இளிவு அச்சொல் அளவே ஆகலின் 'நாவிற்கு' என்றும, அதுதான் எல்லா இளிவினும் மேற்படுதலின், 'இளிவந்தது இல' என்றும கூறினார்.

இதனான் அறனும முயன்று செய்வதல்லது இரந்து செய்யற்க என்பது கூறப்பட்டது. (6)

இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின் கரப்பார் இரவன்மின் என்று. 1067

இரப்பாரை எல்லாம இரப்பன்-இரப்பாரையெல்லாம் யான் இரவாநின்றேன, இரப்பிற கரப்பார இரவன்மின் என்று - யாது சொல்லியெனின், நுமக்கு இரக்கவேண்டுமாயின் நுமக்குள்ளது கரப்பாரை இரவாதொழிமின் என்று சொல்லி.

இரண்டாவது விகாரத்தால தொக்கது. இவ்வாறிவந்த செயலான் ஊட்டியவழியும உடமபு நிலைலாதாகலின் இது வேண்டா என்பது தோன்ற 'இரப்பன்' என்றார்.

இதனான் மானம தீர வரும இரவு விலக்கப்பட்டது. (7)

இரவுஎன்னும் ஏமாப்புஇல் தோணி கரவுஎன்னும் பார்தாக்கப் பக்கு விடும். 1068

இரவு என்னும ஏமாப்பு இல தோணி - இவ்வெறுமை என்னும கடலை இதலை கடத்தும என்று கருதி ஒருவன ஏறிய இரவு என்னும சேமமற்ற தோணி, கரவு என்னும பார்தாக்கப் பக்கு விடும் - அதன் கண ஓடுங்கால கரததல என்னும வன்னிலத்தோடு தாக்குமாயின் பிளந்துபோம.

முயற்சியால கடப்பதனை இரவால கடக்கலுற்றான் அதன் கரை காணாமையின், 'ஏமாப்பு இல தோணி' என்றார். ஏமாப்பு இன்மைதோணிமேல ஏற்றப்பட்டது. அது கடத்தற்கு ஏற்றது அன்மையானும் நிலம அறியாது செலுத்தியவழி உடைதலானும், அதன்கண் ஏற்றக என்பதாம. இதனை அவயவ உருவகம். (8)

இரவுஉள்ள உள்ளம் உருகும் கரவுஉள்ள உள்ளதூஉம் இன்றிக் கெடும். 1069

இரவு உள்ள உள்ளம உருகும் - உடையாரமுன் இல்லார் சென்று இரந்து நிற்றலின் கொடுமையை நினைந்தால் எம்உள்ளங் கரைந்து உருகாநிற்கும், கரவு உள்ள உள்ளதூஉம் இன்றிக்

கெடும் - இனி அந்நிலையைக் கண்டுவைத்தவர் இல்லை என்றலின் கொடுமையை நினைந்தால அவ் உருசுமளவுதானும் இன்றிப் பொன்றிவிடும்.

''இரவினீ, உளளுங்கால் உள்ளம் உருசுமால் என்கொலோ கொளளுங்கால கொளவார் குறிப்பு'' (நாலடி. 305) என்றார் பிறரும். இரவினும் கரவு கொடிது என்பதாம. இதற்குப் பிற ரெலலாம் 'இரக்கின்றவர்' உளளம் உருகும் என்று உரைததார்()

கரப்பவர்க்கு யாங்குஒளிக்கும் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர். 1070

சொலலாட இரப்பவர் உயிர போம் – கரப்பார இல்லீல என்று சொல்லாடிய துணையானே இரப்பார்க்கு உயிரபோகா கின்றது, கரப்பவர்க்கு யாஙகு ஒளிக்கும்கொல - இனிச சொல் லாடுகின்ற அவர்தமக்கு உயிர பின்னும் நிற்றலான் அப்பொழுது எப்புரையுள புக்கொளிததுநிற்கும் ?

உயிர்போகலாவது இனி யாம் என் செய்தும் என்று ஏங்கிச் செயலறறு நிற்றல்; ''அநநிலையே, மாயாஙே மாற்றிவிடின்'' (நாலடி. 308) என்றார் பிறரும். கேட்டாரைக்கொலலவற்றய சொல, சொலவாரைக் கோறல சொலலவேண்டாவாயினும் அது காண்கின்றிலம் இஃது என்னை என்பதாம. 'வறுமையுற்றுழி மறையாது இரக்கப்படுவாராய கேளிரகட்கும் அதனைச் சொல லாட உயிரபோம் ஆனபின், மறைக்கப்படுவாராய பிறர்க்குச் சொலலாடியக்கால் போகாது எஙகே ஒளிததுநிற்கும்' இரண் டானும் போமேஅன்றே' என இரவஞ்சினஒருவன் கூற்றுக்கி உரைப்பாரும் உளர்.

இவை மூன்று பாட்டானும் அவ் இரவின் குற்றமும் கரவின் குற்றமும ஒருங்கு கூறப்பட்டன. (10)

108. கயமை

அஃதாவது மேல் அரசு இயலுளளும் அங்க இயலுள ளும் சிறப்புவகையாற் கூறப்பட்ட குணங்களுள ஏறபுடை யன குறிப்பிலுல் யாவர்க்கும் எய்த வைததமையின், ஆண்டுக் குறிப்பாற் கூறியனவும், ணண்டு ஒழிபு இயலுள் வெளிப்படக் கூறியனவுமாய குணங்கள யாவும் இலராய கீழோரது தன்மை. அதனுல இஃது எலலாவறறிற்கும் பின் வைக்கப்பட்டது.

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்டது இல். 1071

மக்களே போல்வர் கயவர - வடிவான் முழுதும் மக்களை ஒப்பர் கயவர்; அவர் அன்ன ஒப்பாரி யாம் கண்டது இல் - அவர் மக்களையொததாற் போன்ற ஒப்பு வேறு இரண்டி சாதிக்கண் யாம்கண்டதில்லை.

முழுதும் ஒத்தல் தேற்றேகாரத்தால் பெற்றாம். அவர் என்றது அவர்மாட்டுளதாய ஒப்புமையை. மக்கட்சாதிக்கும் கயச்சாதிக்கும் வடிவு ஒததலின் குணங்களது உண்மைஇன்மைகளானலலது வேற்றுமை அறியப்படாது என்பதாம்.

இதனான் கயவரது குற்றமிகுதி கூறப்பட்டது. (1)

நன்றுஅறி வாரின் கயவர் திருவுடையர்
நெஞ்சத்து அவலம் இலர். 1072

நன்று அறிவாரின் கயவர் திரு உடையர்-தமக்குறுதியாவன அறிவாரின அவையறியாத கீழமக்கள நன்மையுடையா, நெஞ்சதது அவலமஇலா - அவர்போல அவைகாரணமாகத தம்நெஞ்சததின்கண கவலையில ராகலான்.

நன்று என்பது சாதியொருமை. உறுதிகளாவன இம்மை மறுமை வீடுகட்கு உரியவாய புகழ, அற, ஞானங்கள. இவறறை அறிவார் இவை செய்யாநின்றே மிகச செயப்பெறுகின்றிலேம என்றும், செயகின்ற இவைதமககு இடையூறுவருங்கொல என்றும், இவற்றின் மறுதலையாய பழி பாவம அறியாமை என்பனவற்றுள யாதுவிளையுமோ என்றும, இவ வாற்றால் கவலை எய்துவர்; கயவர் அப் புகழமுதலிய ஒழிததுப் பழிமுதலிய செய்யாநின்றும் யாதும கவலைஉடையரலலராகலான் திருவுடையர் எனக் குறிப்பால இகழுததவாறு.

இதனான் பழி முதலியவறறிறகு அஞசார் என்பது கூறப்பட்டது. (2)

தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான். 1073

தேவர் அனையர் கயவர் - தேவரும கயவரும ஒருதன்மையர், அவரும தாம மேவன செயது ஒழுகலான் - அதேது யாதினான் எனின், தேவரைப்போன்று தமமை நியமிப்பாரின்றிக் கயவரும தாம விரும்புவனவறறைச செயதொழுகலான்.

உயாசசியும இழிவுமாகிய தம காரண வேறுபாடு குறிப்பால் தோன்ற நின்றமையின், இது புகழவார போன்று பழிததவாறாயிறறு.

இதனான விலக்கறபாடின்றி வேண்டிய செய்வா என்பது கூறப்பட்டது. (3)

அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ். 1074

கீழ் - கீழாயினான், அகப்பட்டி ஆவாரைக் காணின் - தன்னிற் சுருங்கிய பட்டியாய் ஒழுகுவாரைக் கண்டானாயின், அவரின் மிகப்பட்டுச் செம்மாக்கும் - அவ் ஒழுக்கத்தின்கண் அவரின் தான் மேம்பட்டு அதனால தன்மிகுதி காட்டி இறுமாக்கும்.

அகப்பட்டி - அகமாகியபட்டி. பட்டிபோன்று வேண்டிய வாறே ஒழுகலின், 'பட்டி' என்றார்; "நோதக்க செய்யும் சிறு பட்டி" (கலித். குறிஞ்சி. 15) என்றார் பிறரும்.

இதனான் அவர் மேம்படுமாறு கூறப்பட்டது. (4)

அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது 1075

கீழ்களது ஆசாரம் அச்சமே - கயவரதாய ஆசாரம் கண்டது உண்டாயின் அதற்குக் காரணம அரசனான் ஏதம வரும் என்று அஞ்சும் அச்சமே, எச்சம் அவா உண்டேல சிறிது உண்டாம - அஃதொழிந்தால், தம்மால் அவாவப்படும பொருள அதனால உண்டாமாயின் சிறிது உண்டாம.

ஆசாரத்தின் காரணத்தை 'ஆசாரம்' என்றும, அவாவப்படுவதனை 'அவா' என்றும கூறினார். எச்சத்தின்கண் என்னும ஏழாவது இறுதிக்கண தொக்கது. பெருமபான்மை அசசம், சிறுபான்மை பொருட்பேறு இவ இரண்டானும அனறி இயல்பாக உண்டாகாது என்பதாம்.

வேண்டியசெயதலே இயலபு, ஆசாரம செயதல இயல்பன்று என்பது இதனான் கூறப்பட்டது. (5)

அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான். 1076

தாம் கேட்ட மறை உயததுப் பிறாக்கு உரைக்கலான் - தாம் கேட்ட மறைகளை இடநதோறும தாஙகிக்கொண்டு சென்று பிறாக்குச் சொலலுதலான், கயவா அறை பறை அன்னா - கயவா அறையப்படும் பறையினை ஒப்பா.

மறை - வெளிப்படின் குறறம விளையுமஎன்று பிறரை மறைத்து ஒருவன் சொலலிய சொல. பிறா - அம மறைததற குரியார். 'உய்தது' என்றார, அவாக்கு அது பெருமபாரமாதல நோக்கி. பறை ஒருவன் கையால தன்னை அறிவிததொன்றனை இடநதோறும் கொண்டு சென்று யாவரையும அறிவிக்குமாக லான், இது தொழில உவமம.

இதனான் அவரது செறிவின்மை கூறப்பட்டது. (6)

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுஉடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு. 1077

கயவர் கொடிறு உடைக்கும் கூன் கையர் அலலாதவாக்கு - கயவர் தம் கதுப்பினை நெரிப்பதாக வளைநத கையினை உடையரல்லாதார்க்கு, ஈர்ங்கை விதிரார் - தாம் உண்டு பூசிய கையைத் தெறிததல வேண்டும் என்று இரநதாலும் தெறியார.

வளைந்த கை; முறுக்கிய கை. மெலிவாாக்கு யாதும்கொடார்; கலிவார்க்கு எலலாம் கொடுப்பர் என்பதாம். (7)

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ். 1078

சொலலப் பயன்படுவர் சான்றோர் - மெலியார் சென்று தம் குறையைச் சொலலிய துணையானே இரங்கிப் பயன்படுவர் மேலாயினா, கீழ கரும்புபோல கொலலப் பயனபடும - மற்றைக் கீழாயினா கரும்புபோல வலியாா நைய நெருக்கிய வழிப் பயன்படுவர்.

பயன்படுதல உளளது கொடுததல. கீழாயினாரது இழிவு தோன்ற, மேலாயினாரையும உடன் கூறினார்.

இவை இரண்டு பாட்டானும அவா கொடுக்குமாறு கூறப் பட்டது. (8)

உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ். 1079

உடுப்பதூஉம் உண்பதூஉம கீழ காணின் - பிறா செலவததால பட்டும துகிலும் உடுததலையும பாலோடு அடிசில் உண்டலையும கீழாயினான் காணுமாயின், பிறாமேல வடுக் காண வற்றாகும் - அவறறைப பொறாது அவாமாடடு வடுவிலலையாகவும உண்டாக்க வலலனாம.

உடுப்பது உணபது என்பன ரணடு அவ்வத தொழில மேல நின்றன அவறறால, பூணடல ஊாதல முதலிய பிறதொழில்களும கொளளப்படும. அவறறைக் கண்ட துணையானே பொறாமையெப்தலின் 'காணின' என்றும, கேட்டாா இது கூடும என்று இயையப் படைததல அரிது ஆகலின் 'வறறாகும' என்றும கூறினா.

இதனான் பிறாசெலவம பொறாமை கூறப்பட்டது. (9)

எற்றிற்கு உரியர் கயவர்ஒன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து. 1080

கயவா ஒன்று உறறக்கால விரைநது விறறறகு உரியர் - கயவா தமமை யாதானும ஒரு துன்பமுறறக்கால அதுவே பற்றுக் கோடாக விரைநது தமமைப் பிறாக்கு விறறறகு உரியர், எற்றிற்கு உரியா - அதுவன்றி வேறு எததொழிறகு உரியா?

உணவின்மையாகப பிறிதாக ஒன்று வநது உறற துணையான் என்பது தோன்ற 'ஒன்று உறறக்கால' என்றும, கொளகின்றார் தம் கயமை அறிநது வேண்டா என்றறகு முன்னே விற்றுநிறறலின் 'விரைநது' என்றும கூறினா. ஒருதொழிற்கும் உரியரலலா என்பது குறிப்பெசசம்.

இதனான் தாம பிறாக்கு அடிமையாய் நிற்பா என்பது கூறப் பட்டது. (10)

ஒழிபியல முற்றும்
பொருட்பால முற்றும்

—:o:—

காமத்துப் பால்

—:o:—

இனி, அப்பொருளைத் துணைக்காரணமாக உடைத்தாய இம்மையே பயப்பதாய இன்பம் கூறுவான் எடுத்துக்கொண்டார். ஈண்டு இன்பம் என்றது ஒரு காலத்து ஒரு பொருளான் ஐம்புலனும் நுகர்தற்சிறப்புடைத்தாய காம இன்பத்தினை. இச் சிறப்புப் பற்றி வடநூலுள போசராசனும் 'சுவைபல என்று கூறுவார் கூறுக, யாம் கூறுவது இன்பச்சுவை ஒன்றனையுமே' என இதனையே மிகுத்துக் கூறினன். இது புணர்ச்சி, பிரிவு என இரு வகைப்படும். ஏனை, இருத்தல, இரங்கல, ஊடல என்பனவோ எனின், இவர் பொருட்பாகுபாட்டினை அறம, பொருள, இன்பம் என வடநூல் வழக்குப் பற்றி ஓதுதலான், அவ்வாறே அவற்றைப் பிரிவின்கண் அடக்கினர் என்க.

களவு இயல்

—:o:—

இனி, அவை தம்மையே தமிழ நூலகளோடும பொருந்த, புணர்ச்சியை 'களவு' என்னும பிரிவை 'கற்பு' என்னும பெரும பான்மை பற்றி வருத்து, அவறறைச் சுவை மிகுதி பயப்ப உலக நடையோடு ஒப்பும ஒவ்வாமையும உடையவாக்கிக் கூறுகின்றார். அக் கைக்கோள இரண்டனுளளும் களவாவது பிணிமூப்பு இறப்புக்கள இன்றி எஞ்ஞான்றும் ஒருதன்மையராய் உருவும திருவும பருவமும குலனும குணனும் அன்பும் முதலியவற்றுல் தம்முள ஒப்புமை உடையராய தலைமகனும் தலைமகளும பிறாகொடுப்பவும அடுப்பவும் அன்றிப் பால்வகையால தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது. அதனை ஏழு அதிகாரத்தால கூறுவான்தொடங்கி, முதற்கண் தலைவி அணங்கு உறுதல கூறுகின்றார.

109. தகை அணங்கு உறுத்தல்

அஃதாவது பொழிலவினையாட்டு விருப்பான் ஆயம் நீங்க அதன்கண் தமியளாய் நின்றுளை, வேட்ட விருப்பான் இனையாள் நீங்கத் தமியளைவந்து கண்ணுற்ற தலைமகன், அவள் வனப்புத் தன்னை வருத்தம உறுவிதத்தலைச் சொல்லுதல். இது, கண்ணுற்றபொழுதே நிகழுவதாகலின், ' முதற் கண்கூறப்பட்டது.

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு. 1081

தலைமகள் உருவு முதலியன முன்கண்டறிவன அன்றிச் சிறந்தமையின் அவளைத் தலைமகன் ஐயுற்றது.

கனங்குழை - இக்கனவிய குழையை உடையாள, அணங்குகொல் - இப்பொழிற்கண் உறைவாளோர் தெய்வமகளோ? ஆய்மயில்கொல - அன்றி ஒருமயில விசேடமோ? மாதர்கொல் - அன்றி ஒருமானுடமாதரோ, என் நெஞ்சு மாலும் - இவளை இன்னள என்று துணியமாட்டாது என் நெஞ்சு மயங்கா நின்றது.

ஓ - அசை. ஆய்மயில - படைததோன் விசேடமாக ஆய்ந்து படைதத மயில மயிற சாதியுள தெரிந்தெடுத்த மயில் என்றும் ஆம. கனங்குழை - ஆகுபெயர். 'கணங்குழை' என்று பாடம் ஓதி, 'பலவாயத் திரண்ட குழை' என்று உரைப்பாரும் உளர். எழுதலாகா உருவும தன் வருததமும பறறி 'அணங்குகொல்' என்றும் சாயலும் பொழில்வயின் நிற்றலும் பறறி, 'ஆய்மயிலகொல்' என்றும, தன் நெஞசம சென்றமையும அவள் எதிர்நோக்கியவாறும் பறறி 'மாதாகொல' என்றும கூறினான். (1)

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு,
தானைக்கொண் டன்னது உடைத்து. 1082

மானுட மாதராதல தெளிநத தலைமகன் அவள் நோக்கினாளைய வருததம கூறியது.

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல - இப் பெற்றிததாய வனப்பினை உடையாள என் நோக்கிறகு எதிர்நோக்குதல, தாக்கு அணங்கு தானைக்கொண்டன்னது உடைத்து - தானே தாக்கி வருததுவதோர அணங்கு தாக்குதற்குத தானையையும் கொண்டு வநதாறபோலும தன்மையை உடைதது.

மேலும, 'அணங்குகொல ஆய்மயில கொல' என்றமையான், இகரசசுடடு வருவிக்கப்பட்து. எதிர் நோக்குதல் என்றமையின், அது குறிப்பு நோக்காயிறறு. வனப்பால வருந்துதல் மேலும் குறிப்பு நோக்கால வருநதுதல கூறியவாறு. 'நோக்கினாள' என்பதற்கு 'என்னால நோக்கப்பட்டாள' என்று உரைப்பாரும் உளர். (2)

பண்டுஅறியேன் கூற்றுஎன் பதனை இனியறிந்தேன்
பெண்தகையான் பேரமர்க் கட்டு 1083

இதுவும் அது.

கூறறு என்பதனைப் பணடு அறியேன் - கூற்றென்று நூலோரசொலவதனைப் பண்டு கேட்டு அறிவதலலது கண்டறியேன், இனி அறிந்தேன் - இப்பொழுது கண்டறிந்தேன், பெண்

தகையான் பேர் அமர்க் கட்டு - அது பெண்தகையுடனே பெரிய வாய் அமர்த்த கண்களே உடைத்து.

பெண்தகை - நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் குணங்கள். அவை அவ்வக்குறிகளான் அறியப்பட்டன. அமர்த்தல் - அமர்செய்தல், பெயரடியாயவினை. பெண்தகையால் இன்பம் பயத்தலும் உண்டேனும் துன்பம் பயத்தல மிகுதிபற்றிக் கூற்றுக்கிக் கூறினன். (3)

கண்டார் உயிர்உண்ணும் தோற்றத்தான் பெண்தகை பேதைக்கு அமர்த்தன கண். 1084

இதுவும் அது.

பெண்தகைப் பேதைக்குக் கண் - பெண்தகையை உடைய இப் பேதைக்கு உளவாய கண்கள, கண்டார உயிர உண்ணும் தோற்றததான் அமர்த்தன - தம்மைக்கண்டார் உயிர் உண்ணும் தோற்றத்துடனே கூடி அமர்தகிருகதன.

அமர்ததல் - மாறுபடுதல. குணங்கட்கும் பேதைமைக்கும் ஏலாது கொடியவா யிருகதன என்பதாம. (4)

கூற்றமோ கண்ணே பிணையோ மட்வரல் நோக்கம்இம் மூன்றும் உடைத்து. 1085

இதுவும் அது.

கூற்றமோ-என்னை வருகதுதல உடைமையான் கூற்றமோ, கண்ணே-என்மேல் ஓடுதல உடைமையான் கண்ணே, பிணையோ - இயல்பாக வெருவதலுடைமையான் பிணையோ, அறிகின்றிலேன்; மடவரல் நோக்கம் இம் மூன்றும் உடைதது - இம மடவரல கண்களின் நோக்கம் இம் மூன்றன் தன்மையையும உடைததாயிராகின்றது.

இன்பமும் துன்பமும் ஒருங்குசெய்யாகின்றது என்பதாம். தொழிலபற்றி வந்த ஐயகிலே உவமம். (5)

கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்குஅஞர் செய்யல மன்இவள் கண். 1086

இதுவும் அது.

கொடும் புருவம் கோடா மறைப்பின்-பிரியாகட்பாய கொடும் புருவங்களதாம் செப்பமுடையவாய் விலக்கினவாயின், இவள கண் நடுங்கு அஞர் செய்யல - அவற்றைக் கடந்து இவள கண்கள எனக்கு நடுங்கும் துயரைச் செய்யமாட்டா.

நட்டாரைக் கழறுவார்க்குத தாம் செம்மையுடையராதல் வேண்டலின் 'கோடா' என்றும், செய்கின்ற அவற்றிற்கும் உறுகின்ற தனக்கும் இடைகின்று விலக்குங்காலும் சிறிது இடை

பெறின் அதுவழியாக வந்து அஞாசெய்யுமாகலின் 'மறைப்பின்' என்றும் கூறினான். நடுங்கு அஞர் - நடுங்கற்கு ஏதுவாய அஞர். தாமஇயல்பாகக் கோடுதல் உடைமையான் அவற்றை'மிகுதிக்கண் மேற்சென்று இடிக்கமாட்டா'வாயின என்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. (6)

கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில். 1087

அவள முலைகளினாய வருததம் கூறியது.

மாதர் படா முலைமேல் துகில் - இம்மாதர் படாமுலைகளின் மேலிட்ட துகில், கடாக் களிற்றின்மேல் கட்படாம் - அவை கொல லாமல் காததலின், கொல்வதாய மதக்களிற்றின் மேலிட்ட முக படாததினை ஒக்கும்.

கணணை மறைததல பற்றி 'கட்படாம' என்றான். துகிலான் மறைததல நாணுடை மகளிர்க்கு இயல்பாகலின், அத துகிலூடே அவற்றின் வெமமையும பெருமையும கணடு இததுணையாறற லுடையன இனி எஞ்ஞான்றுஞ சாயவில எனக் கருதி 'படாமுலை' என்றான். உவமை சிறிது மறையாவழி உவை கொலலும என பது தோன்ற நின்றது. (7)

ஒண்நுதற்கு ஓஓ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு. 1088

நுதலினாய வருததம கூறியது.

ஞாட்பினுள் நண்ணாரும் உட்கும் என் பீடு - போர்க்களதது வநது நேராத பகைவரும நோக்தாரவாயக்கேட்டு அஞ்சுதறகு ஏது வாய என்வலி, ஒணநுதறகு உடைநததே - இம்மாதரது ஒளளிய நுதலொன்றறகுமே அழிநது விட்டது.

'மாதர்' என்பது அதிகாரததான் வநதது. 'ஞாட்பினுள்' என்றதனால பகைவராதல பெறறாம. 'பீடு' என்ற பொதுமையான் மனவலியும காயவலியும கொளக. 'ஓ' என்னும் வியப்பின்கண் குறிப்பு அவ் வலிகளது பெருமையும நுதலது சிறுமையும் தோன்ற நின்றது. கழிநததறகு இரங்கலின தறபுகழதல அன்றாயிற்று. (8)

பிணைஏர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து. 1089

அணிகலததானாய வருததம கூறியது.

பிணை ஏர் மடநோக்கும நாணும உடையாட்கு - புறதது மான் பிணை ஒதத மடநோக்கினையும அகதது நாணினையும் உடையளாய இவட்கு, ஏதில தந்து அணி எவன்?-ஒற்றுமை உடைய இவ் அணி களே அமைந்திருக்க வேறறுமையுடைய அணிகளைப் படைத்து அணிதல என்ன பயனுடைதது?

மடநோக்கு-வெருவுதல் உடைய நோக்கு. இவட்குப் பாரமாதலும் எனக்கு அணங்காதலும் கருதாமையின், அணிந்தார் அறிவிலர் என்பதாம். (9)

உண்டார்கண் அல்லது அடுநரூக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று. 1090

தலைமகள் குறிப்பறிதல உற்றுன் சொல்லியது.

அடுநரு - அடப்படும் கரு, உண்டார்கண் அல்லது - தன்னை உண்டார் மாட்டு மகிழ்ச்சியைச செய்வதல்லது, காமம்போல் கண்டார் மகிழ்செய்தல இன்று - காமம்போலக் கண்டார்மாட்டு மகிழ்ச்சியைச் செய்தல் உடைதன்று.

அடுநரு - வெளிப்படை. 'காமம்' என்றது ஈண்டு அது நுகர்தற்கு இடனுகியாரை. 'கண்டார்கண்' என்னும் ஏழாவது இறுதிக் கண்தொக்கது. மகிழ்செய்தறகண் காமம் நறவினும சிறநததே எனினும், இவள குறிப்பு ஆராய்நது அறியாமையின், யான் அது பெற்றிலேன் எனக் குறிப்பெசசம வருவிததுரைக்க, "அரிமயிர்த் திரள முன்கை" (புறநா. 11) என்னும் புறப்பாட்டிற குறிப்புப் போல. (10)

110. குறிப்பு அறிதல்

அஃதாவது தலைமகன் தலைமகள் குறிப்பினை அறிதலும், தோழி குறிப்பினை அறிதலும, அவளதான் அவ இருவர் குறிப்பினையும அறிதலுமாம. தகை அணங்குறற்ற தலைமகன் தலைமகளைக்கூடுங்கால இதுவேணடுமாகலின், தகை அணங்கு உறுத்தலின் பின் வைக்கபபட்டது.

இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்குஒன்று அந்நோய் மருந்து. 1091

தலைமகன் தலைமகள உளப்பாட்டுக் குறிப்பினை அவள நோக்கினுன் அறிந்தது.

இவள் உண்கண் உளளது இருநோக்கு - இவளுடைய உண்கண் அகதததாயநோக்கு இதுபொழுது என்மேல இரண்டுநோக்காயிற்று, ஒரு நோக்கு நோய் நோக்கு ஒன்று அந்நோய் மருந்து - அவற்றுள ஒருநோக்குஎன்கண் நோய்செய்யும் நோக்கு, ஏனையது அந் நோய்க்கு மருந்தாய நோக்கு.

உண்கண் - மையுண்டகண். நோய்செய்யும் நோக்கு அவள மனத்தினைய காமக்குறிப்பினை வெளிப்படுக்கின்ற நோக்கு. மருந்தாய நோக்கு தன்கண் நிகழ்கின்ற அறப்பு நோக்கு. நோய்செய்யும் நோக்கினைப்பொதுநோக்கு என்பாரும் உளர் அது நோய்செயின் கைக்கிளையாவதல்லது அகமாகாமை அறிக. இவ்வருத்தக் தீரும் வாயிலும் உண்டாயிற்று என்பதாம். (1)

கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமதத்தின் செம்பாகம் அன்று பெரிது 1092

இதுவும் அது.

கண் களவுகொளளும் சிறுநோக்கம் - இவள்கண்கள் யான் காணுமல் என்மேல் நோக்குகின்ற அருகிய நோக்கம், காமத்தின் செம்பாகம் அன்று பெரிது - மெய்யுறுபுணர்ச்சியின் ஒத்த பாதிஅளவன்று; **அதனினும மிகும்.**

தான் நோக்கியவழி நாணி இறைஞ்சியும், நோக்காவழி உற்று நோக்கியும் வருதலான் **'களவு கொளளும்'** என்னும், அஃது உளதாம்காலம மிகுதாகலின் **'சிறு நோக்கம்'** எனறும, அஃது உளப்பாடாவழி நிகழுவதாகலின், இனிப்புணர்தல ஒருதலை என்பான் **'செமபாகம அன்று பெரிது'** என்றும கூறினன். (2)

நோக்கினுள் நோக்கி இறைஞ்சினுள் அஃதுஅவள் யாப்பினுள் அட்டிய நீர். 1093

நோக்கினையும நாணினையும அறிந்தது.

நோக்கினை – யான் நோக்காஅளவில தான் என்னை **அன்** போறு நோக்கினால, நோக்கி இறைஞசினை–நோக்கி ஒன்றனைபுட் கொணடி நாணி இறைஞசினை, **அஃது யாப்பினுள அவள அட்டிய நீர** – அக் குறிப்பு இருவெமிடையும தோன்றிய அன்புப் பயிர வளர அதன கண் அவள வாாத்த நீராயிறறு.

அஃது என்னும சுடடுமபெயர அச செயலைக்கு ஏதுவாய குறிப்பின மேல நின்றது. யாபபினுள்ளதனை, 'யாபபு' என்றார். ஏகதேச உருவகம. (3)

யான்நோக்கும் காலை நிலன் நோக்கும் நோக்காக்கால் தான்நோக்கி மெல்ல நகும். 1094

நாணினையும மடிழுச்சியினையும அறிந்தது.

யான் நோக்குங காலை நிலன் நோக்கும் - யான் தன்னை நோக்குங்கால தானஎதிரநோக்காது இறைஞசி நிலதனை நோக்கா நிற்கும, நோக்காக்கால தான நோக்கி மெல்ல நகும் – அஃது அறிந்து யான் நோக்காக்கால தான் என்னை நோக்கித் தன்னுளளே மடிழாறிறகும.

மெல்ல - வெளிப்படாமல. மடிழுச்சியால் புணர்தற்குறிப்பு இனிது விளங்கும். 'மெலல நகும' என்பதற்கு முறுவலிக்கும் என்று உரைப்பாருமு உளர். (4)

குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண் சிறக்கணித்தாள் போல நகும். 1095

இதுவும் அது.

குறிக்கொண்டு நோக்காமை அல்லால் - நேரே குறிக்கொண்டு நோக்காத்துணையல்லது, ஒருகண் சிறக்கணிததாள் போல நகும் - ஒருகண்ணைச் சிறங்கணிததாள்போல என்னை நோக்கிப் பின் தன்னுளளே மகிழாநிற்கும்.

சிறக்கணிததாள என்பது செய்யுள விகாரம். சிறங்கணித்தல்–சுருங்குதல். அது தானும் வெளிப்பட நிகழாமையின், 'போல' என்றான். 'நோக்கி' என்பது சொலலெசசம். இனி இவளை எய்தல் ஒருதலையென்பது குறிப்பெச்சம். (5)

உருஅ தவர்போல் சொலினும் செருஅர்சொல் ஒல்லை உணரப் படும். 1096

தோழி சேண்படுததவழி அவள குறிப்பு அறிந்த தலைமகன் தன்னுளளே சொலலியது.

உருதவாபோல சொலினும் - புறதது நொதுமலாபோலக் கடுஞ்சொற் சொன்னாயினும், செருர சொலலல்லை உணரப்படும் - அகத்துச் செறுதலிலாதா சொல பிற்பயந்தல குறையுறுரால கடிதின் அறியப்படும.

கடுஞ்சொல என்பது 'இவ இடம காவல மிருதிஉடைத்து-வரற்பாலிர்அல்லீர' என்றல முதலாயின. 'செருர' எலலவே, அருள உடைமை பெறப்பட்டது. தன்குறை முடிக்கக்கருதியே சேண்படுக் கின்றமை குறிப்பான் அறிந்து, உலகியல மேலிடுக் கூறியவாறு. இது வருகின்றபாட்டிறகும் ஒக்கும. (6)

செரு அச் சிறுசொல்லும் செற்ரூர்போல் நோக்கும் உரு அர்போன்று உற்ரூர் குறிப்பு. 1097

இதுவும் அது.

செருர சிறுசொலலும - பின் இனிதாய் முன் இன்னாத சொல்லும், செறரூபோல நோக்கும - அகததுச் செறுதிருந்த புறத்துச் செறரூர்போன்ற வெகுளி நோக்கும, உருபோன்று உற்ரூ குறிப்பு - நொதுமலா போன்று நடபாயினோர்கு ஒரு குறிப்புப்பறறி வருவன.

குறிப்பு - ஆகுபெயர. இவை உளளே ஒரு பயன்குறிததுர செய்கின்றன; இயலபலல, ஆகலான், இவற்றிறகு அஞ்சவேண்டா என்பதாம. (7)

அசையியற்கு உண்டுஆண்டுஓர் ஏஎர்யான் நோக்கப் பசையினள் பைய நகும். 1098

தன்னை நோக்கி மகிழுந்த தலைமகளைக் கண்டு தலைமகன் கூறியது.

யான் நோக்கப் பசையினள் பைய நகும - என்னை அகற்று கின்ற சொற்கு ஆற்றது யான் இரந்து நோக்கியவழி அஃது

அறிந்து நெகிழ்ந்து உள்ளே மெல்ல நகாநின்ருள், அசையியற்கு ஆண்டு ஓர் ஏஎர் உண்டு-அதனுல் துடங்கிய இயல்பினேடை யாட்கு அக் நகையின்கண்ணே தோன்றுகின்றதோர் நன்மைக் குறிப்பு உண்டு.

ஏர் - ஆகுபெயர். அக் குறிப்பு இனிப் பழுதாகாது என் பதாம். (8)

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள. 1099

தோழி மகியுடம்படுவாள தன்னுள்ளே சொல்லியது.

ஏதிலார் போலப்பொதுநோக்கு நோக்குதல்-முன்னறியாதார் போல ஒருவரையொருவர் பொதுநோக்கத்தான் நோக்குதல், காதலார கண்ணே உள-இக்காதலியுடையாாகண்ணே உளவாகா கின்றன.

பொதுநோக்கு - யாவர்மாட்டும் ஒரு தன்மைத்தாய நோக்கு. நோக்குதல தொழில், ஒன்றேயாயிஞ்ம இருவர்கண்ணும் நிகழ் தலானும, ஒருவாகண்தானும் குறிப்பு வேறு பாட்டால் பலவாம் அகலானும் 'உள' எனப்பன்மையாற் கூறப்பட்டது. இருவரும் "மதுமலறுதுணடோர் மகிழசரிபோல உளளததுளளே மகிழ" (இறையனர். ச) தலின் அதுபற்றிக் காதலார என்றும், அது புறதது வெளிப்படாமையின் 'ஏதிலாபோல' என்றும் கூறினள.

கண்ணெடு கண்ணினே நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல. 1100

இதுவும் அது.

கண்ணெடு கண இன்னே நோக்கு ஒக்கின் - காமததிற்கு உரிய இருவருள ஒருவா கணகளோடு ஒருவர்கண்கள நோக்கால் ஒக்கு மாயின், வாய்சசொறகள என்ன பயனும் இல - அவர் வாய்மை தோன்றப் சொலலுகின்ற வஞயச்சொறகள ஒருபயனும் உடைய அலல.

நோக்கால ஒததல காதலநோக்கினவாதல. வாய்ச்சொற்கள: மனததின்கண இன்றி வாயளவில தோன்றுகின்ற சொறகள். இருவர்சொலலும கேட்டு உலகியல மேலவைத்துக் கூறியவாறு. இருவர்சொலலுமாவன அவள புனங்காவல்மேலும், அவன் வேட்டத்தின்மேலும் சொல்லுவன. பயனில் சொற்களாகலின், இவை கொளளப் படா என்பதாம். இவை புணர்தல நிமித்தம்.

111. புணர்ச்சி மகிழ்தல்

அஃதாவது அங்ஙனம் குறிப்பறிந்து புணர்ந்த தலை மகன் அப் புணர்ச்சியினே மகிழ்ந்துகூறல். அதிகாரமுறை மையும் இதனனே விளங்கும்.

கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள. 1101

இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் சொல்லியது.

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் – கண்ணால் கண்டும் செவியால் கேட்டும் நாவால உண்டும் மூக்கால் மோந்தும் மெய்யால் தீண்டியும் அனுபவிக்கப்படும் ஐம்புலனும், ஒண்டொடி கண்ணே உள - இவ் ஒளளிய தொடியையுடையாள கண்ணே உளவாயின.

உம்மை முற்று உம்மை. தேற்றேகாரம் வேறிடதது இன்னுமு விளக்கி நின்றது. வேறு வேறு காலங்களில வேறுவேறு பொருள களான் அனுபவிக்கப்படுவன ஒருகாலதது இவள கண்ணே அனுபவிக்கப்பட்டன என்பதாம். வடநூலார் இடக்கர்ப்பொருள வாகச் சொல்லிய புணர்ச்சித தொழில்களும் ஈண்டு அடக்கிக் கூறப்பட்டன. (1)

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து. 1102

இடந்தலைப்பாட்டின்கண் சொல்லியது.

பிணிக்கு மருந்து பிற - வாதம் முதலிய பிணிகட்கு மருநதா வன அவறறிற்கு நிதானமாயினவன்றி மாறுய இயல்பினை யுடையனவாம், அணியிழை தன் நோய்க்கு மருநது தானே–அவ வாறன்றி இவ் அணியிழையினை உடையாள தன்னிறய பிணிக்கு மருந்தும் தானேயாயிளை.

இயற்கைப் புணர்ச்சியை நினைநது முன் வருந்தினுன் ஆகலின் தன்நோய் என்றும், அவ் வருநதாத தமியாளை இடதது எதிரப்பட்டுத் தீர்ந்தாளாகலின் 'தானே மருநது' என்றும் கூறினன். இப் பிணியும் எளியவாயவற்றுல தீரப்பெறறிலம என்பதபட நின்ற மையின், மன் ஒழியிசைக்கண் வநதது.

தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணுன் உலகு. 1103

நிரதிசய இன்பத்திற்குரிய நீ இச் சிறறின்பத்திற்கு இன்னு யாதல் தகாது என்ற பாங்கற்குத தலைவன் சொல்லியது.

தாம் வீழ்வார் மென் தோளதுயிலின் இனிதுகொல்-ஐம்பு லன்களையும் நுகர்வார்க்குத தாம் விரும்பும மகளிர் மெல்லிய தோளின் கண்துயிலும் துயில்போல வருந்தாமல் எய்தலாமோ, தாமரைக்கண்ணுன் உலகு?–அவற்றைத துறந்த தவயோகிகள எய்தும செங்கண்மால உலகம்.)

ஐம்புலன்களையும் நுகர்வார் என்னும் பெயர் அவாய் நிலையான் வந்தது. இப் பெற்றித்தாய துயிலேவிட்டுத் தவயோகங்

களான் வருத்த வேண்டுதலின், எம்மனோர்க்கு ஆகாதுஎன்னும் கருத்தால், 'இனிதுகொல்' என்றான். இந்திரன்உலகு என்றுஉரைப் பாரும் உளர்: தாமரைக்கண்ணன் என்பது அவனுக்குப் பெயரன் மையின், அஃது உரையன்மையறிக. (3)

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்என்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள். 1104

பாங்கற கூட்டத்து இறுதிக்கண் சொல்லியது.

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்என்னும் நீ-தன்னை அகன்றுழிச் சுடாநிற்கும், அணுகுழிக்குளிராநிற்கும் இப்பெற்றித தாய நீயை, இவள யாண்டுப் பெற்றாள்?-என்கண் தருதற்கு இவள எவ்வுலகத்துப் பெற்றாள்?

கூடாமுன் தன்புறுதலின் 'நீங்கின் தெறூஉம்' என்றும், கூடியபின் இன்புறுதலின், 'குறுகுங்கால் தண் என்னும்' என்றும், இப் பெற்றியதோர் நீ உலகதது இல்லையாமாகலின் 'யாண்டுப் பெற்றாள்' என்றும் கூறினன். தன் காமத்தீ தன்னையே அவள தாகாளாகக் கூறினன், அவளான் அது வெளிப்படுதலின். (4)

வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள். 1105

தோழியிற கூட்டத்து இறுதிக்கண் சொல்லியது.

வேட்டபொழுதின் அவையவை போலுமே - மிக இனிய வாயபொருளகளைப் பெறுது அவற்றின்மேல விருப்பங்கூர்ந்த பொழுதின்கண அவையவைதாமே வருது இன்பஞசெய்யுமாறு போல இன்பஞ செயாயும், தோட்டார கதுப்பினாள தோள - எப் பொழுதும பெற்றுப் புணரினும, பூவினை அணிந்த தழைந்த கூந்தலினாள புடையாள தோளகள.

தோடு-ஆகுபெயர். இயறகைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டத்துக்கண் முன்னரே நிகழ்ந்திருக்க, பின்னரும் புதியவாய் நெஞசம் பிணிதலின், அவ்வாமைபறறி இவ்வாறு கூறினன் தொழிலுவமம்.

உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலான் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள். 1106

இதுவும் அது.

உயிர் உறுதோறு தளிர்ப்பத தீண்டலான்-தன்னைப் பெறுது வாடிய என்னுயிர பெற்றுறுதோறும் தளிர்க்கும்வகை தீண்டுதலான், பேதைக்குத் தோள அமிழ்தின் இயன்றன – இப் பேதைக்குத தோள்கள் தீண்டப்படுவதோர் அமிழ்தினால் செய்யப்பட்டன.

ஏதுவாகலான் நீண்டல் அமிழ்கிற்கு எய்கிற்று. வாடிய உயிரைத் தளிர்ப்பித்தல் பற்றி, அவை 'அமிழ்தின் இயன்றன' என்றன். தளிர்த்தல்-இன்பத்தால் தழைத்தல். (6)

தம்இல் இருந்து தமதுபாத்து உண்டற்றால் அம்மா அரிவை முயக்கு. 1107

இவளை நீ வரைந்துகொண்டு உலகோர் தம் இல்லிருந்து தமது பாத்துண்ணும் இல்லறத்தோடுபடல்வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.

அம்மா அரிவை முயக்கு - அழகிய மாமைநிறத்தையுடைய அரிவையது முயக்கம், தம்மில இருந்து தமது பாத்து உண்டற்று - இன்பம்பயத்தற்கண் தமக்குரிய இலலின்கண் இருந்து உலகோர் தம் தாளான் வந்த பொருளைத தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்கட்குப் பகுத்துத தம் கூற்றை உண்டாற்போலும்.

தொழில் உவமம். இலலறஞ்செய்தா எய்தும் துறக்கத்து இன்பம் எனக்கு இப்புணர்ச்சியே தரும என வரைவு உடன்படான் கூறியவாறுயிற்று. (7)

வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை போழப் படாஅ முயக்கு. 1108

ஒத்த அன்புடைய நுமக்கு ஒருபொழுதும் விடாத முயக்கமே இனியது என வரைவுகடாய தோழிக்குச் சொல்லியது.

(நீ சொல்லுகின்றதொக்கும) வளி இடை போழப்படா முயக்கு - ஒருபொழுதும் நெகிழாமையின காறறால இடையறுக்கப்படாத முயக்கம், வீழும் இருவர்க்கு இனிதே - ஒருவரையொருவா விழைவார் இருவர்க்கும் இனிதே.

முற்று உம்மை விகாரத்தால் தொக்கது. ஏகாரம் - தேற்றத தின்கண் வந்தது. ஈண்டு இருவர் இல்லை, இன்மையான், இஃது ஒவ்வாது என்பது கருத்து. களவிற்புணர்ச்சியை மகிழாதது வரைவு உடன்படான் கூறியவாறு. (8)

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம் கூடியார் பெற்ற பயன். 1109

கரத்தல வேண்டாமையின் இடையறவு இல்லாத கூட்டமே இன்பப் பயனுடைதது என வரைவுகடாவியாட்குச சொலலியது.

ஊடல் உணர்தல் புணர்தல் இவை-புணர்ச்சி இனிதாதற்பொருட்டு வேண்டுவதாய ஊடலும், அதனை அளவறிந்து நீங்குதலும் அதன்பின் நிகழ்வதாய அப்புணர்ச்சிதானும் என இவைஅன்றே, காமம் கூடியார் பெற்ற பயன் – வரைந்து கொண்டு காமத்தை இடைவிடாது எய்தியவர் பெற்ற பயன்கள.

ஆடவர்க்கு பிரிவு என்பது ஒன்று உளதாதல்மேலும், அது தான் பரத்தையர்மாட்டாதலும், அதனையறிந்து மகளிர் ஊடிநிற்றலும், அவ் ஊடலிலத தவறுசெய்தவர் தாமே தம் தவறின்மை கூறி நீக்கலும், பின்னும் அவ் இருவரும ஒத்த அன்பினராய்க் கூடலுமன்றே முன்வரைத்தெய்தினர் பெற்றபயன்? அப்பயன் இருதலைப்புளளின் ஒருயிராய உழுவலன்புடைய எமக்கு வேண்டா என அவ்வரைத்தெய்தலை இகழ்தது கூறியவாறு. (9)

அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு. 1110

புணர்ந்து உடன் போகின்றான் தன்னுளளே சொல்லியது.

அறிதோறு அறியாமை கண்டற்று - நூல்களானும் நுண்ணுணர்வானும் பொருளைகளை அறிய அறிய முன்னை அறியாமை கண்டாற்போலக் காணப்படா நின்றது, சேயிழைமாட்டுச் செறிதோறும காமம் – சிவந்த இழையினையுடையாளை இடைவிடாது செறியச்செறிய இவளமாட்டுக் காதல்.

களவொழுக்கத்திற் பல இடையூடுகளான் எய்தப்பெறுது அவாவற்றான் இது பொழுது நிரந்தரமாக எய்தப் பெற்றமையின், 'செறிதோறும்' என்றான். அறிவிற்கு எல்லை இன்மையான் மேன்மேல அறிய அறிய முன்னையறிவு அறியாமையாய் முடியுமாறு போலச் செறிவிற்கு எல்லையின்றி மேன்மேற செறியச்செறிய முன்னைச்செறிவு செறியாமையாய முடியாநின்றது எனத தன் ஆராமை கூறியவாறு. இப் புணர்ச்சிமகிழ்தல தலைமகட்கும் உண்டேனும அவளமாட்டுக் குறிப்பான் நிகழ்வதலலது கூறாறுன் நிகழாமை அறிக. (10)

112. நலம் புனைந்து உரைத்தல்.

அஃதாவது தலைமகன் தலைமகளை நலத்தைப் புனைந்து சொலலியது. இது, புணர்ச்சி மகிழ்ந்துழி நிகழ்வதாகலின், புணர்ச்சி மகிழ்தலின்பின் வைக்கப்பட்டது.

நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள் 1111

இயற்கைப்புணர்ச்சி இறுதிக்கண்சொல்லியது.

அனிச்சமே வாழி நன்னீரை-அனிச்சப்பூவே, வாழுவாயாக மென்மையால் நீ எல்லாப் பூவினும் நலல இயற்கையையுடையை, யாம வீழுபவள நின்னினும மென்னீரள - அங்ஙனமாயினும் எம்மால விரும்பப்பட்டவள நின்னினும மெலலிய இயற்கையை உடையவள.

அனிச்சம் - ஆருபெயா. 'வாழி' என்பது உடன்பாட்டுக் குறிப்பு. இனி'யானே மெலலியன்' என்னும் தருக்கினை ஒழிவாயாக என்பதாம். அது பொழுது உற்றறிக்தாலுகலின், ஊற்றின் இனி

மையையே பாராட்டினன். 'இன்னீரள்' என்று பாடம் ஓதுவாரும் உளர். (1)

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று. 1112

இடந்தலைப்பாட்டின்கண்சொல்லியது.

நெஞ்சே - நெஞ்சே, இவள் கண் பலர்காணும் பூ ஒக்கும் என்று - யானே காணப்பெற்ற இவள் கண்களைப் பலரானும் காணப்படும் பூக்கள ஒக்கும் என்று கருதி, மலர்காணின் மையாத்தி - தாமரை, குவளை, நீலம் முதலிய மலர்களைக் கண்டால் மயங்கா நின்றாய், நின் அறிவு இருந்தவாறென்?

மையாத்தல் ஈண்டு ஒவ்வாத வற்றை ஒக்கும் எனக்கோடல், இறுமாத்தல், செம்மாத்தல என்பன போல ஒரு சொல். இயற்கைப்புணர்ச்சி நீக்கம முதலாகத தலைமகன கண்களைக் காணப் பெருமையின் அவற்றோடு ஒருபுடையொக்கும் மலர்களைக் கண்டுழியெலலாம் அவற்றின்கண காதல்செய்துபோந்தான், இது பொழுது அக் கண்களின் நலம முழுதும் தானே தமியாளை இடதது நினைப்பட்டு அனுபவித்தானாகலின், அம்மலர்கள ஒவ்வாமை கண்டு, ஒப்புமை கருதிய நெஞ்சை இகழ்ந்து கூறியவாறு. (2)

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல்உண்கண் வேய்த்தோ ளவட்கு. 1113

கூட்டுதலுற்ற பாங்கற்குத தலைமகன் தலைமகளது இயலபு கூறியது.

வேய்த்தோளவட்கு - வேய்போலும் தோளினையுடையவட்கு, மேனிமுறி – நிறம் தளிர் நிறமாயிருக்கும. முறுவல் முததம் – பல முததமாயிருக்கும், நாற்றம் வெறி - இயல்பாய நாறறம நறு நாற்றமாயிருக்கும், உண்கண் வேல் - உண் கண்களை வேலாயிருக்கும.

பெயரடையாதலும் ஓர இயல்பு கூறப்பட்டது. முறி, முறுவல் என்பன ஆகுபெயர். உருவகவகையால கூறினமையின், புனைந்துரையாயிற்று, நின்னும் கருதப்பட்டாளை அறியேன் என்று சேண்படுதத தோழிக்குத தலைமகன் சொலலியதூஉம் ஆம். (3)

காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாண்இழை கண்ஒவ்வேம் என்று. 1114

பாங்கற்கூட்டத்துச்சென்று சார்தலுறுவான் சொலலியது.

குவளை – குவளைப்பூக்கள்தாமும், காணின் – காண்டல் தொழிலையுடையவாயின், மாண் இழை கண் ஒவ்வேம் என்று

கவிழ்ந்து நிலன் நோக்கும் - மாண்ட இழையினை உடையாள் கண்களை யாம் ஒவ்வேம் என்று கருதி அங்காணினால் இறைஞ்சி நிலத்தினை நோக்கும்.

பண்பாளனையன்றித் தொழிலானும் ஒவ்வாது என்பான் 'காணின்' என்றும், கண்டால் அவ்வொவ்வாமையால் நாணுடைத்தாம் என்பது தோன்றக் 'கவிழ்ந்து' என்றும் கூறினான். காட்சியும் நாணும் இன்மையின் சொல்மாத்து வாளை நோக்கின என்பதாம். (4)

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை. 1115

பகற்குறிக்கண் பூஅணி கண்டு சொல்லியது.

அனிச்சப்பூக் கால் களையாள பெய்தாள - இவள் தன் மென்மை கருதாது அனிச்சப்பூவை முகிழ் களையாது சூடினாள்: நுசுப்பிற்கு நல்ல பறை படா - இனி இவள இடைக்கு நல்ல பறை களை ஒலியா.

அம முகிழ்ப்பாரம் பொருமையின் இடை முரியும், முரிந்தால் அதற்குச் செத்தாக்கு உரிய நெய்தற்பறையே படுவது என்ப தாம, மக்கட்கு உரிய சாக்காடும் பறைபடுதலும் இலக்கணக் குறிப்பால நுசுப்பின்மேல ஏறறப்பட்டன. (5)

மதியும் மடந்தை முகனும் அறியா பதியின் கலங்கிய மீன். 1116

இரவுக்குறிக்கண் மகிகண்டு சொல்லியது

மீன்-வானத்து மீன்கள, மதியும் மடந்தை முகனும் அறியா– வேறுபாடு பெரிதாகவும் தம் மதியினையும் எம் மடந்தை முகத் தினையும் இதுமதி இதுமுகம் என்று அறியமாட்டாது, பதியின் கலங்கிய - தம் நிலையினின்றும் கலங்கித் திரியாநின்றன.

ஓரிடதது நில்லாது எப்பொழுதும் இயங்குதல் பற்றிப் 'பதி யிற் கலங்கிய' என்றான். வேறுபாடு, வருகின்ற பாட்டால் பெறப் படும். இனி 'இரண்டனையும் பதியிற்கலங்காத மீன்கள அறியு மலலது கலங்கின மீன்கள அறியா' என்றுரைப்பினும் அமை யும். (6)

அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல மறுஉண்டோ மாதர் முகத்து. 1117

இதுவும் அது.

(அம்மீன்கள் அங்ஙனம் கலங்குதற்குக் காரணம் யாது?) அறுவாய் நிறைந்த அவிர் மதிக்குப்போல - முன் குறைந்தஇடம் வந்து நிரம்பியே விளங்கும் மதிக்கண்போல, மாதர் முகத்து மறு உண்டோ - இம் மாதர் முகத்து மறுவுண்டோ ?

இடம் - கலி. மகிக்கு என்பது வேற்றுமை மயக்கம். தேய்தலும் வளர்தலும் மறுவுடைமையும் இன்மை பற்றி வேறுபாடறியாதிருக்க அறிந்திலை என இகழ்ந்து கூறியவாறு. (7)

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லியேல்
காதலி வாழி மதி. 1118

இதுவும் அது.

மதி வாழி–மதியே வாழ்வாயாக; மாதர் முகம்போல ஒளி விட வல்லியேல காதலி - இம் மாதர்முகம்போல யான் மகிழும் வகை ஒளிவீச வல்லியாயின், நீயும் என் காதலியுடையையாதி.

மறு உடைமையின் அதுமாட்டாய், மாட்டாமையின் என்னல் காதலிக்கவும் படாய் என்பதாம். 'வாழி' என்பது இகழ்ச்சிக் குறிப்பு. (8)

மலர்அன்ன கண்ணுள் முகம் ஒத்தியாயின்
பலர்காணத் தோன்றல் மதி. 1119

இதுவும் அது.

மதி - மதியே, மலர் அன்ன கண்ணுள முகம ஒத்தியாயின் – இம் மலர்போலும் கண்ணையுடையாள் முகத்தை நீ ஒக்கவேண்டுதியாயின், பலர் காணத தோன்றல் – இதுபோல பான்காணத தோன்று; பலர் காணத் தோன்று தொழி.

தானே முகத்தின் நலம் முழுதும் கண்டு அனுபவித்தான் ஆகலின் ஈண்டும், பலர். காணததோன்றலி இழித்துக் கூறினன். தோன்றின் நினக்கு அவ் ஒப்பு உண்டாகாது என்பதாம. (9)

அணிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். 1120

உடன்போக்கு உரைத்த தோழிக்கு அதனது அருமைகூறி மறுத்தது.

அணிச்சமும் அன்னத்தின் தூவியும் - உலகதாரான் மென்மைக்கு எடுக்கப்பட்ட அணிச்சப் பூவும் அன்னப்புளனின் சிறகும் ஆகிய இரண்டும், மாதர் அடிக்கு நெருஞ்சிப்பழம - மாதரடிக்கு நெருஞ்சிப் பழம்போல வருத்தஞ் செய்யும.

முள வலிதாதலுடைமையின் 'பழம்' என்றான். இத் தன்மைத்தாய அடி "பாத்தி அன்னருடமிக் கூங்கல" (அகநா. களிற். 5) கீளையுடைய வெஞ்சுரத்தை யாங்ஙனம் கடக்கும் என்பது குறிப்பாற் பெறப்பட்டது. செம்பொருளே யன்றிக் குறிப்புப் பொருளும் அடிநலனழியாமையாகலின், இதுவும் இவ்அதிகாரத்ததாயிற்று. (10)

113. காதற் சிறப்பு உரைத்தல்

அஃதாவது தலைமகன் தன் காதல் மிகுதி கூறலும், தலைமகள் தன் காதல் மிகுதி கூறலும் ஆம். இது, புணர்ச்சியும் நலனும் பற்றி நிகழ்வதாகலின், புணர்ச்சிமகிழ்தல், நலம்புனைந்து உரைத்தல்களின்பின் வைக்கப்பட்டது.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வால்எயிறு ஊறிய நீர். 1121

இயற்கைப்புணர்ச்சி இறுதிக்கண் தலைமகன் தன்நயப்பு உணர்த்தியது.

பணிமொழி வால் எயிறு ஊறிய நீர் - இம் மெல்லிய மொழியினையுடையானது வாலிய எயிற்றிய நீர், *பாலொடு தேன்கலந் தற்று* – பாலுடனே தேனைக் கலந்த கலவைபோலும்.

'கலந்ததற்று' என்பதுவிகாரமாயிற்று; கலக்கப்பட்டதுஎன்ற வாறு. பாலொடுதேன் என்றஅதனால் அதன் சுவைபோலுஞ் சுவையினைஉடைத்து என்பதாயிற்று. எயிற்றிய என இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல நின்றது. வேறுவேறறியப் பட்ட சுவையவாய பாலும் தேனும் கலக்துழி அக் கலவை இன்னது என்று அறியலாகாத இன்சுவைத்தரம் ஆகலின், அது பொருளாகிய நீர்க்கும் எய்துவிக்க. (1)

உடம்பொடு உயிரிடை என்ன மற்றுஅன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு. 1122

பிரிவு அச்சம கூறியது.

உடம்பொடு உயிரிடை என்ன அன்ன - உடம்போடு உயிரிடை உளவாய நட்புக்கள எத்தன்மைய அத்தன்மைய; *மடந்தை யொடு எம்மிடை நட்பு*-இம் மடந்தையோடு எம்மிடைஉளவாய நட்புக்கள.

என்ன எனப் பன்மையாறகூறியது, இரண்டும் தொன்று தொட்டு வேறறுமையின்றிக் கலந்துவருதல், இன்ப துன்பங்கள ஒக்க அனுபவித்தல, இன்றியமையாமை என்றிவற்றை நோக்கி. தெய்வப் புணர்ச்சியாகலான் அதுபொழுது உணர்ச்சியிலளாகி யா ர் பின் உடையளாமன்றே, ஆயவழி இவன் யாவன்கொல் எனவும், என் கண் அன்புடையன் கொல எனவும், இன்னும் இவனைத தலைப்பெய்தல் கூடுங்கொல எனவும் அவள மனத்தின்கண் நிகழும. அந் நிகழவனவற்றைக் குறிப்பான் அறிந்து அவை நீரக் கூறியவாறு. 'என்னே' என்று பாடம் ஓதுவாரும் உளர். (2)

கருமணியிற் பாவாய்நீ போதாய்யாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம். 1123

இடந்தலைப்பாட்டின்கண் தலைமகள்மீக்கத்துச் சொல்லியது.

கருமணியிற் பாவாய் நீ போதாய் - என் கண்ணிற் கருமணியின் கண் உறையும் பாவாய், நீ அங்குநின்றும் போதருவாயாக; யாம் வீழும் திருநுதற்கு இடம் இல்லை - போதராகிருத்தியாயின் எம்மால் விரும்பப்பட்ட திருநுதலையுடையாட்கு இருக்க இடமில்லையாம்.

யான் காணுது அமையாமையின் இவள புறதுதுப் போகற் பாலளன்றி என்கண்ணுள இருக்காற்பாலள; இருக்குங்கால நின்னோடு ஒருக்கு இருக்க இடம்போதாமையின், நின்னினும் சிறந்த இடதனைக்கொடுதது நீ போதுவாயாக என்பதாம். (3)

வாழ்தல் உயிர்க்குஅன்னள் ஆயிழை சாதல்
அதற்குஅன்னள் நீங்கு மிடத்து. 1124

பகற்குறிக்கண் புணர்ந்துநீங்குவான் சொல்லியது.

ஆயிழை உயிர்க்கு வாழ்தல அன்னள் - தெரிந்த இழையினையுடையாள எனக்குப் புணருமிடதது உயிர்க்கு உடம்போடு கூடி வாழ்தலபோலும்; நீங்குமிடதது அதற்குச் சாதல் அன்னள - பிரியுமிடத்து அதற்கு அதலின் நீங்கிப் போதல போலும்.

எனக்கு என்பதும் புணருமிடத்து என்பதும் அவாய்நிலையான் வந்தன. வாழும் காலத்து வேற்றுமையின்றி வழிநிற்றலானும், சாம் காலதது வருததம் செய்தலானும், அவற்றை அவள புணர்வு பிரிவுகட்கு உவமையாக்கினள். (4)

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்புஅறியேன்
ஒள்அமர்க் கண்ணுள் குணம். 1125

ஒருவழித்தணந்து வந்த தலைமகன் நீயிர் தணந்தஞான்று எம்மை உளளியும் அறிதிரோ? என்ற தோழிக்குச் சொல்லியது.

ஒள அமர்க் கண்ணுள குணம் யான் மறப்பின் - உளளுவன் - ஒள்ளியவாய் அமரைச் செய்யும் கண்ணினையுடையாள் குணங்களை யான் மறந்தேனையின், நினைப்பேன், மறப்பு அறியேன் - ஒருபொழுதும் மறத்தலையறியேன், ஆகலான் நினைத்தலையும் அறியேன்.

மன் - ஒழியிசைக்கண் வந்தது. குணங்கள - நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலாயின.

இத்துணையும் தலைமைகன் கூற்று, மேல் தலைமகள் கூற்று. ()

கண்ணுள்ளில் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர்எம் காத லவர். 1126

ஒருவழித்தணப்பின்கண் தலைமகனைத் தோழி இயற்பழிக்கும் என்று அஞ்சி அவள் கேட்பத் தன்னுளளே சொல்லியது:

'தாம் காணுமை பற்றிச் சேய்மைக்கண் போயினர் என்று கருதுவார் கருதுக' எம் காதலர் கண்ணுளளில் போகார் - எம் முடைய காதலர் எம் கண்ணகத்து நின்றும் போகார்; இமைப் பின் பருவரார் - யாம் அறியாது இமைததேமாயின் அதனல் வருந்துவதும் செய்யார், நுண்ணியர் - ஆகலான் காணப்படா நுண்ணியர்.

இடைவிடாத நினைவின் முதிர்ச்சியான் எப்பொழுதும் முன்னே தோன்றலின் 'கண்ணுளளில் போகார்' என்றும், இமைததழியும அது நிற்றலான் 'இமைப்பின் பருவரார்' என் றும் கூறினள. (6)

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும் எழுதேம் கரப்பாக் கறிந்து. 1127

இதுவும் அது.

காதலவா கண் உளளாராகக் கண்ணும எழுதேம - காதலர் எப்பொழுதும எம் கண்ணின் உளளார் ஆகலான் கண்ணினை அஞ்சனததால எழுதுவதும செய்யேம், கரப்பாக்கு அறிந்து - அததுணைக் காலமும் அவா மறைததலை அறிந்து.

இழிவுசிறப்பு உம்மை மாற்றப்பட்டது. கரப்பாக்கு என்பது வினைப்பெயர. வருகின்ற வேபாக்கு என்பதும் அது. யான் இடை ஈடின்றிக் காண்கினறவரைப் பிரிததா என்று கருதுமாறுஎன்னை என்பது குறிப்பெச்சம.

நெஞ்சத்தார் காத லவராக வெய்துஉண்டல் அஞ்சுதும் வேபாக்கு அறிந்து. 1128

இதுவும அது.

காதலர நெஞ்சததாராக வெய்து உண்டல் அஞ்சுதும் - காத லர் எம நெஞ்சினுளளார் ஆகலான் உண்ணுங்கால வெய்தாக உண்டலை அஞசாநின்றேம, வேபாக்கு அறிந்து - அவா அதனுள் வெய் துறலை அறிந்து.

எப்பொழுதும் எம் நெஞ்சின்கண் இருக்கின்றவரைப் பிரிந் தார் என்று கருதுமாறென்னை என்பது குறிப்பெச்சம. (8)

இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே ஏதிலர் என்னும்இவ் ஊர். 1129

வரைவிடை வைத்துப் பிரிவின்கண் தலைமகளாற்றுதற் பொருட்டுத் தோழி தலைமகனை இயற்பழித்தவழி அவள இயற் பட மொழிந்தது.

இமைப்பிற் கரப்பாக்கு அறிவல் - என்கண் இமைக்குமாயின் உள்ளிருக்கின்ற காதலர் மறைதலை அறிந்து இமையேன்; அனைத்

நிற்கே ஏதிலர் என்னும் இவ்வூர்-அவ்வளவிற்கு அவரைத் துயிலா கோய்செய்தார் அன்பிலர் என்று சொல்லா நிற்கும் இவ் ஊர்.

தன் கருத்து அறியாமைபற்றிப் புலந்து சொல்லுகின்றுள ஆகலின், தோழியை வேறு படுத்து இவ் ஊர் என்றுள. ஒரு பொழுதும் பிரியாதவரைப் பிரிந்தார் என்று பழிக்கற்பாலீயல்லீ என்பதாம். (9)

உவந்துஉறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துஉறைவர் ஏதிலர் என்னும்இவ் ஊர். 1130

இதுவும் அது.

என்றும் உளளத்துள் உவந்து உறைவர் - காதலர் எஞ்ஞான்றும் என்உளளத்துள்ளே உவந்து உறையாநிற்பர்; இகந்து உறைவர் ஏதிலர் என்னும் இவ் ஊர் - அதனை அறியாது அவரைப் பிரிந்து உறையாநின்றூர், அன்பிலர் என்று சொல்லாநிற்கும் இவ் ஊர்.

'உவந்து உறைவர்' என்றதனால அன்புடைமை கூறினுள. பிரியாமையும் அன்பும் உடையாரை இலா எனப் பழிக்கற்பாலீயல்லீ என்பதாம். (10)

114. நாணுத்துறவு உரைத்தல்

அஃதாவது சேட்படுக்கப்பட்டு ஆற்றுளைய தலீமகன் தோழிக்குத தன் நாண் துறவு உரைத்தலும், அறக்தோடு நிற்பிக்க லுற்ற தலீமகள அவட்குத தன் நாண்துறவு உரைத தலும் ஆம். இது காதல் மிக்குழி நிகழவது ஆகலின், காதற சிறப்பு உரைததலின் பின் வைக்கப்பட்டது.

காமம் உழந்து வருந்தினர்க்கு ஏமம் மடல்அல்லது இல்லீ வலி. 1131

சேட்படுக்கப்பட்டு ஆற்றுளைய தலீமகன் சொலலியது.

காமம் உழந்து வருதினர்க்கு - அரியராய மகளிரோடு காமததை அனுபவிதததுப் பின் அதபெரது துன்புறற ஆடவர்க்கு, ஏமம் மடல் அலலது வலி இலீலை-பண்டும் ஏமமாய் வருகின்ற மடல அல்லத, இனி எனக்கு வலியாவதிலீலை.

ஏமமாதல் அத துன்பம் நீங்கும வகை அவ் அனுபவத்தினைக் கொடுத்தல. வலி - ஆகுபெயர். பண்டும் ஆடவராயினூ இன்பம் எய்திவருகின்றவாறு நிற்க, நின்னை அதற்குத் துணை என்று கருதிக் கொன்னே முயன்ற யான் இதுபொழுது அலலாமையை அறிந்தேன் ஆகலான் இனி யானும் அவ்வாற்றுன் அதனை எய்து வல் என்பது கருத்து. (1)

நோனு உடம்பும் உயிரும் மடல் ஏறும்
நாணினை நீக்கி நிறுத்து. 1132

நாணுடைய நுமக்கு அது முடியாது என மடல்விலக்கல் உற்றுக்குச் சொல்லியது.

நோனுடம்பும் உயிரும் மடல் ஏறும் - அவ் வருத்தத்தினைப் பொருத உடமபும உயிரும் அதற்கு ஏமமாய மடலமாவினை ஊரக் கருதாநின்றன, நாணினை நீக்கி நிறுத்து - அதனை விலக்குவதாய நாணினை அகற்றி.

'வருந்தினாக்கு' என மேல் வந்தமையின் செயப்படுபொருள் ஈண்டுகூறாதுஅயினர். மடல்-ஆகுபெயர். நீக்கிநிறுத்து என்பது ஒரு சொல்நீர்மைத்து. அதுவும் இது பொழுது நீங்கிற்று என்பான், 'உடம்பும் உயிரும்' என்றான். அவைதாம் தம்முள நீங்காமற் பொருட்டு மடலேறும் என்றது அவள தன் ஆற்றுமையறிந்து கடிதிற் குறைநேர்தல் நோக்கி. (2)

நாணெடு நல்லாண்மை பண்டுஉடையேன் இன்றுஉடையேன்
காமுற்றார் ஏறும் மடல். 1133

நாணேயன்றி நலலாண்மையும் உடைமையின் முடியாது என்றுட்குச் சொலலியது.

நாணெடு நல்லாண்மை பண்டு உடையேன் - நாணும் மிக்க ஆண்தகைமையும் யான் பண்டுஉடையேன், காமுற்றார் ஏறும் மடல் இன்று உடையேன் - அவை காமததான் நீங்குதலான், அக் காமமிக்கார் ஏறுமம மடலினை இன்று உடையேன்.

நாண் - இழிவாயினசெய்தற்கண் விலக்குவது. ஆண்மை - ஒன்றற்கும் தளராதுநிற்றல். அவை பண்டு உளனன, இன்று உளளது இதுவேயாகலின் கடிதின்முடியும் என்பதாம். (3)

காமக் கடும்புனல் உய்க்குமே நாணெடு
நல்லாண்மை என்னும் புணை. 1134

நாணும் நல்லாண்மையும் காமவெளளத்திற்குப் புணை யாகலின் அதனால அவை நீங்குவனஅல்ல என்றுட்குச் சொல்லியது.

நாணெடு நல்லாண்மை என்னும் புணை - யான் தன்னைக் கடத்தற்குக் கொண்ட நாணும் நலலாண்மையும் ஆகிய புணைகளை, காமக் கடும் புனல உய்க்குமே - என்னிற் பிரிததுக் காமமாகிய கடிய புனல் கொண்டுபோகா நின்றது.

அது 'செய்யமாட்டாத ஏணைப்புனலின் நீக்குதறகு, 'கடும் புனல்' என்றான். இப் புனற்கு அவை புணையாகா; அதனன் அவை நீங்கும் என்பதாம். (4)

தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர். 1135

இவ் ஆற்றுமையும் மடலும் நுமக்கு எவ்வாறு வந்தன என்றோட்குச் சொல்லியது.

மாலை உழக்கும் துயர் மடலொடு - மாலைப்பொழுதின்கண் அநுபவிக்கும் துயரினையும், அதற்கு மருந்தாய மடலினையும் முன் அறியேன், தொடலைக் குறுந்தொடி தந்தாள - இதுபொழுது எனக்கு மாலைபோலத் தொடர்ந்த சிறு வளையினை உடையாள தந்தாள்.

காமம் ஏனைப்பொழுதுகளினும் உளதேனும் மாலைக்கண் மலர்தல உடைமையின் 'மாலை உழக்கும் துயர' என்றும், மடலும் அதுபற்றி வந்ததாகலின் அவ இழிவும் அவளால் தரப்பட்டது என்றும், அவளதான் நீ கூறியதே கூறும இமையள என்பது தோன்ற 'தொடலைக் குறுந்தொடி' என்றும் கூறினன். அப்பெயர் உவமைதொகைப்புறதத்துப் பிறந்த அன்மொழித தொகை. இவை அவள தந்தனவாகலின் நின்னை நீங்கும் என்பது கருத்து. (5)

மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படல்ஒல்லா பேதைக்குஎன் கண். 1136

மடலூரும்பொழுது இறைக்கும் கழிந்தது என்றோட்குச் சொல்லியது.

பேதைக்கு என் கண் படல ஒலலா - நின்பேதைகாரணமாக என்கண்கள ஒருகாலுங் துயிறலிப்பொருந்தா, யாமதது மன்ற மடலூர்தல் உளளுவேன் – அதனால எலலாரும் துயிலும் இடையாமத்தும் யான் இருநது மடலூர்தலேயே கருதாநிற்பேன்.

பேதை என்றது பருவம் பற்றி அன்று, மடமை பற்றி. இனிக் குறைமுடிப்பது நானே என வேண்டா என்பதாம். (6)

கடல்அன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்
பெண்ணிற் பெருந்தக்கது இல். 1137

பேதைக்கு என்கண் படல் ஒலலா என்பது பற்றி அறிவில ராய மகளிரினும் அஃது உடையராய ஆடவரன்றே ஆற்றற் பாலர் என்றோட்குச் சொல்லியது.

கடல் அன்ன காமம் உழந்தும் மடல் ஏறாப் பெண்ணின் - கடல்போலக் கரையற்ற காமநோயினை அனுபவிததும் மடலூர்தலைச்செய்யாது ஆற்றியிருக்கும் பெண் பிறப்புப்போல, பெருந்தக்கது இல் - மிக்க தகுதியுடைய பிறப்பு உலகத்து இல்லை.

பிறப்பு விசேடத்தால் அவ் அடக்கம் எனக்கு இல்லையாகாின்றது; நீ அஃது அறிகின்றிலை என்பதாம்.

இத்துணையும் தலைமகன் கூற்று. மேல் தலைமகள் கூற்று. (7)

நிறை அரியர் மன் அளியர் என்னுது காமம்
மறைஇறந்து மன்று படும். 1138

காப்புச் சிறை மிக்குக் காமம்பெருகியவழிச் சொல்லியது.

நிறை அரியர் (என்னாது) - இவர் நிறையால் நாம் மீதூர்தற்கு அரியர் என்று அஞ்சுதல் செய்யாது, மன் அளியர் என்னாது - மிகவும் அளிக்கத்தக்கார் என்று இரங்குதல் செய்யாது, காமம் மறை இறந்து மன்றுபடும் - மகளிர் காமமும் அவர் மறைத்தலைக் கடந்து மன்றின் கண்ணே வெளிப்படுவதா யிருக்கது.

'என்னாது' என்பது முன்னும் கூட்டி மகளிர் என்பது வருவிக்கப்பட்டது. எச்ச உம்மை விகாரத்தால் தொக்கது. மன்று என்பது தந்தை தன்னையரை நோக்கி. உலகத்துப் பெண்பாலார் காமத்து இயல்பு கூறுவாளபோன்று, தன் காமம் பெருகிய வாறும் இனி அறத்தோடு நிற்றல் வேண்டும் என்பதும் குறிப்பால் கூறியவாறுயிற்று. (8)

அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்
மறுகின் மறுகும் மருண்டு. 1139

இதுவும் அது.

எல்லாரும் அறிகிலார் என்று - யான் முன் அடங்கி நிற்றலான் எலலாரும் என்னை அறிதல் இலர், இனி அவ்வாறு நில்லாதயானே வெளிப்பட்டு அறிவிப்பல என்று கருதி, என் காமம் மறுகில் மருண்டு மறுகும்-என் காமம் இவ் ஊர் மறுகின்கண்ணே மயங்கிச் சுழலாநின்றது.

மயங்குதல் - அமபலாதல். மறுகுதல் - அலராதல். அம்பலும் அலருமாயிற்று, இனி அறத்தோடு நிற்றல் வேண்டும் என்பதாம். அறிவிலார் என்பதூஉம் பாடம். (9)

யாம்கண்ணிற் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு. 1140

செவிலிக்கு அறத்தோடு நின்றுவைத்து 'யான் நிற்குமாறு என்னை' என்று நகையாடிய தோழியொடு புலந்து தன்னுளளே சொலலியது.

யாம் கண்ணிற் காண அறிவில்லார் நகுப - யாம் கேட்குமாறு மன்றிக் கண்ணுற் காணுமாறு எம்மை அறிவிலார் நகாநின்றீர், யாம் பட்ட தாம படாவாறு - அவர் அங்ஙனஞ் செய்கின்றது யாம் உற்றநோய்களை தாம் உறுமையான்.

கண்ணின் என்றது முன் கண்டறியாமை உணரநின்றது. அறத்தொடு நின்றமை அறியாத வரைவு மாட்சிமைப்படுகின்றி

ளள் எனப்புலக்கின்றாள் ஆகலின், ஏதிலாளாக்கிக் கூறினாள். இது, நகாகின்று சேண்படுக்குந்தோழிக்குத் தலைமகன் கூறியதாம் கால், அதிகாரத்திற்கு ஏலாமை அறிக. (10)

115. அலர் அறிவுறுத்தல்

அஃதாவது களவொழுக்கம் வேண்டிய தலைமகன் பிறர்கூறுகின்ற அலர் தனக்காகின்றவற்றைத் தோழிக்கு அறிவுறுத்தலும், வரைவாக உடன்போக்காக ஒன்றுவேண்டிய தலைமகளும் தோழியும் அவ் அலரை அவன்தனக்கு அறிவுறுத்தலும ஆம். இது நாணுத் துறந்தவழி நிகழ்வதாகலான், நாணுத்துறவு உரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

அலர்எழ ஆர்உயிர் நிற்கும் அதனைப்
பலர்அறியார் பாக்கியத தால். 1141

அல்ல குறிப்பிட்ட பிற்றைஞான்று வந்த தலைமகனைத் தோழி அலாகூறி வரைவுகடாயவழி அவன் சொலலியது.

அலர் எழ ஆர் உயிர் நிற்கும் மடந்தையொடு எம்மிடை நட்பு ஊரின்கண் அலராயெழுதலான் அவளைப் பெறுது வருந்தும் என் அரிய உயிர் பெற்றதுபோன்று நிலை பெறும், அதனைப் பாக்கியத் தால் பலர் அறியார் - அந் நிலை பேற்றைத தெயவததால் யானே அறிவ தலலது கூறுகின்ற பலரும் அறியார்.

அல்ல குறிப்பட்டுத் தலைமகளை எய்தப்பெறுத வருத்தமெல் லாம் தோன்ற அரிய உயிர் என்றும், அவனம் அறியாளை எளியளாக்கி எடுக்கின்றமையின் அஃது அவ் ஆருயிர்க்குப் பற்றுக் கோடாக நின்றது என்பான் 'அலர் எழ ஆருயிர் நிற்கும்' என்றும், 'பற்றுக் கோடாதலை அவ் ஏதிலார் அறியின்றாற்றது ஒழிவர்; ஒழியவே ஆருயிர் போம்; ஆகலான் அவரறியாதொழிகின்றது தெய்வததான்' என்றும் கூறினன். முற்று உம்மை விகாரத்தால் தொக்கது. (1)

மலர்அன்ன கண்ணாள் அருமை அறியாது
அலர்எமக்கு ஈந்ததுஇவ் ஊர். 1142

இதுவும் அது.

மலர் அன்ன கண்ணாள் அருமை அறியாது - மலர்போலும் கண்ணை யுடையாளது எயதற்கு அருமை அறியாது, இவ் ஊர் அலர் எமக்கு ஈந்தது - இவ் ஊர் அவளை எளியளாக்கி அவளோடு அலர் கூறலை எமக்கு உபகரித்தது.

அருமை - அலலதூறிப்பாட்டானும் இடையிடுகளரானும் ஆயது. ஈந்தது என்றான் தனக்குப் பற்றுக்கோடாகலின், அலர் கூறுவாரை அவர் செய்த உதவிபற்றி 'இவ் ஊர்' என்றான். (2)

உருஅதோ ஊர்அறிந்த கௌவை அதனீப்
பெருஅது பெற்றன்ன நீர்த்து. 1143

இதுவும் அது.

ஊர் அறிந்த கௌவை உருதோ - எங்கட்குக் கூட்டம் உண்மை இவ் ஊர் அறிதலான் விளைந்த அலர் எனக்குறுவ தொன்றன்றே, அதனைப் பெருது பெற்றன்ன நீர்த்து - அது கேட்ட என்மனம் அக் கூட்டத்தைப் பெருதிருந்தே பெற்றுப் போலும் நீர்மையுடைத்து ஆகலான்.

பெற்றன்னநீர்மை பெற்றவழி உளதாம் இன்பம் போலும் இன்பமுடைமை. 'நீர்த்து' என்பதற்கு ஏற்ற 'மனம்' என்னும் வினைமுதல் வருவிக்கப்பட்டது.

கவ்வையால் கவ்வித்து காமம் அதுஇன்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து. 1144

இதுவும் அது.

காமம் கவ்வையால் கவ்வித்து - என் காமம் இவ் ஊர் எடுக்கின்ற அலராலே அலர்தலியுடைத்தாயிற்று; அது இன்றேல் தன்மை இழந்து தவ்வென்னும் - அவ் அலர் இல்லையாயின், தன் இயல்பு இழந்து சுருங்கும்.

அலர்தல் - மேன்மேல் மிகுதல். செவ்வையுடையதனைச் செவ்வித்து என்றற்போலக் கவ்வையுடையதனைக் 'கவ்வித்து' என்றார். இயல்பு - இன்பம் பயத்தல். தவ்வென்னும் என்பது குறிப்பு மொழி; " நூலகால் யாதத மாலை வெண்குடை, தவ்வென் றனைஇத் தாழ்துளி மறைப்ப " (நெடுநல். 184 135) என்புழியும் அது.

களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது 1145

இதுவும் அது.

களித்தொறும் கள உண்டல் வேட்டற்று - களளுண்பார்க்குக் களிக்குந்தோறும் கள்ளுண்டல் இனிதாமாறுபோல, காமம் வெளிப்படுந்தோறும் இனிது - எனக்குக் காமம் அலராந்தோறும் இனிதாகா நின்றது.

வேட்கப்பட்டற்றால் என்பது 'வேட்டற்றால்'என நின்றது. வேட்கை மிகுதியால் அலரும் இன்பஞ்செய்யாநின்றது என்பதாம். (5)

கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று. 1146

இடைபீடுகளானும் அல்லகுறியானும் தலைமகனை எய்தப் பெறுத தலைமகள அவன் சிறைப்புறத்தானைக் தோழிக்குச் சொல்லுவாளாய் அலரறிவுறீஇ வரைவுகடாயது.

கண்டது ஒருநாள் - யான் காதலரைக் கண்ணுறப்பெற்றது ஒரு ஞான்றே. அவர் நிங்களைப் பாம்புகொண்டற்று - அதனை அவர் அவ்வாளிற்றன்றித் நிங்களைப்பாம்பு கொண்ட அவர் போன்று உலகெங்கும் பரந்தது.

காரியத்தைக் காரணமாக உபசரித்தது. 'பாம்புகொண்டற்று' என்றுள. இருவழியும் மன்னும் உம்மையும் அசைகிலை. காட்சியின்றியும் அவர்பரக்கின்ற இவ் ஒழுக்கம் இனியாகாது, வரைதல் கோடல் வேண்டும் என்பதாம். (6)

ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளுமிஃ தோ. 1147

வரைவுநீட ஆற்றாளாய தலைமகளைத் தலைமகன் சிறைப் புறத்தானாதல் அறிந்த தோழி ஊரவர் அலரும் அன்னைசொல லும் நோக்கி ஆறறல்வேண்டும் எனச சொலலெடுப்பியவழி அவள சொல்லியது.

இக் நோய் - இக் காமநோயாகிய பயிர், ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல் நீராக நீளும் - இவ் ஊரின்மகளிர் எடுக்கின்ற அலர் எருவாக, அது கேட்டு அன்னை வெகுண்டுசொல்லுகின்ற வெஞ்சொல் நீராக, வளராநின்றது.

'ஊரவர்'என்பது தொழிலான் அணைழித்துநின்றது. ஏக தேச உருவகம். சுருங்குதற்கு ஏதுவாவனதாமே விரிதற்கு ஏதுவாகாநின்றன என்பதாம். வரைவாறறல பயன். (7)

நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்ரூல் கௌவையால்
காமம் நுதுப்பேம எனல். 1148

இதுவும் அது.

கௌவையால் காமம் நுதுப்பேமெனல் - ஏதிலார் எடுக்கின்ற அலரால் நாம் காமத்தை அவித்தும் என்பது கருதுதல் - நெயயால் எரி நுதுப்பேம் என்றற்று - நெயயால் எரியை அவித்தும் என்று கருதலோடு ஒக்கும்.

மூன்றனுருபுகள கருவிக்கண் வந்தன. இளர்தற் காரணமாய அலரால் அவித்தல கூடா என்பதாம். (8)

அலர்நாண ஒல்வதோ அஞ்சல்ஓம்பு என்ரூர்
பலர்நாண நீத்தக் கடை. 1149

வரைவிடைவைத்துப் பிரிவின்கண் ஆற்றுளாய தலைமகள அவன் வந்து சிறைப்புறத்தானாதல அறிந்து அலரஞ்சி ஆற்றல் வேண்டும என்ற தோழிக்குச சொல்லியது.

அஞ்சல ஓம்பு என்ரூ பலர் நாண நீதத்கடை - தம்மை எதிர்ப்பட்டஞான்று நின்னிற்பிரியின் அஞ்சல ஓம்பு என்றவர் தாமே இன்று கண்டார் பலரும் நாணுமவகை நமமைத்துறக்கபின்,

அலர் நாண ஒல்வதோ - நாம் எதிலார் கூறும் அலருக்கு நாணக் கூடுமோ? கூடாது.

'நாண' என்னும் வினையெச்சம் 'ஒல்வது' என்னும் தொழிற் பெயருள ஒல்லுதல தொழிலோடு முடிந்தது. கண்டார் நாணும நிலைமையமாய யாம் நாணுதல் யாண்டையது என்பதாம. (9)

தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்
கௌவை எடுக்கும்இவ் வூர். 1150

தலைமகன் சிறைப்புறத்தாலுகத் தோழி தலைமகட்குச் சொலலுவாளாய் அலரறிவுறீஇ அவன் உடன்போக்கு நயப் பசசொலலியது.

யாம் வேண்டும்கௌவை இவ் ஊர் எடுக்கும் - உடன்போகற்கு ஏதுவாகல் நோக்கி யாம் பணிட விருமபுவதாய அலரை இவ் ஊர் தானே எடாநின்றது, காதலர் தாம வேண்டின் கலகுவா - இனிக் காதலர்தாமம் யாம் வேண்டியக்கால அதனை இனிதின் நேர்வர், அதனால இவ் அலா நமக்கு நன்ரு வருதது.

எச்ச உமமை விகாரததால தொக்கது. நம்நண்காதல் உடைமையின் மருர் என்பது தோறற 'காதலர்' என்ரார. இவ் இருபது பாட்டும் புணர்தல் நிமிததம. (10)

களவு இயல் முற்றும்.

—:o:—

கற்பு இயல்

—:o:—

இனி,கற்புப் பதினெட்டு அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் பிரிவு ஆற்றுமை கூறுகின்றார்.

116. பிரிவு ஆற்றுமை

அஃதாவது வரைந்தெய்தியபின் தலைமகன் அறம் பொருள இன்பங்களின் பொருட்டுச் சேயிடையிலும் ஆயிடை யினும் தலைமகளை பிரிகதுசெலலும், செலலும் ஞானறு அப் பிரிவின அவள ஆற்ருளாம்தன்மை. அஃது ஈண்டுப் பிரிவு உணர்தறிய தலைமகறகுத தோழி கூறலும், அவள தனக்குத் தலைமகள தானே அவன் குறிப்பான் உணாருது கூறலும், பிரிவுணர்தறியவழிக் கூறலும, தலைமகன் பிரிகதுழி ஆற்று விக்கும் தோழிக்குத் தலைமகள மறுத்துக் கூறலும் என கால்வகையால கூறப்படும்.

செல்லாமை உண்டேல் எனக்குஉரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை. 1151

பிரிந்து கடிதின் வருவல் என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

செல்லாமை உண்டேல் எனக்கு உரை - நீ எம்மைப் பிரியாமை உண்டாயின் அதனை எனக்குச் சொல், மற்று நின் வல்வரவு வாழ்வார்க்கு உரை - அஃதொழியப் பிரிந்துபோய் விரைந்து வருதல் சொல்வையாயின் அதனை அப்பொழுது உயிர்வாழ்வார்க்குச் சொல்.

தலைமகளை ஒழித்து எனக்கு என்றாள், 'தான் அவள' என்னும் வேற்றுமை இன்மையின். அக்காலமெல்லாம் ஆறறியிருந்து அவ்வரவு காணவல்லளலலள் ; பிரிந்தபொழுதே இறந்து படும் என்பதாம். அழுங்குவித்தல் - பயன். இதனைத் தலைமகள் கூற்றாக்கி உரைப் பாரும் உளர். (1)

இன்கண் உடைத்துஅவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு. 1152

பிரிவு தலைமகன் குறிப்பான் அறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

அவர் பார்வல் இன்கண் உடைத்து - தழையும் கண்ணியும் கொண்டு பின்னின்ற ஞான்று அவர் நோக்குமாததிரமும் புணர்ச்சி குறித்தமையான் நமக்கு இன்பமுடைததாயிருக்கும், புணர்வு பிரிவஞ்சும் புன்கண் உடைத்து - இன்று அப் புணாசசி தான் நிகழாநிறகவும் அது பிரிவர் என்று அஞ்சும் அச்சததினை உடைத்தாயிற்று : அவரன்பின் நிலைமை இது.

'பார்வல்' என்றதனாதல் புணர்ச்சிபெறாத பின்னிலைக்காலம பெறப்பட்டது. புன்கண் என்னும் காரணப்பெயர் காரியத்தின் மேலாயிற்று. அவ் அச்சத்தினை உடைத்தாதலாவது "முளளுறழ் முளையெயிற்று அமிழதூறுந் தீ நீரைக்—களளினும் மகிழசெய்யும் என உரைததும்—அமையார் என் ஒளளிழை திருத்தும்" (கலித. பாலை. 3) பண்டையிற் சிறப்பால் அவன் பிரிதற்குறிப்புக் காட்டி அச்சம் செய்தலுடைமை. அழுங்குவித்தல் - பயன். (2)

அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவுஓர் இடத்துஉண்மை யான். 1153

இதுவும் அது.

அறிவு உடையார் கண்ணும் - பிரியேன் என்ற தம்சொல்லும் நம் பிரிவாற்றாமையும் அறிதலுடையராய காதலர்கண்ணும், ஓர் இடத்துப் பிரிவு உண்மையான் - ஒரோவழிப் பிரிவு நிகழதலான், தேற்றம் அரிது - அவர் சொல்லும் தலையளியும்பற்றி நம்மாட்டு அன்புடையர் எனத் தேறும்தேற்றம் அரிதாயிருந்தது.

அரோ -அசைநிலை. உம்மை - உயர்வுசிறப்பின்கண் வந்தது.

அளித்துஅஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு. 1154

இதவும் அது.

அளித்து அஞ்சல் என்றவர் நீப்பின் - எதிர்ப்பட்டஞான்றே தலேயளி செய்து 'நின்னிற்பிரியேன் அஞ்சல' என்றவர்தாமே பின் பிரிவராயின், தெளித்த சொல் தேறியார்க்குத் தவறு உண்டோ - அவர்க்கன்றி அவர் தெளிவித்த சொலலே மெய்யெனத் தெளிந்தார்க்குக் குற்றம உண்டோ ?

'தேறியார்' என்பது தன்னேப் பிறர்போற்கூறல். சொல்லும் செயலும் ஒவ்வாமைக்குறறம் அவர்க்கு எயதும், அஃது எய்தா வகை அழுங்குவி யென்பது கருதது. (4)

ஓம்பின் அமைந்தார் பிரிவஓம்பல் மற்றுஅவர்
நீங்கின் அரிதால் புணர்வு. 1155

இதுவும் அது.

ஓம்பின் அமைக்தார் பிரிவு ஓம்பல் - என்னுயிரைச் செல்லா மல் காதலியாயின், அதனே ஆளுதற்கு அமைகதாருடைய செல வினே அழுங்குவிப்பாயாக ; மற்று அவர் நீஙகின் புணர்வு அரிது - அழுங்குவிப்பாரின்றி அவர் செலவராயின் அவரால ஆளப்பட்ட உயிரும செலலும் ; சென்ருல், பின் அவரைக்கூடுதல் எனக்கு அரிதாம.

ஆளுதற்கு அமைதல் - இறைவராதற்குத் தெய்வத்தால் ஏற் புடையராதல. மற்று - வினேமாற்றின்கண் வருவது. (5)

பிரிவுஉரைக்கும் வன்கண்ண ராயின் அரிதுஅவர்
நல்குவர் என்னும் நசை. 1156

தலேமகன் பிரிவுணர்த்தியவாறு வந்து சொல்லிய தோழிக் குச் சொல்லியது.

அவர் பிரிவு உரைக்கும் வன்கண்ணராயின் - நம் கவவுக் கடுமையறிந்த தலேவர்தாமே நம்முன்னின்று தம் பிரிவினே உணர்த் தும் வன்கண்மை உடையராயின், நல்குவர் என்னும் நசை அரிது- அததன்மையார் பின்பு நம் ஆற்ருமை அறிந்து வந்து தலேயளி செய்வர் என்று இருக்கும் ஆசை விடப்படும்.

அருமை - பயன்படுதல இல்லாமை, கூடியிருந்தே அன்பின் றிப் பிரிவு எண்ணுதலும் உணர்த்தலும் வலலராயினர் பிரிகது போய் அன்புடையராய் நம்மை நினேதலவந்து நல்குதல் யாண்டை யது என்பதூம். அழுங்குவித்தல் பயன். (6)

துறைவன் துறந்தமை தூற்ருெகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளே. 1157

இதுவும் அது.

துறைவன் துறந்தமை - துறைவன் என்னைப் பிரியலுற்ற மையை, முன்கை இறை இறவாகின்றவளே தூற்றுகொல் - அவன் உணர்த்தாமல் தாமே உணர்ந்து என்முன்கையின் இறைபினின்றும் கழலாகின்ற வகைகள எனக்கு அறிவியாவோ, அவன் உணர்த்த உணர்ந்துவந்து நீ அறிவித்தல் வேண்டுமோ ?

முன்னே நிகழ்தலை மையின் 'துறந்தமை' என்றும், கேட்ட தோழியான் மெலிந்து ஆற்றுமையின் 'இறவாகின்ற' என்றும் கூறினள். அழுங்குவித்துவந்த கூற்றம்போலே யல்லலாய் நீயும் இவ் வகைகள் செய்தெனவே செய்தாய் எனப் புலந்து கூறிய வாறு. (7)

இன்னாது இனன் இல்லூர் வாழ்தல் அதனினும்
இன்னாது இனியாப் பிரிவு. 1158

இதுவும் அது.

இனன் இல் ஊர் வாழ்தல் இன்னாது-மகளிர்க்குத் தம் சுற்றிப்பு அறியும்தோழியர் இலாத வேற்றூரின்கண் வாழ்தல் இன்னாது; இனியார்ப்பிரிவு அதனினும இன்னாது - அதன்மேலும் தம் காதலரைப் பிரிதல் அதனினும் இன்னாது.

தலைவன் செலவினை அழுங்குவித்து வாராது உடன்பட்டு வந்தமைபற்றிப் புலக்கின்றுளாகலின் 'இனன் இல ஊர்' என்றுள. உலகியல் கூறுவாளபோன்று தனக்கு அவ் இரண்டும் உண்மை கூறியவாறு. (8)

தொடின்சுடின் அல்லது காமநோய் போல
விடின்சுடல் ஆற்றுமோ தீ. 1159

காமம் தீயேபோன்று தான்கின்ற இடத்தைச் சுடுமாகலான் நீ ஆற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

நீத் தொடின் சுடின் சுடலல்லது - நீத் தன்னைத்தொட்டாற் சுடுமாயின் சுடுதலல்லது, காமநோய்போல விடின் சுடல் ஆற்றுமோ - காமமாகிய நோய் போலத் தன்னை அகன்றால் தப்பாது சுடுதலை வற்றோ! மாட்டாது.

சுடுமாயின் என்பது மந்திர மருந்துகளான் தப்பிக்கப்படாதாயின் என்றவாறு. காமத்திற்கு அதுவும் இலதே என்பாள வாளா 'சுடல்' என்றுள. அகறல்-துகராமை. சுடல் என்பது முன்னும் கூட்டப்பட்டது. நீயினும் கொடியதன்னையான் ஆற்றுமாறு என்னை என்பதாம். (9)

அரிதுஆற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவுஆற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர் 1160

தலைவியர் பலரும் பிரிவாற்றியிருப்பர், அது நீ செய்கின்றிலை என்ற தோழிக்குச் சொல்லியது.

நீ சொல்லுகின்ற தொக்கும், அரிது ஆற்றி அல்லல்நோய் நீக்கி - பிரிவுணர்த்தியவழி அதற்கு உடம்பட்டுப் பிரிக்கால் நிகழும் அலல நோயினையும் நீக்கி, பிரிவு ஆறறிப் பின் இருந்து வாழ்வார் பலர் - பிரிந்தால் அப் பிரிவுதன்னையும் ஆற்றி பின்னும் இருந்து உயிர்வாழும மகளிர் உலகத்துப் பலர்.

பண்டையிற்சிறப்பத் தலையளிபெற்று இன்புறுகின்ற எல்லைக் கண்ணே, அஃது இழந்து தன்புறுதற்கு உடம்படுதல் அரிய தொன்றுகலின், அரியதனைச் செய்து என்றும், செலலுநதேயதது அவர்க்கு யாது நிகழும் என்றும், வருந்துணையும் யாம் ஆற்றி யிருக்குமாறு என் என்றும், அவ்வரவுதான் எஞ்ஞான்று வருதெய்தும் என்றும் இவ்வாறருள் நிகழுமகவலை மனத்துநீங்காதாகலான் 'அல்லல நோய நீக்கி' என்றும், பிரிதலால்வருந்துணையும் அகத்து நிகழும் காமவேதனையும் புறதது யாழிசை, மதி, தென்றல என் றிவையுதலாக வருது இதனை வளர்ப்பனவும் ஆற்றலரியவாகலின் 'பிரிவாற்றி' என்றும், தம் காதலரை இன்றியமையா மகளிருள் இவையெல்லாம் பொறுதலதுப் பின்னும் இருதது உயிர்வாழ்வார் ஒருவரும் இலலை என்பது குறிப்பால் தோன்றப் 'பின் இருந்து வாழ்வார் பலர்' என்றும் கூறினள. அரிது என்பது விஞக் குறிப்புப் பெயர். பிரிவின்கண் நிகழ்வனவற்றை, பிரிவு என்றுள. செயது, நீக்கி, ஆற்றி என்பன ஓரசைவகையான் அவ் அவறறது அருமையுணர நின்றன. சிறப்பு உம்மை விகாரதத்தால தொக்கது. யானும் இறந்து படுவல் என்பது கருத்து. (10)

117. படர் மெலிந்து இரங்கல்

அது படரான்மெலிந்து இரங்கல் என விரியும். அஃதாவது பிரிவாற்றுளாய தலைமகள தான் உறுகின்ற நுன்பதனினை எப்பொழுதும் கினைதலின் அக நினைவான் மெலிந்து இரங்குதல. அதிகாரமுறைமையும இதனனே விளையும.

மறைப்பேன்மன் யான்இஃதோ நோயை இறைபவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும். 1161

காமநோயை வெளிப்படுத்தல் நின் நாணுக்கு ஏலாது என்ற தோழிக்குச் சொலலியது.

நோயை யான் மறைப்பேன் - இக்நோயைப் பிறரறிதல் காணி யான் மறையாநின்றேன் இஃதோ இறைப்பவாக்கு ஊற்று நீர் போல மிகும் - நிறபவும இஃது அருகாண்வரை நிலைாது நீர் வேண்டும் என்று இறைபவர்க்கு ஊற்றுநீர் மிகுமாறு போல் மிகா நின்றது.

'அம் மறைத்தலால பயன் என?' என்பதபட நின்றமையின் மன் ஒழியிசைக்கண் வநதது. "இஃதோ செலவாக்கொதனென்

யான்" என்புழிப்போல ஈண்டு சுட்டுப் பெயர்ஈறு நிரிந்துகின்றது. 'இஃதோர் நோயை' என்று பாடம் ஓதுவாரும் உளர்; அது பாட மன்மை அறிக. இனி அதற்கடுத்தது நீ செயல்வேண்டும் என்ப தாம். (1)

கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய்செய்தார்க்கு உரைத்தலும் நாணுத் தரும். 1162

ஈண்டையார் அறியாமல் மறைத்தல், ஆண்டையார் அறியத் தூதுவிடுதல் என்னும் இரண்டனுள் ஒன்றுசெயல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.

இந்நோயைக் கரத்தலும் ஆற்றேன் - இந்நோயை ஈண்டை அறியாமல் மறைத்தலும் வல்லேனுகின்றிலேன்; நோய் செய் தார்க்கு உரைத்தலும் நாணுத் தரும் - ஆகாக்கால், நோய் செய்த வர்க்கு உரைக்க எனின், அதுவும் எனக்கு நாணினதாரா கின்றது; இனி என் செய்கோ?

ஒருகாலேக்கு ஒருகால மிருதலின் 'கரத்தலும் ஆற்றேன்' என் றும், சேயிடைச் சென்றவர்க்கு இதுசொல்லித் தூதுவிட்டால் இன்னும் இருந்தேன் என்பது பயக்கும் என்னும் கருத்தால், 'நாணுத் தரும்' என்றும் கூறினள். (2)

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என் நோனு டம்பின் அகத்து. 1163

இதுவும் அது.

காமமும் நாணும் - காமநோயும் அதனைச் செய்தவர்க்கு உரைக்கல் ஒல்லாத நாணும், நோனு என் உடம்பின் அகத்து-தம் மைப் பொருத என்னுடம்பின் கண்ணே, உயிர் காவாத்தூங்கும் - உயிர் காத்தண்டாக, அதன் இருதலையிலும் தூங்கா நின்றன.

பொருமை மெலிவானையது. தூங்கும் என்பது, ஒன்றினொன்று மிகாது இரண்டும் ஒத்தசீர என்பது தோன்ற நின்றது. தூதுவிட வும் ஒழியவும், பண்ணுவனவாய காம, நாண்களை தம்முள ஒத்து உயிரிரண்ட இறுவியா நின்றன.யான் அவற்றுள ஒன்றின்கண் நிற்க மாட்டாமையின், இஃது இற்றே விடும் என்பதாம். (3)

காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும் ஏமப் புணைமன்னும் இல். 1164

தலைவியர் காமக்கடற்படார், படினும் அதனை ஏற்றபுணை யான் நீந்திக் கடப்பார் என்ற தோழிக்குச் சொல்லியது.

உண்டு காமக்கடலே - யாவர்க்கும் உளவாய்வருகின்ற இவ் இரண்ட னுளளும் எனக்கு உண்டாகின்றது காமக்கடலே; அது நீந்தும் ஏமப் புணை இல் - அதனை நீந்தும் அரணுகிய புணை இல்லை.

இருவழியும் மன்னும் உம்மும் அசைநிலை. தாதுவிட்டு இதற்குப் புணர்யாகற்பாலியாய் நீயும் ஆயிற்றிலை என்பது கருத்து. (4)

துப்பின் எவனுவர் மற்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர். 1165

தாதுவிடாமைநோக்கித் தோழியோடு புலந்து சொல்லியது.

நட்பினுள் துயர்வரவு ஆற்றுபவர் - இன்பஞ்செய்தற்குரிய நட்பின் கண்ணே துன்பவரவினைச் செய்யவல்லவர், துப்பின் எவனுவர்கொல் - துன்பம் செய்தற்குரிய பகைமைக்கண் என்செய்வர் கொல்லோ?

துப்புப் பகையுமாதல் "துப்பெதிர்ந்தோர்க்கே யுள்ளாச் சேய்மையன், நட்பெதிர்ந் தோர்க்கே அண்கையண்மையன்" (புறநா. 330) என்பதனலும் அறிக. அப் பகைமை ஈண்டுக் காணுமையின் அவர் செய்வது அறியப் பெற்றிலேம் என்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. துயர்வருதலே விலக்கலாயிருக்க அதுசெய்கின்றிலை எனப் புலக்கின்றமையின் துயர்வரவு செய்தானாக்கியும் பிறளாக்கியும் கூறினுள். (5)

இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதுஅடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது. 1166

காமத்தான் இன்பமுற்றார்க்கு அதனினும துன்பம் வரும் என்ற தோழிக்குச் சொல்லியது.

காமம் இன்பம் கடல் - காமம் புணர்வால் இன்பஞ்செய்யுங்கால், அவ் இன்பம் கடல்போலப் பெரிதாம்; மற்று அஃது அடுங்கால் துன்பம் அதனிற்பெரிது - இனி அதுதானே பிரிவால் துன்பஞ் செய்யுங்கால், அத் துன்பம் அக் கடலினும் பெரிதாம்.

மற்று வினைமாற்றின் கண் வந்தது. அடுங்கால என வந்தமையின், மறுதலையெச்சம் வருவிக்கப்பட்டது. பெற்ற இன்பத்தோடு ஒத்துவரின் ஆற்றலாம்; இஃது அதனது அளவன்று என்பது கருத்து. (6)

காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன். 1167

காமக்கடல் நிறைபுணையாக நீந்தப்படும் என்றுட்குச் சொலலியது.

காமம் கடுமபுனல் நீந்திக் கரைகாணேன் - காமமாகிய கடல் நீந்தாதேனல்லேன்; நீந்தியும் அதற்குக் கரைகாண்கின்றிலேன், யாமத்தும் யானே உளேன் - அக்காலமைக் காலநதான்; எல்லாரும் துயிலும் அரையிருளாயிற்று; இருட்கண்ணும் அதற்கு ஒருதுணையின்றி யானேயாயினேன்; ஆயும் இறநதுபட்டியந்து

போகாது உளனாகின்றேன்; ஈதொரு தீவினைப் பயன் இருக்தவாறென்?

கடுமை ஈண்டு மிகுதிக்கண் நின்றது. உம்மை முன்னும் கூட்டப்பட்டது. யானே ஆயினேன் என்பது மீ துணையாயிற் றில்லை என்னும குறிப்பிற்று. (7)

மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்துஇரா
என்னல்லது இல்லை துணை 1168

இரவின் கொடுமை சொல்லி இரங்கியது.

இரா அளித்து - இவ் இரா அளித்தாயிருந்தது; மன் உயிர் எல்லாம் துயிற்றி என்னல்லது துணை இல்லை - உலகதது நிலை பெறுகின்ற உயிர்களெலாம் தானே துயிலப்பண்ணுதலான், என்னையல்லாது வேறு துணை உடைத்தாயிற்றில்லை.

துயிற்றி எனத் நிரிதநின்ற வினையெச்சம் அவாய்நிலையான் வந்த உடைத்தாதலோடு முடிந்தது. துணையோடு ஒன்றுகின்ற உயிர்களெலாம் விட்டு இறக்துபடும் எல்லியேனை என்னையே துணையாகக்கோடலின். அறிவின்று என்பது பற்றி 'அளிதது' என்றுள; இகழ்ச்சிக்குறிப்பு.

கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா 1169

இதவும் அது.

இகாள நெடிய கழியும் இரா - காதலரோடு நாம் இன்புற்ற முன்னைகளிற் குறியவாய், அவர்பிரிவாறமோகின்ற இந்நாள களிலே நெடியவாய்ச் செலகின்ற கங்குல்கள, கொடியார் கொடுமையின் தாம் கொடிய - அக் கொடியாரது கொடுமைக்கு மேலே தாம கொடுமை செய்யா நின்றன.

தன்னுற்றுமை கருதாது பிரிதலின், 'கொடியா' என்றுள். கொடுமை - கடிதின் வாராது நீட்டித்தல. அவர் பிரிவானும் நீட்டிப் பானும் உளதாய அற்றுமைக்குக் கண்ணோடாமைமேலும் பண் டையின் நெடியவாய்க் கொடியவாகா கின்றன என்பதாம். (9)

உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோஎன் கண். 1170

நின்கண்கள பேரழகு அழிகின்றனவாகலின் அழற்பாலே யல்லே என்றுட்குச் சொல்லியது.

உளளம்போன்று உளவழிச் செல்கிற்பின் - மனம்போலக் காதலருளள தேயத்துக் கடிதிற்செல்லவல்லனவாயின், என் கண் வெளளநீர் நீந்தல் - என்கண்கள இங்ஙனம் வெள்ளமாகிய தம் நீரை நீந்தா.

அது மாட்டாமையின் இனி அவற்றிற்கு நீக்குதலேயுள்ளது என்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண்வந்தது. மனத்திற்குச் செலவாவது நினைவேயாகலின் 'உள்ளம் போன்று' என்றும, மெய்க்கு நடந்துசெலலவேணடுதலின் கண்கள அதனைடு சென்று காதலரைக்காண்டல கூடாது என்னும கருததால 'செல்கிற்பின்' என்றும கூறினள. இதனுன் வருகின்ற அதிகாரமும் தோற்றுவாய் செய்யப்பட்டது. (10)

118. கண் விதுப்புஅழிதல்

அஃதாவது கண்கள் தம் காட்சி விதுப்பான் வருந்துதல். காட்சிவிதுபுத தலிமகனைக் காணடற்கு விரைதல். இது படரான் மெலிகதவழி நிகழவதாகலின், படாமெலிகது இவற்கலின் பின் வைக்கப்பட்டது.

கண்தாம் கலுழ்வது எவன்கொலோ தண்டாநோய்
தாம்காட்ட யாம்கண் டது. 1171

நின் கண்கள கலுழ்ந்து தம் அழகு இழுவாநின்றன நீ ஆற்றல்வேண்டும் என்ற தோழிக்குத் தலிமகள சொலலியது.

தண்டா நோய் யாம் கண்டது தாம் காட்ட - இத் தணியா நோயை யாம் அறிந்தது தாம் எமக்குக் காதலரைக் காட்டலானன்றே; கண் தாம கலுழ்வது எவன் கொல் - அன்று அதனொழில் வாய கண்கள இன்று எம்மைக் காட்டச் சொலலி அழுகின்றது என்கருதி?

காட்ட என்பதற்கு ஏற்ற செயப்படுபொருள வருவிக்கப்பட்டது. இன்றும் தாமே காட்டுதல் அல்லது யாம் காட்டுதல யாண்டையது என்பதாம். (1)

தெரிந்துஉணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்பது எவன். 1172

இதவும் அது.

தெரிந்து உணரா நோக்கிய உண்கண் - மேல்விளைவதனை ஆராய்ந்தறியாது அன்று காதலரை நோக்கினின்ற உண்கண்கள, பரிந்து உணராப் பைதல் உழப்பது எவன் - இன்று இது நம்மால் வந்ததாகலின் பொறுததல வேணடும் எனக் கூறுபடுத்துணராது துன்பம் உழப்பது என்கருதி?

விளைவது: பிரிந்துபோயவர் வாராமையின் காண்டற்கு அரியராய் வருதலதல. முன்னே வருவதறிந்து அது காவாதார்க்கு அதன் வந்தவழிப் பொறுததலன்றேயுளளது. அதவும் செய்யாது வருந்துதல கழிமடச்செய்கை என்பதாம். (2)

இதுமென்த் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்கது உடைத்து. 1173

இதுவும் அது.

தாம் கதுமென நோக்கித் தாமே கலுழும் இது - இக் கண்கள அன்று காதலரைத் தாமே விரைந்து நோக்கி இன்றும் தாமே இருந்தழுகின்ற இது, நகத்தக்கது உடைத்து - நமமால் சிரிக்கத் தக்க இயல்பினை உடைத்து.

கண்கள என்பது அதிகாரத்தான் வந்தது. இது என்றது மேற்கூறிய கழிமடச் செய்கையை. அது வருமுனனர்க் காப் பார்க்கு நகையினைக்கும் ஆகலான் 'நகத்தக்கது உடைத்து' என்றாள். (3)

பெயல்ஆற்று நீர்உலர்ந்த உண்கண் உயல்ஆற்று
உய்வில்நோ யென்கண் இறுத்து. 1174

இதுவும் அது.

உண்கண் - உண்கண்கள், உயலாற்று உய்வு இல் நோய் என் கண் நிறுத்து - அன்று யான் உய்யமாட்டாமைக்கு ஏதுவாய ஒழி வில்லாத நோயை என் கண்ணே நிறுத்தி, பெயலாற்று நீர் உலர்ந்த-தாமும் அழுகலிமாட்டா வண்ணம் நீர் வற்றிவிட்டன.

நிறுத்தல் - பிரிதலும் பின் கூடாமையும் உடையாரைக் காட்டி அதனால் நிலேபெறச் செய்தல், முன் எனக்கு இன்னாத செய்தலாற் பின் தமக்கு இன்னாதன தாமே வந்தன என்பதாம்.

படல்ஆற்று பைதல் உழக்கும் கடல்ஆற்றுக்
காமநோய் செய்தஎன் கண். 1175

இதுவும் அது.

கடல் ஆற்றுக் காமநோய் செய்த என்கண் - எனக்குக் கட லும் சிறிதாம் வண்ணம் பெரியதாய காமநோயைச் செய்த என் கண்கள, படல் ஆற்று பைதல் உழக்கும் - அத்தீவினையால் தாமும் துயில்இலவாய்த் துன்பத்தையும் உழவாநின்றன.

காமநோய் காட்சியான் வந்ததாகலின், அதனைக் கண்களே செய்ததாக்கிக் கூறினள். துன்பம் அழுதலானயது. (5)

ஓஓ இனிதே எமக்குஇந்நோய் செய்தகண்
தாஅம் இதன்பட் டது. 1176

இதுவும் அது

எமக்கு இந்நோய் செய்த கண் தாம் இதன்பட்டது-எமக்கு இக் காம நோயினைச் செய்த கண்கள தாமும் இத் துயிலாது அழுதற் கண்ணேபட்டது, ஓஓ இனிதே - மிகவும் இனிதாயிற்று.

ஓ என்பது மிகுதிப்பொருட்கண்வந்த குறிப்புச்சொல். தம் மால் வருத்தமுற்ற எமக்கு அது தீர்த்தாற்போன்றது என்பதாம்.

உழந்துழந்து உண்ணீர் அறுக விழைந்துஇழைந்து வேண்டி அவர்க்கண்ட கண். 1177

இதுவும் அது

விழைந்து இழைந்து வேண்டி அவர்க் கண்ட கண் - விழைந்து உள் நெகிழ்ந்து விடாதே அன்று அவரைக் கண்ட கண்கள், உழந்துழந்து உளநீர் அறுக - இன்று இத் துயிலாது அழுங்கலாய துன்பதகிண்ண உழந்து தம் அகத்துள்ள நீர் அறறே போக.

அடுக்கு இடைவிடாமைக்கண் வந்தது. அறுதலாகிய இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. (7)

பேணுது பெட்டார் உளர்மன்னே மற்றவர்க் காணுது அமைவில கண். 1178

காதலர் பிரிந்துபோயிருந்தல்லர் அவர் ஈண்டுளர் அவரைக் காணுமளவும் நீ ஆற்றலவேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

பேணுது பெட்டார் உளர் - நெஞ்சால் விழையாதவைத்துச் சொல மாத்திரத்தால் விழைந்தவர் இவ்விடத்தே உளர்; மற்று அவர்க் கண் காணுது அமைவில – அவ் உண்மையாற் பயன்யாது, அவரைக் கண்கள காணுது அமைகின்றன இலலையாயின.

செயலாற் பிரிந்து நின்றமையின் 'பேணுது' என்றும், முன் நலம் பாராட்டிப் பிரிவசமும் வன்புரையும் கூறினராகலின். 'பெட்டார்' என்றும் கூறினள. மன் ஒழியிசைக்கண் வந்தது. மற்று, விணமாற்றின் கண் வந்தது. 'ஓகாரம்' அசைநிலை யான் ஆற்றவும், கண்கள அவரைக் காண்டற்கு விரும்பாகின்றன என்பதாம். இனிக் கொண்கண் என்று பாடமாயின், என் கண் கள தம்மைக் காணுது அமைகின்ற கொண்கனைத தாம்காண தமைகின்றனவில்லை. இவ்வாறே தமமையொருவர் விழையாதிருக் கத தாம் அவரை விழைந்தா உலகதது ளரோ என்று உரைக்க. இதற்கு மன் அசைநிலை.

வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை ஆரஞர் உற்றன கண். 1179

நீயும் ஆற்றி நின்கண்களும் துயிலவனவாதல் வேண்டும் என்ற தோழிக்குச் சொலலியது.

வாராக்கால் துஞ்சா - காதலர் வாராத ஞான்று அவர் வரவு பார்த்துத் துயிலா; வரின் துஞ்சா - வந்தஞான்று அவர் பிரி வஞ்சித்துயிலா; ஆயிடைக் கண் ஆரஞர் உற்றன - ஆதலான்

அவ் இருவழியும் என் கண்கள் பொறுத்தற்கரிய துன்பத்தினை உடைய.

'ஆயிடை' எனச் சுட்டு நீண்டது. இனி அவற்றிற்குத் துயில் ஒரு ஞான்றும் இலவே என்பதாம். (9)

மறைபெறல் ஊரார்க்கு அரிதன்ரூல் எம்போல்
அறைபறை கண்ணு ரகத்து. 1180

காதலரை இவ்வூர் இயற்பழியாமல் அவர்கொடுமையை மறைக்க வேண்டும் என்ற தோழிக்குச் சொலியது.

எம்போல் அறைபறை கண்ணார் அகத்து மறை பெறல்- எம்மைப் போலும் அறைபறையாகிய கண்ணினையுடையார் தம் நெஞ்சின் கண் அடக்கிய மறையையறிதல், ஊரார்க்கு அரிதன்று - இவ் ஊரின் கண் உளளார்க்கு எளிது.

மறை என்றது ஈண்டு மறைக்கப்படுவதனை. அகத்து நிகழ்வதனைப் புறத்துளளார்க்கு அறிவித்தலாகிய தொழிலான் ஒற்றுமை உண்மையின், அறைபறைபோகிய கண் என்றாள. இங்ஙனம் செய்யுள விகாரமாக்காது, 'அறைபறைக் கண்ணார்' என்று பாடம் ஓதுவாரும் உளர். யான் மறைக்கவும் இவை வெளிப்படுத்தா நின்றன என்பதாம். (10)

119. பசப்புறு பருவரல்

அது பசப்புற்ற பருவரல் என விரியும். அஃதாவது பசப்புறுதலானாய வருத்தம். இதனைப் "பசதெறிந்த வயா" (கலித். நூறிஞ். 3) என்பது போலக்கொளக. பசப்பாவது பிரிவாற்றுமையான் வருவதோர் நிறவேறுபாடு. இது, தலைமகற்குக் காணப்பெறுதவழி நிகழ்வதாகலின், கண் விதுப்பு அழிதலின் பின் வைக்கப்பட்டது.

நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தஎன்
பண்புயார்க்கு உரைக்கோ பிற. 1181

முன் பிரிவுடம்பட்ட தலைமகள் அஃது ஆற்றாது பசந்தவழித் தன்னுளளே சொலியது.

நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் - என்னை நயந்தவர்க்கு அது பொழுது பிரிவை உடம்பட்ட நான், பசந்த என் பண்பு யார்க்கு உரைக்கோ - அதனை அற்றது இதுபொழுது பசந்த என் இயல்பினை யாருக்குச் சொலவேன்.

பிற என்பது அசைநிலை. உடமபடாவழி ஒழிதல் குறித்துப் 'பிரிவுணர்த்தினராகலின் அவரன்புடையர் என்னும் கிருத்தான் 'நயந்தவர்' என்றும, இதுவே உடம்பாடாக மேலும் பிரிவு நிகழுமாகலின், இனி அவரைக் கூடுதலரிது என்னும் கருத்தான்

'நல்காமை' என்றும், முன்னர் உடம்படுதலும் பின்னர் அற்றது பசத்தலும் பிறர்செய்தனவல்ல என்பான 'பசந்த என்பண்பு' என்றும், யான் செய்துகொண்ட தன்பத்தினை இனி ஒருவர்க்குச் சொல்லலும் பழியாம் என்னும் கருத்தால் 'யாாக்கு உரைக்கோ' என்றும் கூறினாள். (1)

அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்துஎன்
மேனிமேல் ஊரும் பசப்பு, 1182

அற்றல் எனக்கவன்ற தோழிக்கு அற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

(யான்அற்றியுளேனெகவும்,) பசப்பு-இப்பசப்புத்தான், தந்தார் அவர் என்னும் தகையால்-தன்னையுண்டாக்கினர் அவர் என்னும் பெருமிதத்தான், என் மேனிமேல இவர்தந்து ஊரும்-என் மேனியை மேலகொண்டு செலுத்தாநின்றது.

" குருகிகொப் புளிக்கும் வேலான் கூடன்மா இவர்ந்து செல்ல " (சீவக. விமலை. 1) என்புழியும் இவர்தல் இப்பொருட்டாதல் அறிக. இஃது உரிமைபற்றி ஊர்கின்றது, இதற்கு நீ கவலல் வேண்டா என்பதாம். (2)

சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையும் தந்து. 1183

அழகும் நாணும் அழியாமல் நீ ஆற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

கைம்மாறு நோயும் பசலையும் தந்து - பிரிகின்றஞான்றே அவ் இரண்டற்கும் தலைமாறுக இக் காமநோயினையும் பசலையையும் எனக்குத் தந்து, சாயலும் நாணும் அவர் கொண்டார் - என் மேனியழகினையும் நாணினையும் அவர் கொண்டு போயினர்.

எதிரிரல்நிரை. அடக்குந்தோறும் மிகுதலான், நோய் நாணிற்குத் தலைமாறியிறறு. இனி அவர் தருதாலல்லது அவை உளவாகலும் இவை இலவாகலும் கூடா என்பதாம். (3)

உள்ளுவன் மன்யான் உரைப்பது அவர்திறமால்
கள்ளம் பிறவோ பசப்பு. 1184

பிரிகின்றவர் தெளிவித்த சொற்களையும் அவர் கல்கிறங் கினையும் அறிதி யாகலின் நீட்டியாது வருவர் என்றவழிச் சொல்லியது.

யான் உளுவன் - அவர் சொற்களை யான் மனத்தால் நினையா நிற்பேன், உரைப்பது அவர்திறம் - வாக்கால் உரைப்பதும் அவர் கல்திறங்களையே, பசப்புக்களனம்-அங்ஙனம் செய்யா நிற்கவும்,பசப்பு வந்து நின்றது, இது வஞ்சனையாயிருந்தது.

பிறவும், ஓவும் அசைநிலே. மெய் மற்றை மனவாக்குக்களின் வழித்தாகலின், அதன்கண்ணும் வரற்பாற்றன்றுயிருக்க வந்தமை யின், இதன்செயல் கள்ளமாயிருந்தது எனத்தான் ஆற்றுகின் றமை கூறியவாறுயிற்று. (4)

உவக்காண்எம் காதலர் செல்வார் இவக்காண்என் மேனி பசப்புஊர் வது. 1185

காதலர் பிரிந்துஅணித்தாயிருக்கவும் ஆற்றுகின்றிலே என்ற தோழிக்கு முன் நிகழ்ந்தது கூறியது.

எம் காதலர் உவக்காண் செலவார் - பண்டும் நம் காதலர் உங்கேசெலவாராக, என்மேனி பசப்பூர்வது இவக்காண் - என் மேனி பசப்பூர்வது இங்கேயன்றே ? அப்பெற்றியது இன்று பிறி தொன்றுமோ?

உவக்காண், இவக்காண்-என்பன ஒட்டிநின்ற இடைச்சொற் கள். தேயஅண்மையாற் காலஅண்மை கருதப்பட்டது. அவர் செலவும் பசப்பினது வரவும் பகல் இரவுகளின் செலவும் வரவும் போலவது அறிந்துவைத்து அறியாதாய்போல நீசொலுகின்றது என்னே என்பதாம். (5)

விளக்குஅற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன் முயக்குஅற்றம் பார்க்கும் பசப்பு. 1186

இதுவும் அது.

விளக்கு அற்றம் பார்க்கும் இருளேபோல் - விளக்கினது மெலிவு பார்த்து நெருங்கிவரும் இருளேபோல, கொண்கன் முயக்கு அற்றம் பார்க்கும் பசப்பு - கொண்கன் முயக்கினது மெலிவுபார்த்து நெருங்கிவரும் இப் பசப்பு.

பார்க்கும் என்பன இலக்கணச்சொல். முன் பிரியாதிருக்க வும் தனக்கு அவகாசம் பார்த்துவரும் பசப்புப் பிரிவுபெற்றால் என்செய்யாது என்பதாம். (6)

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில் அள்ளிக்கொள் வற்றே பசப்பு. 1187

இதுவும் அது.

புல்லிக்கிடந்தேன் புடைபெயர்ந்தேன்-முன்னொரு ஞான்று காதலரைப் புல்லிக்கிடந்தயான் அறியாது புடைபெயர்ந்தேன்; அவ் வளவில் பசப்பு அள்ளிக்கொள்வற்று - அப் புடைபெயர்ந்தஅள விலே பசப்பு அள்ளிக்கொளவதுபோல வந்து செறிந்தது.

கொள்வது என்பது குறைந்துநின்றது. அள்ளிக்கொளவது- அள்ளிக்கொளளப்படும் பொருள். அப் புடைபெயர்ச்சி மாத்திரத் திற்கு அவ்வாறுயது இப் பிரிவின்கண் ஆமாறு சொல்லவேண் டுமோ என்பதாம். (7)

பசந்தாள் இவள்என்பது அல்லால் இவளைத்
துறந்தார் அவர்என்பார் இல். 1188

நீ இங்ஙனம் பசக்கற்பாலையல்லை என்ற தோழியோடு புலந்து சொல்லியது.

இவள பசந்தாள் என்பது அல்லால் - இவள ஆற்றியிராது பசந்தாள என்று என்னைப்பழிகூறுவதல்லது, இவளை அவர் துறந்தார் என்பார் இல் - இவளை அவர் துறந்துபோயினர் என்று அவரைக் கூறுவார் ஒருவரும் இலரே.

என்பார் என வேறுபடுத்திக்கூறினள, தன்னையே நெருங்குதல் பற்றிப் புலக்கின்றமையின் (8)

பசக்கமன் பட்டாங்குஎன் மேனி நயப்பித்தார்
நன்னிலையர் ஆவர் எனின். 1189

இதுவும் அது.

நயப்பித்தார் நன்னிலையர்ஆவர் எனின்-இப் பிரிவை யானே உடம்படும் வகை சொல்லியவர் இன்று நின் கருத்தான் நல்ல நிலையினர்ஆவராயின், என்மேனி பட்டாங்கு பசக்க என்மேனி பட்டதுபடப் பசப்பதாக.

நன்னிலையராதல் நன்மைக்கண்ணே நிற்றலேஉடையராதல. பட்டாங்காக என ஆக்கம் விரித்து உரைக்க. முன் இப் பிரிவின் கொடுமையறியாத என்னை இதற்கு உடம்படுத்திப் பிரிந்தவர் தவறிலராகவே வேண்டுவது, என் மேனியும் பசப்பும் யாது செய்யின் என்? என்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. (9)

பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றார் எனின். 1190

தலைமகள் ஆற்றுதற்பொருட்டுத் தோழி தலைமகளை இயற்பழித்தவழி அவள இயற்படமொழிந்தது.

நயப்பித்தார் நல்காமை தூற்றார் எனின் அன்று தாம் குறை நயப்பித்தைக் கூடியவர்க்கு இன்று நல்காமையை நட்டோர் தூற்றாயின், பசப்பு எனப் பேர் பெறுதல் நன்றே - பசப்புற்றாள என வேற்றுமை பானன்றிப்பசப்புத்தான்ஆயினள என ஒற்றுமையால் தாம் சொல்ல அப் பெயரைப் பெறுதல் எனக்கு நன்று.

நட்டார் என்பது அவாய்நிலையான் வந்தது. இயற்பழித்தல்பொருளேபுலக்கின்றாளாகலின், இகழ்ச்சிக்குறிப்பால் கூறினள. அவரை அருளிலர் என்னை இன்னும் பசந்தாள இவள் என்கையே யான் ஆற்றும் நெறியாவது என்பதாம். (10)

120. தனிப் படர் மிகுதி

அது தனியாகிய படர்மிகுதி என விரியும். அஃதாவது படர்மிகுதி தலைவன்கண் இன்றித் தன் கண்ணதேயாதல் கூறுதல். அறமும் பொருளும் நோக்கிப் பிரிதலின் அவன் கண் இல்லையாயிற்று. இது, பசப்புற்று வருந்தியாட்கு உரிய தாகலின், பசப்புறு பருவரலின் பின் வைக்கப்பட்டது.

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றூரே
காமத்துக் காழ்இல் கனி. 1191

'காதலரும் நின்னினும் ஆற்றராய்க் கடிதின் வருவர்; அவரோடு பேரின்பம் நுகர்கி' என்ற தோழிக்குச் சொல்லியது.

தாம் வீழ்வார் தம் வீழப் பெற்றவர் - தம்மாற்காதலிக்கப் படும் கணவர் தம்மைக் காதலிக்கப்பெற்ற மகளிர், பெற்றூரே காமத்துக் காழ் இல கனி - பெற்றூரன்றே காமநுகர்ச்சி என்னும் பரல இலலாத கனியை.

காமம் - ஆகுபெயர். அத்து - அல்வழிக்கண் வந்தது. முன்னே கல்வினை இல்வழிப் பெறப்படாமையின் பெற்றூர் என்றும், அவ ரால்தடையின்றி நுகரப்படுதலின் 'காழிலகனி' என்றும் கூறினள். நம் காதலர் பிரிந்த லயன்றிப் பின் வாராமையும் உடைமையின், அக் கனி யாம் பெற்றிலேம் என்பதாயிற்று. (2)

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி. 1192

இதுவும் அது.

வீழ்வார்க்கு வீழவார் அளிக்கும் அளி - அறமும் பொருளும் நோக்கிப் பிரிந்தால தம்மை இன்றியமையா மகளிர்க்கு அவரை இன்றியமையாக் கணவர் அளவறிந்து வருது செயயும் தலையளி, வாழவார்க்கு வானம் பயந்தற்று - தன்னையே நோக்கி உயிர்வாழ் வார்க்கு வானம் அளவறிந்து செய்தாறபோலும்.

நம காதலர்நமமை விழையாமையின், அதனலையளி இல்லையா கலான், மழை வறந்துழி அதனலன் வாழ்வார்போல இறநதுபடு தலை நமக்கு உளளது என்பதாம். (2)

வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே
வாழுநம் என்னும் செருக்கு. 1193

இதுவும் அது.

வீழப்படுவார்க்கு அமையுமே - தாம் விழையும் கணவரான் விழையபபடும் மகளிர்க்கு உறபுடைத்து, வாழுநம் என்னும்

செருக்கு - காதலர் பிரிந்தாராயினும் நம்மை நினைந்து கடிதின் வருவர். வருதல நாம் இன்புற்று வாழுதும் என்றிருக்கும தருக்கு.

நாம் அவரான் வீழப்படாமையின், நமக்கு அமைவது இறக்குபாடு என்பதாம். (3)

வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின். 1194

காதலரை இயற்பழித்தலே அஞ்சி அவரருளின்மை மறைத்த நீ கடவுட் கற்பினையாகலின் கற்புடைமகளிரால் கன்கு மதிக்கப்படுதி என்ற தோழிக்குச் சொலலியது.

வீழப்படுவார் - கறபுடைமகளிரால் கன்கு மதிக்கப்படுவாரும், தாம் வீழுவார் வீழப்படார் எனின் கெழீஇயிலர் - தாம விரும்பும் கணவரான் விரும்பப்படாராயின் தீவினையாடடியர்.

சிறப்பு உம்மை விகாரத்தால தொக்கது. கெழீஇயின்மை - நல்வினையின்மை, அஃது அருததாபதநியான தீவினையுடைமைபா ற்று. தீவினையுடையேற்கு அக நன்கு மதிப்பால பயனிலலே என்பதாம். (4)

நாம்காதல் கொண்டார் நமக்குஎவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை. 1195

அவர்மேற் காதலுடைமையின் அவர் கருத்தறிந்து ஆற்றி னாய் என்ற தோழிக்குச சொலலியது.

நாம் காதல் கொண்டார் நமக்கு எவன் செய்ப - நம்மால் காதல செய்யப்பட்டவர் நமக்கு என்ன இன்பத்தைச் செயவர், தாம் காதல கொளளாக்கடை - அவ்வாற்ற தாமும் நம்கண் காதல செயயாவழி.

எச்ச உம்மை விகாரத்தால் தொக்கது. அக் காதலுடைமை யால் நாம் பெற்றது துன்பமே என்பதாம. (5)

ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது. 1196

இதவும அது.

காமம ஒருதலையான் இன்னாது - மகளிர் ஆடவர் என்னும் இருதலையினும வேட்கை ஒருதலைக் கண்ணேயாயின் அஃது இன் னாது, காப்போல இருதலையானும இனிது காமனது பாயமபோல இருதலைக்கணனும ஒப்பின், அஃது இனிது.

மூன்றன் உருபுகள பிறபொருண்மைக்கண் வந்தன. கா-ஆகு பெயர. என மாட்டு உண்டாய வேடகை அவாமாடடும் உண்டாயின், யான் இவ்வாறு துன்பமுழுததல கூடுமோ என்பதாம. (6)

பருவரலும் பைதலுங் காணுன்கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான். 1197

இதுவும் அது.

ஒருவர்கண் நின்று ஒழுகுவான் காமன்-காமம் துகர்தற்கு உரிய இருவரிடத்தும் ஒப்பகிற்றல் ஒழிந்து ஒருவரிடத்தே நின்று பொருகின்ற காமக் கடவுள, பருவரலும் பைதலும் காணுன் கொல்–அவ்விடத்துப் பசப்பாலை பருவரலும் படர் மிகுதியும் அறியான் கொல்லோ!

விழைவும் வெறுப்பும் இன்றி எல்லார்கண்ணும் நிகழ்க்தன அறிதற்குரிய கடவுளும் என்கண் வேறுபட்டான, இனி யான் உய்யுமாறு என்னே என்பதாம். (7)

வீழ்வாரின் இன்சொற் பெருஅது உலகத்து
வாழ்வாரின் வன்கணூர் இல். 1198

கலிமகன் தூதுவரக் காணுது சொல்லியது.

வீழ்வாரின் இன்சொல் பெருது வாழ்வாரின் - தம்மால் விரும்பப்படும் காதலர் நிறத்து நின்றும் ஓர இன்சொல்லளவும் பெருதே பிரிவாற்றி உயிர் வாழ்கின்ற மகளிர் போல, வன்கணூர் உலகத்து இல–வன்கண்மையுடையார் இவ் உலகத்து இல்லை.

காதலர் நிறத்துச் சொல் யாதானும் எனக்கு இனிது என்னும் கருத்தால் 'இன்சோல்' என்ருள. இழிவு சிறப்பு உம்மை விகாரத தால் தொக்கது. யான் வன்கண்ணேனுகலின் அதுவும் பெருது உயிர்வாழா நின்றேன் என்பதாம். (8)

நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு. 1199

இதுவும் அது.

நசைஇயார் நல்கார் எனினும்–என்னல் நச்சப்பட்ட காதலர் என்மாட்டு அன்பிலரேயாயினும், அவர்மாட்டு இசையும் செவிக்கு இனிய - அவர் நிறத்து யாதானும் ஓர் சொலலும் என் செவிக்கு இனியவாம்.

இழிவு சிறப்பு உம்மை, அவர் வாரலர் என்னுஞ் சொலலா யினும் அமையும் என்பது பட நின்றது. அதுவும் பெற்றிலேன் என்பதாம். (9)

உருஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செருஅய் வாழிய நெஞ்சு. 1200

கலிமகன் தூதுவப் பெருது தான் தூதுவிடக் கருதியாள நெஞ்சொடு சொல்லியது.

உரார்க்கு உறுநோய் உரைப்பாய் நெஞ்சு - நின்னோடு உரதார்க்கு நின்று நோயை உரைக்கலுற்ற நெஞ்சே, கடலிற் செருப்-பீ அற்ருயாயினும் அரிதாய அதனை யொழிந்து, நினக்குத் துயரஞ் செய்கின்ற கடலைத் தூர்க்க முயல்வாயாக, அஃது எளிது.

உரைக்கலுற்றது அளவிறந்த நோயாகலானும், கேட்பார் உறவினராகலானும், அது முடிவதொன்று அன்று; முடிந்தாலும் பயன் இல்லை என்பது கருதாது, முயலாநின்ருய் என்னுங் குறிப்பான் 'வாழிய' என்ருள். (10)

121. நினைந்தவர் புலம்பல்

அஃதாவது முன்கூடிய ஞான்றை இன்பத்தினை நினைந்து தலைமகள் தனிமை எய்தலும், பாசறைக் கண் தலைமகன் தனிமை எய்தலுமாம். இவ்வாறு இருவர்க்கும் பொதுவாதல் பற்றிப் பன்மைப்பாலாற் கூறப்பட்டது. இது படர் மிகுதி தன்கண்ணதாக நினைந்த தலைமகட்கும் உரித்தாகலின், அவ் இயைபு பற்றித் தனிப்படர் மிகுதியின் பின் வைக்கப்பட்டது.

உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது. 1201

தூதாய்ச் சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது.

உளளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்-முன் கூடிய ஞான்றை இன்பத்தினைப் பிரிந்துழி நினைதலும் அதுபொழுது பெற்ருற்போல நீங்காத மிக்க மகிழ்ச்சியைத தருதலால், களளினும் காமம் இனிது உண்டுழியலது மகிழச்சி செய்யாத களளினும் காமம் இன்பம் பயத்தலுடைத்து.

தன் தனிமையும் தலைமகனை மறவாமையும் கூறியவாறு. (1)

எணைத்துஒன்று இனிதேகாண் காமம்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதுஒன்று இல். 1202

இதுவும் அது.

தாம் வீழ்வார் நினைப்ப வருவது ஒன்று இல் - தம்மால் விரும்பப்படுவாரைப் பிரிவின்கண் நினைத்தால அந் நினைவார்க்கு அப்பிரிவான் வருவதோர் துன்பம் இலலைபாம்; காமம் எணைத்து இனிது ஒன்றேகாண் - அதனால் காமம் எத்துணையேனும் இனிதொன்றேகாண்.

புணர்ச்சிதுழியும் பிரிந்துழியும் ஒப்ப இனிது என்பான், 'எணைத்தும் இனிது' என்ருன். சிறப்பு உம்மை விகாரத்தால் தொக்கது. தான் ஆற்றிய வகை கூறியவாறு. (2)

நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும். 1203

தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகளை தோழிக்குச் சொல்லியது.

தும்மல் சினைப்பதுபோன்று கெடும் - எனக்குத் தும்மல் எழுவது போன்று தோன்றிக் கெடா நின்றது; நினைப்பவர் போன்று நினையார்கொல் - அதனால் காதலர் என்னை நினைப்பார் போன்று நினையாராகல் வேண்டும்.

சினைத்தல் – அரும்புதல். செய்மைக் கண்ணராய கேளிர் நினைந்துழி அந்நினைக்கப்பட்டார்க்குத் தும்மல் தோன்றும் என்னும் உலகியல் பற்றித தலைமகன் எடுத்துக் கொண்ட வினை முடிவது போன்று முடியாமையுணர்த்தள சொல்லியதாயிற்று.()

யாமும் உளங்கொல் அவர்நெஞ்சத்து எம்நெஞ்சத்து
ஓஒ உளரே அவர். 1204

இதுவும் அது.

எம் நெஞ்சத்து அவர் ஓ உளரே–எம்முடைய நெஞ்சத்து அவர் எப்பொழுதும் உளரேயாய்இரா நின்றார், அவர் நெஞ்சத்து யாமும் உளங்கொல் - அவ்வகையே அவருடைய நெஞ்சத்தும் யாமும் உளமாதுமோ, ஆகேமோ?

ஓகார இடைச் சொல சண்டு இடைவிடாமை உணர்த்தி நின்றது. உளமாயும், விண்முடியாமையின் வாராராயினரோ, அது முடித்தும் இலமாகலின் வாராராயினரோ என்பது கருத்து. (4)

தம்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணுர்கொல்
எம்நெஞ்சத்து ஓவா வரல். 1205

இதுவும் அது.

தம் நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் - தம்முடைய நெஞ்சின் கண்ணே யாம் செல்லாமல எமை மைக் காவல கொண்ட காதலர், எம நெஞ்சதது ஓவாவரல நாணுர்கொல - தாம எம்முடைய நெஞ்சின்கண ஒழியாது வருதலை நாணுர் கொல்லோ?

ஒருவரை தமகண் வருதற்கு ஒருகாலும் உடம்படாது, தாம் அவாகண் பலகாலுஞ் சேறல் நாணுடையார் செயலன்மையின், 'நாணுகொல்' என்றாள. (5)

மற்றுயான் என்னுளேன் மன்னோ அவரொடுயான்
உற்றநாள் உள்ள உளேன். 1206

அவரோடு புணர்ந்த ஞான்றை இன்பத்தை நினைந்து இதுகாறுபாடெய்தா நின்றாய், அது மறத்தல்வேண்டும் என்றாட்குச் சொல்லியது.

யான் அவரொடு உற்ற நாள் உள்ள உளேன்-யான் அவரோடு புணர்ந்த ஞான்றை இன்பத்தை நினைதலான் இத் துன்ப வெளனதும் உயிர் வாழ்கின்றேன்; மற்று யான் என்னுளேன் - அது இன்றுயின், வேறு எதனால் உயிர் வாழ்வேன்.

நாள் - ஆருபெயர். உயிர் வாழதற்கு வேறும் உள, அவை பெற்றிலேன் என்பதுபட நின்றமையின், மன் ஒழியசக்கண் வந்தது. அவை அவன் தூது வருதல், தன் தூது சேறல் முதலாயின. அவையாவும் இன்மையின், இதுவல்லது எனக்குப் பற்றுக் கோடு இலலை என்பது கருத்து. (6)

மறப்பின் எவனுவன் மற்கொல் மறப்புஅறியேன்
உளளினும் உள்ளம் சுடும். 1207

இதுவும் அது.

மறப்பு அறியேன் உளளினும் உளளம் சுடும் - *அவ் இன்பத்தை மறத்தலறியேனாய் இன்று உளளா நிற்கவும், பிரிவு என் உளளத்தைச் சுடா நின்றது, மறப்பின் எவனுவன் - அங்ஙனம் பிரிவாற்றுத யான் மறந்தால் இறத்து படாது உளேனுவது எதனால்?*

செயப்படுபொருள அதிகாரத்தான் வந்தது. மன் ஈண்டும் அதுபட நின்று ஒழியிசையாயிற்று. கொல்-அசைநிலை. (7)

எனைத்து நினைப்பினும் காயார் அனைத்துஅன்றே
காதலர் செய்யும் சிறப்பு. 1208

இத் துன்பம் அறிந்து வந்து காதலர் நினக்கு இன்பம் செயவர் என்றுட்குச் சொல்லியது.

எனைத்து நினைப்பினும் காயார்-தம்மை யான் எத்துணையும் மிக நினைதலும் அதற்கு வெகுளார்; காதலர் செய்யும் சிறப்பு அனைத்து அன்றே - காதலர் எனக்குச் செய்யும் இன்பமாவது அவ்வளவன்றே?

வெகுளாமை - அதற்கு உடன்பட்டு நெஞ்சின்கண் நிற்றல். தனக்கு அவ்வின்பதநிற சிறந்தது இன்மையின், அதனை, 'சிறப்பு' என்றுள. 'காதலர் கம்மாட்டருள' என்றும், 'செயயும் குணம்' என்றும் பாடம் ஓதுவாரும் உளர். தோழி கூறியஅதனைக் குறிப்பான் இகழ்ந்து கூறியவாறு. (8)

வினியும்என் இன்உயிர் வேறல்லம் என்பார்
அளியின்மை ஆற்ற நினைந்து. 1209

கலிமகன் தூதுவரக் காணது வருத்துகின்றுள வற்புறுத்தும் தோழிக்குச் சொல்லியது.

வேறு அல்லம் என்பார் அளியின்மை ஆற்ற நினைந்து - *முன்பெல்லாம் காம் இருவரும் வேறல்லம் என்று சொல்லுவாரது*

அளியின்மையை மிகவும் நீண்ந்து, என் இன்னுயிர் விளியும் - எனது இனிய உயிர் கழியா நின்றது.

அளியின்மை - பின்வருவராகலுமாய்ப் பிரிதலும், பிரிந்து வாராமையும், ஆண்டு நின்றுழித் தூது விடாமையும் முதலாயின. பிரிவாற்றல் வேண்டும் என வற்புறுத்தாட்கு என்னுயிர் கழி கின்றது பிரிவிற்கு அன்று; அவரன்பின்மைக்கு என எதிர் அழிந்து கூறியவாறு (9)

விடாஅது சென்ருரைக் கண்ணினுல் காணப்
படாஅதி வாழி மதி. 1210

வன்புறை எதிரழிந்தாள் காமம் மிக்க கழிபடரால் சொல்லியது.

மதி - மதியே, விடாது சென்ருரைக் கண்ணினுல் காணப் படாதி - என் நெஞ்சின் இடைவிடாதிருந்தே விட்டுப் போயினரை யான் என் கண்ணளவாலுயினும் எதிர்ப்படும் வகை நீ படாதொழி வாயாக.

கண்ணளவான் எதிர்ப்படுதலாவது மதி இருவரானும் நோக் கப் படுதலின் இருவர் கண்ணும் அதன் கண்ணே சேர்தல், முத லொடு சினைக்கு ஒற்றுமை உண்மையின், 'சென்ருரைக் காண' என்றும், குறையுறுகின்ருளாகலின், 'வாழி' என்றும் கூறினுள். இனிப் படாது என்பது பாடமாயின், கனவிடைக் கண்ணினும் காணுமாறு மதிபடுகின்றதில்லை என அதனுல் துயில் பெருது வருந்துகின்ருள கூற்றுக்கு. இப் பொருட்கு வாழி என்பது அசை நிலை. (10)

122. கனவு நிலை உரைத்தல்

அஃதாவது தலைமகள தான்கண்ட கனவினது நிலைமை யைத் தோழிக்குச் சொல்லுதல். அக் கனவு நனவின்கண் நிகழுமிருதியாற் கண்டதாகலின் இது நிகழ்ந்தவர் புலம்ப லின் பின் வைக்கப்பட்டது.

காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து. 1211

தலைமகன் தூதுவரக் கண்டாள் சொல்லியது.

காதலர் தூதொடு வந்த கனவினுக்கு - யான் வருந்துகின்றது அறிந்து அது நீபக் காதலர் விடுத்த தூதினைக்கொண்டு என் மாட்டு வந்த கனவினுக்கு, விருந்து யாது செய்வேன் - யான் விருந்தாக யாதனைச் செய்வேன்?

விருந்து என்றது விருந்திற்குச் செய்யும் உபசாரத்தினை. அது கனவிற்கு ஒன்று காணுமையின், 'யாது செய்வேன்' என்ருள். (1)

கயலுண்கண் யான்இரப்பத் துஞ்சின் கலந்தார்க்கு
உயலுண்மை சாற்றுவேன் மன். 1212

தூதுவிடக் கருதியாள் சொல்லியது.

கயல் உண்கண் யான் இரப்பத் துஞ்சின் - துஞ்சாது வருந்து கின்ற என் கயல்போலும் உண் கண்களை யான் இரந்தால் துஞ்சு மாயின், கலந்தார்க்கு உயல் உண்மை சாற்றுவேன் - கனவிடைக் காதலரைக் காண்பேன், கண்டால் அவர்க்கு யான் ஆற்றியுளே னைய தன்மையை யானே விரியச் சொல்வேன்.

'கயலுண்கண்' என்றுள, கழிந்த நலத்திற்கு இரங்கி. உயல் - காம நோயக்குத தப்புதல். தூதர்க்குச் சொல்லாது யாம் அடக்கு வனவும் சொல்லுவனவற்றுளளும் சுருக்குவனவற்றின் பரப் பும் தோன்றத் சொல்வேன் என்னும் கருததால் 'சாற்றுவேன்' என்றுள. இனி, அவையும் துஞ்சா; சாற்றலும் கூடாது என்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. முன்னும் கண்டாள கூற்றுகவின், கனவு நிலையுரைத்தலாயிற்று. (2)

நனவினுள் நல்கா தவரைக் கனவினுள்
காண்டலின் உண்டுஎன் உயிர். 1213

ஆற்றுள் எனக் கவன்றருட்கு ஆற்றுவல் என்பது படச் சொலலியது.

நனவினுள் நல்காதவரை - நனவின்கண் வந்து தலியளிசெய் யாதாரை, கனவினும் காண்டலின் என் உயிர் உண்டு. யான் கன வின்கண் கண்ட காட்சியானே என்னுயிர் உண்டாகா நின்றது. மூன்றனுருபுகள ஏழன்பொருண்மைக்கண் வநதன. அக் காட்சியானே யான் ஆறறியுளேனுகின்றேன். நீ கவலல்வேண் டாம் என்பதாம். '3)

கனவினுள் உண்டாகும் காமம் நனவினுள்
நல்காரை நாடித் தரற்கு. 1214

இதுவும் அது.

நனவினுள் நல்காரை நாடித் தரற்கு - நனவின்கண் வந்து தலியளி செய்யாதாரை அவர் சென்றுழி காடிக் கொண்டுவந்து கனவு தருதலான், கனவினுள் காமம உண்டாகும் - இக் கனவின் கண்ணே எனக்கு இன்பமுண்டாகா நின்றது.

காமம் - ஆருபெயர். நான்காவது மூன்றன் பொருண்மைக் கண் வந்தது. இபலபான் நலகாதவரை அவர் சென்ற தேயம் அறிந்து சென்று கொண்டு வந்து தந்து நல்குவித்த கனவால் யான் ஆற்றுவல் என்பதாம். (4)

நனவினுள் கண்டதூஉம் ஆங்கே கனவும்தான்
கண்ட பொழுதே இனிது. 1215

இதுவும் அது.

கனவினுள் கண்டதூஉம் (இனிது) ஆங்கே - முன் கனவின் கண் அவரைக் கண்டு துகர்ந்த இன்பதூஉம் இனிதாயிற்று அப் பொழுதே கனவுமதான் கண்ட பொழுது இனிது இன்று கனவின் கண் கண்டு நுகர்ந்த இன்பமும் அக் கண்டபொழுதே இனிதா யிற்று. அதனன் எனக்கு இரண்டும் ஒத்தன.

'இனிது' என்பது முன்னும் பின்னும் கூட்டப்பட்டது. கனவு - ஆகு பெயர். முன்னும் பின்னும் பெறறது இவ்வளவே, இன்னும் அது கொண்டு ஆற்றுவல் என்பதாம். (5)

நனவுஎன ஒன்றுஇல்லை ஆயின் கனவினுள்
காதலர் நீங்கலர் மன் 1216

இதுவும் அது.

கனவென ஒன்று இல்லையாயின் - நனவு என்று சொல்லப்படு கின்ற ஒரு பாவி இலலையாயின், கனவினுள் காதலர் நீங்கலர் - கனவின்கண் வந்துகூடிய காதலர் என்னைப் பிரியார்.

ஒன்று என்பது அதன் கொடுமை விளக்கி நின்றது. அஃது இடையே புகுந்து கனவுவப் போக்கி அவரைப் பிரித்தது என் பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. கனவிற் பெற்று ஆற்றுகின்றமை கூறியவாறு. (6)

நனவினுள் நல்காக் கொடியார் கனவினுள்
என்எம்மைப் பீழிப் பது. 1217

விழித்துழிக் காணாயினுள் கனவிற்கூட்டம் நிணைந்து ஆற்றுளாய்ச் சொல்லியது.

நனவினுள் கல்காக் கொடியார் - ஒருஞான்றும் நனவின்கண் வந்து தலையளிசெய்யாத கொடியவர், கனவினுள் எம்மைப் பீழிப்பது என் - நாளதோறும் கனவின்கண்வந்து எம்மை வருத் துவது எவ் இயைபுபற்றி?

பிரிதலும் பின் நிணைந்து வராமையும் நோக்கி 'கொடியார்' என்றும், கனவில தோள மேலாய் விழிததுழிக் காதலின், அதனனும் துன்பமாகின்றது என்பாள 'பிழிப்பது' என்றும் கூறினள. நனவின் இலலது கனவினும் இலலை என்பர்; அது கண்டிலம் என்பதாம். (7)

துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சதத ராவர் விரைந்து. 1218

தான்ஆற்றுதற்பொருட்டுத் தலைமகனை இயற்பழித்தாட்கு இயற்பட மொழிந்தது.

துஞ்சுங்கால் தோள்மேலராகி-என் நெஞ்சுவிடாதுஉறைகின்ற காதலர் யான் துஞ்சும்பொழுது வந்து என் தோளமேலராய், விழிக்குங்கால விரைந்து நெஞ்சுத்தராவர் பின் விழிக்கும்பொழுது விரைந்து பழைய நெஞ்சின் கண்ணராவர்.

கலவி விடடு மறையும் கடுமைபற்றி 'விரைந்து' என்றாள். ஒரு காலும் என்னின் நீங்கி அறியாதாரை நீ நோவற்பாலையல்லை என்பதாம். (8)

நனவினான் நல்காரை நோவர் கனவினான்
காதலர்க் காணா தவர். 1219

இதுவும் அது.

கனவினான் காதலர்க் காணாதவர் - தமக்கு ஒருகாதலர் இன்மையின் அவரைக் கனவிற்கண்டறியாத மகளிர், நனவினான் நல்காரை நோவர் – தாம் அறிய நனவின்கண் வந்து நல்காத நம் காதலரை அன்பிலர் என நோவாநிற்பர்.

இயற்பழித்தது பொறாது புலக்கின்றாள் ஆகலின், அயன்மை தோன்றக் கூறினாள். தமக்கும் காதலருளராய் அவரைக் கனவிற் கண்டறிவாராயின், நம் காதலர் கனவின்கண் ஆற்றி நல்குதல் அறிந்து நோவார் என்பதாம். (9)

நனவினான் நம்நீத்தார் என்பர் கனவினான்
காணார்கொல இவ்ஊ ரவர். 1220

இதுவும் அது.

இவ் ஊரவர் நனவினான் நம் நீத்தார் என்பார் - இவ் ஊரின் மகளிர் நனவின்கண் நம்மை நீத்தார் என்று நம் காதலரைக் கொடுமை கூறாநிற்பர், கனவினான் காணார் கொல அவர் கனவின் கண் நீங்காது வருதல் கண்டறியாரோ?

என்னொடு தன்னிடை வேற்றுமை இன்றாயின் யான் கண்டது தானும் கண்டமையும், அது காணாது அவரைக் கொடுமை கூறு கின்றமையின் அயலாளேயாம் என்னும் கருத்தால், இவ் ஊரவர் என்றாள். (1)

123. பொழுது கண்டு இரங்கல்.

அஃதாவது மாலைப்பொழுது வந்துழி அதனைக்கண்டு தலைமகள் இரங்குதல் 'கனாமுந்துறாத விலையில்லை' (பழமொழி. 2) என்பதுபற்றிப் பகற்பொழுது அற்றி இருந்தாட்கு உரிய தாகலின் இது கனவுநிலை உரைத்தலின் பின் வைக்கப்பட்டது.

மாலையோ அல்லை மணந்தார் உயிர்உண்ணும்
வேலைநீ வாழி பொழுது. 1221

பொழுதொடு புலந்து சொல்லியது.

பொழுது – பொழுதே, நீ மாலையோ அல்லை - நீ முன்னை களின் வந்த மாலையோ எனின், அலை; மணக்தார் உயிர் உண் ணும் வேலை இருந்த ஆற்றான் அங்நாட் காதலரை மணக்த மகளிர் உயிரைபுண்ணும் இதுநிக்காலமாய் இருந்தாய்.

முன்னை – கூடியிருந்த நான. அகாள மணந்தார் எனவே பின் பிரிகதாராதல் பெறுதும். 'வாழி' என்பது குறிப்புச்சொல்: " வாலிழை மகளிர் உயிராப்பொகி அவிழுக்குங்காலை " (கலித். நெய்தல். 2) என்றற்போல ஈண்டு பொதுமையாற் கூறப்பட்டது. மாலை நீ அல்லை எனவும் பாடம். வேலை என்பது ஆருபெயர். வேலை என்பதற்கு வேலாயிருந்தாய் என்பாரும் உளர். (1)

புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை. 1222

தன்னுட்கையாற்றை அதன்மேலிட்டுச் சொல்லியது.

மருளமாலை-மயங்கிய மாலாய், புன்கண்ணை - நீயும் எம் போலப் புன்கணுடையையாயிருந்தாய், நின் துணை எங்கேள் போல் வன்கண்ணதோ-நின்துணையும் எம் துணைபோல் வன் கண்மையுடையதோ, கூறுவாயாக.

மயங்குதல்-பகலும் இரவும் தம்மூளளே வீரவுதல்; கறங்கு தலும் தோன்றநின்றது. புன்கண்-ஒளியிழத்தல்; அதுபற்றித் துணையும் உண்டாக்கிக் கூறினள். எச்ச உம்மை விகாரத்தால் தொக்கது. எமக்குத் துன்பஞ்செய்தாய்; நீயும் இன்பமுற்றியே என்னும குறிப்பால் 'வாழி' என்றுள. (2)

பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித்
துன்பம் வளர வரும். 1223

ஆற்றல்வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.

பனி அரும்பிப் பைதல்கொள் மாலை - காதலர் கூடிய காளெல்லாம் என்முன் நடுக்கம் எய்நிப் பசந்துவந்த மாலை, துனி அரும்பித் துன்பம் வளர வரும்–இக்நாள் எனக்கு இறக்துபாடு வந்துதோன்றி அதற்கு உளதாந்துன்பம் ஒருகாலிக்கு ஒருகால் மிக வாராநின்றது.

குளிர்ச்சிதோன்ற 'மயங்கிவருமாலை' என்னுஞ்செம்பொருள இக் குறிப்புணர நின்றது. துனி - உயிர்வாழ்தறகண் வெறுப்பு. அதனுல் யான் ஆற்றுமாறு என்னை என்பது குறிப்பெச்சம். (3)

காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும். 1224

இதுவும் அது.

மாலை - காதலர் உள்ளபொழுதெல்லாம் என் உயிர்தளிர்ப்ப வந்தமாலை, காதலர் இல்வழி - அவர் இல்லாத இப்பொழுது,

கொலைக்களத்து ஏதிலர்போலவரும் - அஃது ஒழிக்துநிற்றலேஅன்றிக்கொல்லுங்களரியில் கொலைஞர் வருமாறுபோல அவ் உயிரைக் கோடற்கு வார்நின்றது.

ஏதிலர்–அருளயாதுமில்லார். முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ் செய்து வந்த பொழுதும் இன்று என்மேற்பகையாய்த் துன்பஞ்செய்து வாராநின்றது. இலி யான் ஆற்றுமாறு என்னை என்பதாம். (4)

காலிக்குச் செய்த நன்றுஎன்கொல் எவன்கொல்யான் மாலிக்குச் செய்த பகை. 1225

இதுவும் அது.

(காலியும், மாலியும், அவர் கூடிய ஞான்றுபோலாது இஞ் ஞான்று வேறுபட்டு வாராநின்றனை; அவற்றுள,) யான் காலிக்குச் செய்த நன்று என் - யான் காலிக்குச் செய்த உபகாரம் யாது? மாலிக்குச் செய்த பகை எவன் - மாலிக்குச் செய்த அபகாரம் யாது?

கூடியஞான்று பிரிவர் என்று அஞ்சப்பண்ணிய காலே அஃது ஒழிக்து இஞ்ஞான்று கங்குலவெளளதநிறருக் கரையாய் வாராகின்றது என்னும் கருத்தால 'நன்றுஎன்கொல்' என்றும், கூடியஞான்று இன்பம் செய்துவந்த மாலே அஃது ஒழிக்து இஞ்ஞான்றும் அளவில துன்பஞ்செய்யாகின்றதுஎன்னுங்கருத் தால் 'பகைஎவன் கொல்' என்றும் கூறினள. பகை-ஆகுபெயர். தன்னேடு ஒத்த காலேபோலாது மாலே தன் கொடுமையால துன் பம் செய்யாகின்றது என்பதாம. (5)

மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத காலை அறிந்தது இலேன். 1226

இன்று இன்னேயாகின்றநீ அன்று அவர்பிரிவிற்கு உடம் பட்டது என்னே என்ருட்குச் சொல்லியது.

மாலே நோய் செய்தல் – முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ் செய்து போக்த மாலே இன்று பகையாய்த துன்பஞ் செய்தலே, மணங்தார் அகலாத காலே அறிந்தது இலேன்–காதலர் பிரிதற்குமுன்னே அறியப்பெற்றிலேன்.

இங்ஙனம் வேறுபடுதல அறிந்திலேன்; அறிந்தேனுயின் அவர் பிரிவிற்கு உடம்படேன் என்பதாம. (6)

காலை அரும்பிப் பகல்எல்லாம் போதாகி மாலை மலரும்இந் நோய். 1227

மாலேப் பொழுதின்கண் இணையயாதற்குக்காரணம் என்னே என்ருட்குச் சொலலியது

இக்நோய் - இக் காமநோயாகிய பூ, காலை அரும்பி - காலைப் பொழுதின்கண் அரும்பி, பகல் எல்லாம் போது ஆகி - பகற் பொழுதெல்லாம் பேர் அரும்பாய் முதிர்ந்து, மாலைமலரும்-மாலைப் பொழுதின்கண் மலராகின்றும்.

துயிலெடுத்தபொழுதாகலின் கனவின்கண் கூட்டம்நிகழ்ந்து ஆற்றுதல் பற்றி, 'காலை அரும்பி' என்றும், பின் பொழுதுசெலச் செல அதுமலராது பிரிவுளளி ஆற்றாளாதல்பற்றி 'பகலெல்லாம் போதாகி' என்றமை, தருதம்துணைபு உளளி வருது சேரும் விலங்கு களையும்மக்களையும் கண்டு தான் அக்காலத்தின் நுகர்ந்த இன்பம் நினைந்து ஆற்றாமையிற்பற்றி 'மாலை மலரும்' என்றும் கூறினள். பூப்போல இக நோ பகாலவபத்தாகாகின்றது என்பது உருவகத் தால் பெறப்பட்டது ஏகதேச உருவகம். (7)

அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை. 1228

இதுவும் அது.

ஆயன் குழல் - முன்னெல்லாம் இனிதாய்ப்போந்த ஆயன் குழல், அழல்போலும் மாலைக்குத தூதாகி - இதுபொழுது அழல் போலச் சுடுவதாய மாலைக்குத தூதுமாய், கொல்லும படை-அது வந்து என்னைக்கொல்வுழிக் கொலலும் படையும் ஆயிற்று.

பின்னின்ற 'போலும்' என்பது உவையசை. முன்னரே வர வுணர்த்தலின் தூதாயிற்று; நோறற் கருவியாகலின் படையா யிற்று. தானே சுடவலல மாலை இதனுணையும் பெறாரல் என்செய் யாது என்பதாம். (8)

பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து. 1229

இதுவும் அது.

'இதற்கு முன்னெல்லாம் யானே மயங்கி நோயுழற்றேன்' மதி மருண்டு மாலை படர்தரும் போழுது - இனிக் கண்டாரும் மதிமரு ளும்வகை மாலை வரும்பொழுது, பதி மருண்டு பைதல உழக்கும் - இப் பருவியெலலாம மயங்கி நோயுழக்கும்.

மதி மருள என்பது மதி மாருண்டு எனத் திரிந்து நின்றது. கூற்றமாகக் கருதிக் கூறினாராகலின் 'மாலைபடர்தரும் போழ்து' என்றார். யான் இறந்து படுவல் என்பதாம். மாலை மயங்கிவரும் போழது என் மதி நிலைகலங்கி நோயும் உழக்கும் என்று உரைப் பாரும் உளர். (9)

பொருண்மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயும்என் மாயா உயிர். 1230

இதுவும் அது.

மாயா என் உயிர் - காதலர் பிரிவைப் பொறுத்து இறக்துபடாதிருக்த என் உயிர், பொருண்மாலேயாளரை உள்ளி மருள்மாலே மாயும் - இன்று பொருளியல்பே தமக்கியல்பாக உடையவரை நினைந்து, இம்மயங்கும் மாலேக்கண்னே இறக்துபடா கின்றது.

குறித்தபருவம் கழியவும் பொருள் முடிவு கோக்கி வாராமை யின் சொல்வேறு படாமையாகிய தம்மியல்பு ஒழிக்தவர் அப் பொருளியல்பேதம் இயல்பாயினர்; காலம் இதுவாயிற்று, இனி நீ சொலலுகின்றவாற்றல் பயனில்லே என்பதாம். (10)

124. உறுப்பு நலன் அழிதல்

அஃதாவது தலேமகள தன் கண்ணும், தோளும், நுத லும் முதலாய அவயவங்களா தம் அழகு அழிதல். இஃது, இரக்கம் மிக்குழி நிகழவதாகலின், பொழுதுகண்டு இரங்க லின் பின் வைக்கப்பட்டது.

சிறுமை நமக்கொழியச் சேண்சென்ருர் உள்ளி
நறுமலர் நாணின கண். 1231

ஆற்ருமை மிகுதிபான் வேறுபட்ட தலேமகட்குத் தோழி சொலலியது.

சிறுமை நமக்கு ஒழியச் சேண்சென்ருர் உளளி-இவ் ஆற்ருமை நம்கண்ணேநிற்பத தாம் சேணிடைச்சென்ற காதலரை நீ நினைந்து அழுதலால, கண் நறுமலா நாணின - நின் கண்களா ஒளியிழந்து முன் தமக்கு நாணிய நறுமலர்கட்கு இன்று தாம் நாணிவிட்டன.

நமக்கு என்பது வேற்றுமை மயக்கம். 'உளள' என்பது 'உளளி' எனத திரிந்து நின்றது. உளளுதல் என்பது காரணப் பெயர் காரியததிற்காய ஆகுபெயா. இவை கண்டார் அவரைக் கொடுமை கூறுவர், நீ ஆற்றல் வேண்டும் என்பது கருத்து. (1)

நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரும் கண். 1232

இதுவும் அது.

பசது பனிவாரும் கண்-பசப்பெய்தன்மேல் நீர் வார்கின்ற கண்கள், நயநதவா நல்காமை சொல்லுவ போலும் - நம்மால் நயக்கப்பட்டவரது நல்காமையைப் பிறர்க்குச் சொல்லுவபோலா கின்றன, இனி நீ ஆற்றல் வேண்டும்.

சொல்லுவபோறல் அதனே அவர் உணருதற்கு அனுமான மாதல். 'நயந்தவர்க்கு' என்று பாடம் ஓதுவாரும் உளர். (2)

தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள். 1233

இதுவும் அது.

மணந்த நாள் வீங்கியதோள் - காதலர் மணந்தனராண்டு இன்பமிகுதியால் பூரித்த நின் தோள்களை, தணந்தமை சால அறிவிப்பபோலும் - இன்று அவர் பிரிந்தமையை விளங்க உணர்த்துவதுபோல மெலியாநின்றன, இது தகாது.

அன்றும் அவ்வாறு பூரித்து, இன்றும் இவ்வாறு மெலிந்தால் இரண்டும் கண்டவர் கடிதின் அறிந்து அவரைத் தகவின்மை கூறுவர் என்பதாம். (3)

பணிநீங்கிப் பைந்தொடி சோரும் துணிநீங்கித் தொல்கவின் வாடிய தோள். 1234

இதுவும் அது.

துணிநீங்கிய தொல்கவின் வாடிய தோள - அன்றும் தம் துணிவுநீங்குதலான் அவரால் பெற்ற செயற்கை அழகே அன்றி, பழைய இயற்கை அழகும் இழந்த இதோள்கள, பணிநீங்கிப் பைந்தொடி சோரும் - இனறு அதற்குமேலே தம் பெருமை இழந்து வளை கழலா நின்றன, இவை இங்ஙனம் செயற்பாலவல்ல.

பெருமை இழத்தல் - மெலிதல. பைந்தொடி-பசிய பொன்னால் செய்த தொடி, சோரும என்னும் வினைதொழில தோளமேல் நின்றது. அன்றும் பிரிந்தார் என்று அவரன்பின்மை உணாதகி இன்றும் குறிதத பருவதது வநதிலர் என்று அவர பொய்மை உணர்த்தா நின்றன, இனி அவற்றைக் கூறுகின்றர் மேல குறை உண்டோ என்பதாம். (4)

கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு தொல்கவின் வாடிய தோள். 1235

இதுவும் அது.

கொடியார் கொடுமை உரைக்கும் - கவவுக்கை நெகிழினும் ஆற்றுதாட்கு இக் கால நீட்டதது என்னும் என்று நினையாத கொடியாரது கொடுமையைத தாமே சொல்லா நின்றன, தொடியொடு தொல கவின் வாடிய தோள - வளைகளும் கழன்று பழைய இயற்கை அழகும் இழந்த இத் தோளகள, இனி அதனை யாம் மறைக்குமாறு என்னை?

உரைக்கும் என்பது அப்பொருண்மைதோன்ற நின்ற குறிப்புச்சொல். ஒடு - வேறு வினைக்கண் வந்தது. அவரொடு கலநத தோளகளே சொல்லுவனவாலை அயலார் சொல்லுதல் சொல்ல வேண்டுமோ என்பதாம். (5)

தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக் கொடியர் எனக்கூறல் நொந்து. 1236

தான் ஆற்றுதற் பொருட்டு இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

தொடியொடு தோள் நெகிழ - யான் ஆற்றவும் என்வயத்த வன்றித் தொடிகள கழலுமாறு தோளகள் மெலிய, அவரைக் கொடியர் எனக் கூறல் நொந்து நோவல் - அவற்றைக் கண்டு நீ அவரைக் கொடியர் எனக் கூறுதலிப் பொருது யான் என் னுளளே நோவாநின்றேன்.

ஒடு - மேலவந்த பொருண்மைத்து. யான் ஆற்றேனுகின்றது அவர் வாராததற்கன்று, நீ கூறுகின்றதற்கு என்பதாம். (6)

பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்குஎன் வாடுதோள் பூசல் உரைத்து. 1237

அவ் இயற்பழிப்புப் பொருது தன் நெஞ்சிற்குச் சொல் லியது.

நெஞ்சே - நெஞ்சே, கொடியார்க்கு என் வாடு தோளபூசல் உரைதது - இவள கொடியார என்கின்றவர்க்கு நீ சென்று என் மெலிகின்ற தோளிலை விளைநின்ற ஆரவாரதைதச் சொல்லி, பாடு பெறுதியோ - ஒரு மேம்பாடு எய்தவலிலையோ, வல்லியாயின் அதனை ஒப்பதிலலை.

'கொடியாாக்கு' என்பது கொடியரல்லர் என்பது தோன்ற நின்ற குறிப்புச்சொல. 'வாடுதோள' என்பதும் அவை தாமே வாடாநின்றன என்பது தோன்றநின்றது. பூசல் - ஆருபெயர். அஃது அவள தோள நோக்கி இயறபழிததல மேலும், அதனல் தனக்கு ஆறறுமை மிகன்மேலும் நின்றது. நின்னுரை கேட்டலும் அவா வருவா வகதால, இவையெலலாம் நீங்கும், நீங்க, அஃது எனக்குக் காலததிறறசெயத கன்றியாமாகலின், அதன் பயனெல் லாம எயதுதி என்னும கருததால 'பாடுபெறுதியோ' என்ருள.(7)

முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது பைந்தொடிப் பேதை நுதல். 1238

வினைமுடிந்து மீளுமுறற தலைமகன் முன் நிகழ்ந்தது நினைந்து தன்னுள்ளே சொல்லியது.

முயங்கிய கைகளை ஊக்க - தன்னை இறுக முயங்கிய கைகளை இவட்கு நோம என்று கருதி ஒருஞான்று யான் நெகிழ்ததேனுக, பைந்தொடிப் பேதை நுதல பசநதது - அத துணையும் பொருது பைநதொடிகளை அணிநத பேதையது நுதல் பசந்தது, அப்பெற் றிததாய நுதல இப் பிரிவிற்கு யாது செய்யுமோ?

இனிக் கடிதிற செலலவேண்டும் என்பது கருத்து. (8)

முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற பேதைபெருமழைக் கண். 1239

இதுவும் அது.

முயக்கிடைத் தண் வளி போழ - அங்ஙனம் கைகளை ஊக்குதலான் அம் முயக்கிடையே சிறுகாற்று நுழைந்ததாக, பேதை பெருமழைக்கண் பசப்புற்ற - அத்துணையிடையீடும் பொறாது, பேதையுடைய பெரிய மழைக்கண்கள் பசப்புற்றன, அத்தன்மையவான கண்கள் மலைகளும், காடும், நாடுமாய இவ் இடையீடுகளையெல்லாம் யாங்ஙனம் பொறுத்தன?

தண்மை - ஈண்டு மென்மைமேல நின்றது. 'போழ' என்றது உடம்பு இரண்டும ஒன்றானதுதோன்ற நின்றது. மழை-குளிர்ச்சி.()

கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு. 1240

இதுவும் அது.

கண்ணின் பசப்போ பருவரல எய்தின்று - தண் வளி போழ வந்த கண்ணின்பசப்புத துன்பமுற்றது, ஒண்ணுதல செய்தது கண்டு - தனக்கு அயலாக ஒண்ணுதல விளைத்த பசப்பைக் கண்டு.

அது கைகளை ஊக்க அவ்வளவில பசந்தது, யான் கைகளையும் ஊக்கி மெய்களும் நீங்கிச் சிறுகாற்று ஊடறுக்கும் துணையும் பசந்திலன் எனத் தன் வன்மையும் அவள மென்மையும் கருதி வெளகிற்று என்பதாம். ஆகவே, அவளுறுப்புக்கள ஒன்றினொன்று முற்பட்டு நலன் அழியும், யாம் கடிதிற் சேறும் என்பது கருததாயிற்று. (10)

125. நெஞ்சொடு கிளத்தல்

அஃதாவது ஆற்றாமை மீதூரத தனக்கு ஓர் பற்றுக்கோடு காணாத தலைமகள தன் நெஞ்சொடு செய்திறன் அறியாது சொல்லுதல. இஃது, உறுப்புக்கள தம் நலனழிந்த வழி நிகழவதாகலின், உறுப்பு நலன் அழிதலின் பின் வைக்கப்பட்டது.

நினைத்துஒன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து. 1241

தன் ஆற்றாமை தீரும் திறன் நாடியது.

நெஞ்சே - நெஞ்சே, எவ்வநோய தீர்க்கும மருந்து ஒன்று - இவ் எவ்வநோயினைத தீர்க்கும் மருந்தாவ தொன்றனை, எனைத்து ஒன்றும நினைததுச் சொலலாய் - யான் அறியுமாறறலிலன், எத தன்மையது யாதொன்றாயினும நீ அறிந்து எனக்குச் சொல.

எவ்வம் - ஒன்றானும தீராமை. உயிரினும் சிறந்த நாணினை விட்டுச் செய்வது யாதொன்றாயினும் என்பாள 'எனைத்தொன்றும்' என்றாள். (1)

காதல் அவர்இல ராகநீ நோவது
பேதைமை வாழிஎன் நெஞ்சு. 1242

தலைமகனைக் காண்டறகண் வேடகைமிகுதியால் சொல்லியது.

என் நெஞ்சு வாழி - என் நெஞ்சே, வாழ்வாயாக; அவர் காதல் இலராக நீ நோவது - அவர் நம்கண் காதலிலராகவும் நீ அவர் வரவு நோக்கி வருந்துதற்கு ஏது, பேதைமை - நின் பேதைமையே, பிறிதில்லை.

...நம்மை நினையாமையின், நங்கண் காதல் இலர் என்பது அறியலாம், அஃதறியாமை மேலும் அவர்பால் செலலக் கருதாது அவர் வரவுபார்த்து வருந்தா நின்றாய், இது நீ செய்துகொளகின்றது என்னும் கருத்தால் 'பேதைமை' என்றாள். வாழி-இகழச்சிக் குறிப்பு. யாம் அவர்பால் சேறலே அறிவாவது என்பதாம். (2)

இருந்துஉள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துஉள்ளல்
பைதல்நோய் செய்தார்கண் இல். 1243

இதுவும் அது.

நெஞ்சே இருந்து உள்ளிப் பரிதல் என் - நெஞ்சே, அவர்பால் செலவதும் செய்யாது ஈண்டு இறந்துபடுவதும் செய்யாதிருந்து அவர் வரவு நினைந்து நீ வருந்துகின்றது என்னை, பைதல் நோய் செய்தார்கண் பரிந்து உள்ளல் இல் - இப் பையுள் நோய் செய்தாராமாட்டு நமக்கு இரங்கி வரக் கருதுதல் உண்டாகாது.

நமமாட்டு அருளுடையா அன்மையின் தாமாக வாரார், நாம் சேறலே இனித் தகுவது என்பதாம் (3)

கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவைஎன்னைத்
தின்னும் அவர்க்காணல் உற்று. 1244

இதுவும் அது.

நெஞ்சே கண்ணும் கொளச் சேறி - நெஞ்சே, நீ அவர்பாற் சேறலுற்றாயாயின் இக் கணகளையும் உடன்கொண்டு செலவாயாக, இவை அவர்க் காணல் உற்று என்னைத் தின்னும் - அன்றி நீயே சேறியாயின், இவைதாம் காட்சி விதுப்பினை அவரைக் காண்டல்வேண்டி நீ காட்டு என்று என்னைத் தின்பனபோன்று நலியாநிற்கும்.

கொண்டு என்பது கொள் எனத் திரிந்துநின்றது. தின்னும் என்பது இலக்கணைக் குறிப்பு. அந் நலிவு தாக்கவேண்டும் என்பதாம் என்றது, தான் சேறல் குறித்தது. (4)

செற்றார் எனக்கை விடல்உண்டோ நெஞ்சேயாம்
உற்றால் உறாஅ தவர். 1245

இதுவும் அது.

நெஞ்சே - நெஞ்சே, யாம் உற்றால் உறுதவர் - யாம் தம்மை யுறத் தாம் உறுத நம் காதலரை, செற்றாரெனக் கைவிடல் உண்டோ - வெறுததார் என்று கருதிப் புலந்து கைவிட்டிருக்கும் வலி நமக்குண்டோ, இல்லை.

உறுதல் - அன்பு படுதல். அவ் வலியின்மையின் அவர்பால் செல்வதே நமக்குத தகுவது என்பதாம். (5)

கலந்துஉணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துஉணராய்
பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு. 1246

தலைமகன் கொடுமை நினைந்து செலவு உடன்படாத நெஞ்சினைக் கழறியது.

என் நெஞ்சு - என் நெஞ்சே, கலநது உணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்து உணராய்-யான் தம்மொடு புலந்தால் அப்புலவியைக் கலவிதன்னானே நீக்க வலல காதலரைக் கண்டால பொய்யேயாயினும் ஒருகால் புலந்து பின்னதனை நீங்க மாட்டாய், பொய்க் காய்வு காய்தி-அதுவும் மாட்டாத நீ இப்பொழுது அவர் கொடியர் எனப் பொய்க் காய்வு காயாநின்றாய், இனி இதனை ஒழிநது அவாபாற் செலலத துணிவாயாக.

கலத்தலான் என்னும் பொருட்டாய கலக்க என்பது திரிந்து நின்றது. அதனான் உணாததலாவது கலவியின்பததைக் காட்டி, அதனான் மயக்கிப் புலவிக் குறிப்பினை ஒழிததல. பொய்க்காய்வு-நிலையில் வெறுப்பு. கண்டால் மாடடாத நீ காணாதவழி வெறுக்கின்றதனால் பயனில்லை என்பதாம. (6)

காமம் விடுஒன்றோ நாண்விடு நல்நெஞ்சே
யானோ பொறேன்இவ் இரண்டு. 1247

நாண் தடுததலின் அச் செலவு ஒழிவாள சொலலியது.

நல நெஞ்சே - நலல நெஞ்சே, ஒன்று காமம் விடு - ஒன்றின் நாண் விடமாட்டாயாயின் காமவேட்கையை விடு, (ஒன்று) நாண் விடு - ஒன்றின் அது விடமாட்டாயாயின் நாணினை விடு, இவ் இரண்டு யானோ பொறேன்-அன்றியே இரண்டும விடாமை நின் கருததாயின், ஒன்றறகொன்று மறுதலையாய இவ இரண்டனையும் உடன் தாங்கும் மதுகை யான் இலன்.

யானோ என்னும பிரிநிலை நீ பொறுப்பினும் என்பதுபட நின்றது. 'நல்நெஞ்சே' என்றது, இரண்டையும் விடாது பெண்மையை நிலைபெறுததலின், நலலை என்னும் குறிப்பிற்று. அது நன்றே என்னும என் உயிருண்டாதல் சாலாமையின், அதற்கு ஆகின்றிலேன் என்பதாம. முறறு உமமை விகாரததால தொக்கது.

பரிந்தவர் நல்கார்என்று ஏங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு. 1248

இதுவும் அது.

என் நெஞ்சு - என் நெஞ்சே, **அவர் பிரிந்து நலகார் என்று-அவர் இவ்வாற்றுமையை அறியாமையின் கொடுவந்து தலேயளி செய்யாராயினர் என்று கருதி, பிரிகதவர்பின் ஏங்கிச் செல்வாய் பேதை-அறிவிகதற்பொருட்டு நம்மைப் பிரிந்துபோயவர்பின் ஏங்கிச்செலலுறற நீ யாதும அறியாய்.**

ஆற்றுமை கண்டு வைததும நல்காது போயினரைக்காணு வழிச் சென்று அறிவிதத துணையானே நலகவருவா என்று கரு தினமையின் 'பேதை' என்றுள. (8)

உள்ளத்தார் காத லவர்ஆக உள்ளிநீ
யாருழைச் சேறிஎன் நெஞ்சு. 1249

இதுவும அது.

என் நெஞ்சு-என் நெஞ்சே, காதலவா உளளத்தாராக-காத லர் நின்னகதத்தாராக, நீ உளளி யாருழைச் சேறி-முன்பெலலாம் கண்டுவைதது இப்பொழுது நீ புறத்துத தேடிச செல்கின்றது யாரிடத்து?

உளளம் என்புழி அம பருதிப்பொருளாகுதி. நின்னகத் திருக்கின்றவரை அஃது அறியாது புறதத்துத்தேடிச்சேறல் நகை உடைத்து, அதனை ஒழி என்பதுமம. (9)

துன்னுத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா
இன்னும் இழத்தும் கவின். 1250

அவரை மறகது ஆறறல வேண்டும என்பதுபடச் சொல்லி யது.

துன்னுத் துறகதாரை நெஞசத்து உடையேமா-நம்மைக் கூடாவண்ணம நறகதுபோயினரை நாம் அகதது உடையேமாக, இன்னும் கவின் இழததும-முன் இழந்த புறக் கவினேயன்றி நின்ற அகக் கவினும இழபபேம்.

"குன்றின்-நெஞசுபக வறிந்த அஞ்சுடா நெடுவேல்" (குறுங். கடவுள வாழ்தது) என்புழிப்போல நெஞ்சு என்பது ஈண்டும அகப் பொருட்டாய் நின்றது. அவா நமமைததுன்னுமல துறகதார் ஆகவும், நாம அவரை மறததல மாடடேமாகவும், போன மெய்க்க வினே அன்றி நின்ற நிறையும் இழப்பேம் என்பதாம். (10)

126. நிறை அழிதல்

அஃதாவது கலிமகள மனதது அடக்கற்பால்ன வற்றை வேட்கைமிகுதியான் அடக்கமாட்டாது வாயவிடுதல். "நிறையெனப்படுவது மறைபிறா அறியாமை" (கலித. நெய் தல். 16) என்ருர் பிறரும். அஃது அழிதற்காரணம நெஞ சொடுகிளந்தமையின், இது நெஞ்சொடு கிளததலின் பின் வைக்கப்பட்டது.

காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு. 1251

நாணும் நிறையும் அழியாமை நீ ஆற்றல்வேண்டும் என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

நாணுத் தாழ் வீழ்த்த நிறை என்னும் கதவு—நாணாகிய தாழினைக் கோத்த நிறை என்னும் கதவினை, காமக் கணிச்சி உடைக்கும்—காமவேட்கையாகிய கணிச்சி முறியாநின்றது, இனி அவை நிற்றலும் இல்லை, யான் ஆற்றலும் இல்லை.

கணிச்சி—குந்தாலி. நாணுள்ள நுணையும் நிறையழியாதாகலின் அதனைத் தாழாக்கியும், அகத்துக்கிடந்தன பிறாகொள்ளாமற் காத்தலின் நிறையைக் கதவாக்கியும், வலியவாய்த் தாமாக நீங்காத அவ இரண்டனையும் ஒருங்கு நீக்கலின் தன் காமவேட்கையைக் கணிச்சியாக்கியும் கூறினாள். (1)

காமம் எனஒன்றோ கண்ணின்றுஎன் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில். 1252

நெஞ்சின்கண் தோன்றிய காமம் நெஞ்சால் அடக்கப்படும் என்றாட்குச் சொல்லியது.

யாமத்தும் என் நெஞ்சத்தைத் தொழில் ஆளும்—எல்லாரும் தொழிலொழியும் இடையாமத்தும் என் நெஞ்சத்தை ஒறுத்துத் தொழிலகொள்ளா நின்றது, காமம் என ஒன்று கண் இன்று—ஆகலாற் காமம் என்று சொல்லப்பட்ட ஒன்று கண்ணோட்டம் இன்றாயிருந்தது.

ஓ என்பது இரக்கக்குறிப்பு. தொழிலின் கண்ணேயாடல்—தலைமகன்பாற் செல்விடுத்தல். தாயைப்பணிகோடல் உலகியலன்மையின் 'காமம் என ஒன்று' என்றும், அது தன்னைக்கொள்கின்றது அளவறியாது கோடலின் 'கண்ணின்று' என்றும் கூறினாள். அடக்கப்படாமை கூறியவாறு. (2)

மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்புஇன்றித்
தும்மல்போல் தோன்றி விடும். 1253

மகளிர்காமம் மறைக்கப்படும் என்றாட்குச் சொல்லியது.

காமத்தை யான் மறைப்பேன்—இக் காமத்தை யான் என்னுள்ளே மறைக்கக் கருதுவேன், குறிப்பு இன்றித் தும்மல்போல் தோன்றி விடும்—அதனான், இஃது என் கருத்தின் வாராது தும்மல் போல வெளிப்பட்டேவிடா நின்றது.

மன்—ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம்—இரங்கற்கண் வந்தது. தும்மல் அடங்காதாற்போல அடங்குகின்றதில்லை என்பதாம். (3)

நிறையுடையேன் என்பேன்மன் யானோஎன் காமம்
மறைஇறந்து மன்று படும். 1254

இதுவும் அது.

யான் நிறையுடையேன் என்பேன்–இன்நிலைக்கெல்லாம் யான் என்னை நிறையுடையேன் என்று கருதியிருந்தேன்; என் காமம் மறை இறந்து மன்பழி படும்–அதனால் என்? இன்று என் காமம் மறைத்தலில்கடந்து மன்றின்கண் வெளிப்படாநின்றது.

மன்னும் ஓவும்–இமலவற்றின்கண் வருதன. மன்பழிபடுதல்–பலரும் அறிதல். இனி தன்னை, நாடு அன்பு என்பதாம். (4)

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய் உற்றார் அறிவதொன்று அன்று. 1255

கம்மை மறந்தாரை நாமும் மறக்கற்பாலம் என்றாட்குச் சொலலியது.

செற்றாரின் செலலார் பெருந்தகைமை–தமமை அகன்று சென்றார் பின் செலலாது நாமும அகன்றுநிறகும் நிறையுடைமை காமநோய் உற்றார் அறிவது ஒன்று அன்று–காமநோயினை உறறார் அறிவதொன்று அனறி உறறார் அறிவதொன்று அன்று.

இனபமதெனத் துனபுறுதல் தனபமதெனத் தானே கழியுமாறு செயதலின 'செறறார்' என்றார். பின்சேறறல–மனனகதால இடை விடாது நினறகதல. பெருந்தகைமை–எண்டு ஆகுபெயர். காம நோயா உறறார்–நாமம உடைமபாடு பற்றி எனை உணராமாட்டும் சென்றே நிறறும், யான் அறிவதாகின்ற அன்று என்பதாம். (5)

செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தோ எற்றுஎன்னை உற்ற துயர். 1256

இதுவும் அது.

செறறவரின பிறறல வேணடி–என்னை ஆகனறு சென்றார் பின்னே யான் சேறலவேணடி என், என்னை உற்றதுயர் எற்று அளிதது–எனனை உறறதுயர எதறகன்றமையது? சால நன்று.

செற்றவர எனறதனால் நண்டிம அப்பொருட்டு. வேண்ட என்பது வேண்டி எனறு திரிநது நின்றது. அளிதது என்பது இகழ்சசிக் குறிப்பு. இக் காமநோய் யான் சொலலவும் கேட்கவும் ஆவதொன்றன்று, சாலக் கொடிது என்பதாம். (6)

நாண்என ஒன்றோ அறியலம் காமத்தால் பேணியார் பெட்ப செயின். 1257

பரதகையிற் பிரிநதுவநத தலைமகளைத் திறையழிவாற் கூடிபபதற்கிமகள நீ புலவாமைக்குக் காரணம யாது என்றி தோழிக்குச் சொலலியது.

பேணியார காமததாற பெட்ப செயின்–நமமால விரும்பப் பட்டவர் வருது காமததால் காம விரும்பியவற்றைச செய்யுமஎ

வில், நாண் என ஒன்றோ அறியலம்-நாண் என்றொன்றையும் அறியமாட்டேமாயிருந்தேம்.

பேணியார் எனச் செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது. விரும்பியன-வேட்கை மிகவினாற் கருதியிருந்த கலவிகள. நாண்-பரததையர் தோய்ந்த மார்பைத் தோய்தற்கு நாணுதல். ஒன்று என்பது ஈண்டுச் சிறிது என்னும் பொருட்டு. இழிவு சிறப்பு உம்மை விகாரததால தொக்கது. நிறையழிவான் அறியாது கூடிய தன் குற்றம் நோக்கி, அவளையும் உளப்படுத தாள். (7)

பல்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை. 1258

இதுவும அது.

நம் பெண்மை உடைக்கும் படை-நம் நிறையாகிய அரணை அழிக்கும் தானை, பல மாயக் களவன் பணிமொழியன்றோ-பல பொய்களைவலல் களவனுடைய தாழநத சொறகளன்றோ? ஆன பின் அதுநிறகுமாறென்னை?

பெண்மை ஈண்டுத தலைமைபற்றி நிறைமேல நின்றது. வந்தாற புலக்கக கடவேம் என்றும, புலநதால அவன்சொறகளா னும செயலகளானும நீஙகேம் என்றும், இவை முதலாக எணணிக் க்கொண்டிரு தனியாவும காணாது கலவிக்கண தன்னினும் முற் படும் வகை வநதுதோன்றினாள் என்பாள், 'பலமாயக்களவன்' என்றாள். பணிமொழி-தம்மினும் தான் அன்புமிகுதியுடையனாகச சொலலுஞ சொறகள. அவன் அததன்மையனாக, சொறகள அவையாக, நம் நிறையழியாது ஒழியுமோஎன்பதாம. (8)

புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு. 1259

இதுவும அது.

புலப்பல எனச் சென்றேன் - அவா வநதபொழுது புலக்கக் கடவேன் என்று கருதி முன் நில்லாது பிறிதோரிடததுப்போயி னேன்; நெஞ்சம கலததலுறுவது கண்டு புல்லினேன் - போயும், என் நெஞ்சம் நிறையின் நில்லாது அறைபோய் அவரோடு கலத தல் தொடங்குதலை அறிந்து, இனி அது வாயாது என்று புல்லி னேன்.

வாயாமை - புலத்தற்கருவியாய நெஞ்சுதானே கலததற்கருவி யாய் நிற்றலின் அது முடியாமை. (9)

நிணம்தீயில இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்துஊடி நிற்பேம் எனல். 1260

இதுவும் அது.

நிணம் தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு - நிணத்தைத் தீயின் கண்ணே யிட்டால அஃது உருகுமாறுபோலத தம் காதலரைக் கண்டால் நிறையழிந்துருகும் நெஞ்சினையுடைய மகளிர்க்கு, புணர்ந்து ஊடி நிற்பேம எனல் உணடோ - அவர் புணர யாம் ஊடிப் பின்பு உணராது அநநிலையே நிறகக் கடவேம் என்று கருதுதல உண்டாகுமோ? ஆகாது.

புணர்தல - ஈண்டு மிக நணுகுதல். எதிரப்படுதலுமாம். புணர என்பது புணர்ந்து எனத திரிந்து நின்றது யான் அத தன்மையேன் ஆகலின் எனக்கு அஃது இலலையாயிற்று என்ப தாம். (10)

127. அவர்வயின் விதும்பல்

அஃதாவது சேயிடைப்பிரிவின்கண தலைமகனும் தலை மகளும வேட்கைமிகவினான் ஒருவரையொருவர காண்டறகு விரைதல. தலைமகன் பிரிவும தலைமகள் ஆற்றாமையும் அதி காரப்பட்டுவருதின்றமையின், இருவரையும சுட்டிப் பொது வாகிய பன்மைப் பாலாற கூறினார். பிறரெல்லாம இதனை 'தலைமகனை நினைநது தலைமகள் விதுப்புறல்' என்றார சுட்டுப் பெயர சொலலுவான் குறிப்பொடு சுட்டிப்பொருள உணாததுவதலலது தான் ஒன்றற்குப் பெயராகாமையா னும், கவிக்கூறறாய அதிகாரததுத தலைமகன் உயாததற் பன் மையாற கூறப்படாமையானும, அஃது உரையன்மை அறிக. இதனுள தலைமகள கூறறு நிறையழிவான நிகழுந ததாகலின, அவ இயைபுபறறி நிறை அழிதலினபின் வைக கப்பட்டது.

வாள்அற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாள்ஒற்றித தேய்ந்த விரல. 1261

தலைமகள காணடல விதுப்பினால சொலலியது.

அவர சென்ற நாள ஒறறி விரல தேய்ந்த - அவர நமமைப் பிரிநதுபோய நாளகள சுவரின்கண் இழைததவற்றைத தொட்டு எணணுதலான் என் விரலகள தேய்ந்தன, கணணும் வாள அற்றுப் புற்கென்ற - அதுவேயன்றி அவரவரும வழிபாாதது என்கண்களும் ஒளியிழநது புலலியவாயின, இவவாறாயும் அவர வரவு உண்டாயிற்றிலலை.

நாள - ஆகுபெயர. புலலியவாதல் - நுண்ணிய காணமாட் டாமை. ஒறற என்பது ஒறறி எனத திரிநதுநின்றது. இனி யான் காணுமாறு என்னை என்பதாம. நாள எணணலும் வழிபாாதத லும் ஒருகாற் செய்தொழியாது இடையின்றிசசெயதலான், விதுப்பாயிறறு. (1)

இலங்கிழாய் இன்று மறப்பின்என் தோள்மேல்
கலங்கழியும் காரிகை நீத்து. 1262

ஆற்றாமைமிகுதலின் இடையின்றி நினைக்கற்பாலையல்லை;
சிறிது மறக்கல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இலங்கு இழாய் - விளங்காநின்ற இழையினையுடையாய், இன்று மறப்பின் - காதலரை இன்று யான் மறப்பேனாயின், மேல் காரிகை நீத்து என்தோள கலங்கழியும் - மேலுங் காரிகை என்னை நீப்ப என்தோளகள் வளை கழலவனவாம.

இலங்கிழாய் என்பது இதற்கு நீ யாதும் பரியலை என்னும் குறிப்பிற்று. இன்று - யான் இறந்துபடுகின்ற இன்று. மேலும- மறுபிறப்பினும். எச்சஉம்மை விகாரததாலதொக்கது. நீப்ப என்பது நீதது எனத் திரிந்து நின்றது. கழியும் என்னும் இடத்துநிகழ் பொருளின்தொழில் இடததின்மேல நின்றது. இவ் எலலைக்கண் நினைநதால மறுமைக்கண் அவரை எய்தி இன்புற லாம், அதனான் மறக்கற்பாலேனலலேன் என்பதாம். (2)

உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன். 1263

இதுவும் அது.

உரன் நசைஇ உளளம துணையாகச் சென்றார் - இன்பம் நுகர்தலை நச்சாது வேறலை நசசி நாம் துணையாதலை இகழநது தம் ஊக்கம்துணையாகப் போயினார், வரல நசைஇ இன்னும் உளேன் - அவற்றை இகழநது மண்டுவருதலை நசசுதலான, யான் இவ் எல்லையினும் உளேனாயினேன்.

உரன் என்பது ஆகுபெயா. அந் நசையான் உயிரவாழா நின்றேன்; அஃதிலலையாயின் இறநதுபடுவல் என்பதாம். (3)

கூடிய காமம் பிரிந்தார் வரவுஉள்ளிக்
கோடுகொடு ஏறும்என் நெஞ்சு. 1264

இதுவும் அது.

பிரிந்தார் கூடிய காமம் வரவு உளளி - நீங்கிய காமததராய் நம்மைப் பிரிந்துபோயவா மேற்கூடிய காமததுடனே நம்கண் வருதலை நினைந்து, என் நெஞ்சு கோடுகொடு ஏறும் - என் நெஞ்சு வருத்தமொழிந்து மேன்மேற பணைத் தெழாநின்றது.

வினைவயிற்பிரிவுழிக் காம இன்பம் நோக்காமையும், அது முடிந்துழி அதுவே நோக்கலும தலைமகற்கு இயலபாகலின், 'கூடியகாமமொடு' என்றாள. ஒடு உருபு விகாரததால் தொக் கது. கோடுகொண்டேறலாகிய மரத்ததுதொழில் நெஞ்சின்மேல் ஏற்றப்பட்டது. கொண்டு என்பது குறைந்துநின்றது, அஃதுள ளிற்றிலேனாயின் இறந்துபடுவல என்பதாம். (4)

காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்கும்என் மென்தோள் பசப்பு. 1265

தலைமகன் வரவுகூறி ஆற்றாயாய்ப் பசக்கற்பாலை யல்லை என்ற தோழிக்குச் சொல்லியது.

கண் ஆரக் கொண்கனைக் காண்க - என் கண்கள ஆரும் வகை என்கொண்கனை யான் காணபேனாக, கண்டபின் என் மென்தோளபசப்பு நீங்கும் - அங்ஙனம் கண்டபின் என் மெல்லிய தோளின்கண் பசப்புத தானே நீங்கும்.

காண்க என்பது ஈண்டு வேண்டிக்கோடற்பொருட்டு. அது வேண்டும் என்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. கேட்ட துணையான் நீங்காது என்பதாம். (5)

வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட. 1266

இதுவும் அது.

கொண்கன் ஒருநாள் வருக - இத்துணைநாளும் வாராக் கொண்கன் ஒரு நாள் என்கண் வருவானாக, பைதல் நோயெல்லாம் கெடப் பருகுவன் - வந்தால் பைபுளைச்செய்கின்ற இந் நோயெல்லாங்கெட அவ் அமிழ்தத்தை வாயிலகள ஐந்தானும் பருகக் கடவேன்.

வருக என்பதற்கும் மன் என்பதற்கும் மேல் உரைத்த வாறே கொளக. அக் குறிப்பு அவ் ஒருநாளைக்குள்ளே இனி வரக் கடவ நோயகளும் கெடுப்பல் என்பதாம். (6)

புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின். 1267

இதுவும் அது.

கண் அன்ன கேளிர் வரின் - கண்போற்சிறந்த கேளிர் வருவராயின, புலப்பேன்கொல - அவர் வரவு நீட்டித்தமை நோக்கியான புலக்கக்கடவேனோ, புல்லுவேன்கொல - அன்றி என் ஆற்றாமை நோக்கிப் புல்லக்கடவேனோ? கலப்பேன்கொல - அவ் இரண்டும் வேண்டுதலான் அவ் இருசெயலகளையும் விரவக்கடவேனோ? யாதுசெய்யக்கடவேன்?

புலவியும் புல்லலும் ஒருபொழுதின்கண் விரவாமையின், 'கலப்பேன்கொல்' என்றாள். மூன்றனையுஞ் செய்தல் கருத்தாகலின், விதுப்பாயிற்று. இனிக் கலப்பேன்கொல என்பதற்கு, 'ஒரு புதுமை செய்யாது பிரியாத நாட்போலக் கலந்தொழுகுவேனோ?' என்று உரைப்பாரும் உளர். (7)

வினைகலந்து வென்றுஈக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து. 1268

வேந்தற்கு உறறுழிப் பிரிந்த தலைமகன் வினைமுடிவு நீட்டித்துழித் தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.

வேந்தன் வினை கலந்து வென்றுஈக - வேந்தன் வினைசெய் தலிப்புரிந்து வெல்வானாக ; மணிகலந்த மாலை விருந்து அயர்கம்- யாமும் மணிவியைச் சென்றுகூடி ஆண்டை மாலைப்பொழுதிற்கு விருந்து அயர்வேமாக.

மணி என்பது ஈண்டு ஆகுபெயர், "மங்கலம் என்ப மணி மாட்சி" (குறள 60) என்புழிப்போல. வினைசெய்தற்கண்வந்த மாலைப்பொழுதிற்கு எதிர்கோடல் அலங்கரித்தல் முதலிய இன்மை யின், மணிகலந்து 'மாலைக்கு விருந்தயர்கம்' என்றான். நான்கன் உருபு விகாரத்தால் தொக்கது. இது வினைமுடியாமுன் கூறலான் விதுப்பாயிற்று. பிறரெல்லாம் இதனைத தலைமகள கூற்றுக்கி உரைத்தார். தலைமகனைக்கூறுது வேந்தன் வெல்க என்றும், மணிகலந்து என்றும், மாலைப்பொழுதின்கண் விருந்தயர்கம என் றும் வந்த அவ் உரைதானே அது கூடாமைக்குக் காரியமாயிற்று ()

ஒருநாள் எழுநாள்போற் செல்லும்சேண் சென்றார் வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு. 1269

இதுவும் அது.

சேண்சென்றார் வருநாள வைதது ஏங்குபவர்க்கு - சேணி டைச்சென்ற தம் காதலர் மீண்டுவரக் குறிதத நாளை உட்கொண்டு அது வரும்துணையும உயிர்தாங்கி வருநதும் மகளிர்க்கு, ஒருநாள எழுகாளபோல் செலலும் - ஒருநாள பலநாளபோல நெடிதாகக் காட்டும்.

ஏழ் என்பது அதற்கு மேலாய மிக்க பன்மை குறிதது நின் றது. "ஒருவர்கூறை ஏழுவா உடுதது" என்றற்போல. தலை மகள் வருதம் பிறர்மேலிட்டுக் கூறியவாறு. இதனுள் இதுவும் தலைமகள கூற்றுகாமையறிக. இருநாள என்று பாடம ஓதுவாரும் உளர். (9)

பெறின்என்னும் பெற்றக்கால் என்னும் உறின்என்னும் உள்ளம் உடைந்துஉக்கக் கால். 1270

இதுவும் அது.

உளளம் உடைந்து உக்கக்கால் - காதலி நம்பிரிவினையாற் றது உள்ளம் உடைந்து இறந்துபட்டவழி, பெறின் என் - நம்மைப் பெறக்கடவளாஞல் என் ? பெற்றக்கால் என் - அதுவன்றியே பெற்றுல் என், உறின் என் - அதுவன்றியே மெய்யுறக் கலந்தால் தான் என், இவையொன்றுனும் பயன் இல்லை.

• இம் மூன்றும் உடம்பொடுபுணர்த்துக் கூறப்பட்டன: அதன் மேலும் முன்னே வழக்குண்மையின். அதற்குமுன்னே யான் செல்லவேண்டும் என்பது கருத்தாகலின், விதுப்பாயிற்று. இது தலைமகள்,கூற்றுவழி இரங்கலாவதல்லது விதுப்பாகாமை அறிக.

128. குறிப்பு அறிவுறுத்தல்.

அஃதாவது தலைமகன், தலைமகள், தோழி என்றஇவர் ஒருவர் குறிப்பினை ஒருவர்க்கு அறிவுறுத்தல். இது, பிரிந்து போய தலைமகன் வந்துகூடியவழி நிகழ்வதாகலின், அவர் வயின் விதும்பலின் பின் வைக்கப்பட்டது.

கரப்பினும் கைஇகந்து ஒல்லாநின் உண்கண்
உரைக்கல் உறுவதொன்று உண்டு. 1271

பிரிந்துகூடிய தலைமகன் வேட்கைமிகினும் புதுவது பன்னலும் பாராட்டத தலைமகள இது ஒன்று உடைத்து என அஞ்சியவழி அதனை அவள குறிப்பான் அறிந்து அவன் அவட்குச் சொல்லியது.

கரப்பினும்-நீசொல்லாது மறைத்தாயாயினும், ஒல்லா கையிகந்து-அதற்கு உடம்படாதே நின்னைக் கைகடந்து, நின் உண்கண் உரைக்கலுறுவது ஒன்று உண்டு - நின் உண்கண்களே எனக்குச் சொலலல உறுவதொரு காரியமுண்டாய் இராநின்றது; இனி அதனை நீயே தெரியச் சொல்வாயாக.

கரத்தல் - நாணுதல். அடக்குதல். தன்கண் பிரிதற் குறிப்புள தாகக்கருதி வேறுபட்டாளது வேறுபாடு குறிப்பான் அறிந்து அவட்குத தன் பிரியாமைக் குறிப்பு அறிவுறுத்தவாறு. (1)

கண்நிறைந்த காரிகைக் காம்புஏர்தோள் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது. 1272

நாணல அவள அது சொலலாளாயவழி அவன் தோழிக்குச் சொலலியது.

கண் நிறைந்த காரிகைக் காம்பு ஏர் தோள பேதைக்கு - என் கண்ணிறைந்த அழகினையும் வேயையொத்த தோளினையும் உடைய நின்பேதைக்கு, பெண்நிறைந்த நீர்மை பெரிது - பெண் பாலாரிடதது நிறைந்த மடமை அவ்வளவன்றி மிகுந்தது.

இலதாய பிரிவினைத தன்கண்ஏற்றி அதற்கு அஞ்சுதலான் இவ்வாறு கூறினன். (2)

மணியுள் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியுள் திகழ்வதொன்று உண்டு. 1273

இதவும் அது.

மணியில் திகழ்தரும் நூல்போல் - கோக்கப்பட்ட பளிக்கு மணியகத்துக் கிடந்து புறத்துப்புலனும் நூல்போல, மடந்தை அணியில் திகழ்வது ஒன்று உண்டு-இம் மடந்தையது அணியகத்துக் கிடந்து புறத்துப் புலனுகின்ற தொரு குறிப்பு உண்டு.

அணி-புணர்ச்சியான்ஆய அழகு. அதனகத்துக்கிடத்தலாவது: அதனோடு உடன்நிகழ்தற்பாலதன்றிவைத்து உடனிகழ்தல். அதனீ யான் அறிகின்றிலேன், நீ அறிந்து கூறல் வேண்டும் என் பது கருத்து. (3)

முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை நகைமொக்குள் உள்ளதுஒன்று உண்டு. 1274

இதுவும் அது.

முகை மொக்குள உள்ளது நாற்றம்போல் - முகையது முகிழ்ப்பினுளதாய்ப் புறத்துப் புலனுகாத நாற்றம்போல, பேதை நகை மொக்குள உளளது ஒன்று உண்டு - நின்பேதை என்னோடு நகக் கருதும் நகையது முகிழப்பினுளதாய்ப் புறதது புலனுகாததோர் குறிப்பு உண்டு.

முகிழ்ப்பு-முகிர்ச்சியாற் புடைபடுதல். நகை - புணர்ச்சி இன் பத்தான் நிகழ்வது. (4

செறிதொடி செய்துஇறந்த கள்ளம் உறுதுயர் தீர்க்கும் மருந்தொன்று உடைத்து. 1275

இதுவும் அது.

செறி தொடி செய்து இறநத களளம் - நெருங்கிய வளைகளை யுடையாள என்கண் நிலலாததொன்றனை உடகொண்டு அது காரணமாக என்னை மறைதது ப்போன குறிப்பு, உறு துயா தீர்க் கும் மருநது ஒன்று உடைதது – என் மிக்கதுயரைத தீர்க்குமருந த தாவதொன்றனை உடைதது.

உட்கொண்டது - பிரிவு. களளம் – ஆகுபெயர். மறைதத தற் குறிப்புத் தானும் உடன் போக்கு உட்கொண்டது. உறுதுயா - ரன்றுசெய்யத தீர்குவிலாதலானும் அதுதான் தீராதிறம்பெருமை யானும் உளதாயது. மருநது: அப் பிரிவின்மை தோழிபால தெளிவித்தல. நீ அது செயதல வேண்டும எனபதாம். (5)

பெரிதுஆற்றிப் பெட்பக் கலத்தல் அரிதுஆற்றி அன்பின்மை சூழ்வது உடைத்து. 1276

தலைமகன் குறிப்பறிந்த தலைமகள அதனை அது தெளிவிக் கச் சென்ற தோழிக்கு அறிவுறுதது.

பெரிது ஆற்றிப் பெட்பக் கலத்தல் – காதலர் வந்து தம் பிரிவினையு துன்பத்தினை மிகவும் ஆற்றி நாம் மகிழும்வண்ணம் கலக்கின்ற கலவி, அரிது ஆற்றி அன்பின்மை சூழவது உடைது- இருக்தவாற்றான் மேலும் அத்துன்பத்தினை அரிதாக ஆற்றியிருது அவரது அன்பின்மையை நினையுந்தன்மையுடைத்து.

பிரிதற்குறிப்பினைச் செய்கின்றதாகலான், முடிவில் இன்ன தாகா நின்றது என்பதாம். (6)

தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை. 1277

இதுவும் அது.

தண்ணந் துறைவன் தணந்தமை-குளிர்ந்த துறையை உடையவன் நம்மை மெய்யாற்கூடியிருந்தே மனத்தாற் பிரிந்தமையை, நம்மினும் வளை முன்னம்உணர்ந்த - அவன் குறிப்பான் அறிதற்குரிய நம்மினும் இவ் வளைகள முன்னே அறிந்தன.

கருத்து நிகழ்ந்த தாகலின் 'தணந்தமை' என்றும், யான் தெளிய உணர்தற்குமுன்னே தோளகள மெலிந்தன என்பாள அதனை வளைமேலேறறி, அதுதன்னை உணர்வு உடைத்தாக்கியும் கூறினாள. (7)

நெருநற்றுச் சென்றார்எம் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து. 1278

இதுவும அது.

எம காதலர சென்றார நெருநற்று - எம காதலர பிரிநது போயினார நெருநற்றே, யாமும் மேனி பசநது எழுநாளேம் - அப் பிரிவிறகு யாமும் மேனி பசநது எழுநாளுடையமாயினேம்.

நெருநற்றுச்செயத தலைமகனாற பிரிவு துணியப்பட்டது என்பாள 'நெருநற்றுச் சென்றார' என்றும், அதனை ஐயுற்றுச்செல்கின்றது எழுநாளுண்டாகலின், அன்றே மேனி பசநதது என்பாள மேனி பசநது எழுநாளேம் என்றும் கூறினாள. இவ்வாற்றால தலைமகனது பிரிதற்குறிப்பினை உணர்ததிநின்றது. (8)

தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதுஆண்டு அவள்செய் தது. 1279

தலைமகள குறிப்பறிநத தோழி அதனைத் தலைமகற்கு அறிவித்தது.

(யான் அது தெளிவிததவழித் தெளியாது) தொடி நோக்கி— அவர் பிரிய யான் ஈண்டிருப்பின் இவை நில்லா எனத தன் தொடியை நோக்கி, மென் தோளும் நோக்கி - அதற்கு ஏதுவாக இவை மெலியும் எனத தன் மென்தோளகளையும்நோக்கி, அடி நோக்கி-பின் இவ்விரண்டும் நிகழாமல நீர் நடநது காத்தல் வேண்டும் எனத தன் அடியையும் நோக்கி, ஆண்டு அவள் செய்தது அஃது - அங்ஙனம அவள செயத குறிப்பு உடன்போக்காயிருநதது.

செய்தகுறிப்பு-செய்தற்கு ஏதுவாய குறிப்பு. அஃது என்றாள் "செறிதொடி செய்திறநதகளளம்" என்றானாகலின். பிரிதற்குறிப்புண்டாயின், அஃது அழுங்குதல பயன். (9)

பெண்ணினால் பெண்மை உடைத்துஎன்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு. 1280

தலைமகன் பிரியாமைக் குறிப்பினைத் தோழிக்கு அறிவுறுத்தது.

காமநோய் கண்ணினாற் சொல்லி இரவு - மகளிர் தம் காமநோயினைத் தோழியர்க்கும் வாயாற்சொல்லாது கண்ணிற் சொல்லி அது தீர்க்கவேண்டும் என்று அவரை இரவாது உடன் போதல் குறித்துத தம் அடியினைஇரத்தல், பெண்ணினால் பெண்மை உடைதது என்ப - தமக்கு இயலபாகிய பெண்மை மேலும் ஒருபெண்மைஉடைதது என்று சொல்லுவர் அறிந்தோர்.

தலைமகளது உடன் போதல் துணிபுதோழியால் தெளிந்தானாகலின், தன்பிரிவின்மைக் குறிப்பினை அறிவுறுப்பான், அவள பெண்மையினைப் பிறர்மேலிட்டு வியந்து கூறியவாறு. (10)

129. புணர்ச்சி விதும்பல்

அஃதாவது தலைமகனும் தலைமகளும் புணர்ச்சிக் கண்ணே விரைதல். மேற்புணர்ச்சி மிகுதிபற்றித் தலைமகன் பிரிதறகுறிப்பு அறிவுறுத்த தலைமகள அவன் மாட்டே நிகழாது வேட்கைமிகவினால் பின்னும தன்கண்ணேநிகழதலான், இது குறிப்பு அறிவுறுததலின் பின் வைக்கப்பட்டது.

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்குஇல் காமத்திற்கு உண்டு. 1281

பிரிதற்குறிப்பினன்ஆகியானொடு நீ புலவாமைக்குக் காரணம் யாது என நகையாடிய தோழிக்குத தலைமகள சொல்லியது.

உளளக் களிததலும - நினைநத துணையானே களிப்பெய்தலும், காண மகிழதலும் - கண்டதுணையானே மகிழவெய்தலும், கள்ளுக்கு இல காமத்திற்கு உண்டு - களளுண்டார்க்கு இல்லை, காமம் உடையார்க்கு உணடு.

களித்தல் - உணர்வழியாதது. மகிழதல்-அஃதழிநதது. இவ் இரண்டும் உண்டுழியலலது இன்மையின் 'களளுக்கு இல்' என்றாள. உண்டு என்பது இறுதிவிளக்கு. அப்பெறறிததாய காமம் உடைய யான்புலத்தல யாண்டையது என்பதாம். (1)

தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின். 1282

இதுவும் அது.

காமம் பனைத்துணையும் நிறைய வரின் - மகளிர்க்குக் காமம் பனையளவினும் மிகஉண்டாமாயின், தினைத்துணையும் ஊடாமை வேண்டும் - அவரால், தம் காதலரோடு தினையளவும் ஊடுதல் செய்யாமை வேண்டப்படும்.

பணைத்தணையும் என்புழி ஐந்தனுருபு விகாரத்தால் தொக்கது. ஊடின் வருத்தமிகும் எனப் பிறர்க்கும் உறுதிகூறுவாள் போன்று, தன் விதுப்புக் கூறியவாறு. (2)

பேணுது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணுது அமையல கண். 1283

இதுவும் அது.

பேணுது பெட்பவே செய்யினும் - நம்மை அவமதித்துத் தான் வேண்டியனவே செய்யுமாயினும், கொண்கனைக் கண்காணுது அமையல - கொண்கனை என்கண்களை காணுது அமைகின்றன இல்லை.

தன் விதுப்புக் கண்களுமேல்ஏற்றப்பட்டது. அத் தன்மையேன் அவனோடு புலக்குமாறு என்னை என்பதாம். (3)

ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு. 1284

இதுவும் அது.

தோழி - தோழீ, ஊடற்கண் சென்றேன் - காதலரைக் காணுமுன் அவர் செய்த தவறைத் தன்னெஞ்சு நினைந்து யான் அவரோடு ஊடுதற்கண்ணே சென்றேன், என் நெஞ்சு அது மறந்து கூடற் கண் சென்றது-கண்டபின் என் நெஞ்சு அதனை மறந்து கூடுதற் கண்ணே சென்றது.

சேறல - நிகழுதல். நினைதல்நெஞ்சிற்கும் ஒத்தலின், 'அது மறந்து' என்றாள். அச செலவாற் பயன் என் என்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. அவ்வல்லியிலே நெஞ்சு அறைபோகலான், அது முடிந்ததில்லை என்பதாம். (4)

எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து. 1285

இதுவும் அது.

எழுதுங்கால் கோல் காணாக் கண்ணேபோல-முன்னெல்லாம் கண்டிருந்தும் எழுதுங்காலத்து அஞ்சனக்கோலின் இயல்புகாணமாட்டாத கண்ணேபோல, கொண்கன்பழி கண்டவிடத்துக் காணேன் - கொண்கனது தவறு காணுதவிடத்தெலாம் கண்டிருந்து அவனைக் கண்டவிடத்துக் காணமாட்டேன்.

கோல - ஆருபெயர். இயல்பு - கருமை. என் இயல்பு இதுவாகலின் மேலும் அது முடியாது என்பதாம். (5)

காணுங்கால் காணேன் தவருய காணுக்கால்
காணேன் தவறல் லவை. 1286

இதுவும் அது.

காணுங்கால் தவறுய காணேன் - கொண்கனீ யான் காணும் பொழுது அவன் தவருயவற்றைக் காண்கின்றிலேன், காணுக்கால தவறலலவை காணேன் - காணுதபொழுது அவையேயலலது பிற வற்றைக் காண்கின்றிலேன்.

செயப்படுபொருள - அதிகாரததான் வநதது. முன்பு நான் நின்னொடு சொலலிய தவறுகள இதுபொழுது காணுமையின் புலந்திலேன் என்பதாம். (6)

உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்துஎன் புலந்து. 1287

இதுவும் அது.

உய்ததல அறிந்து புனல பாய்பவரேபோல - தம்மை ஈரு துக்கொண்டு போதல அறிநதுவைதது ஒழுகுகின்ற புனலுட்பாய வார் செயலபோல, பொய்ததல அறிநது புலநது என்-புலவிமுடிவு போகாமை அறிநதுவைததுக் கொண்கனொடு புலநது பெறுவது என்?

பாய்பவர் என்பது அருபெயர. பொய்ததல - புரைபடுதல புலந்தாலும பயனிலலீல என்பதாம. 'பொய்ததல அறிநதேன்' என்பது பாடமாயின், உய்ததலறிய ழுடும் நிருட்பாய்வாரபோல முடிவறியப் பண்டொருகாற புலநது முடியாமை அறிநதேன் இனி அது செயற்பாற்றன்று என உரைக்க. (7)

இளித்தக்க இன்ன செயினும் களித்தார்க்கு
கள்அற்றே கள்வநின் மார்பு 1288

தலைமகள புணர்ச்சி விதுப்பு அறிந்த தோழி தலைமகற்குச் சொலலியது.

களவ - வஞசகா! களிததாக்கு இளிததக்க இன்னசெயினும கள் அற்றே-தன்னை உண்டுகளிததாக்கு இளிவரதக்க இன்னை வற்றைச் செயினும் அவரால மேன்மேல விரும்பப்படுவதாய கள்போலும், நின்மார்பு - எங்கட்கு நின் மாரபு.

அவ் இன்னைதன நாணின்மை, நிறையின்மை, ஒழுக்க மின்மை, உணர்வின்மை என்றிவை முதலாயின. எங்கட்கு நாணின்மை முதலியவற்றைச் செய்யுமாயினும் எங்களால் மேன மேல் விரும்பப்படாநின்றது என்பதாம. களவ என்றதும் அது நோக்கி. (8)

மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார். 1289

உணர்ப்புவயின் வாராடைற்கண் தலைமகன் சொல்லியது.

காமம் மலரினும் மெலலிது-காம இன்பம் மலரினும் மெல்லிய தாயிருக்கும், அதன்செவ்வி தலைப்படுவார் சிலர் - அங்ஙனம்

மெல்லிதாதலியறிந்து அதன் செவ்வியைப் பெறுவார் உலகத்துச் சிலர்.

தொட்டதுணையானே மணச்செவ்வி அழிவதாய மலர் எல்லாவற்றினும் மெல்லிது என்பது விளக்கலின், உமமை சிறப்பின் கண்வந்தது. குறிப்பும், வேட்கையும், முகாச்சியும், இன்பமும் ஒருகாலத்தின்கண்ணே ஒத்து நுகர்தற்குரியார் இருவர், அதற்கு ஏற்ற இடனும் காலமும் உபகரணங்களும் பெறுதல் கூடி நுகர வேண்டுதலின், அதன் 'செவ்வி தலைப்படுவார் சிலர்' என்றும், அவற்றுள் யாதானும் ஒன்றனைத் தானும் வெறுப்படியுமை வாடுதலின், 'மலரினும் மெல்லிது' என்றும் கூறினான். குறிப்பு ஒவ்வாமையின் யான் அதுபெறுகின்றிலேன் என்பதாம். நலமிகுதல் முதலாயின தீவகத் பயன். (9)

கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப்பு உற்று. 1290

இதுவும் அது.

கண்ணின் துனித்தே - காதலி ஏதிலளொரு காரணம் புல்லல் விதுப்பினாற சென்ற எனதெனறி தன்கணை மாத்திரத்தான் ஊடி, புல்லுதல் என்னினுமதான் விதுப்புறும் பக கலங்கினாள்-புல்லுதலே என்னினும் தான விதுமபலான் அது தனையுமை அப்பொழுதே மறாது கூடிவிட்டாள், அதலால் யான இந்நன்மையேகவும் விதுப்பின்றி வாடிநிற்கின்ற இவள் அவாவை ... ய.

கண்மாத்திரத்தான் ஊடல் சொல்லுங்குரியனென்றி அது சிவகத துணையோதல, அவளாயின் இயலனம் வாடாகண நீடாள என்பது பயன். (10)

130. நெஞ்சொடு புலத்தல்

அஃதாவது காரணம் உண்டாயவழியும் புலந்தகாரு தாது புணாசகியிதுமபுறின்ற நெஞ்சுடனே தலைமகள புலத தலும, தலைமகன் புலதததும ஆம். அதனால் புலமைமையும இதனோடு விளங்கும.

அவர்நெஞ்சு அவாக்குஆதல் கண்டும் எவன்நெஞ்சே
நீஎமக்கு ஆகா தது. 1291

தலைமகள்கண் தவறுண்டாயவழியும புலவி கருதாத நெஞ் சிற்குத் தலைமகள சொல்லியது.

நெஞ்சு - நெஞ்சே, அவர நெஞ்சு அவாக்கு ஆதல்கண்டும- அவருடைய நெஞ்சு நம்மை நினையாது அவாக்காய் நிற்றல் கண்டு வைத்தும், நீ எமக்கு ஆகாதது எவன் - நீ எமக்காய நில்லாது, அவரை நினைத்தற காரணம் யாது?

அவர்க்கு ஆதல்: அவர்கருதியதற்கு உடம்படுதல். எமக்காகாதது என்றது புலவிக்கு உடம்படாமையை. ஒரு கருமத்தைத் தாமாக அறிந்து செய்யமாட்டாதார் செய்வாரைக் கண்டாயினும் செய்வர். நீ அதுவும் செய்கின்றிலை என்பதாம். (1)

உருஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செருஅர்எனச் சேறிஎன் நெஞ்சு. 1292

இதுவும் அது.

என் நெஞ்சு - என் நெஞ்சே, உருதவர்க் கண்ட கண்ணும்-மேலும் நம்மாட்டு அன்புடையராகாதவரை உள்ளவாறு அறிந்த இடத்தும், செருர் என அவரைச் சேறி-நாம் சென்றால் வெகுளார் என்பதுபற்றி நீ அவர் மாட்டுச் செல்லாநின்றாய், இப்பெற்றியது மேலும் ஓரறியாமையுண்டோ?

அவரை என்பது வேற்றுமை மயக்கம். பழங்கண்ணேட்டம் பற்றி வெகுளார் என்பது கந்தாகச் சென்றாய், நீ கருதியது முடியுமோ என்பதாம். (2)

கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல். 1293

இதுவும் அது.

நெஞ்சே–நெஞ்சே, நீ பெட்டாங்கு அவாபின்செலல - என் மாட்டு நில்லாது நீ விரும்பியவாறே அவர் மாட்டுச் செலலுதற்குக் காரணம், கெட்டார்க்கு நட்டார் இல என்பதோ–கெட்டாக்கு நட்டார் உலகதது இல்லை என்னும நினேவோ, நின்னியலபோ, கூறுவாயாக.

என்னைவிட்டு அவர்மாட்டுச் சேறல நீ பணடே பயின்றது என்பாள 'பெட்டாங்கு' என்றும், தான் இதுபொழுது மானமில ளாகலின், 'கெட்டார்க்கு' என்றும் கூறினாள். பின் என்பது ஈண்டு இடப்பொருட்டு. செலல என்பது ஆகுபெயர். "ஓல கிடத்து உலப்பிலா உணர்விலார் தொடர்பு" (கலி.க. பாலை. 25) ஆயிற்று நின் தொடர்பு என்பதாம். (3)

இனிஅன்ன நின்னெடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று. 1294

இதுவும் அது.

நெஞ்சே–நெஞ்சே, துனி செய்து மறறுத துவ்வாய்–நீ அவரைக் கண்டபொழுதே இன்பம் நுகரக் கருதுவதலது அவர் தவறு நோக்கி முன் புலவியை உண்டாக்கி அதனை அளவறிந்து பின் நுகரக்கருதாய்; இனி அன்ன நின்னெடு சூழ்வார் யார்–ஆகலான், இனி அப்பெற்றிப்பட்டவற்றை நின்னேடு எண்ணுவார் யார்? யான் அது செய்யேன்.

அப்பெற்றிப்பட்டன-புலக்கும் நிறங்கள். காண் என்பது உரையசை. மற்று-விணமாற்றின்கண் வந்தது. முன்னெல்லாம் புலப்பதாக எண்ணியிருந்து பின் புணர்ச்சி விதும்பலின், இவ்வாறு கூறினள். (4)

பெருஅமை அஞ்சும் பெறின்பிரிவு அஞ்சும்
அருஅ இடும்பைத்துஎன் நெஞ்சு. 1295

வாயிலாகச் சென்ற தோழி கேட்பத் தலைமகள் சொல்லியது.

பெருமை அஞ்சும்-காதலரைப்பெருத ஞான்று அப் பெருமைக்கு அஞ்சா நின்றது, பெறின் பிரிவு அஞ்சும்-பெற்றக்கால வரக்கடவ பிரிவினை உட்கொண்டு அதற்கு அஞ்சாநின்றது, என் நெஞ்சு அரு இடும்பைத்து-ஆகலான், என் நெஞ்சம் எஞ்ஞான்றும் நீங்காத இடும்பையை உடைத்தாயிற்று.

காதலரைப் பெற்றுவைத்துக் கலவிமிழத்தல் உறுதியென்னும் கருத்தான் வாயில் நோக்கினராகலின், 'பெருமை அஞ்சும்' என்றும, கலவி ஆராமையின் இன்னும் இவர் பிரிவரா யின் யாதுசெய்தும என்பது நிகழ்தலின், 'பெறின் பிரிவு அஞ்சும்' என்றும இவை இரண்டுமல்லது பிரிதில் இன்மையின், 'எஞ்ஞான்றும் அரு இடும்பைத்து' என்றும கூறினள. (5)

தனியே யிருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததுஎன் நெஞ்சு. 1296

இதுவும் அது.

என் நெஞ்சு இருந்தது-என் நெஞ்சு ஈண்டு இருந்தது, தனியே இருந்து நினைத்தக்கால்-காதலரைப பிரிந்திருந்து அவர கொடுமைகளை யான் தனித்தும நினைத்தக்கால், என்னைத தினிய-அவ்வளவு அறிவு என்னைத தின்பபோன்று துன்பம செய்தற்கே.

எம்மாட்டிருந்தது அன்று அவர்கொடுமைகளை உட்கொண்டு எனக்கு ஆறுதல்மை செய்தற்கே, இன்று அவைநோக்கி அவரொடு புலந்தற்கன்று என்பதாம. (6)

நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணா மடநெஞ்சில் பட்டு. 1297

இதுவும் அது.

அவர் மறக்கலா என் மாணா மடநெஞ்சிற்பட்டு-தன்னை மறந்த காதலரைத் தான் மறக்கமாட்டாத என் மாட்சிமையில் லாத மட நெஞ்சுடனே கூடி, நாணும் மறந்தேன்-என் உயிரினும சிறந்த நாண் தன்னையும் மறந்துவிட்டேன்.

மாணாமை—ஒருநிலையில் நில்லாமை. மடமை: கண்டவழி நினைந்து காணாதவழி மறக்குந் தவறைக் காணாவழிநினைந்து கண்டவழிமறத்தல். நாண்—எஞ்ஞான்றும் கூடி யொழுகினும் அஞ்ஞான்று கண்டார்போன்று ஒடுங்குதல். கண்டபொழுதே புணர்ச்சி விதும்பலின், அதனையும் மறந்தேன் என்றாள. (7)

எள்ளின் இளிவாம்என்று எண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு. 1298

இதுவும் அது.

உயிர்க் காதல் நெஞ்சு - உயிர்மேல காதலையுடைய என் நெஞ்சு, எளளின் இளிவு ஆம் என்று எண்ணி - நம்மை எளளிச் சென்றார் என்று நாமும எளளுவேமாயின் பின் நமக்கு இளிவாம என்று கருதி, அவா திறம் உளளும் - அவர் திறததினையே நினையாநின்றது.

எளளுதல் - வாயில மறுத்தல். இளிவு - வழிபடாமையானும், பிரிவாற்றாமையானும், நாணும் நிறையும் முதலிய இழததலானும் உளதாவது. திறம் - வாயில நோதலும் வருதலும கூடலும் முதலாயின. இளிவிறகு அஞ்சுதலானும் இறநதுபட மாடடாமையானும் கூடக் கருதாநின்றது என்பதாம். (8)

துன்பத்திற்கு யாரே துணையாவார் தாம் உடைய
நெஞ்சம் துணைஅல் வழி. 1299

உணர்ப்புவயின்வாரா ஊடற்கண் தலைமகன் சொலலியது.

துன்பததிறகு - ஒருவர்க்குத துன்பம்வந்துழி, அது நீக்குதற்கு, தாம் உடைய நெஞசம் துணை அல வழி - தாம உரிததாகப் பெறற தமமுடைய நெஞசம் துணையாகாவழி, துணையாவார யாரே - வேறு துணையாவார் ஒருவரும இல்லை.

ஈண்டுத துன்பமாவது - ஊடலுணர்ப்புவயின்வாராமை. அதற்கு நெஞ்சம் துணையாகாமையாவது அவளை அன்பிலள என்றொழியாது கூடற்கண்ணே விதும்பல. ஒரு துணையும் இன்மையின், இஃது உற்று விடுதலே உளளது என்பதாம். (9

தஞ்சம் தமர்அல்லர் ஏதிலார் தாம்உடைய
நெஞ்சம் தமர்அல் வழி. 1300

இதுவும் அது.

தாம் உடைய நெஞ்சம் தமர் அல்வழி - தாம் உரித்தாக உடைய நெஞ்சம் ஒருவர்க்குத தமர் அலலாவழி, ஏதிலார் தமர அல்லர் தஞ்சம்-அயலார் தமர்அலலராதல சொல்லவேண்டுமோ ?

பிறளொருத்தியைக் காதலி என்று கருதி என் நெஞ்சே என்னை வருத்தாநின்றபின் அப் பிறள புலக்கின்றது எளிது என்பதாம். (10)

131. புலவி

அஃதாவது இருவர் நெஞ்சும் புணர்ச்சி விதும்பாது புலக்கக் கருதியவழி ஒருவரோடு ஒருவர் புலத்தல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

புலலாது இராஅப் புலத்தை அவர்உறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது. 1301

வாயிலாகச் சென்ற தோழி தலைமகன் வாயில் நேர்தற் பொருட்டு அவளொடு நகையாடிச் சொலலியது.

அவர் உறும் அலலல நோய சிறிது காண்கம்—அங்ஙனம் புலந்தால காதலரெய்தும் அலலல நோயினை யாம் சிறிது காணக் கடவேம், புலலாது இராப் புலத்தை—நீ அவரை விரைந்துசென்று புலலாதே இததொழிலை மேலிட்டுக் கொண்டிருந்து புலப்பாயாக.

அலலல நோய - துன்பததைச் செய்யும் காமநோய். சிறிது என்றாள, புலவியை நீளவிடலாகாது என்பதுபற்றி. புலத்தை என்புழி ஐகாரம் "கடம்பூண்டொருகால் நீ வந்தை" (கலித்' குறிஞசி. 27) என்புழிப்போல முன்னிலைவினைவிகுதி. 'புலத்தி' என்பதூஉம் பாடம். புலவிக்குறிப்புக்கண்டு அவளவழியளாய் நின்று நாம் உறற வருததம அவரும சிறிதுற்று அறிதல் வேண்டும என நகையாடி நேர்விததவாறு. (1)

உப்புஅமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிககற்றால் நீள விடல். 1302

புலவியொழிநது வாயில நேருமவகை அவள சொல்லியது.

புலவி உப்பு அமைநதறறு - புலவி கலவி இன்பம் செயற்கு வேணடுமளவிற்றாதல உப்புத துய்ப்பனவற்றை இன் சுவையவாக்கற்கு வேண்டுமளவிற்றாதல போலும், சிறிது நீளவிடல் அது மிக்கறறு - இனி அதனை அவ்வளவில சிறிதுமிகவிடுதல அவ் உப்பு அளவின்மிக்காற் போலும்.

நீளவிடல - அளவறிந்துணராது கலவிமேல எழுந்த குறிப்பழுங்குமளவும் செய்தல் சிறிது நீளவிடலாகாது என்றாள, நேர்விக்கின்றாளாகலின். உப்பு மிக்கவழிததுய்ப்பது சுவையின்றாற் போலப் புலவிமிக்கவழிக் கலவி இன்பமின்றாம் என்றமையின், இது பண்பு உவமை. (2)

அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல். 1303

பரத்தையர் இடத்துநின்றும வநத தலைமகனொடு தலைமகள புலநது சொல்லியது.

தம்மைப் புலந்தாரைப் புல்லாவிடல்-தம்மைப்பெரிது புலந்த மகளிரைப் புலவி நீக்கிக் கலவாது ஆடவர்சேறல், அலந்தாரை அல்லல்நோய் செய்தற்று - பண்டே துன்பமுற்றழிந்தாரை அதன் மேலும் மிக்க துன்பத்தினைச் செய்தல்போலும்.

பிறர்பால் சேறலின் நும்மைப்பெரிது புலந்தூடியிருக்கின்ற பரத்தையரைப் போய்ப் புலவி நீக்கிப் புல்லீராயின், அவராற்றூர் என்பதாம். (3)

ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதல்அரிந் தற்று. 1304

இதுவும் அது.

ஊடியவரை உணராமை - நும்மோடு ஊடிய பரதத்தையரை ஊடலுணர்த்திக் கூடாதொழிதல், **வாடிய வள்ளி முதல் அரிந்த தற்று** - பண்டே நீர்பெருது வாடிய கொடியை அடியிலே அறுத்தாற்போலும்.

நீர் பரத்தையரிடத்திர் ஆயவழி எம் புதல்வரைக் கண்டு ஆறறியிருக்கற்பாலமாய யாம நும்மோடு ஊடுதற்குரியமலலம் ' அன்மையின், எம்மை உணர்ததல்வேண்டா, உரியராய் ஊடிய பரதத்தையரையே உணர்ததலவேண்டுவது, அதனால ஆண்டுச்சென்மின் என்பதாம்: (4)

நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை
பூவன்ன கண்ணுர் அகத்து. 1305

தலைமகனைப் புலவி நீக்கிக் கூடிய தலைமகன் தன்னுளளே சொல்லியது.

நலத்தகை நலலவர்க்கு ஏர் - நற்குணங்களால தகுதியுடைய ராய தலைவர்க்கும் அழகாவது, பூ அன்ன கண்ணுர் அகததுப் புலத்தகை - தம் பூவன்னகண்ணுர் நெஞ்சின்கண் நிகழும் புலவி மிகுதியன்றே.

சிறப்புஉம்மை விகாரத்தால தொக்கது. தவறில்லார்க்கும் புலவி இனிது என்பான், நலதகை நல்லவர்க்கும் எவ்ருன். அழகு - இன்பப்பயனைத் தலைப்படுதல். தான் துகர்ந்த இன்பத திற்கு ஏதுவாகிய புலவியை வியநது கூறியவாறு. (5)

துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று. 1306

இதுவும் அது.

துனியும் புலவியும் இல்லாயின் - முதிர்ந்த கலாம்ஆகிய துனியும் இனைய கலாம்ஆகிய புலவியும் இல்லையாயின், **காமம் கனியும் கருக்காயும் அற்று** - காமம் செவ்வி முதிர்ந்தபழமும் இளங்காயும் போலும்.

மிகமுதிர்ந்திறும் எல்லித்தாய கனி நுகர்வார்க்கு மிகவும் இனிமைசெய்யாதாகலின் தனியில்லையாயின், 'கனியற்று' என்றும்; கட்டிளமைத்தாய காய் நுகரும் செவ்வித்தன்றாகலின் புலவியில்லையாயின் 'கருக்காயற்று' என்றும் கூறினன். இவ் இரண்டும் வேண்டும் என்று வியந்து கூறியவாறு. (6)

ஊடலின் உண்டுஆங்குஓர் துன்பம் புணர்வது
நீடுவது அன்றுகொல் என்று. 1307

இதுவும் அது.

புணர்வது நீடுவது (கொல்) அன்றுகொல் என்று - இனிப் புணர்ச்சி நீட்டிக்குமோ நீட்டியாதோ என்றுகருதலான், ஊடலின் ஓர் துன்பம் உண்டு - இன்பத்திற்கு இன்றியமையாத ஊடலின் கண்ணேயும் ஒருதுன்பம் நிகழும்.

என்று என்னும எச்சத்திறகுக் கருதலான் என்பது வருவிக்கப்பட்டது. சிறப்புஉம்மை விகாரதத்தால தொக்கது. கொல் என்பதனை நீடுவது என்பதுடனும் கூட்டுக. ஆங்கு என்பது அசைநிலை. ஊடல - கூடற்கண் விரைவிததல் கூறியவாறு. (7)

நோதல் எவன்மற்று நொந்தார் என்றுஅஃதுஅறியும்
காதலர் இல்லா வழி. 1308

உணர்ப்புவயின்வாரா ஊடற்கண் தலைமகன் தலைமக ளொடு புலகது சொலலியது.

நொநதார் என்று அஃது அறியும் காதலர் இல்லாவழி - இவர் நம்பொருட்டாக நொநதார என்று அங்ஙோவினையறியும் அன்புடையாரப்பெருவழி, நோதல மற்று எவன் - ஒருவர் நோகின்றதனை பயன் என?

அறிதல் - ஈண்டு ஊடலே இனிது உணர்தல். மற்று - வினை மாற்றின்கண் வந்தது. இவள நம காதலியலலள; அன்மையின் இங்ஙோ அறியாள, அறியாமையின், நாம் புலக்கின்றதனால் பய னில்லை எனத தன் ஆற்றுமைஉணாத்தியவாறு. (8)

நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது. 1309

இதுவும் அது.

நீரும் நிழலதே இனிது - உயிர்க்கு இன்றியமையாத நீரும் நிழலின் கண்ணதே இனிதாவது, வெம வெயிலின் கண்ணது ஆகாது; புலவியும் வீழுநர் கணணே இனிது - அதுபோலக் கல விக்கு இன்றியமையாத புலவியும் அன்புடையார் கண்ணே இனி தாவது, ஏனை அன்பிலார்கண் ஆகாது.

நிழற்கண் இருந்த நீர் குளிர்ச்சிமிக்குத் தாகம்தணித்தலின், இனிதாயிற்று. வீழுநர் - ஆற்றுமைக்கு நோதலும் கூடுதற்கண்

வேட்கையுமுடையராவார். இவள் நம்மாட்டு அவ் இரண்டும் இன்மையின் இப்புலவிதானும் இன்னாதாகா நின்றது என்பதாம்.

ஊடல் உணங்க விடுவாரோடு என்நெஞ்சம்
கூடுவேம் என்பது அவா. 1310

இதுவும் அது.

ஊடல் உணங்க - தான் ஊடற்கண்ணே மெலியாநிற்கவும், விடுவாரோடு கூடுவேம் என்பது என்நெஞ்சம் அவா - விட்டிருக்க வல்லாரோடு கூடக் கடவேம் என்று என்நெஞ்சம் முயறற்கு ஏது தன் அவாவே; பிறிது இலதே.

